

ஈழத்தமிழரின்

# முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்

பணியாளன்

எஸ்.ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழரின்

# முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்

பணியாளன்
எஸ்.ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : ஈழத்தமிழரின் முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்

ISBN : 575-0-9879597-0-6

ஆசிரியர் : பணியாளன் எஸ்.ஜே.இம்மனுவேல்

உரிமை : ஆசிரியருக்கே

பக்கம் : X +164

அச்சகம் : புனித வளன் கத்தோலிக்க அச்சகம் 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Book Title : Continuing Struggle of Eelam Tamils after Mulivaikal

ISBN : 575-0-9879597-0-6


Author : Rev. Fr.S.J.Emmanuel

Pages : X +164

Copyright : Author

Press : *St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2009ஆம் ஆண்டில்

சிறிலங்கா இராணுவத்தினால்

கொடூரமாகப் படுகொலையாக்கப்பட்ட

எமது உடன்பிறப்புக்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வரிசை எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | என்னுரை | v |
| | அணிந்துரை | vii |
| 1. | யாழ்ப்பாண வரலாறு காணாத வெளியேற்றம் | 1 |
| 2. | தமிழர் தலைநகர் சிங்களத்தால் சின்னாபின்னம் | 23 |
| 3. | யுத்தம் செய்து கொண்டு அமைதிபேசும் அரசு | 32 |
| 4. | அரச படைகளின் இனவாதமும் பயங்கரவாதமும் | 40 |
| 5. | சிங்கள பௌத்த தேசியமும் இனவாதமும் | 48 |
| 6. | தற்பாதுகாப்புக்காக வளர்ந்த தமிழ்த் தேசியம் | 57 |
| 7. | ஈழப் போராட்டத்தின் ஒப்பற்ற தலைமைத்துவம் | 72 |
| 8. | உயிர்த்தியாகம் பற்றிய ஓர் மீளாய்வு தேவை | 88 |
| 9. | ஈழத் தமிழ் விடுதலையும் அனைத்துலக சமூகமும் | 101 |
| 10. | முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும் | 130 |
| 11. | முள்ளி வாய்க்காலின் பின்பு | 137 |
| 12. | எமது பணியை மீளவும் தாயகத்திலிருந்து | 147 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை...........

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டதில் நான் ஒரு தமிழ் கிறிஸ்தவனாக பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்டவனாகவும், நேரடிச் சாட்சியாகவும் பங்கெடுத்து வந்திருக்கிறேன். எனது அனுபவ அறிவு ஊடாக முள்ளிவாய்க்காலில் 2009இல் நடந்தேறிய நிகழ்வுகளுக்கு முந்திய போராட்டத்தின் பல்வேறு அம்சங்களை மூன்று ஆங்கில நூல்களில் வழங்கியிருந்தேன். (Church, Politics and War in Sri Lanka 1994, Let My People Go 1997, Agonies & Aspirations of the Tamil Struggle 2004,2006). இவைகள் அநேகமாக சர்வதேச அரங்கில் நான் எம்மவர்க்கும் வெளிநாட்டவர்க்கும் எமது போராட்டத்தை விளக்கி முன்னெடுத்துச் செல்ல நிகழ்த்திய உரைகளாக இருந்தன.

இவை வழியாக எமது போராட்டத்தில் சிங்கள பௌத்த தேசியத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளையும் தனித்தன்மைகளையும் விளக்கியிருந்தேன். அதே நேரத்தில் இப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழரும் சர்வதேச நாடுகளின் அரசாங்கங்களும் அமைப்புகளும் ஆற்றவேண்டிய பங்கையும் பொறுப்பையும் சுட்டிக்காட்டினேன்.

ஈழத் தமிழர் 1948இல் இருந்து நடத்திக் கொண்டிருக்கும் விடுலைப் போராட்டம் முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு பின் ஒரு புதிய மிக வித்தியாசமான மூன்றாம் கட்டத்தை அடைந்திருக்கிறது. வன்னித் தலைமை முன்னெடுத்த ஆயுதப்போர் நசுக்கப் பட்டிருக்கிது. ஆனால் அவர்கள் நடாத்திய போராட்டம் தமிழ் மக்களினால், விசேடமாக சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

இப் புதிய கட்டத்திற்கு இன்று வரைக்கும் நடந்தேறியவற்றை தெளிவான பார்வையிலும் முதிர்ச்சியான முறையிலும் உள் வாங்கி மீளாய்வு செய்வதும், அதனூடாக இலட்சியத் தெளிவையும் ஆன்மீக பலத்தையும் பெற்றுக் கொள்வதும் இன்றி அமையாதது. வெற்றிகளினுடாக பெற்றுக்கொண்ட பலத்தை இழக்காது காப்பதும், நடந்தேறிய தவறுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையாகவும் துணிவாகவும் இனங்கண்டு திருத்திக் கொள்வதும் எமது போராட்டத்தின் புதிய கட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மிக மிக முக்கியமானவை.

இக்கட்டத்தில் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழினத்தின் மூத்த, இளைய சந்ததியினர் சேர்ந்து போராட அழைக்கப் படுகின்றனர். மேலும் புதிய சவால்களையும் சந்தர்ப்பங்களையும் அவரவர்க்குரிய திறமைகளையும் பயன்படுத்தி தூய உள்ளத்துடனும் துணிவுடனும் பங்கெடுக்க நாம் எல்லோரும் அழைக்கப்படுகின்றோம்.

இந்த எமது கடமையை நிறைவேற்ற உதவும் நோக்கத்துடன் எமது நீண்ட போராட்டத்தின் முக்கிய சில அம்சங்களை தமிழில் வழங்குகின்றேன். இன முரண்பாட்டின் இரு பகுதியினரான சிங்கள–தமிழ் மக்களின் மத சமூக அரசியல் அம்சங்களையும் அவைகளிலுள்ள சிக்கல்களையும் விளக்குகின்றேன்.

முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு முன் நடந்தேறிய சிலவற்றை நாம் மறக்காது அவைகளிலிருந்து அனுபவ பாடங்களை கற்றுக்கொள்ளவும், பிழைகளிலிருந்து திருந்திக் கொள்ளவும், எமது புதிய கட்டத்திற்கு வலுச்சேர்க்கவும், திருப்பு முனையில் புத்துயிர் கொடுக்கவும் முனைகின்றேன். அதே வேளையில் முள்ளிவாய்க்காலின் பின் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் சிங்கள இனவாதத்தின் தமிழ் இன அழிப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளதுடன் எமது பிரச்சினை சர்வதேசமயமாகியிருக்கிறது. இப் புதிய சூழலில் உலகில் பரந்து வாழும் தமிழர் அனைவரும் எதிர் கொள்ள வேண்டிய சவாலையும் அவர்களுடைய பொறுப்பையும் சுருக்கமாகக் கூறி இந்நூலை எம் இனத்தவர்க்கு அன்பு நிறைந்த தோழமையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

பணியாளர் **எஸ்.ஜே. இம்மானுவேல்**

ஜேர்மனி, பெப்ரவரி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை...........



வண இம்மானுவேல் அடிகளார் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்து நிற்பவர். ஒருவர் அல்ல - அவர் ஓர் இயக்கம். எரிமலை கூட ஓய்வெடுக்கும் வண இம்மானுவேல் அடிகளார் ஓயாத எரிமலை.

தமிழீழ மண்ணின் கண்ணீரை - பெருமூச்சை - செங்குருதியை - உயிர்த் துடிப்பை - தமிழீழ மக்களின் விடுதலைக்கான தேவையை அடிகளார் பதிவு செய்துள்ளார்.

ஆழமிக்க அவர் எழுத்துக்களின் - ஈழமக்களின் முழக்கம் கேட்கிறேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியை தவத்திரு அடிகளார் தமிழ் உறுதி செய்கிறது.

முள்ளி வாய்க்காவோடு எல்லாம் முடிந்தது என்று மூலை முடுக்குகளில் எழும் முனகல்களுக்கு வண இம்மானுவேல் அடிகளார் முற்றுப் புள்ளி வைக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியை ஈழத் தமிழினம் கலக்கம் இன்றி முன்னெடுக்க வேண்டும். இனி ஆயுதப் போருக்கு இடமில்லை என்பதும் இயலாமையின் வெளிப்பாடே.

களத்தில் வாளேந்திப் போராடிய பண்டைத் தமிழ் மன்னர்கள் தொடக்கம் - கழுத்தில் நஞ்சணிந்து போராடிய மாவீரர்கள் வரை - தமிழீழ மண்ணில் நிலைத்த தமிழ் வீரம் ஒரு போர் முடிவோடு கரைந்து போக பனிக்கட்டி அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் தமிழீழ மண்ணில் ஆயுதப் போர் இருக்குமா - இல்லையா என்பதை வழமை போல் எதிரிகளே முடிவு செய்வார்கள்.

கொலைகளையும் - பாலியல் வன்முறையையும் - கொடிய சிங்களர் குடியேற்றத்தையும் எதிரிகள் செய்து கொண்டே இருக்க - சிங்கள இனவெறிக் கொடுமைக்கு இரையாவது தான் இனியும் தமிழீழ மண்ணின் வாழ்வென்றால் தமிழினம் கொந்தளிப்பதும் - குமுறி வெடிப்பதும் தவிர்க்க முடியாததே.

2009 பிப்ரவரி 24 இல் அமெரிக்காவின் கிழக்கு - தெற்கு - மற்றும் நடு ஆசிய நிகழ்வுகளுக்கான பொறுப்பாளர், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பாப் கோபி அறிக்கை ஒன்றில் தெரிவித்த கருத்தை இங்கே பதிவு செய்கிறேன்.

"புலிகளுடனை சண்டை முடிந்து - தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கப்படாமல் அவர்கள் மீண்டும் ஒதுக்கப்படுவார்களானால் - விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதங்களைக் கையில் ஏந்துவார்கள்"

இதுதான் உண்மை தவத்திரு அடிகளார் தமிழீழ உணர்வாளர்களைத் தட்டி எழுப்புகிறார். உருக்குலைந்து கிடக்கும் தமிழீழ மண்ணை அவர் உலக நாடுகளின் கண்கள் முன் நிறுத்துகிறார்.

சிங்கள இனவெறி அரசு கொன்றுகுவிக்கும் தமிழீழ மக்களின் மீட்சிக்காக அடிகளார் சிலுவை சுமக்கிறார். இந்நூல் தமிழர்களை அழவைக்கும் நூல் அல்ல - எழ வைக்கும் நூல் சிங்கள இனவெறிப் படைகளின் இரும்புச் செருப்புகளின் கீழ் மிதிபட்டுக் கிடக்கும் ஈழத் தமிழினத்தை இந்நூல் சிலிர்த்தெழச் செய்யும் என்பதில் ஐயமில்லை.


சென்னை
11.02.2011

**- காசி ஆனந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள் பல உரித்தாகுக ....................



இந்நூலின் பெரும் பகுதியை எனது ஆங்கில நூலிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கவும், கணினியில் தட்டச்சு செய்யவும் உதவி செய்த எனது தமிழ் உடன்பிறப்புக்களுக்கும், அணிந்துரை வழங்கிய ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்கும், இதன் முதற்பதிப்பை கனடாவில் செய்த அன்ரன் பிலிப்பிற்கும், இதன் இரண்டாம் பதிப்பிற்கு உதவிய யாழ். புனித வளனார் அச்சகத்திற்கும் எனது நன்றிகள்.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு காணாத வெளியேற்றம் 1

"இந்த மாபெரும் மக்கள் இடப்பெயர்வானது ஐந்து இலட்சம் தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் அகப்பட்டு சீரழிந்து போகாமல், வாழத் தயாராகி விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எத்தகைய இடர்களையும் ஏற்று, ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திர மானிடர்களாக வாழ முடிவுசெய்து விட்டார்கள் என்பதையும், தாங்கள் விடுதலைபெற்றவர்களாகவும், தன்மானங் கொண்டவர்களுமாக வாழ்ந்திடத் திடமாக உறுதிபூண்டுள்ளார்கள் என்பதையும் உலகிற்கு அறைகூவல் செய்கின்றார்கள்." (*தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் – 27.11.1995*)

**1995** ஒக்டோபர் முப்பதாம் நாள் இரவு, யாழ் நகரின் நீண்ட வரலாற்றில் ஒரு இருள் படிந்த இரவாகும். வரலாறு ஒரு பொழுதும் என்றுமே அறியாத அனுபவமாகும். மக்கள் துன்பதுயரத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டு, கூக்குரல் இட்டுக்கொண்டு, மிக ஒடுக்கமான தெருக்கள் ஒழுங்கைகள் ஊடாக நெருங்கிக்கொண்டு வெளியேறினார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து அன்று குடியிருந்த ஐந்து இலட்சம் மக்கள் அங்குல அங்குலமாக பட்டண வாயிலிலிருந்தும் அதன் சுற்றுப்புறங்களிலி ருந்தும் முன்னேறினர். பட்டணத்திலிருந்து மக்கள் திரண்டு, குடாநாட்டின் தென்பகுதியிலுள்ள சீரற்ற – அடிப்படை வசதியற்ற ஆனால் பாதுகாப்பான கிராமங்களிற்குள் விரைந்தார்கள். இந்த ஐந்து இலட்சம் மக்களில் ஒவ்வொருவருமே தமக்கு உரிமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டையும் வீட்டையும் விட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டே ஓடினார்கள். பாதுகாப்பைத் தேடினார்கள்.

## 1. சிங்கள "மீட்பாளர்களிடமிருந்து" தமிழர்கள் தப்பி ஓட்டம்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி 1987ல் ஒரு கேலிக்கிடமான யோசனையை முன் வைத்தார். அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை வவுனியா நோக்கி நகருமாறும், அவ்வாறு நகர்ந்தால், சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்களை தாக்காது, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிச் சமரைத் தொடுக்கலாம் என்று கூறினார். அவரது நகைச்சுவை ஆலோசனையைக் கேட்டு தமிழ் மக்கள் சீற்றத்துடன் சிரித்தனர். ஏனெனில் தமது போர் திட்டத்திற்கு ஏதுவாக சிறிலங்காவின் இரண்டாவது பெரிய பட்டினமாகிய யாழ்ப்பாணத்திலிருக் கும் மக்கள் வெள்ளத்தை வெளியேற்றுவது என்பது நடைமுறை சாத்தியப் படாததும் கேலிக்கிடமானதாகவுமே இருந்தது. ஆனாலும் இந்த "நடக்க முடியாத—நகைப்பிற்கிடமானதாக" கணிக்கப்பட்ட நிகழ்ச்சி எமது மக்கள் மீது கொடூரமாகத் திணிக்கப்பட்டு எமது கண்முன்னேயே அந்த இரவில் நடந்தேறியது.

சிறிலங்காப் படைகளின் இனத் துவேசமும் பயங்கரவாதமும் தமிழ் மக்களால் நீண்ட காலமாக நன்கு அறியப்பட்டவை. இலங்கை அரசு வெளியுலகிற்கு தமது படைகள் யாழ்ப்பாணத்தை புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று உரத்துக் கூறிக்கொண்டது. ஆயினும் மக்கள் அனுபவம் வேறு. நான்கு நீண்ட தசாப்தங்களாக அரச படைகளிடமிருந்து தமிழ்மக்கள் பெற்றுக்கொண்ட கசப்பான பாடங்கள் என்றுமே மறக்க முடியாதவையாகும். அரச படை நகர்வென்றதும் தமிழ் மக்கள் மனதில் உடனே பயம், பதட்டம் தோன்றும். மிக மிக அத்தியாவசியமானவற்றுடன் பாதுகாப்புத் தேடி ஓடி இராணுவப் பிடிக்கு அகப்படாமல் தப்பிக் கொள்வார்கள். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கோடு நடந்த *ரிவிரச* இராணுவ நடவடிக்கையின் போதும், மக்கள் அவ்வாறே வெளியேறினார்கள். இவ்வாறு வெளியேறியமை தமிழ் மக்களுக்கு ஒரு விதிவலக்கானதல்ல.

கொழும்பில் அரச அதிகாரங்களுடன் அமர்ந்திருப்பவர்கள் தமது இராணுவம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்கள் என்று நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இருக்கலாம். இது ஒருவேளை, ஓரளவிற்கு தெற்கைப் பொறுத்தவரை உண்மையாகலாம். ஏனெனில் நூற்றுக்கு நூறு விழுக்காடு சிங்களவர்களைக் கொண்ட இராணுவம், சிங்கள மக்களிடத்தில் நிதானமாக நடக்க வேண்டிய தேவையும் கடமையும் இருக்கிறது. ஆனால் தங்கள் பள்ளிக் காலம் தொட்டு தமிழர்களை சிங்களவரின் எதிரிகளாகவும் பயங்கரவாதிகளாகவும், எதிர்காலப் புலிகளாகவும் கருதும் சிங்களப் படையினர் தமிழ் மக்கள் மத்தியிலும் நிதானமாக நடக்க வேண்டிய ஒரு தேவை இல்லை. அவர்கள் ஒழுக்கமற்ற பொறுப்பற்ற முறையில் நடந்து அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இது தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு வழமையான நிகழ்வாயிற்று. சுருங்கக் கூறின், நூறு விழுக்காடு சிங்களவர்களைக் கொண்ட இராணுவம் தனது நோக்கில், தமிழ் விரோதம் ஒன்றை முன்வைத்தே தனது நடவடிக்கைகளை முடுக்கி விடுகின்றது. இப்பேர்ப்பட்ட நோக்கில் அரசின் சில நல்ல முடிவுகளைத் தன்னும் சிங்கள இராணுவம் தமிழ் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தத் தயாராக இல்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள இராணுவம் கொழும்பு அரசின் முடிவை நடைமுறைப்படுத்த விரும்பாத காரணத்தினாலேயே, 1995ன் பேச்சுவார்த்தை தோல்வியடைந்து ஏப்ரல் 19ம் நாள் போர்நிறுத்தம் முறிவுக்கு வந்தது. கடந்த பல தசாப்தங்களாக நடந்து கொண்டிருக்கும் அரசபயங்கரவாதம் – அதாவது இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் கொலை, காணமற்போதல், அழிவு, கொள்ளை, பாலியல் வன்முறை, இவைகள் இன்றும் தொடருகின்றன, சமாதானத்திற்கு முட்டுக் கட்டையாகவே இருக்கின்றன.

## 2. தொடரலையான இடப்பெயர்வுகள்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை 1995 ஏப்ரல் 19ல் முறிவடைந்தது. இதுவரை காலமும் நடமுறையிலிருந்த பொருளாதாரத் தடை, பேச்சுக்களின் போது சிறிது தளர்த்தப்படடது. இத் தடை மீளவும் மின் வேகத்தில் முழுமையாக அமுல்படுத்தப்பட்டு தொடராக மூன்று இராணுவ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் *ரிவிரச* இராணுவ நடவடிக்கை ஒக்டோபரில் இடம்பெறுவதற்கு முன்னர், அதே ஆண்டின் ஏப்ரலுக்கும் செப்டம்பருக்கும் இடையில் இடம்பெற்ற மூன்று இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளினால் மக்கள் மாபெரும் இடப்பெயர்வுகளுக்கு உள்ளானார்கள்.

ஏற்கனவே, பல இராணுவ நடவடிக்கை மூலம், குடாநாடு பல இடப் பெயர்வுகளைக் கண்டது. 2ம் கட்ட ஈழப்போர் 1990ல் இடம்பெற்ற பொழுது மாதகல், இளவாலை, வசாவிளான் மற்றும் தீவுப்பகுதிகளான மண்டைதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, பூநகரி போன்ற ஊர்களை இராணுவம் வலிந்து ஆக்கிரமித்துக் கொண்டது. இராணுவப் பிடிக்குள் விழாமல், உயிர் தப்பும் பொருட்டு மானிப்பாய், சண்டிலிப்பாய், சுன்னாகம், கிளிநொச்சி போன்ற ஊர்களுக்கு மக்கள் அலை அலையாக இடம்பெயர்ந்தார்கள். அவ்வாறு சென்றவர்கள் ஓலைக் குடிசைகள் மற்றும் கைக்கெட்டக் கூடியவற்றைக் கொண்டு சிறு கூடாரங்களை அமைத்து காற்றிலும் வெயிலிலும் தப்பிவிட தவித்து வாழ்ந்தார்கள். அவ்வாறான இடப்பெயர்வுகளுக்குள் ளான மக்கள், கடலில் மீன்பிடிக்க இராணுவம் விதித்த தடையால் தத்தமது வாழ்வாதரங்களாகிய தொழில்களை முக்கியமாகக் கூறின் மீன்பிடித் தொழிலை இழந்திருந்தனர். அவர்களின் உயிர்க்காப்பு, சில இனாமாக வழங்கப்பட்ட பங்கீட்டுப் பொருட்களில் மட்டுமே தங்கியிருந்தது. இதனை அரசு சார்பற்ற அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வந்தன. போதிய சத்துணவை பெறா விட்டாலும் பிள்ளைகள் தற்காலிக தொண்டர் ஆசிரியர்களால் குடிசைகளில் கல்வி புகட்டப்பட்டு வந்தனர். இத்தகைய நிலைமை ஏற்கனவே ஐந்து நீண்ட ஆண்டுகள் தொடர்ந்த பொழுதும் இவர்கள் உயிர் பிழைத்தது உண்மையில் ஒரு அதிசயமென்றே கூறவேண்டும்.

மிகவும் திட்டமிடலுடன், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆயுதங்களை வாங்கிக் குவித்த அரசு, மிகவும் நவீன ஆயதம் தரித்த நாற்பதினாயிரம் படையினரை, யாழ் குடாநாட்டைச் சூழ அமைந்திருந்த ஐந்து படை முகாம்களில் நிறுத்தி வைத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். சிறிலங்கா இராணுவத்தின் முதலாவது பாரிய நடவடிக்கையாக 2ம் ஈழப்போரின் முன்னோக்கிப் பாய்தல் என்ற *லீப் போர்வேட்* **(Leap Forward)** நடவடிக்கை அமைந்தது. பலாலித் தளத்தில் இருந்து ஏவப்பட்ட நீண்டதூர ஏவுகணைகளினால் மக்களை அச்சுறுத்தி பெரும் துன்பத்துக்கு உள்ளாக்கினார்கள். மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையென அழைக்கப்பட்ட *கான்ட் சேக்* **(Hand Shake)** எனும் நகர்விற்குப் பின்னர் மக்கள் கண்ணிவெடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் காரணமாக அழிவில் அமிழ்ந்து போயிருந்த தமது வீடுகளுக்குத் திரும்பவேயில்லை.

இருபகுதியினருமான இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. மக்களின் குடியிருப்புகள் அழிவுற்றதன் காரணமாக குடாநாட்டின் 78 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவு பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள், இரண்டாவது பெரிய இடப்பெயர்விற்குள்ளாகினர். வலிகாமம் மேற்கிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்கள் குடாநாட்டின் மத்திய பகுதிக்குள் புகுந்தனர். இதனைத் தொடர்ந்து பலாலித் தளத்தை விமானங்கள் இறங்குவதற்கு விரிவாக்கும் நோக்கில் பருவ மாற்றத்தைக் குறிக்கும் *லைட்னிங் தண்டர்* **(Lightening Thunder)** என்ற நடவடிக்கை அச்சுவேலி நோக்கி ஆரம்பிக்கப்பட்டது. இது மூன்றாவது அலையாக தமிழ் மக்கள் யாழ்ப்பாணப் பகுதிகளை நோக்கி இடம்பெயரச் செய்தது.

புதிதாக இராணுவம் ஆக்கிரமித்த அச்சுவேலி, உரும்பிராய் சுற்றுப் பகுதிகள் யாவும் வளம் நிறைந்த செம்மண் பூமியாகும். இங்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தேவையான காய்கறிகள், பழவகைகள் காலாகாலமாக செய்கை பண்ணப்பட்டு வந்தது. விமானக் குண்டுவீச்சு, எறிகணைவீச்சு முதலியவற்றிற்கு முகம் கொடுக்க முடியாது தம் கடின உழைப்பின் விளைச்சல்களை இரக்கமற்ற இராணுவத்திற்கு விட்டுவிட்டு விவசாயிகள் உயிர்ப் பாதுகாப்புத் தேடிச் சென்றார்கள். யாழ்ப்பாண மக்கள் இவ்வாறான பல்வேறு இடப்பெயர்வுகளுக்குள் மூழ்கி முடக்கப்பட்டு, தமது அன்றாட தேவைகளுக்கான காய்கறிகள், பழங்கள், மீன்வகைகள் மட்டுமன்றி. ஏராளமாக கிடைக்கும் வாழைப்பழம் தானும் பெற முடியாது ஊட்டச் சத்தற்றவர்களாக அடிப்படை வாழ்வுக்காக ஏங்கித் துடித்தார்கள்.

இப்படி மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடையினாலும் அந்நிய படையின் மண் ஆக்கிரமிப்பினாலும் தாக்கப்பட்டு தவித்துக் கொண்டிருந்தார்கள். இவவாறு ஏற்கனவே துன்புற்றிருந்த வேளையில்தான் யாழ் மக்களையும் அங்கு அண்மையில் குவிந்த அகதிகளையும் ஓர் பெரிய இராணுவ நடவடிக்கையின் கார் இருள்மேகம் பயமுறுத்தியது. நகரின் வெளிப்புறப்பகுதிகளிலிருந்து இரவு பகலாக வீசப்பட்ட எறிகணை வீச்சுக்குள்ளாகி மக்கள் நரம்புத் தளர்ச்சிக்கும் முடிவற்ற பயப் பீதிக்கும் தள்ளப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சிங்களப் படையெடுப்பை நியாயப்படுத்திய ஜனாதிபதியின் கூற்று

நீண்ட *ரிவிரச* நடவடிக்கைக்கு சிறிது முன்பாக 1995 ஒக்டோபர் 12–13ம் இரவு 10.00 மணியளவில் சிறிலங்கா யுத்த விமானங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட இரண்டு வகையான துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் வீச முயற்சித்தன. ஆனால் பருவக் காற்றில் அகப்பட்டு இவைகளில் பெரும்பாலானவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே வீழ்ந்து போயின. அவற்றில் சில கிளிநொச்சி வயல் பிரதேசத்தில் அமைந்திருந்த அகதி முகாம்களுக்கருகாமையிலும் வீழ்ந்தன. அந்த துண்டுப் பிரசுரஙகளின் உள்ளடக்கம் யாது? இவற்றினது நோக்கம் என்ன?

1995 ஏப்ரல் பேச்சு வார்த்தை முறிந்த பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் ஏவிவிடப்பட்டன. 1995 ஆகஸ்ட் 3ம் நாள், ஜனாதிபதி சந்திரிகா ஒரு தலைப்பட்சமாக தீர்வுத் திட்டமொன்றை சிங்களவர்களுக்கும் பன்னாட்டு ஊடகங்களுக்கும் அறிமுகப்படுத்தி தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்றார். அத்தீர்வுத் திட்டங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது தமிழ் மொழியில் தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கவோ, அறியத்தரவோ இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முந்திய நாட்களில் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நியாயப் படுத்த ஒரு வேடிக்கையான முயற்சியைக் கையாண்டார். அதாவது யுத்த விமானங்கள் ஊடாக இருவகைத் துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் வீசி தனது அமைதித் திட்டம் பற்றி சுருக்கமாக விளக்க முயன்றார். ஆனால் தமது உயிர்ப் பாதுகாப்பைத் தேடி ஒடிக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு வீசப்பட்ட பிரசுரங்கள் எட்டவுமில்லை எட்டினாலும் அந்நேரத்தில் அவரது தீர்வுத் திட்டம் தாக்குதல்களினால் நடுங்கி ஒடுங்கியிருந்த தமிழர்களுக்கு அர்த்தமற்ற கேலிக்கூத்தாகவே இருந்தது.

இதில் இன்னுமொரு வேடிக்கை – சற்றுப் பெரிதான துண்டுப் பிரசுரம் ஜனாதிபதியின் வர்ணப் படத்துடன் அவரது செய்தியையும் தாங்கியிருந்தது. அது விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துவத்துக்கு அல்ல, யாழ்ப்பாணக் குடிமக்களுக்கு என விசேடமாக முகவரியிடப்பட்டிருந்தது. இது சிலந்தி தன் வலைக்குள் சிறு பூச்சியை சிக்க வரவழைப்பது போன்று தமிழ் மக்களை இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்குள் வரவழைப்பதாக இருந்தது. தமிழ் மக்களைக் காத்து, பாதுகாப்பளிக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து தனது நாசகார யுத்தத்திற்குள் அவர்களை இட்டுச் செல்லும் நோக்காகவே அம்மாவின் அழைப்பு இருந்தது. அம்மடல், முகவரியிடப்பட்ட தமிழ் மக்களுக்கு தனது ஆட்சி ஆரம்பத்தில் "சமாதானம்! இனி யுத்தம் என்றுமே இல்லை!" என்று வாக்குறுதி அளித்துவிட்டு இப்பொழுது அதை நம்பியவர்கள் மீது குண்டுகளை வீசுகிறார் அம்மையார். இங்கேயும் கூட அவர் இந்த நாசகார யுத்தத்தை "*சமாதானத்திற்கான யுத்தம்*" என்று கூற முனைவதுடன் "*தன்மீது திணிக்கப்பட்ட யுத்தம் ஒன்று*" என்று சர்வதேசத்தின் அரங்கில் தம்மை நியாயப் படுத்த முயன்றார். அப்பிரசுர முடிவில் ஏற்கனவே நடுங்கிப் பயந்து ஏங்கும் தமிழ் மக்களை நோக்கி அவர் கூறுவது, இந்த யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் எதிரானது என்பதே. இது ஜனாதிபதி அம்மையார் தனது மனச்சாட்சியை அமைதிப்படுத்த கடைசி நிமிடத்தில் எடுத்த முயற்சியாக எமக்குத் தோன்றியது. சமாதானத்திற்கான வாக்குறுதியை அளித்துவிட்டு இப்போது தனது நாசகாரச் செயல்களையும் அட்டூழியங்களையும் மூடிமறைக்க எடுத்த முயற்சியாகவே அத் துண்டுப் பிரசுரங்கள் அமைந்தன. அதே போல் அவரது தனிப்பட்ட 1995 ஆவணி 3 சமாதானத் திட்டமும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய நாசகாரச் செயலை மூடி மறைக்கும் முயற்சியாக அமைந்தது.

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரான யாழ்ப்பாணத்தில் எவ்வாறு மக்கள் அடர்த்தியாக வாழ்ந்தார்கள் என்பது பாரிசில் கல்விகற்ற அம்மையாருக்கு நன்றாகத் தெரியும். அலைஅலையாக இடம்பெற்ற இடப்பெயர்வுகள் இன்னும் மக்களை எப்படி நெருக்கடி நிலைக்கு உட்படுத்தியது என்பதும் அவவுக்குத் தெரியும். நகர்ப்பகுதியின் சகல பொதுக் கட்டடங்களின் ஓரங்களிலும் மக்கள் தேங்கியுள்ளார்கள் என்பதும், அந் நகரம் ஓர் இருண்ட சிறைக்கூடம் போன்று மின்சாரம், போக்குவரத்துச் சாதனங்கள், தொடர்பு சாதனங்கள் இன்றி மக்கள் அவலமுறுவதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். 1983 தொடங்கி 12 ஆண்டுகளாகத் தொடரும் அரசின் கொடுமையான யுத்தத்தின் அவலங்களையும் வேதனைகளையும் எதிர்கொண்டு பரிதாபகரமான வாழ்க்கைச் சூழலில் அழிவுகள் மரணங்கள் மத்தியில் விதவைகளும் அனாதைகளும் தவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்கள். இவை எல்லாவற்றையும் அறிந்து கொண்டும், அவவின் தீர்மானங்கள் எப்படி எடுக்கப்பட்டன? தனது அதிகார மோகத்திற்கும் சிங்கள பேரினவாத சக்திகளின் வேட்கைகளுக்கும் அடி பணிந்து தமிழினத்தின் வேதனைகளை மூழ்கடித்துவிட்டு, தமிழர்களின் யதார்த்தமான தலைமைத்துவத்தை ஒழித்துக் கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்.

## 4. யாழ்ப்பாணத்தின் இறுதி நாட்கள்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இறுதியான நடவடிக்கை *ஒபரேசன் ரிவிரச* 1995 ஒக்டோபர் 17ல் ஆரம்பமாகியது. அன்று கருமேகம் குவிந்த காலநிலை, கடுமழை கொட்டும் அறிகுறிகள். இரவும் பகலும் இடியும் மின்னலும். உறக்கமற்ற மக்கள் பதட்டத்துடன் நடுநடுங்கினர். அடுத்த நிமிடம் என்ன நடக்குமோவென்று தெரியாது ஏங்கினார்கள். இருளுக்குள் முடங்கிக் கிடக்கும் மக்கள்மீது, பலாலி முகாமில் இருந்து அடிக்கடி ஏவப்பட்ட பிரகாசமான தேடுதல் வெளிச்சம் மக்களை மேலும் திடுக்கிட செய்தது. யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக அதிர்ந்து ஆடியது. இரவு பகலாக இடம்பெற்ற வான்வெளிக் குண்டு வீச்சுக்கள் தமிழ் மக்களை விரட்டித் துரத்தி வெளியேற்றி, முன்னேறும் படையினருக்கு இடம் ஏற்படுத்திக் கொடுத்தது. வீசிய குண்டுகள், போராட்ட முன்னரங்க நிலைகளைத் தாண்டி, அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய் போன்ற மக்கள் செறிந்த பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

இவ்வாறு வான்வெளித் தாக்குதல்களுடனும் எறிகணை வீச்சுக்களுடனும், ஆட்டிலரி தாக்குதலுடனும் வந்துகொண்டிருக்கும் "சிங்கள மீட்சியாளர்களிடமிருந்து" நிரபராதிகளாக நின்ற தமிழ் மக்கள் எப்படி தப்பிப் பிழைக்க முடியும் என்று ஏங்கினர். இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளிடம் படித்த பாடங்களிலிருந்து சிறிலங்கா அரசபடைகள் புதிய அணுகுமுறைகளை அறிந்து, பலவாரங்களாக இராணுவ ஆய்வுசெய்து, திட்டமிட்டு அதன் பின்தான் தமது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாயிற்று.

தொடர்ச்சியாக அண்மித்துவரும் குண்டுகளின் சத்தமும் இடையிடையே வான் இடியோசையும் யாழ் குடா நாட்டு மக்களுக்கு திகைப்புறும் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஒரு புறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்திலிருந்து இடம்பெயரும் மக்கள் வெள்ளம் அதிகரித்துக் கொண்டிருக்க மறுபுறம் அயல் கிராமங்களில் இருந்த மக்களும் அலை அலையாக வெளியேறிக்கொண்டிருந்தனர். ஈழத் தமிழருக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் இனத் துவேசக் கொள்கையும் அதன் இராணுவத்தின் இரக்கமற்ற செயற்பாடுகளின் நோக்கமும் தெட்டத் தெளிவாயிற்று. அதாவது தமிழர் தலை நகரமான யாழ்ப்பாணத்திலிருந்து 2000 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த தமிழரை துரத்தி விட்டு நகரத்தை சிங்களப் படைகள் கைப்பற்றுவதே அவர்களின் நோக்கம்.

நவீன யுத்தக் கருவிகளுடனும் தாங்கிகளுடனும் நாற்பதினாயிரம் சிங்களப் படையினர், தம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ட தமிழர்கள் நம்பிக்கையற்ற நிலையில் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள. தம்மிடமுள்ள சகல சக்திகளையும் திரட்டியவர்களாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நிகழ்வு அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தரையில் மாத்திரம் ஒரு நேருக்கு நேர் நிற்கும் மரபுச் சமராக இருந்திருந்தால் மக்கள் ஓரளவு நம்பிக்கையுடன் குடாநாட்டில் தங்கியிருப்பர். ஆனால், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில், பல மைல்களுக்கப்பால் இருந்து மேற்கொள்ளப்பட்ட வான், தரை, குண்டுவீச்சுக்கள் மக்களை வெகுவாக அச்சுறுத்தின. சிறிலங்கா அரசபடைகள் முன்னேறி யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்க வருகிறார்கள் எனக் கூறப்பட்ட திட்டம் யாழ்ப்பாண மக்களுக்கு ஏதோ இன்பமான *சுதுநெலும்*– (வெண்தாமரை) வாழ்வு வழங்கும் திட்டமல்ல. மாறாக குண்டுமழை பொழிந்து கொண்டு, அழிவும் அக்கிரமும் நிறைந்த ஆக்கிரமிப்பையே நோக்கமாகக் கொண்டிருந்தது. "அழிவு ஆயுதங்களைப் பாவித்து மக்களை விடுவிக்க முடியும்" என்ற தப்புத் தாளங்களை சிறிலங்காப் படைகளிடமிருந்தே உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## 5. தமிழ் தலைமைத்துவத்தின் உரிய நேரத்துடனான எச்சரிக்கை

சிறிலங்கா அரசு தனது பொய்யான பரப்புரைகளால் தனது யுத்தம் அமைதிக்கான ஒரு முயற்சி என்றும் இது தமிழ் மக்களுக்கு எதிரான போரல்ல எனவும் கூறி உலகநாடுகளை ஒரு வகையில் நம்பச் செய்திருக்கலாம். ஆனால், அரச படைகளின் கடந்த 40 ஆண்டுகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைவெறியாட்டங்களாலும் அழிவுகளாலும் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை நன்கு அறிந்த வடபகுதி மக்கள் இவ்வாறான அரசின் பொய் பரப்புரைகளுக்கு எடுபடப் போவதில்லை.

"*ரிவிரச*" (Riviresa) என்ற குறியீட்டுப் பெயருடன் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் முன்னேற்றத்தை விடுதலைப் புலிகள் நாளுக்கு நாள் அவதானித்து ஆராய்ந்து வந்தனர். அதன் விளைவாக 1995 ஒக்டோபர் 30ம்நாள் தமிழ் மக்களுக்கு ஓர் இறுதி எச்சரிக்கையை உரிய நேரத்தில் வெளியிட்டனர். அதில் குறிப்பிட்டதாவது: "அரச படைகள் யாழ்ப்பாண நகரை அண்மித்துக் கொண்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை முழுச் சக்தி கொண்டு எதிர்த்துப் போராடுவார்கள். ஆகையால் மக்கள் தமது பாதுகாப்புக் கருதி தென்மாராட்சி, வடமாராட்சி, வன்னிக்கு இடம்பெயருமாறு வேண்டுகிறோம்".

இவ் எச்சரிக்கை, மக்களை ஒரு மிகப்பெரிய இடப்பெயர்வுக்கு வழி வகுத்தது. சிங்கள இனவாத ஊடகவியலாளர்களும், வடகிழக்கிற்கு வெளியில் கொழும்பில் மறைந்து வாழும் சில விடுதலைப் புலி எதிரிகளும், புலிகளின் இப் பொறுப்பான ஒரு உரிய கால அறிவித்தலை திரித்து, பொய்களை பரப்புரை செய்தனர். உண்மையில் மக்களைப் பொறுத்த மட்டில் மக்கள் வலிந்தோ அல்லது பயமுறுத்தியோ புலிகளால் வெளியேற்றப்படவில்லை. அரச படைகளின் அகோர நடவடிக்கைகளின் பொருட்டே வெளியேறினர். உண்மையைத் திரித்து தமது சுயநலனிற்காக வெளியுலகிற்கு தவறான செய்திகளைக் கொடுத்துப் பிழைப்புத் தேடும் யூதாசுகள் பலர் தமிழ் இனத்திற்கு எதிராக துரோகம் செய்கின்றனர்.

சந்திரிகாவால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு கூலிக்கு அரசியல் பிழைப்பு நடாத்தும் தமிழ் அரசியல்வாதிகள் இம்மாபெரும் இடப்பெயர்வைக் கண்டு ஆச்சரியமடைந்தவர்கள் போன்று "தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்தனர்". தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கி முனையிலையே மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றுகின்றார்கள் என்று முதலில் கூறினார்கள். ஆனால் அவர்களின் சொந்தக் கூற்று உண்மைக்கு புறம்பானதாலும் மக்களிடம் எடுபடாததினாலும் அவர்கள் அரசுக்குச் சார்பாக மாறி அரசபடைகள் மதிநுட்பத்துடன் உரிய காலத்தில் மக்களை யுத்த பிரதேசத்தை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் மக்கள் வெளியேறுகின்றார்கள் எனக் கூறினார்கள். உண்மையாக யாழ்ப்பாணத்திலிருந்து வெகு தூரத்தில் வாழும் இவர்கள் குண்டுச் சத்தத்தைக் கேட்டதோ அழிவைப் பார்த்ததோ கிடையாது. ஆனால் இவர்கள் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் விடுதலைப் புலிகள் நிற்பதையே தங்கள் கூலி–அரசியல் பார்வையில் காண்கிறார்கள். அவர்கள் மனச்சாட்சியில் பொய்களை உலகிற்குக் கூறுகிறோம் என அறிந்திருப்பினும் விடுதலைப்புலிகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதையே தமது கூலிப்பணியாகச் செய்பவர்கள்.

எப்போது மக்களுக்கு உயிராபத்து ஏற்படவுள்ளதோ, அப்போது அதன் அபாயங்களை எடுத்துக்காட்டி, எச்சரித்து, பயங்கரமான சூழலிருந்து வெளியேற உதவி புரிவதே பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் கடமையாகும். இதைத்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் 1995 ஒக்டோபர் 30 ல் பொறுப்புணர்வுடன் செய்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் உயிர் ஆபத்தை எடுத்துக்கூறி மக்கள் வெளியேற போக்குவரத்து வசதிகள் வழங்கி, வயதானவர்கள், நோயாளர்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர உதவி வழங்கினார்கள். இவைகளை நாம் நேராகக் கண்டறிந்தோம்.

இவ்வாறு உடனடியாக இரவிரவாக பொருந்தொகை மக்கள் ஒரு மாபெரும் இடப்பெயர்வுக்கு உள்ளாவது மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான நிகழ்வாகும். குறிப்பாக வயதானவர்கள், நோயாளிகள் மற்றும் வலது குறைந்தவர்கள், தத்தமது அத்தியாவசிய உடமைகளை எடுத்துச் செல்வது மிக வேதனைக்குரியதாகும். இவையெல்லாவற்றையும் விட உயிரைக் காப்பதே அவர்களது முதற் கடமை யாயிருந்தது. இதற்குத்தான் முன்னுரிமை கொடுத்து விடுதலைப் புலிகள் மக்களுக்கு உதவினார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் வெற்றிகரமாக முன்னேறும் இராணுவத்தை கோப்பாயில் தடுத்து நிறுத்தினர். அந்த இடை வேளையில் வயதானவர்கள், நோயாளர்கள் வாகனங்கள் மூலம் பயணிக்கவும், அத்தியாவசிய தேவைகளுக்குரியவற்றை திரும்பி வந்து எடுத்துச் செல்லவும் உதவினார்கள். நவம்பர் முதல் வாரம் வரை அனேகர் தமது இல்லிடங்களுக்கு இரகசியமாக இரவிரவாக திரும்பி தமக்கு அதி தேவையான பொருட்களை எடுத்துச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிப்பது எல்லோருக்கும் முடியாத ஒன்றாகவும், செலவு கொண்டதாகவும், பாதுகாப்பற்றதாகவும் அமைந்தது. எச்சரிக்கையை உரிய வேளையில் விடுத்ததும், இடப்பெயர்வுக்கு உதவியதும், குண்டுவீச்சுக்களிலிருந்து தப்பிச் செல்லவும் வழிகாட்டி நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி, சிங்கள அரசு பொய்யான பரப்புரையில் மும்முரமாகச் செயற்பட்டது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் குடா நாட்டை விட்டு வெளியேற்றினார்கள் என அரசும் அதற்குத் துணை போகும் தமிழ் விரோத சக்திகளும் தலைமைத்துவத்திற்கு எதிராக அவதூறைப் பரப்புவது ஒரு இனத் துரோகமென்றே கூறவேண்டும்.

## 6. ஊசியின் துவாரம் ஊடான ஒரு நெருக்கமான வெளியேற்றம்!

விவிலியத்தில் கூறப்படும் ஊசியின் கண்ணூடகப் பயணிக்க முயலும் ஒட்டகத்தின் உவமைக்கு ஒப்பாக நாவற்குழிப் பாலத்தைத் தாண்டிட இலட்சக்கணக்கில் மக்கள் தமது பொருட்களுடன் வெளியேறினர். இருப்பினும் மக்களை ஒழுங்காக வழிநடத்தி, நெறிப்படுத்திய தமிழீழ காவல்துறையினரின் பணி இங்கு பாராட்டுக்குரியது. தமிழினம் என்றும் அவர்களை பெருமையுடன் நினைவு கூரும்.

பசியால் வாடிய குழந்தைகளினதும் துயரம் நிறைந்த தாய்மார்களினதும் முகங்களில் வியர்வையும் கண்ணீரும் கலந்து வடிந்தன. அவர்கள்மேல் கொட்டுண்ட பருவமழைத் தண்ணீர் அதைக் கழுவியது. இரவிரவாக பெய்த கொட்டு மழையில் தோய்ந்து நத்தை வேகத்தில் நடந்தனர், இல்லை உண்மையில் நகர்ந்தனர். தமது வீடுவாசல்களையும் வாழ்ந்து மகிழ்ந்த யாழ் நகரையும் விட்டுவிட்டு வெளியேறி துன்பத்திலும் துயரத்திலும் தோய்ந்து நனைந்து நகர்ந்தனர். பெரும்பாலானோர் தமது அழகான இல்லங்களையும், உடமைகளையும், தோட்டங்கள் மற்றும் விளைபொருட்களையும், எல்லாவற்றையுமே ஒரு முறையல்ல இருமுறையல்ல மூன்றாவது முறையாகவும் விட்டுப் பிரியும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்முறை இடம்பெறும் வெளியேற்றம் உயிரை மாத்திரம் காப்பதற்கான பயணமாக அனைவருக்கும் அமைந்தது. பிரிய மனமில்லாது மெல்ல நகர்ந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்தில் கடும் சோகம் நிழலாகப் படர்ந்திருந்தது. ஒருவர் தம் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் அது அடுத்தவரது கதையிலும் மிக்க சோகம் நிறைந்ததாகவே இருந்தது.

## 7. நம்பிக்கை இழந்த பெருமூச்சுடனான வெளியேற்றம்

தீப்பற்றிய வீட்டில் இருந்து எப்படி அவதியுறுவோர் வெளியேறுவார்களோ அவ்வாறே யாழ் தாயகத்தை விட்டு தமிழர்கள் வெளியேறினார்கள். பயம் அனைவரையும் பீடித்திருந்தது. எதிரியின் மேல் கோபம் கொள்ள நேரமுமில்லை அதில் பயனுமில்லை. மனவேதனையுடன் ஆனால் உறுதியுடன் உயிர்பிழைப்பதற்காக விரைந்தார்கள். உடுக்கை இழந்தவர் கைகள் போல் ஒருவருக்கொருவர் உதவினர். சுமைதாங்கிய இதயமும், மக்கள் நெருக்கமும், சீரற்ற பாதைகளுமே அவர்கள் வேகத்தைக் குறைத்தன. இலங்கைத் தீவிற்கும் யாழ் குடா நாட்டிற்குமிடையில் மனித உடலில் தொண்டை இருப்பது போன்று விளங்கிய நாவற்குழிப் பாலம் 6 அடி ஒடுக்கமாக ஆங்கிலேயர் கட்டிவிட்ட பாலம். இப் பழைய ஒடுங்கிய பாலத்தின் வழியாக 500 000 அகதிகள் அங்குல அங்குலமான நகர்வின் மூலம் ஆபத்தைத் தாண்டிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் பாலப் பயணம் முடிந்ததும் எங்கு செல்வோம், எத் திசையில் செல்வோம் எனத் தெரியாதவர்களாகவும் தெளிவாக முடிவுசெய்ய இயலாதவர்களாகவும் காணப்பட்டனர்.

அவர்களின் அப்போதைய நிலை, வாழ்விற்கும் மரணத்திற்கும் மத்தியில் உறுதியற்று ஊசலாடிக் கொண்டு இருந்தது. உயிர் பிழைப்பதற்காக அவர்கள் வீட்டை விட்டு வெளியேறிய பொழுது "எங்களை தயவு செய்து விரைந்து வெளியேற விடுங்கள், எம்மால் முடிந்தவற்றை கைகளிலோ, ஈருருளிகளிலோ, உழவு இயந்திரத்திலோ, மண்ணெண்ணெய் வாகனத்திலோ கொண்டு செல்கிறோம்" என்றனர். ஆனால் நாவற்குழிப் பாலம் கடந்ததும் தாம் எதிரியின் ஆபத்து நிலை தாண்டி விட்டதாக சிறு ஆறுதல் அடைந்தார்கள். இருந்தும் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது. உயிர் பிழைப்பதற்கான அப்போதைய ஒரே கேள்வி "எங்கே நாம் தங்கும் இடத்தைத் தேடுவது?" என்பதே.

மழையில் நனைந்து மணித்தியாலங்களாக நீண்ட வரிசையில் நின்றுகொண்டு, தென்மாராட்சி, வடமாராட்சிப் பக்கமாகவா செல்வது எனப் போகுமிடம் அறியாது நின்ற மனித வெள்ளத்தின் காட்சிகள் பல விதம். பசி, தாகம் தீராத குழந்தைகளின் அழுகுரல் ஒரு புறம், பலமணி நேரம் காத்து நின்ற பொறுமையிழந்த வண்டிகளின் கவன ஈர்ப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தங்கள் மறுபுறம். இதற்கிடையில்தான் மக்கள் அமைதி கொண்ட துயரத்தில் மூழ்கியிருந்தனர். ஒவ்வொரு வரிசையிலும் பல வயதுடையவர்கள் சுமார் 15 பேர் நடந்து சென்றனர். 6 அல்லது 7 பேர் நிரம்பிய ஈருரிளிகளும் இரண்டு மூன்று மூட்டைகளுடன் மண்ணெண்ணெயில் ஓடும் உந்துருளிகளும் வரிசையாக அந்த ஒடுக்கமான வீதியால் பயணித்துக் கொண்டிருந்தன. இளைஞர்கள் யுவதிகள் தமது வயதான தாய் தந்தையர்களையும் குழந்தைகளையும் வண்டியில் ஏற்றி ஓடிக்கொண்டும் தள்ளிக் கொண்டும் பயணித்தார்கள்.

மேலும் மண்ணெண்ணெய் கொண்டு இயக்கப்பட்ட உழவு இயந்திரப் பெட்டிகளும் இவ் இடப் பெயர்வில் முக்கிய இடம் பெற்றன. வயோதிபர், வீட்டுப் பிராணிகள், சமையற் பாத்திரங்கள், உணவுப் பொருட்களுடன் ஆடி அசைந்து விரைந்தன. மழையில் நனைந்த தலையணைகள், பாய்கள் பயணப் பொதியின் மத்தியில் மக்களும் நனைந்து நனைந்து தொடர்ந்து விரைந்தனர்.

ஒரு மூன்றாவது வகையான பயணம். பழைய ஒஸ்ரின் ஏ–40 சிற்றூர்திகளுக்கு யாழ் குடாநாடு பெயர் பெற்றது. இவைகளை சிறு துளி பெற்றோலில் (போத்தல் 900 ருபா) இயக்கி மண்ணெண்ணையில் (போத்தல் 200 ருபா) ஓட வைத்தனர். வசதி படைத்தவர் ஓர் இரு முதியவரை வண்டியிலும் வீட்டுப் பொருட்களை வண்டியின் கூடாரத்திலும் பின்னுக்கும் ஏற்றிச் சென்றனர். இவைகளுக்கிடையில் வறியவர் பலர் தங்கள் அரை குறை ஆடைகளை அணிந்தவர்களாக தங்கள் செல்வப் பிள்ளைகளுடனும் ஆடு மாடு சொத்துக்களுடனும் ஆளுக்கொரு பிளாஸ்ரிக் உறைகளுடனும் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு மெதுவாக அங்குல நகர்வில் பயணித்தபோதும், பொருட்கள் மிகுதியாக ஏற்றப்பட்டிருந்த லொறி, அல்லது உழவு இயந்திரம் போன்றவை மழையால் பாதிக்கப்பட்ட பாதையை விட்டு விலகிக் குடைசாய்ந்து கொண்டன. சில சில்லு பழுதடைந்து அல்லது காற்றில்லாமல் தரித்து நின்றன. அத் திங்கள் மாலை 5.00 மணிக்கும் மறு நாள் செவ்வாய் மாலை 5.00 மணிக்கும் இடையில் சன நெருக்கத்திலும் பசிதாகத்திலும் அகப்பட்டு 3 குழந்தைகள் பரிதாபமாக இறந்து போனார்கள். ஒரு தாய் பிரசவ வேதனை உச்சத்தில் தன் குழந்தையை வீதியிலேயே பெற்றெடுத்தாள். அன்று பாலத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தவர்களில் பல முதியவர்கள் பாலம் கடந்த பின் நீண்ட காலம் உயிர்பிழைக்கவில்ல. வெளியேறிச் சென்ற இடங்களிலேயே சில நாட்களின் பின் இன்னும் பலர் இறந்தார்கள்.

ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் மருத்துவ சேவையளிக்க யாழ்ப்பாணத்திற்கு வெளியே எந்தவொரு நல்ல வைத்திய நிலையமும் இருக்க வில்லை. சாவகச்சேரியிலும் மந்திகையிலும் இருந்த சிறிய வைத்தியசாலைகளில் நூறுபேருக்குத்தானும் சேவையளிக்கும் வசதிகள் இருக்கவில்லை.

இப் பரிதாபத்துக்குரிய மாபெரும் மக்கள் இடப்பெயர்வு, நீண்டகாலமாக மனிதாபிமானமற்ற முறையில் சிங்கள அரசுகள் தமிழ் விரோதத்துடன் நடாத்திவரும் கொடுமைகளின் ஒரு உச்சக் கட்ட அடையாளமாகும். விசேடமாக அன்றைய அரசினால் நடத்தப்பட்ட, மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடைகள் தமிழ் மக்களை ஒரு இழிவான பண்டைக்கால வாழ்க்கை முறைக்குள் தள்ளிவிட்டது. இதன்விளைவாக உயிர் பிழைப்பதற்கு வேண்டிய பல புதிய தேடல்களில் ஈடுபட்டனர். எரிபொருள் தடைமூலம் வெளியே இருந்து வரும் பெற்றோல் அரிதாக, வாகன நடமாட்டம் யாழ்ப்பாணத்திலிருந்து மறைந்தது. கொழும்பில் ரூபா 8 ற்கு விலைப்படும் மண்ணெண்ணெய் யாழ்பாணத்தில் ரூபா 200 வரை விலைப்பட்டது. இதன் மூலம் இயங்கும் பழைய உந்துருளிகள், சிற்றூர்திகள் மட்டுமே போக்குவரத்துக்குப் பயன்பட்டன. பாரவூர்திகளுக்கு டீசலுக்குப் பதிலாக வேறு தாவர எண்ணெய்களையும் சில இரசாயனச் சேர்க்கைகளையும் சில புத்திஜீவிகள் கண்டுபிடித்தனர். மின்சாரமின்றி சமைக்க காடுகளில் விறகும் அதற்கு புது வித அடுப்பும், வானொலி கேட்க சைக்கிள் டைனமோவை சில்லு சுழற்றி இயக்குவித்தனர். கடந்த 13 ஆண்டு யுத்தத்தின் விளைவாகவும், பொருளாதாரத் தடைகளாலும் மக்களின் வாழ்க்கைத் தரம் சிதறிப் போனதுடன், மக்கள் எலும்பும் தோலுமாக மெலிந்து, போக்குவரத்து தொடர்புகள் ஏதும் இன்றி தனிமைப்படுத்தப்பட்டார்கள்.

## 8. வனாந்திரத்தில் வதிவிடம் தேடல்

நாவற்குழிப் பாலத்தின் பாதுகாப்பான பக்கத்தை அடைந்ததும் சிலர் தமக்குத் தெரிந்த நண்பர்கள், உறவினர்கள் வீடுகைளத் தேடி அங்கு தங்குவதற்கு தேனீக்கள் வீச்சாகக் கூட்டுக்குள் பறப்பது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தார்கள். தென்மாராட்சி வடமாராட்சிப் பகுதிகளில் இருந்த ஒவ்வொரு வீட்டுக் கதவும் வலிகாமத்திலிருந்து வந்த உறவினர்கள் நண்பர்களால் மட்டுமல்லாது நூற்றுக்கணக்கான முன்பின் தெரியாதவர்களினாலும் உதவி கேட்டுத் தட்டப்பட்டது.

இவ்வாறு உதவி கேட்டுக்கொண்டவர்கள் விருந்தளிப்பவர்களுக்கும் தமக்கும் இடையில் இருக்கக் கூடிய உறவு, அறிமுகம் என பலவித முறைகளை ஆராய்ந்து தம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் ஈடுபட்டனர். பொதுவாக சிறிலங்காவில், அதுவும் யாழ்ப்பாண தமிழர்கள் மத்தியில் ஓர் விசாலமான குடும்ப உறவு இருந்து வந்திருக்கின்றது. குடும்ப நட்புத் தொடர்பு முறைகளில் மூன்று அல்லது நான்கு தரமான உறவுகள் காணப்படுகின்றன. மேற்கு நாடுகளில் குறுகிய வட்டமாக நெருங்கிப் பழகுபவர்கள் தம்மை "நண்பர்கள்" என்று அழைப்பர். பெரிய வட்டமாகப் இடைக்கிடை பழகுபவர்கள் தம்மை "தெரிந்தவர்கள்" என்றும் அடையாளப்படுத்திக் கொள்வர். ஆனால் சிறிலங்காவில் அனைவருமே ஒருமுறை சந்தித்து உரையாடிக் கொண்டதும் தேவைப்படும் நேரங்களில் தம்மை நண்பர்களாக்கிக் கொள்வார்கள்.. இது தேவை நாடிப் பெறும் நேரம். பயன்தரும் ஒன்று. ஆகையால் தென்மாராட்சியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் நண்பர்கள், விருந்தாளிகள் என முன்னறிவிப்பின்றியே ஐந்து, ஆறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்காலிக உதவி தேடிக்கொண்டு இல்லஙகளில் நிரம்பி வழிந்தனர்.

இந்தப் பகுதிகளில் எவருக்கும் அறிமுகம் இல்லாதவர்கள் அங்குள்ள கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்குச் சென்றனர். கோவில்களிலும், தேவாலயங்களிலும் வழிபாட்டிற்கென ஒதுக்கப்பட்டிருந்த பரிசுத்தமான இடங்களிலும் கூட எங்குமே மக்கள் நிறைந்து வழிந்தனர். 1995 கிறிஸ்மஸ் விழா பல ஆலயங்களில் கோவில்களுக்குள் பலி பீடத்தில் கொண்டாட முடியவில்லை. அருட்பணியாளர்களின், அருட்சகோதரிகளின் பணிமனைகள் மற்றும் தியான இல்லங்கள் திறந்து விடப்பட்டு அவர்களது படுக்கைகள் வயோதிபர் நோயாளிகளுக்காக வழங்கப்பட்டன. (புலம் பெயர்ந்த எனக்கும் மிருசுவில் திருக்குடும்ப கன்னியர் மட அதிபர் சகோதரி கில்டா தன்னுயை சிறிய அறையை 2 மாதத்திற்கு தந்துதவினார். அதற்குள் இருந்துதான் யாழ் மறை மாவட்ட குரு முதல்வராக பணி செய்தேன"...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலும் வறுமையான பலர் தெருவோரங்களிலும் மரநிழலிலும், பத்தாண்டுகளுக்கு மேல் பாவனையில் இல்லாத பாழடைந்த பேரூந்துத் தரிப்பிடங்களிலும், பாழடைந்த தொடரூந்து நிலையங்களிலும் தங்கினர். சிறிலங்கா பேரூந்துச் சேவையும், போக்குவரத்துச் சபையும் பத்தாண்டுகளுக்கு மேலாக தமது சேவையை நிறுத்தியிருந்தன. வடக்கில் வாழும் தமிழர்கள் வெளியே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அதேநேரத்தில் தாய் மண்ணிலேயே நடமாடமுடியாது பயண வசதிகள் மறுக்கப்பட்டு "உறைவடைந்த மக்கள்" (frozen-people) ஆகக் காணப்பட்டோம்.

## 9. உணவு–உடை–இருப்பிடங்களை பலருக்கு பகிர்தலின் சிரமம்.

திடீரென, ஒரு மாபெரும் மக்கள் தொகையினர் வலிகாமம் நகர்ப் பிரதேசங்களிலிருந்து அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த தென்மாராட்சி மணல் செறிந்த புறநகர்ப் பகுதிக்குள் நுழைந்ததும், மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைத் தன்னும் பெருந்தொகையினருக்கு வழங்குவதென்பது மிகப் பெரிய சவாலாகவும் சிக்கலாகவும் இருந்தது. பனியிரவு, உணவுப்பற்றாமை, சுகாதார வசதியின்மை, வைத்திய பராமரிப்பின்மை இவைகள் ஒரு புறம். மறு புறத்தில் இருக்கும் வசதிகளைத் தானும் உதவி நிறுவனங்கள் பகிர்ந்து செய்யக் கூடிய வசதிகளும் இருக்கவில்லை. இந் நிலையில் அனைத்துத் தரப்பினரிடமும் இருந்து கிடைத்த ஒற்றுமையும் நல்லெண்ணமுமே முடியாமை என்பதை முடியும் என்று நிரூபித்தது.

இடப்பெயர்வின் முதல் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே இவ்வாறான இணைப்பு ஏற்பாடுகளைச் செய்த விடுதலைப் புலிகள் அமைப்பைப் பாராட்ட வேண்டும். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அரச அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மத நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒரு வகை உதவிக்கர இணையமாக இயங்கின. இடம்பெயர்ந்து மிக நெருக்கமாக வாழும் மக்களுக்கு ஆகக் குறைந்த அடிப்படைத் தேவைகளான மழைக்கான ஓலைக் கொட்டில்கள், தற்காலிக மல சல கூடங்கள், குழாய்க்கிணறுகள் அமைத்ததுடன், உடைகள், படுக்கை விரிப்புகள் தலை அணைகள், இரவுக் குளிருக்கான போர்வைகள் போன்றவற்றை கொடுத்துதவின. இத்துடன் நிற்காது உலர் உணவு அல்லது தயாரித்த கஞ்சி போன்ற உணவை நாளுக்கு ஒருவேளை ஆகுதல் வழங்கி மக்களை உயிர்பிழைக்க வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையோ, மருந்துவகைகளோ, ஆய்வுகூட வசதியோ, சத்திர சிகிச்சை நிலையமோ எதுவும் இல்லாத நிலையில் அகதிகளாகத் தள்ளப்பட்ட மக்களை உயிர் பிழைக்க வைப்பதே மிகப் பெரிய சவாலாக சுகாதார அதிகாரிகளை அச்சுறுத்தின. ஏதோ ஒத்துழைப்புடன் அவைகளும் ஒருவாரத்தினுள் ஒருவாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சீரடைந்தன.

## 10. துன்பியலின் காரணத்தை ஏற்க மறுத்த அரசு

இந்த மாபெரும் இடப்பெயர்வு என்ற துன்பவியல் நாடகத்தை அரங்கேற்றிய அரசு அதையிட்டு வெட்கப்படவில்லை, மாறாக அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் தவறான புள்ளிவிபரங்களை உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கியது. இதன் மூலம் யதார்த்தத்தை மறுத்தும் மறைத்தும் கொண்டது. ஜனாதிபதி, இடம் பெயர்ந்த மக்களின் ஓர் உயர் மதபீடத் தலைவரான யாழ் ஆயரிடம் "விடுதலைப் புலிகளால் மக்கள் வலிந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் இவர்கள் தொகை 50.000 க்கு மேற்படாது" எனவும் கூறிடத் துணிந்தார். இதைக் கேட்டு வந்த ஆயர் என்னிடம் இதைக் கூறிய பொழுது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. வெளிநாட்டமைச்சர் திரு. கதிர்காமர், இடம்பெயர்ந்து துன்பப்படும் மக்களைக் குறித்து தனது ஏளனமான கருத்தை வெளியிட்டார். இவர்கள் நாட்டின் தேசிய எல்லைகள் தாண்டியவர்கள் அல்லர் ஆகையால் அவர்கள் அகதிகள் இல்லை எனக் கூறினார்! அது மாத்திரமல்ல. ஐ.நா. அமைப்பின் பொதுச்செயலர் இடம்பெயர்ந்து தவிக்கும் அரை மில்லியன் தமிழ் மக்களுக்கு உடன் உதவுமாறு உலக நாடுகளுக்கு விடுத்த அவசர வேண்டுகோள் தவறு எனவும் கூறினார். தெற்கில் வெள்ளப் பெருக்கொன்றினால் மக்கள் இடம் பெயர்ந்திருந்தால் இந்த தமிழ்ப் பெயரைத் தாங்கி ஊதியம் பெறும் அமைச்சர், தனது எல்லா விளக்கங்களையும் புறந்தள்ளிவிட்டு சர்வதேச உதவி கோரியிருக்க மாட்டாரா?.

இந்த மாபெரும் மக்கள் இடப்பெயர்வின் உண்மைகளை ஏற்றுக்கொள்ள கொழும்பு அரசும் அதன் அமைப்பும் மறுத்ததுடன், மனிதாபிமானமற்ற முறையில் அடிப்படை உதவிகளை வழங்காமல் நூற்றுக்கணக்கான மக்களை பசி, தாகம், நோய் என்பவற்றுக்குள் என இரக்கமின்றி பாதாள குழியில் தள்ளியது. நாளுக்கு நாள் விதம் விதமான தடைகள் விதிக்கப்பட்டதன் விளைவாக அத்தியாவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களான மருந்து, உணவு போன்றவை குறைந்து கொண்டே போயின. உதவி செய்யும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்புச் சாதனங்களும் மட்டுப்படுத்தப்பட்டன. ஊடகவியலாளர்கள் வடக்கே செல்வதற்கு தடை செய்யப்பட்டனர். இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்களில் தன்னும் ஏவி விடப்பட்ட குண்டு வீச்சால் தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

## 11. தென்னிலங்கைத் தமிழரை ஆத்திரமூட்டிய அவமானமும் அச்சமும்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை தெற்கில் சிங்களவர்கள் ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடினார்கள். இதனால் தமிழர்கள் மீது மீளவும் தமிழருக்கெதிரான ஒரு இனக்கலவரம் வெடிக்கலாம் என அரசாங்கம் எண்ணி பாதுகாப்பு முறைகளைப் பலப்படுத்தியது. தெற்கில் வாழும் தமிழர்கள், குறிப்பாக கொழும்பில் வாழ்பவர்கள், தமிழரின் அரசியல் கோரிக்கைகளை ஆதரிப்பவர்களா யிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அல்லது எதிர்ப்பவர்களாயினும் சரி, விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களோ, அனுதாபிகளோ எதிர்ப்பாளர்களோ அனைவர் உள்ளங்களிலும் 1983ல் நடத்தப்பட்ட இனப்படுகொலைகள் நினைவு படுத்தப்பட்டன. அதனால் தமது அலுவலகங்களுக்குச் செல்லாமலும் பொது போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தாமலும், பூட்டிய அறைகளுக்குள்ளும், தாம் வாழும் வீடுகளுக்கு வெளியே தம்மைப் பற்றிய எவ்வித அடையாளமும் தெரிவிக்காமல் ஒளிந்து கொண்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டுமென்று விரும்பும் விரோதிகளான தமிழர்கள் கூட யாழ்ப்பாணத்தைக் அரசு கைப்பற்றியதை வரவேற்கவில்லை. சிங்களவர்களின் எக்காளம் மீண்டும் ஒரு தமிழ் இனக்கலவரத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற பயம் அவர்களில் நிரம்பி வழிந்தது.

யாழ்ப்பாணக் கைப்பற்றல் நடந்த சில வாரங்களின் பின்பு, கொழும்பு நகருக்குள் போக்கு வரத்து சம்பந்தமாக இன்னும் இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகள் கொண்டு வரப்பட்டன. வடக்கில் இருந்து வருபவர்களும் நெடுங்காலமாக கொழும்பில் வாழும் தமிழர்களும் கூட தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே ஒரு வருத்தமான ஆத்திர நிலையை ஏற்படுத்தி இந்த நாட்டில் தாம் யார் என்பதையும், தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு நடாத்துகிறார்கள் என்பதையும் கசப்பு உணர்வுகளுடன் நினைவூட்டியது. தமது வீடுகளைச் சோதனையிடுவதும், வீதியில் நிறுத்திப் பரிசோதிப்பதும், தமது நீண்ட கால சிங்கள அயலவர்கள் முன்னே இவ்வாறு இழிவான சந்தேகத்துடன் நடாத்தப்படுவதும் அவர்களை வெட்கத்திற்கும் வேதனைக்கும் உட்படுத்தியது. மூன்று சக்கர வண்டி ஓட்டுநரும், நடைபாதை வியாபாரியும் இரவோடிரவாக சிங்களவர் என்ற ஒரே காரணத்தால் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியாளராக மாறினர், தமிழர்கள் எல்லோரையும் புலிகளின் வெடிகுண்டுப் போராளிகளாக சந்தேகிப்பதும், கேள்வி எதுவுமற்று எவரையும் சந்தேகத்தின் பேரில், காவல் நிலையம் கொண்டு சென்று தடுத்து வைக்க உதவுவதும் அவர்கள் பணியாயிற்று. சில இடங்களுக்குள் நுழைவு மறுக்கப்படுவதும், கால எல்ல வரையின்றி விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவதும், தமிழருக்குரிய எல்லாவற்றையும் எங்கும் சோதனைக்கு உட்படுத்துவதும், பொதுசன சாதனங்களில் பயணம் செய்வதை மறுப்பதும், – இவ்வாறான பல்வேறு மனிதாபிமானமற்ற சோதனைகள் மூலம், அவமானப்படுத்துவதும், சாதாரண தேசிய அடையாள அட்டைகளுக்குப் பதிலாக விசேட காவல்துறை அனுமதிப் பத்திரம் கேட்பதும் தமிழர்களைத் மிகத் தாழ்வாக நடத்துவதாயிற்று. இருந்தும் அரசும் அதன் அடிவருடிகளும் கடந்த 50 வருடங்களாக நடைமுறையில் தமிழர்கள் எவ்வாறு கணிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றார்கள் என்பதன் உண்மைகளையும் யதார்த்தங்களையும் கண்டுகொள்ளாது "தமிழர்கள் சம அந்தஸ்த்துடைய குடிமக்கள்" என்று தத்தமது மனச்சாட்சியை திருப்திப்படுத்தக் கூறி வந்திருக்கின்றனர். தமிழர்கள் எவ்விதம் நடாத்தப் படுகிறார்கள் என்ற உண்மையான யதார்த்த நிலையை உணராது, இராணுவ அதிகாரத்தின் மூலம் அவர்களை சம நிலை உணர்வுக்கு கட்டாயப்படுத்துவது புத்திசாலித்தனமான ஒன்றல்ல. ஈற்றில் எதிர்விளைவையே இது கொண்டுவரும்.

## 12. அடக்க முடியாத உண்மைகள் சவால்களாக கிளர்ந்தெழும்.

யாழ்ப்பாணத்தை வெற்றியுடன் கைப்பற்றிய சந்தோசமும் வெற்றி எக்காளமும் ஒருவாறு சில வாரங்களுக்குப் பின்னர் மறைந்தன. அதன் பின்னரே பொய்யான ஏமாற்றுத்தனமான "வெற்றியின்" உண்மைநிலை என்னவென்பது வெளியே வரத் தொடங்கியது. வெற்றியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்பட்ட சிங்களவர்களில் சில அறிவாளிகள், அது ஒரு வீண்விரயமானதும், அமைதியான தீர்வுக்கு முரணான நிகழ்வென்றும் எண்ணத் தலைப்பட்டனர். சிறிலங்காப் படைகள் யாழ்ப்பாணத்தை எவ்வளவு காலம் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப் போகிறார்களோ அவ்வளவு காலம் வரை தமக்கு அந்நியமான ஒரு பகுதிக்குள் நிற்பதென்பது, மிகப்பெரிய விலைகொடுக்க வேண்டிய ஒன்றாக இருக்கும். ஆகையால் சிங்களவருக்கு இது நடை முறையில் "ஒரு தமிழர் வெற்றி" என்ற அச்சம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்.

அரசு மிகக் கொடிய அடக்குமுறைகளுடன் தனது யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டு ஊடகத் தடையுடன் மூடிய கதவிற்குப் பின்னால் யுத்தம் நடாத்தியது. மனிதாபிமான மற்ற முறையில் பொருளாதாரத் தடையையும் ஆயுதமாக அரசு கையாண்டது. வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகவியலாளர்கள், யுத்தப் பிரதேசங்களுக் குள் நுழையத் தடைவிதித்து, இராணுவம் வெளியிடும் செய்திகளையே ஊடகச் செய்திகளாக கொடுத்தும், கொழும்பு ஊடகங்களில் யுத்தச் செய்திகள் வெளிவருவதைத் தடுத்தும் உண்மையை உலகிற்கு மறுத்தது, மறைத்தது. அத்தியாவசிய உணவுகள், மருந்துகள் தன்னும் வடக்கே செல்லாது தடை போட்டு விட்டு, வெட்கமற்ற முறையில் தன்னை ஒரு ஜனநாயக அரசென்று தம்பட்டம் அடித்தது சிறிலங்கா அரசு. இவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் கிற்லர் யூதஇன ஒழிப்பில் கையாண்ட முறைகளையை இவர்களும் கையாண்டனர். சிறீ லங்கா அரசு – நச்சுவாயு அறைக்குள் மனிதரை மெதுவான மரணத்துக்குள் அனுப்புவது போல் யாழ் குடா நாட்டு மக்களுக்கு மிக மிகக் குறைவான உணவை அனுப்பி "மெதுவான மரணத்திற்கு" தமிழரை இட்டுச் சென்றது. வெளிநாட்டுத் தூதுவர்களும், உலக ஊடகவியலாளர் களும் எதுவுமே செய்யாது, மூடிய கதவுகளின்பின் நடாத்தப்பட்ட யுத்தம் பற்றிய உண்மைகளை முழுமையாக அறிய முயலாது, இறக்கும் மக்களின் அவலங்களை அறியாது கொழும்பிலிருந்து செயல்பட்டனர். இவ்வாறு மூடிய கதவிற்குப் பின்னால் பொருளாதாரத் தடை போட்டு சிறிலங்கா அரசு நடாத்தி முடித்த யுத்தம், அரசு கையொப்பமிட்ட ஜெனிவா உடன்படிக்கைகள் அனைத்தையும் முழுமையாக மீறியதாகும். ஆயினும் சர்வதேச சமூகம் இந் நிலையிலும் கைகட்டி நிற்கின்றது!

இருந்தும் நவீன தொடர்புச் சாதன வசதிகள் வளர்ந்திருப்பதற்கு தமிழர் நன்றி கூற வேண்டும். ஏனெனில் இராணுவத் தடைகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரத் திரைகளையும் கிழித்துக் கொண்டு உண்மையைத் தாங்கிய செய்திகள் இணையத்தளங்கள் வழியாக உலகில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் இல்லங்களைச் சென்றடைந்தன. சர்வதேச ஊடகங்களின் நிருபர்கள் பெரும்பாலும் கொழும்பில் இருந்து வெளியாகும் அரச—ஆயுதபடைகள் அறிக்கைகளையும், செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு தமது செய்திகளை வெளியிட்டனரேயன்றி, பாதிப்படைந்த மக்களின் குரல்களைக் கேட்கவில்லை. அவர்கள் சார்பில் புலம்பெயர் தமிழர் வெளியிட்ட கருத்துக்களும் செவிடன் காதில் ஊதிய கருத்துக்களாகவே வெளிநாட்டு ஊடகங்கள் கருதின. 2ம் உலகப் போரின் பின்னால் செயல்பட்ட வல்லரசுகளின் ஏகாதிபத்தியத்தை பற்றிய உண்மைகளும் அதன் ஆய்வுகளும் பல தசாப்தங்கள் கழித்தே வெளி வந்தது போல் இலங்கை அரசின் தீய செயல்களும் ஒரு நாளைக்கு அப்பட்டமாகும். இன்று வடகிழக்கில் நடாத்தப்பட்ட கொலைகளும், அழிவுகளும், பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் பெயரில் – "லீப் போவேட்" "தண்டர் ஸ்ரைக்" "கான்ட் சேக" "ரிவிரச" – என்று இடம் பெற்றாலும், இவற்றுள் பல உண்மைகள் மறைக்கப்படடிருக்கின்றன. உண்மை ஒரு நாள் காலம் கடந்தாகிலும் வெளிவந்தே தீரும். அது வரை மனம் திரும்பவும் சமாதானத் தீர்வு காணவும், காலம் காத்திருக்குமா?

அந்நிய சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. யாழ்ப்பாணக் குடிமக்கள் வெளியே துரத்தப்பட்டனர். உலகம் இம்மாபெரும் இடப்பெயர்வுபற்றி அறியாமலும் உண்மைகளைப் புரியாமலும், மக்கள் துன்பங்களைக் கண்டுகொள்ளாமலும், இதற்குக் காரணமான அரசையோ அன்றேல் அதன் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளையோ கண்டிக்காமலும் உள்ளது. ஆயினும் தமிழரின் பதில் தாக்குதல்களை அவசரமாகக் கண்டிக்கும் சர்வதேசம், நம்பிக்கை இழந்து தவிக்கும் மக்களால் முன்னெடுக்கப்படும் பதில் நடவடிக்கைகளை வன்செயல்கள் எனக் கூறிக்கொண்டு, அரசின் வன்முறைகளை அறிந்தும் அறியாததுபோல மௌனமாக வாழாவிருப்பது என்றோ ஒருநாள் சர்வதேச மனச்சாட்சிக்கு பெரும் சவாலாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தலைநகர் சிங்களத்தால் சின்னா பின்னம்

# 2

## 1. இராணுவத்தின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு – சிறிலங்காவின் வெற்றியா அல்லது தோல்வியா?

வரலாற்று நிகழ்வாக யாழ்ப்பாணத்தில் இராணுவம் நிலைகொண்டதும் அதை ஆக்கிரமித்ததும், தனிப்பெரும் சாதனை என சிறிலங்கா அரசபடைகளும், அரசும் பெருமை கொண்டன. 50 ஆண்டுகால இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட முதற்கட்ட நடவடிக்கை என அரசால் தெரிவிக்கப் பட்டது. பொதுவாக எல்லா சிங்களவர்களாலும் இது கொண்டாடப்பட்டதுடன் சிங்களத் தீவிரவாதிகள், இது குறிப்பாக, புலிகளுக்கு மரணஅடி என்றும், தன்னாட்சி கேட்ட தமிழர்களுக்கும் அவர்களுடைய இலட்சியத்திற்கும் இது படுதோல்வி என்றும் கூறினார்கள். ஆனால் தெற்கிலிருந்து வெளிவந்த இக் கருத்துக்கள் சிறிலங்காவுக்கு உள்ளும், வெளியும் வாழும் தன்மானம் கொண்ட எல்லாத் தமிழர்களிடமும், ஓர் அழியாத வடுவை ஏற்படுத்தியது. இம் மாபெரும் மக்கள் இடப்பெயர்வும், மக்கள் வெளியேறிய பின்னர் வெறுமையான யாழ் நகருக்குள் இராணுவம் நுழைந்து வெற்றிக்களிப்புக் கொண்டாடியதும் தமிழ் மக்களாலும், அரசியல் ஆய்வாளர்களாலும் அரசுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வி எனவும், அமைதிக்கும் சமாதானத் தீர்வுக்கும் அடிக்கப்பட்ட சாவுமணி என்றும் எதிர்வு கூறப்பட்டது.

## 2. யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது வரலாற்றில் ஒரு மடத்தனமான தவறு

பலாலி இராணுவ முகாமிலிருந்து இறுதி இராணுவ நடவடிக்கையாக யாழ்ப்பாண நகரை நோக்கித் தொடங்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையின் பிரதான நோக்கம், யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவதே. அரசு தனது "சமாதானத்திற்கான யுத்தத்தை" உலகிற்கு பிரகடனப்படுத்திய பொழுது, தனது பிரதான நோக்கம், புலிகளை ஒன்றில் முழுமையாக அழிப்பது அல்லது பலவீனப் படுத்துவதும், அதன் வழியாக, தமிழ் மக்களை புலிகளின் உறுதியான பிடியிலிருந்து விடுவிப்பதும் என்று உரத்துக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு கூறியதன் உள் நோக்கம் பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஏகாதிபத்திய திட்டத்தை, அதாவது, ஆள்பவர்களின் மேலாண்மைத் தனத்தை தமிழ்ச் சிறுபான்மையினர் மீது திணித்து ஒடுக்குவதே ஆகும். சுருங்கக் கூறின், அரசின் உண்மையான நோக்கம், தமிழின தற்பாதுகாப் பான எதிர்ப்பின் முதுகெலும்பை உடைப்பதும், தமிழ் அரசியல் காப்பரணாக விளங்கும் விடுதலைப் புலிகளின் கோட்டையாகிய யாழ்ப்பாணத்தை அழிப்பதும், அதன்மூலம் சிங்கள அரசியல் தோற்றத்தை தெற்கில் வலுப்படுத்தி, தாமே முழுத் தீவின் காப்பாளர்களாகவும் பெரும்பான்மையினரின் பாதுகாவலர்களாகவும், வலிமை பெறலாம் என்பதேயாகும்.

சிங்கள பிற்போக்காளர்களை தம் பக்கம் வளைத்து தனக்கு ஆதரவான அரசியலையும் தனது தீர்வுத்திட்டங்களுக்கு தேவையான ஆதரவையும் ஒரு பெரிய யாழ்ப்பாண வெற்றியின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாமென சந்திரிகா அம்மையார் கனவுத்திட்டம் போட்டிருக்கலாம். ஆனால் அது அவருக்கு இரு பகுதியினரிடமிருந்தும் மிகப்பெரிய விலைகொடுத்த கசப்பான அனுபவமாகி விட்டது. மூடக் கொள்கையுடைய சிங்கள பிற்போக்குவாதிகள், வெற்றிப் பிரவாகத்தில் சிங்களக் கொடியை யாழ்ப்பாணத்தில் ஏற்றி, அதிகார மமதை கொண்டிருந்த வேளையில் எப்படி அதிகாரத்தை தமிழர்களுடன் பகிர்ந்துகொள்ள மனம் வரும்? அதற்கு அவர்கள் தயாராகவில்லை. அவர்கள் ஆர்ப்பரித்துக் கொண்டதெல்லாம் சிங்களத் தலைமையின் கீழ் இயங்கும் ஒற்றையாட்சியே. அதற்கு ஏதுவாகவே யாழ்ப்பாண வெற்றியை கொண்டாடினர். ஆனால் வெற்று நகராகவுள்ள யாழ்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலையங்களுக்குள் தம்மை முடக்கி, தாமே தமக்காக உருவாக்கிய தமது சிறைக் கூடங்களுக்குள் இருந்து சிங்கள இராணுவம் எப்படி எப்போது தம்மை விடுவிக்கப் போகின்றார்கள் என்பதே எழுந்துள்ள முக்கிய கேள்வியாகும். தாமே தோண்டிய புதை குழிக்குள் விழுந்து கிடக்கின்றனர்! இதனைத் தொடர்ந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் சிங்களவர்கள் இனி ஒரு போதும் வரலாற்றில் நியாயப்படுத்தவோ, திருத்திக் கொள்ளவோ முடியாத ஓர் மடத்தனமான தவறை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாக்குகின்றது.

## 3. தமிழர் நினைவுச் சின்னங்களை அழித்தவர்கள், யாரை அழிக்கின்றனர் புலிகளையா அல்லது மக்களையா?

பலரும் அறிந்தவாறு கெரில்லாக் குழுவினர் என்போர் நிரந்தரமாக கோட்டைகளையும் கொத்தளங்களையும் உடையவர் அல்லர். அவர்கள் தற்காலிகத் தளங்களில் தமது வாழ்வாதாரம், போரியல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பர். சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த ஐந்து வருடங்களில் மிகச் சிறப்பான வளர்ச்சிபெற்று, தமிழர்களை ஒரு தேசிய இனமாகவும், வரலாற்றுப் பெருமையும், பண்பாடும் கொண்ட மக்களாகவும் மாற்றி வளர்ச்சி மனோபாவத்தைப் பெற்றிடும் உணர்வை வளர்த்து வந்திருக்கின்றனர். இதற்குத் தேவையான கட்டமைப்புகளை நிறுவி, குறிப்பாக காவல்துறை, நடுவர்மன்று, போக்குவரத்து, நிர்வாகஅலகு, சமூக செயலாக்கங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தை தமிழீழத்தின் வரலாற்று, பண்பாட்டு மையமாக உருவாக்கினார்கள்.

சிறிலங்காத் தமிழர்களுக்கு மட்டுமன்றி அனைத்துலகத் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணம் ஒரு தனிப்பகுதியாகவோ, நகரமாகவோ மாத்திரம் இல்லாமல் அதற்கும் மேலாக அது முழுத் தேசியத்தின் வரலாற்றுச் சின்னமாகவும் தலைமை அங்கமாகவும் வளர்ந்துவிட்டது. நகரில் கெம்பீரமாகத் தோற்றமளிக்கின்ற நினைவுச் சின்னங்களும், வரலாற்றை எடுத்துக்கூறும் தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகளும் அவர்களின் அரண்மனைச் சின்னங்களும், இலக்கிய வித்தகர்கள், அறிஞர்கள் இலட்சியவாதிகள் சிலைகளும் பல தோற்றமளித்தன. ஆனால் ஆயுதப் படைகள் உள் நுழைந்து அனைத்தையும் திட்டமிட்டு தரை மட்டமாக்கினர். பின்னர், விடுதலைப் புலிகள் வீழ்ந்து மடிந்த மாவீரர்கள் நினைவாக எழுப்பிய ஞாபகச் சின்னங்கள், நினைவுத் தூபிகள், துயிலும் இல்லங்கள் அனைத்தும் திட்டமிட்டு பழிவாங்கும் உணர்வுடன் அலட்சியப்படுத்தி அளித்தனர். கோப்பாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலமானதோர் இடத்தில் பெரு முயற்சியுடன் 5000 மாவீரர் விதைக்கப்பட்ட துயிலும் இல்லம் (உலகெங்கும் மதிக்கப்கடும் போர்–சேமக்காலை, றயச–உநஅநவநசல) தமிழரின் ஒரு சரித்திர மையமாக இருந்தது. இதுவும் புல்டோசர்கள் கொண்டு இடித்துத் தள்ளப்பட்டது. ஏற்கனவே 1981ல் தமிழர்களின் வரலாற்று, பண்பாட்டு காப்பகமாகவும் தமிழரின் அறிவுச் சின்னமாகவும் விளங்கிய யாழ்ப்பாண பொதுநூல்நிலையத்தையும் அழித்தனர் சிங்கள அரசியல்வாதிகள் வழிகாட்ட சிங்கள ஆயதப்படைகளும் பொலீசாரும் சேர்ந்து தீமூட்டித் தரைமட்டமாக்கி, அங்கிருந்த 90.000 நூல்களையும் அரிய ஒலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் என அனைத்தையும் சாம்பலாக்கி பண்பாட்டுப் படுகொலையொன்றை நிறைவேற்றினார்கள். இது, வரலாற்றில் தமிழர்கள் மீது இனவாத பொலிஸ் மற்றும் இராணுவத்தால் நடாத்தப்பட்ட ஓர் காட்டுமிராண்டித்தனமான இனவாத வெறியாட்டம். ஆயுதப் படைகள் மூலம் தமிழ் மக்கள்மீது இழைக்கப்பட்ட, "பண்பாட்டு கற்பழிப்பு" அல்லது காடைத்தனம். இது தமிழர் வரலாற்றில் ஒருபோதும் மறக்க முடியாதது.

தன்னாட்சி, தாயகம் என்ற தமிழரின் நியாயமான கோரிக்கைகளை சொல்லாலும் செயலாலும் முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள முடியாது அரசாங்கம் ஆயுதப் படைகளின் உதவியுடன் மக்களில்லாத வெறுமையான யாழ்ப்பாண மண்ணைக் கைப்பற்றி, தமிழரால் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட சிங்கள பௌத்த சின்னங்கள் தாங்கிய சிங்கக்கொடியை யாழ்ப்பாணத்தில் ஏற்றினர். இது சிங்கள அதிகார ஒடுக்குமுறையை தொடர்ந்தும் தமிழர்களின் சமாதிகள் மீது திணிப்பது போன்றது. தமிழ்ப் பயங்கரவாதத்தை ஒடுக்கும் யுத்தம் எனக் கூறிக்கொண்டு, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி நசுக்கிட மேற்கொள்ளப்பட்ட இப் போரை, ஒரு தேசியத்தின் மீது நடாத்தப்படும் காட்டுமிராண்டித்தனமான வன்முறைச் செயலென்று கூறாது வேறு எவ்வாறு இதை வர்ணிக்க முடியும்?

## 4. சிங்களத்தின் எக்காளமும் மதிமயங்கிய மனோபாவமும்

பலாலி படைத்தளத்திலிருந்து யாழ்ப்பாண நகருக்கு 20 மைல்களைத் தாண்டிவர மிகப்பெரிய படை நகர்வை சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசபடைகள் மேற்கொண்டனர். தமக்கென ஒரு பாதுகாப்பு அரணை ஏற்படுத்தும் நோக்கில் மக்களற்ற பிரதேசத்தை ஆக்கிரமித்து அதன் மேல் சிங்கக் கொடிகள் பொருத்திய கெலிகொப்ரர்களில் வட்டம் போட்டன. யாழ்பாணத்தை கைப்பற்றிய சிங்களத்தின் சிறந்த வெற்றியை, தென்னிலங்கைச் சிங்களமும், அவர்களது படைகளும் "யாப்பானா" வைக் கைப்பற்றிவிட்டோம்! கைப்பற்றிவிட்டோம்! என கூடிக் கூத்தாடினர். தனது மருமகளான சந்திரிக்காவுக்கு உதவிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை வெற்றிப் பிரகடனத்தை அறிவித்த பொழுது சிங்களம் எக்காளம் கொண்டு பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்து மகிழ்ந்தது. முற்காலத்தில் அரசர்கள் வெற்றிபெற்ற செய்தியை தளபதிகள் படைகளுடன் "நன்று நன்று"என்று பாராட்டிக் கொண்டாடுவது போல, யாழ்ப்பாண வெற்றி விழாவை தலை நகர் கொழும்பில் கோலாகாலமாக கொண்டாடினர். ரத்வத்தை வெற்றிச் சுருளை ஜனாதிபதியிடம் அளித்ததும், "பணியை நன்றாக முடித்து விட்டீர்கள்" என்றாற் போல் தனது மாமாவைத் முதுகில் தட்டிக்கொடுத்துக் குளிரவைத்தார். இந்த நிகழ்வுகள் அனைத்தையும் தொலைக்காட்சியூடாக, நாட்டில் நிரந்தர அமைதிகாண முதற்கட்ட நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேறிற்று என்று கூறி எக்காளம் கொட்டினார்கள்.

சர்வதேசத்திற்கு அன்றைய அரசாங்கம் விடுத்த உத்தியோகபூர்வமான அறிவிப்பில், யாழ் படை எடுப்பு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிக அவசியமான ஒரு சாதனை என்று சொல்லப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு மிக சக்தி வாய்ந்த கொரில்லா கூட்டத்திற்கு எதிராக தாம் ஈட்டிய வெற்றியைப் பற்றி படையினர் பெருமைப்பட்டனர். ஆகையினால் எல்லா சிங்கள மக்களும் – அரசாங்கத்தை சார்ந்தவர்களும் எதிரிகளும் கூட – இந்த யாழ் படை எடுப்பை வெற்றியாகக் கொண்டாடுவதில் தமக்குள் ஒற்றுமையைக் கண்டனர். இவ் வெற்றி புலிகளை அவர்களுடைய கோட்டையினுள்ளே தோற்கடித்தது மாத்திரமல்ல சிங்கள புத்த தேசியத்திற்கு அபாய எச்சரிக்கையாயிருக்கும் தமிழ் தன்னாட்சி கோரிக்கைகளையும் தோற்கடிப்பதாயிற்று. தெற்கில் நடந்தேறிய கொண்டாட்டங்களிலும், ஊடகங்கள் கொடுத்த வியாக்கியானங்களிலும் இது மிகத் தெளிவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தமிழர் கண்ணூடாக அனுபவித்த சிங்கள ஏகாதிபத்தியம்.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் உண்மையான முகத்தையும், பிற்போக்கு நோக்கங்களையும், யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் கொண்டவேளையில் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர். அவர்களின் "போரின் மூலம் அமைதி" அல்லது "அமைதிக்கான போர்" என்பது ஓர் நகைப்புக்குரிய முரண்பாடாகும். தமிழர்களை நசுக்கி இரண்டாந்தர மக்களாக நடாத்த வேண்டும் என்ற பெரும்பான்மைச் சமூகத்தினரின் வாதமும் நோக்கமும், முன்னொருபோதும் இல்லாதவாறு 1995ன் பிற்பகுதியில் நடந்தவைகள் தெளிவாகக் காட்டின.

மகாவம்ச சரித்திர குறிப்புகளிலிருந்து (Mahavamsa Chronicles) பிறந்த ஒரு ஏகாதிபத்தியத்திய பேராசை காலந்தொட்டு சிங்கள இனத்தில் ஊறிக்கொண்ட சிங்களத் தேசியத்திற்கு உருக்கொடுத்து வலுவூட்டி வந்திருக்கிறது. (பௌத்த மறையின் போதனையின்படி பாவங்கள் எல்லாவற்றிற்கும் ஊற்றான மகாபெரும் பாவம் பேராசை!!!) சிங்கள மக்கள் இந்நாட்டின் உரிமையாளராகவும் ஆட்சிக்குரியவர்களாகவும் இருக்க, தமிழர்கள் கூலிக்கு குடியிருப்பவர்களாகவும், சிங்களவர்களில் தங்கிவாழும் சிறுபான்மையாகவும் இரண்டாந்தர குடிமக்களாகவும் ஆளப்படவேண்டுமென்பதே சிங்கள வாதமும் விருப்பமுமாகும். இவ்வாறு, சிங்கள பிற்போக்கு இனவாதிகளுள், குறுகிய மனப்பான்மையுடைய பௌத்த துறவிகள் மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜயதுங்கா போன்ற பல முக்கிய அரசியல்வாதிகளும் அதில் அடங்குவர். ஜனாதிபதி அவர்கள் ஒரு முறை பெருமிதத்துடன் கூறினார் – இந்நாட்டில் தமிழர்கள் வாழ விரும்பினால் சிங்கள மக்களுக்குப் பணிந்து வாழ வேண்டும், அப்பொழுதுதான் நிலைத்து வாழ முடியும். அது எப்படியெனில் "சிறு கொடிகள் பெருமரத்தைச் சுற்றிக்கொள்வதைப் போல" தமிழரும் சிங்களவரின் தயவில் தங்கி நிற்க வேண்டுமென்றார்!

கடைசியாக, நடந்து முடிந்த தேர்தலில், ஐ.தே.க. வின் தோல்வியுடன், சிங்கள ஏகாதிபத்திய சக்திகள் ஒருவாறு வீழ்ச்சிபெறும் என்று தமிழர் எதிர்பார்த்தனர். முற்றாக ஒழிந்து போகாவிட்டாலும், சிங்கள தீவிரவாதிகள் குறையலாம் எனவும் நம்பினர். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் காரணம் அதிகார பீடம் ஏறியதும் சந்திரிகா விடுத்த பகிரங்க அறிக்கை. தமிழருக்கு முன்னாளில் இழைக்கப்பட்ட பிழைகளை திருத்தி மீளவும் அமைதியை நிலைநாட்ட விரும்புவதாக அவர் தெரிவித்திருந்தார். எப்படியோ பிரபல்ய பாரிஸ் நகர பல்கலைக் கழகத்தில் கல்விகற்ற சந்திரிகாவின் உறுதிமொழிகள் நிலைக்கும், அவர் இராணுவத்தீர்வை நாடாது அமைதித் தீர்வை விரும்புவார் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்கு கொடுத்திருந்தது. ஆனால் இந் நம்பிக்கை மிக விரைவில் புதையுண்டு போனது. குண்டுகள், எறிகணை வீச்சுக்களுடன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில் மக்களை சிதறிப்போகச் செய்து வெறுமையான நிலத்தைக் கைப்பற்றி, பண்டைய சிங்கள மன்னர்களைப்போல் வெற்றிவிழா நடாத்தி முடித்த சந்திரிகாவின் செயல்கள் மூலம், மீண்டும் தம்மீது பழிதீர்க்க சிங்களம் துணிந்துள்ளதை தமிழ் மக்கள் நேரில் உணர்ந்து கொண்டனர்.

## 6. தமிழ் மக்கள் அனுபவித்த அவமானம் எதிர்காலத்திற்கு ஒரு நிரந்தர சவாலாக நிலைத்து நிற்கும்

1948ல் சிங்களவர்களைப் போன்று, தமிழர்களும், 450 வருட காலனித்துவத்தின் அடிமைத்தனம் முடிவுக்கு வந்ததையிட்டு மகிழ்ந்தார்கள். தன்னாட்சி, சுயவளர்ச்சி, சுயமதிப்பு என்பது அனைவருக்கும் உரியது என்றும் அனைவரும் சமநிலையுடன் வளர்ச்சி அடையலாம் என்றும் கனவு கண்டனர். ஆனால் அக்கனவுகள் தமிழர்களைப் பொறுத்தவரையில் காற்றோடு கலைந்தன, ஒன்றும் நடைபெறவில்லை. சிங்களப் பெரும்பான்மை தமது சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தை தமிழர் மீது திணிக்கும் முகமாக ஓர் புதிய ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. ஆட்டுத் தோலின் போர்வையில் ஓநாய்கள் செயற்படுவது போன்று, ஜனநாயகம் என்ற போர்வையில் சிங்களப் பேரினவாத அரசாட்சியை சுய இலாபத்திற்கு நடாத்தினர். சட்டங்களை பெரும்பான்மை வாக்குகளுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி முடிக்கவும், அதற்கேற்ப சில சந்தர்ப்பவாத தமிழ் தலைவர்களை அமைச்சுப் பதவிகள், வசதிகள் கொடுத்து வாங்கவும் சிங்களத் தலைவர்கள் துணிந்தனர். இதனால் அக்கால புத்திஜீவிகளெனக் கருதப்பட்ட தமிழ் பிரதிநிதிகளும், சுய நலனுக்காக தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளான ஐ.தே.க மற்றும் சு.க. ஆகியவற்றில் இருந்து ஒன்று எப்பொழுதும் ஆட்சிபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டது. ஆனால் ஆட்சி பீடத்திற்கு ஏறும்பொழுதெல்லாம் தமது அரசாங்கம் எல்லா இன–மதத்தவரை கொண்ட ஆட்சி எனக் காட்டிக் கொள்ள தமிழ் மற்றும் இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சுப் பதவிகள் கொடுத்து வாங்கினர். சிங்களப் பெரும்பான்மை அரசுகள் எப்பொழுதும் சிங்களவரின் நலன்களைக் காத்து தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றினபோதும் தமிழ் தலைவர்கள் சிலர் அதற்கு உதவிகொடுத்தார்கள். அவ்வாறான சட்டங்களைக் அமுல்படுத்த அரசாங்கம் இராணுவத்தைப் பயன்படுத்தியது. இராணுவம் தமிழ் மக்களை அடக்கியதுடன், அவர்கள் காட்டிய ஜனநாயக எதிர்ப்பையும் அடித்து நொருக்கினார்கள். இந்நிலை மூன்று பத்து ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. 1983 கறுப்பு யூலை பயங்கர இனப்படுகொலையின் பின்னரும் கூட சிங்களம் தனது பிழையை உணரவில்லை. ஒரு ஏற்ற தீர்வையும் முயற்சிக்கவில்லை. இதனால் தான் அரசபயங்கர வாத்திற்கெதிராக தமிழ் பயங்கரவாதம் பிறந்து, இரு பயங்கரவாதங்களின் சூழலிலிருந்து போர் வெடித்து விட்டது. இதை சிங்கள மக்கள் இன்னும் உணரவில்லை.

இந்த கசப்பு அனுபவங்களிலிருந்து நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வது என்ன? பெரும்பான்மை தீர்மானிக்கும் முறையான, வெஸ்மினிஸ்டர் ஜனநாயக ஆட்சிமுறையை, 1948ல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அதனை சிங்களவர் இற்றவரை துற்பிரயோகம் செய்திருக்கின்றனர். ஜனநாயகப் போர்வையிலே, ஓர் சிங்கள பெரும்பான்மை இனவாத ஆட்சியைத் தமிழர் மேல் திணித்துள்ளார்கள். தமிழர்களின் விருப்பத்திற்கெதிராக செலுத்தப்படுகின்ற சிங்களத்தின் அகங்காரமும், சிங்கள ஆட்சித் திணிப்பையும் தமிழர்களால் ஒருபொழுதும் மன்னிக்கவோ மறக்கவோ முடியாது. இச் சிங்கள மேலாண்மையை தமிழர்கள் மீது திணிப்பதற்கு சிங்களம் எத்துணை விலைகொடுக்கப் போகின்றது என்பதை வரலாறு தான் கூறும்.

அப்போது ஆனையிறவு தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டவுடன், அரசு அவசர (SOS) செய்தி மூலம் உலக நாடுகளிலிருந்து உதவிகோரி குடாநாட்டிற்குள் அகப்பட்டுள்ள 40.000 படைகளை காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தது. சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் நடு நடுங்கி யாழ் மக்களுக்குள்ளே பதுங்கியது. அவர்களை மீட்பதற்கு பல நாடுகள் ஆயுதங்கள் வழங்கி உதவின. தமிழீழ விடுதலைப் புலிகள் குடாநாட்டைக் கைப்பற்ற முனையும் பட்சத்தில் தனது படைகளை அனுப்பி சிங்களப் படைகளைக் காப்பாற்றும் பொருட்டு இந்தியப் படைகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை நிறுவிட எழுந்த தமிழ் மக்களின் இராணுவ அங்கமாகும். தமிழ் மக்களின் தற்காப்பு இயக்கமாக தமிழ் மக்களிடமிருந்து தோற்றம் பெற்ற அமைப்பாகும். சிங்களப் படைகள், குடாநாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் பரந்திருக்கும் வேளையில் இதனை நன்கு அறிந்த புலிகள் இயக்கம் தமது மக்கள் மீது படையெடுப்பை நடாத்த அவர்கள் கனவுகூடக் கண்டிருக்க மாட்டார்கள். அன்றியும் பொறுப்பற்று, மக்கள் மத்தியில இரத்தம் பெருக்கெடுக்கும்படி துணியவும் மாட்டார்கள். இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை எப்பொழுதும் மக்களைப் பற்றியே கவனத்தைச் செலுத்தி பொறுப்புடன் நடந்து கொண்டது. அந்நிய சிங்கள இராணுவத்தைப் போன்று தமிழரின் இரத்த வெறிகொண்டும், பொறுப்பற்றும், மனிதாபிமானமற்றும் அவர்கள் நடந்து கொள்ளவில்லை. இது தான் இரண்டு இராணுவத்திற்குமிடையில் உள்ள மலைக்கும் மடுவிற்குமான வேற்றுமை.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் செய்துகொண்டு அமைதி பேசும் அரசு 3

## 1. முதலில் ஒரு யுத்தம் அதன் பின் தான் சமாதானத்துக்கான சில யோசனைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகாவின் தனிப்பட்ட பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தை 1995 ஏப்ரல் 19ல் முறிவடைந்தது. அதனையடுத்து மின்வேகத்தில் ஜனாதிபதி சந்திரிகா வடகிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான கட்டுப்பாடுகளையும், பொருளாதாரத் தடைகளையும் மீழவும் விதித்தார். அதன் பின்னர் தனது போரை "அமைதிக்கான போர்" என்று அறிவித்தார். இன்னும் சில மாதங்களின்பின் 1995 ஆகஸ்ட் 3ல் தனது மனச்சாட்சியை திருப்திப்படுத்தவும் தான் தனிப்பட்ட முறையில் அரசியல் தீர்வின் மேல் கொண்டுள்ள உறுதியை தெற்கிற்கும் வெளியுலகிற்கும் புலப்படுத்துவது போல, ஒரு "தீர்வுப் பொதி" பற்றித் தெரிவித்தார். இதுபற்றி, தமிழ் ஊடகங்களுக்கோ, தமிழ் மக்களின் தலைமைத்துவத்துக்கோ அறிவிக்கப்படவில்லை. தென்னிலங்கையில் மட்டுமே இதைப் பற்றி பரவலாகப் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வந்தது. யுத்தமும் தீர்வுப் பொதியும் நாட்டின் சமாதானத்திற்கே என்று பிரகடனப்படுத்தப்பட்டாலும், போரை மும்முரமாக வடகிழக்கில் நடத்திக்கொண்டு தீர்வு பற்றிய விவாதங்கள் தெற்கில் மாத்திரம் நடத்தியது கேலிக் கூத்தாயிற்று. தீர்வு பற்றிய விவாத உரைகள், தெற்கில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு கட்சிப் பிரசாரமாக மாற்றிவிடப்பட்டது. ஆனால் யுத்தம் வடகிழக்கில் மிகுந்த வேகத்தில் தமிழ் மக்களுக்கும் அவர்களின் தலைமைக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டது. ஆகையால் போரும் பொதியும் ஒன்றை ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கடித்து அமைதி, ஒருமைப்பாடு என்பன முன்னர் எப்போதையும் விட கருத்திழந்து காற்றில் பறந்தன.

இத்தீர்வுப் பொதியும் அவை பற்றிய விவாதங்களும் பெரும்பான்மையினத்தவருக்கு நல்லவையாகவும் உறுதியளிப்பவையாகவும் தோன்றினாலும், சிங்கள தலைமைத்துவம் மக்களை கவர்ந்து ஓரளவிற்கு தன்வசமாக்கிக் கொண்டாலும், இவைகளைத் தொடர்ந்து வரப்போகும் விளைவுகள் நாட்டிற்கும் மக்களுக்கும் மிகக் கொடியன என்பதை அவர்கள் உணரவில்லை. உண்மையில் யுத்தத்தை முன்னெடுப்பதனால் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடுமைகள் கணக்கிட முடியாத, இழப்புகளை விளைவித்துக் கொணடிருக்கின்றன. பல்வேறு வகையான ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் தற்போதைய அரசின் போக்கையும் போர் பன்முகப் படுத்தப்படுவதையும் எடைபோட்டு செலவு கணக்கிட பெரும் அறிவு நுட்பம் தேவையில்லை. இது சாதாரண அறிவு படைத்தவர்களுக்கும் தெளிவாக விளங்கும். இதனால் ஏற்படப் போகும் பேரழிவுகள் எந்தவகையிலும் திருத்த முடியாத, திருப்ப முடியாத இழப்புகளாகவே அமையும்.

தீர்வு யோசனைகள், அரசியல் அடிப்படை மாற்றங்கள் கொண்டு வருவது பற்றி, பல சிங்களவர்கள் ஆவலாகப் பேசி, மக்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருப்பினும், நாட்டு மக்கள் முழுமையாக ஓர் அமைதி, ஒற்றுமை பற்றிய தீர்வு நோக்கி நடைபோடுகிறார்கள் என்று கூற முடியாது. யுத்த முன்னரங்காகிய வடகிழக்கில் அழிவும் மரணமும் தொடர்கையில் நாம் நிச்சயமாக ஒரு அமைதியான தீர்வையும் ,ஒருமைப்பாட்டையும் எப்படி அடையலாம். உண்மையாக அவற்றைவிட்டு எதிர் திசையில் போய் கொண்டிருக்கிறோம். இவ் வேளையில் அமைதித் தீர்வுக்கான யோசனைகளில் எதைத்தான் சாதிக்கப் போகின்றோம்!!.

வடகிழக்கில் இடம்பெறும் போர் அமைதிக்கான போர் என்று, அரசும் தென்னிலங்கை மக்களும் நியாயப்படுத்தி, அது தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்றும், அப்போர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானது மட்டுமே என்றும் அது விடுதலைப் புலிகளை முற்றாக ஒழிக்கா விட்டாலும் பலவீனப்படுத்தி, மக்களை அவர்களிடமிருந்து விடுவிக்க நடத்தப்படும் போர் என்றும் கூறுகிறது. ஆனால் உண்மை யாதெனில் அந்தப் போர் முழுமையாக வடகிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படுபவதுதான். நாள்தோறும் வடகிழக்கில் உயிர்களும் உடமைகளும் அழிந்து கொண்டிருப்பதை பார்க்கும் போது வடகிழக்கிற்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான இடைவெளி இன்னும் வேகத்தில் அகன்று, இருசாராருக்கும் இடையில் புரிந்துணர்வும் சமாதானமும் ஏற்படுவதை அசாத்தியமாக்குகின்றது.

சுருங்கக் கூறின், சிறி லங்கா அரசாங்கம் ஓர் பெரிய ஏமாற்று நாடகத்தை நடாத்துகின்றது. சர்வதேச சமூகத்தையும் தென்னிலங்கை மக்களையும் திருப்திப்படுத்த தாம் யதார்த்தமான அமைதி வழியில தீர்வுத் திட்ட யோசனைகள் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை விரும்புவதாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. அதே நேரத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதப் போரை வலிந்து நடாத்திக் கொள்கிறது. மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களுக்குத் தடை விதித்து, மக்கள் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும், ஊடகவியலாளர் மீதான தடைகளையும், என்னும் பல்வேறு மனிதபிமானமற்ற தடைகளை வடகிழக்கு மக்கள் மீது திணிக்கின்றது. பழச்சாற்றை தெற்கு மக்களுக்கும் சக்கையை தமிழ் மக்களுக்கும் கொடுக்கும் அரசின் போக்கு நிலைமையை இன்னும் மோசமாக்கி, நீண்ட நோக்கில் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்.

## 2. பொருளாதாரத் தடைகள் மக்களை குரல்வளையில் நெரிக்கின்றன

தனது போர் புலிகளுக்கு எதிரானதேயொழிய தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்ற வாதம், உணவுப் பொருளுக்கு தடைபோட்டு தமிழ் மக்களை வாட்டி வதைத்துக் கொள்ளும் நடைமுறையால் முழுப் பொய்யாகிவிட்டது. மக்களை திறந்த வெளிச் சிறையாகிய குடாநாட்டிற்குள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி முடக்கி வைத்து கொண்டு, உணவு, மருந்து, போக்குவரத்து, மின்சாரம் தபால் இவைகளை தடை செய்து விட்டு மக்கள் மீது தொடர் எறிகணை, குண்டுமழை பெய்துகொண்டு மக்களை வருத்தி மண்ணை ஆக்கிரமிக்கும் அரசின் முயற்சியானது எவ்வாறு மக்களிடையே ஒருமைப்பாட்டையும், அமைதியையும் நிலைநாட்ட உதவும்? இது வடகிழக்கு மக்களை அடக்கி ஒடுக்கி, அவர்கள் பிரதேசங்களை காலனித்துவ அடக்கு முறையில் சிங்களம் ஆட்சி செய்ய எடுக்கும் வெட்கங்கெட்ட முயற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. உள்ளே கொடூர யுத்தம், வெளியே அரசாங்கம் பொய்யும் புரளியும் நிரம்பிய பேச்சு

அரசாங்கம் செய்த வெட்கக் கேடான ஒரு முயற்சி. கொலை செய்யப்பட்ட தமிழர்களின் சடலங்களை பெற்றோர் உறவினரிடம் கையளிப்பதற்கு முன்னதாக, கொல்லப்பட்ட எல்லோரும் புலிகள் அல்லது புலிகளைச் சேர்ந்தவர்களென்று கையொப்பமிட்டு ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டனர். இவ்வாறு தாங்கள் குற்றமற்ற மக்களை கொலை செய்ததை நியாயப் படுத்தவும், அதே நேரத்தில் கூடிய தொகையான பயங்கரவாதிகள் அளிக்கப்பட்டு விட்டார்கள் என்று தமக்கு பொய் வெற்றி தேடவும் முயற்சித்தனர். அரச படையினர் கொல்லப்பட்ட புலிகளைப்பற்றி போட்ட கணக்கின்படி, புலிகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்தொழிந்திருக்க வேண்டும்!!! கொழும்பில் வசிக்கும் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கும் ஊடகவியலாளருக்கும் வடகிழக்கு செல்வதற்கு தடையை விதித்து விட்டு, படை அதிகாரிகள் தம் இச்சையாக கக்கும் மிகைப்படுத்தப்பட்ட அல்லது பொய்யான செய்திகளை உண்மையானவையாக அரசாங்கம் வழங்கி குடி மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் பரப்புரையில் மும்முரமாக ஈடுபட்டது. அரசாங்கத்தினால் கொல்லப்பட்ட தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகளாக (புலிகளாக) கணக்குப் போடப் பட்டது,

யுத்த முன்னரங்கு நிலவரம் பற்றிய பல மோசமான செய்திகளை வெளிவர விடாது மறைத்துவிட்டு, கொழும்பு தேசிய தொலைக்காட்சி நிலையம் தனது வான் ஒலி ஒளி பரப்பில் பொஸ்னியா பலஸ்தீனா போன்ற நாடுகளில் நடக்கும் யுத்தச் செய்திகளையும் அதன் விளைவுகளையும் விபரமாக பரப்பினார்கள். ஆதனால் சிங்கள மக்கள் வெளி நாட்டு யுத்தங்களைப் பற்றி நன்கு அறிந்தார்கள். ஆனால் சில நூறு மைல்கள் அப்பால் மிகக் கொடூரமாக தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் யுத்த செய்திகளை அறிய வில்லை. இப்படி இலட்சக்கணக்கான மக்களுக்கு உள் நாட்டுச் செய்திகளையே இருட்டடித்ததென்பது, நம்ப முடியாத வகையில் கேலிக்கும் நகைப்புக்கும் இடமாகிறது. உண்மையை குழி தோண்டிப் புதைக்கும் அரசாங்கமும் அதற்குத் துணை போகும் ஊடக சாதனங்களும் எப்படி இந்த நாட்டின் நலனுக்காக உழைக்க முடியும்? உண்மைச் செய்திகளை அறிய அணுகவிடாதது பற்றி, தென்னிலங்கை மக்களாலோ, மற்றும் ஊடகவியலாளர்களாலோ பெரும் எதிர்ப்புத் தெரிவிக்காததும், யுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் குறித்து அவர்கள் எத்தகைய அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. இது மிக வேதனைக்குரிய உண்மையாகும். வறுமையால் வாடும் சிங்களப் பெற்றோர்கள் ஊதியம் தேட பிள்ளைகளை அரச படையில் சேர்த்தனர். இவர்கள் யுத்த முனைகளில் மடிவதையிட்டு அவர்கள் குடும்பத்தினர் ஏக்கமும் அக்கறையுமுடையவர்களாக இருந்தனர். ஆனால் தெற்கில் வாழும் பெரும்பான்மை மக்களும், ஆளும் வர்க்கத்தை சேர்ந்தவர்களும், இவர்களை கூலி–உழைப்பிற்காகச் சென்ற இராணுவத்தினர் என்ற மதிப்பீட்டில் இவர்களிடமிருந்து வெற்றிச் செய்திகளை மட்டுமே எதிர்பார்த்துக் காத்திருந்தனர்! அவர்களின் அழிவு முக்கியமற்றதாயிற்று!

## 4. அமைதிக்கும் ஒற்றுமைக்குமான தேர்வுகளை செய்தல்

வடக்கு கிழக்கில் தொடரும் யுத்தம், அதனால் ஏற்படும் உயிர், பொருள் அழிவுகள், தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி, வறிய சிங்களப் பெற்றோர்களுக்கும் ஏற்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்திற்கு இது பெரும் இழப்பு. இச் சூழலில் சமாதானம் ஒற்றுமை இவைகளைத் தேடுவதை விட வேறு வழிகள் ஏதும் உண்டா?

### அரசு தேர்ந்தெடுக்கக் கூடிய வழிகளைப் பார்ப்போம்.

1) இன முரண்பாட்டின் வரலாற்றை உண்மையான முறையில் திரும்பிப் பார்த்து, மீளாய்வு செய்து, யதார்த்தமாக உள்ள நிலையை அறிந்து, வடக்கு கிழக்கு மக்களின் விருப்பத்திற்கு எதிராக வட கிழக்கில் நிலைகொண்டிருக்கும் அரசபடைகளை மீளப்பெற்று, எல்லாவித இராணுவ நடவடிக்கைகளும் இயற்கையான முடிவடைய வழிசெய்ய வேண்டும்.

2) தமிழரின் தன்னாட்சித் தாகத்தையும் கோட்பாட்டையும் மழுங்கடிப்பதற்காக யுத்தத்தை நிரந்தரமான நிலைப்பாடாக்கி வன்முறைகளைத் தொடர்வதாகும். இது செய்வதற்கு சிங்கள இளம்தலைமுறையினர் அனைவரும் கட்டாய இராணுவ சேவையில் சேர்க்கப்பட வேண்டும், இத் திட்டத்தில் காவியுடைக்குள் இருக்கும் சந்நியாசிகளும், பணக்கார அரசியல்வாதிகளின் பிள்ளைகளும் உள்வாங்கப் பட வேண்டும்.அப்போது தமிழ் பிரதேசம் சிங்களவர் வடக்கு கிழக்கில் வைத்துப் பராமரிக்கும் ஒரு இராணுவக் காலனியாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இது யதார்த்தமானது.விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வடகிழக்கு தமிழர்களின் இராணுவத் தலைமையை அங்கீகரித்து, அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஏற்ற சுமூகமான சூழலை உருவாக்குவதாகும்.

## 5. சுய மரியாதை இழக்காது தவறுகளில் இருந்து விடுபடல்

அரச படைகளை வடக்கு கிழக்கிற்கு அனுப்பி ஆரம்ப காலம் தொட்டே அவர்கள் தமிழர்கள் மேல் கடும் வன்செயல்கள் புரிந்தார்கள். தமிழர்களின் எதிர்ப்பைக்கண்ட அரசு, தனது கால்களை பிழையான இடத்திலும், பிழையான முறையிலும் வைத்துள்ளது என்பதை புரிந்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை தனது சுய முகத்தை இழக்காது தன்னை அதிலிருந்து விடுவித்துக்கொள்ள போராடிக்கொண்டிருக்கின்றது. இதுவே வடக்கு கிழக்கு இராணுவ மயமாக்கலின் கசப்பான உண்மையாகும்.

காலனித்துவ வரலாற்றில் (ஆங்கில, பிரான்சிய, பெல்ஜிய, ஏனைய..) இருந்தும், ஏகாதிபத்தியம் (வியட்நாமில் அமெரிக்கர்கள்) கண்ட உண்மைகள் மூலமும், விடுதலை, அமைதி என்பன காணவேண்டின் ஆக்கிரமிப்பு இராணுவம் நிலைகொண்ட பகுதிகளில் இருந்து படைகளை மீளப் பெறப்பட்டால் மட்டுமே அங்கு வன்மையாளர்களின் செயல்கள் மறைந்து அமைதி காணமுடியும். இதனை ஏற்பது கடினமாயினும் இதுவே வரலாற்று உண்மைமாகும். வடக்கிலும் கிழக்கிலும் நிலைகொண்டிருக்கும் படைகளை மீளப் பெறுவது அரசுக்கு அவமானம் என்று கருதி, முன்பொரு நாளில் நிகழ்ந்த தவறைத் திருத்தாது தொடர்ந்தும் தவறைத் தொடர்வது, பெரும்பான்மை மக்கள் தமது மேலாண்மையை தமிழ் மக்கள் மீது திணிக்கும் பொருட்டு, கட்டாயமாக இராணுவத்துக்கு ஆள்திரட்டியும், பன்னாட்டு கடன் பெற்றும், உலக நிறுவனங்கள் வழங்கும் நிவாரண நிதிகளை திசைதிருப்பியும் யுத்தத்தைத் தொடர்வது அரசுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமையும். இதன் மூலம் ஒவ்வொரு தமிழனும் பயங்கரவாதியாக மாறாவிட்டாலும் தற்காப்பிற்காக செயலில் ஈடுபடும் பொழுது நாடு ஒரு மீளமுடியாத நிலைக்குள் வீழ்ந்து கொள்ளும் என்பதுதான் உண்மையாகும். ஆனாலும் பெரும்பான்மைச் சிங்களவர் மத்தியில் இன்னும் ஒரு சிலர் அறிவும், தெளிவும் கொண்டவர்களாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுவது கண்டு சிறிது நம்பிக்கையும் மகிழ்வும் அடைய முடிகின்றது.

## 6. விவேகம் நிறைந்த பாதை

ஒரே ஒரு விவேகமானதும், நிதர்சனமானதுமான அணுகுமுறை என வரும்போது, வடக்கு கிழக்கின் உண்மை நிலையை அறிந்து, அதற்கு ஏற்ப செயற்படுவதே சிறந்ததாகும். இச் சந்தர்ப்பம் முழுமையாகயாவும் இன்னும் அகன்று விடவில்லை. மக்கள், நீண்ட மனிதாபிமானமற்ற, அடக்குமுறைக்குள் ஒடுக்கப்பட்ட பொழுதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இரத்த தாகம் கொண்டவர்கள் என தெற்கு அறிக்கைகள் தெரிவித்த பொழுதும் மக்கள் தமது மனித மாண்பை இன்னும் இழந்து போகாது, வாழ்வின் தொடருக்காகவும் உயிர் வாழ்விற்காகவும் ஆதாரங்கள் மறுக்கப்பட்ட பொழுதும், விவேகமும் பொது அறிவும் படைத்தவர்களாகவே உள்ளனர்.

தற்போதைய போர் அமைதிக்கான யுத்தம், விடுதலைப் புலிகளை ஒழிக்க முடியா விட்டாலும், பலவீனப்படுத்தவெனக் கூறினாலும், அதன் நடவடிக்கை மூலம் எஞ்சியிருப்பவற்றை முழுமையாக அழித்துக் கொண்டு, போர் என்பது எதிர்விளைவைத் தரும் தற்கொலைக்கு ஒப்பாகாது போனாலும், இதனை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதாகும். இன்றைய உடனடித் தேவையாக விவேகம் நிறைந்த உண்மையான இராஜதந்திரத் திறமையின் ஊடாக வடக்குகிழக்கு மக்களுக்கு மானிடத் தகமை கொண்டு வாழ்வியலைத் தரும் வழிகாண, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர அல்லது மூன்றாவது அனுசரணையுடன் முறிந்த இடத்திலிருந்து மீண்டும் பேச்சைத் தொடர ஏற்ற சூழலை ஏற்படுத்த முனைவதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, நம்பிக்கையிழந்து சந்திரிகாவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையை விட்டு வெளியேறினாலும், தங்கள் பேச்சுவார்த்தையைத் தொடர விருப்பம் தெரிவித்து பன்னாட்டு ஊடகங்கள் மூலம் அறிவித்துள்ளனர். அமைதிப் பேச்சுவார்த்தைப் பங்காளர்களிடையே அவநம்பிக்கை தோன்றாது, வெளிப்படையாக மூன்றாவது அனுசரணையுடன் ஆரம்பிக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அமைதியைக் காண வேண்டி, மக்கள் ஆணைபெற்ற என்று தன்னைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கும் அரசு, அமைதியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையையும் நிலைநாட்டப் புறப்பட்டிருப்பதாகக் காட்டிக் கொள்வதுடன நிற்காது, இராஜதந்திரம் மிக்க செயல்களில் இறங்க வேண்டும். முழு நாட்டையும் வேறு திசையில் திருப்பி, முழுநாட்டையும் அழிவுக்குள் இட்டுச்செல்வதிலும் பார்க்க பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கு ஏற்படும் செலவு குறைவாக இருக்கும். அதனால் விவேகத்துடன் செயற்பட்டு, நாட்டில் அமைதி, ஒருமைப்பாடு, சகவாழ்வு நிலைபெறச் செய்ய இன்னும் காலம் கடக்கவில்லை.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 அரச படைகளின் இனவாதமும் பயங்கரவாதமும்

## 1. இனவாதத்திற்கான படைகளை அரசாங்கம் உருவாக்கியது

இச்சிறிய தீவை மாறி மாறி ஆட்சிசெய்யும் அரசியல் கட்சிகள், அரசியலுடன் விளையாடுவது மட்டுமன்றி இனங்களின் மனித உரிமைகளை மதிக்காமலும் ஓர் தனி இனம் கொண்டியங்கும் அரச படைகளை உருவாக்கி, சிங்கள அரசை விமர்சிக்கும் மக்களின் எதிர்ப்பை நசுக்கவும், அப்படைகளுக்கு தன் அதிகாரங்களை வழங்கி இனவாதக் கொள்கைகளை செயற்படுத்தும் பொருட்டும் இராணுவத்தைக் கட்டியெழுப்பியுள்ளது. சிறிலங்கா அரசு, படைகளுக்குரிய அதிகாரங்களிலேயே தமிழ் மக்களின் உயிர் வாழ்வை நிர்ணயித்துள்ளது. இதனால் தமிழ் மக்கள் பயங்கரமான சூழ்நிலையில் வாழ்கின்றனர். அரசு, மக்கள் விரோதக் கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்தும் சக்தியாகக் காணப்படுவதன்றி, சிக்கல்களைத் தீர்க்கும் வழிவகைகளை ஏற்படுத்தும் நிலையைக் கொண்டிருக்கவில்லை. பதவியில் இருக்கும் அரசுக்கு இப்படைகள், ஒரு பிரதான தலையிடியாக மாறியுள்ளது.

சந்திரிகாவும் அவரது அரசும், இப்போது இனவெறிப்படைகளை சாதுவாக்கி அடக்க முயற்சிக்கின்றனர். சமாதானத் தீர்வு பற்றி விளக்குகின்றனர். ஆனால் அளவுக்கு மிஞ்சி பிழையான வழியில் தொகையிலும் வகையிலும் வளர்ந்து விட்டனர். இந்த வேளையில் அரசுக்கும் சிங்களப் படைகளுக்கும் இடையில் வளர்ந்து வந்த இனவாத கூட்டு முயற்சிகளையும் பரஸ்பர விட்டுக் கொடுப்புகளையும் ஆய்வுக்குள்ளாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தொடக்கத்தில் சம்பிரதாய இராணுவமாகவே இருந்தது

பிரித்தானியர் எமது நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் அவர்களிடமிருந்து சிறிய ஆனால் மிகவும் நல் ஒழுக்கமுள்ள தேசிய இராணுவத்தின் தளபதியாக திரு. அன்ரன் முத்துக்குமாரு என்ற ஒரு தமிழர் பதவியேற்றார். அவரும் அவரது அலுவலகர்களும் நன்கு கல்வி கற்றிருந்ததுடன் நன்கு பயிற்றப்பட்டு நல் ஒழுக்கமுடையவர்களாகவும் இருந்தனர். அவர்களில் பலர் ஒழுக்கம் நிறைந்த உயர் கல்லூரிகளில் பயின்றவர்களாகவும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்தனர். இராணுவம் அந்த நாட்களுக்குரிய நல்ல பயிற்சிகளைப் பெற்றிருந்தது. அவர்கள் மரியாதைக்குரிய நிகழ்வுகளான சுதந்திர தினம் மற்றும் பிற நாட்டுத் தலைவர்களை வரவேற்கும் நிகழ்வுகளில் பங்கேற்று தமது கடமைகளை சரிவர நிறைவேற்றினார்கள். மிகக் குறைவான வேளைகளிலேயே பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்ற அழைக்கப்பட்ட போதும் நிட்சயமாக வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிராகப் போராட அழைக்கப்படவில்லை.

ஆனால் இந்நிலை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே தொடர்ந்தது. மத்திய அரசின் இனவிரோதக் கொள்கைகளைத் தமிழ் மக்கள் மீது திணிக்க முற்பட்ட வேளையில் அதனை எதிர்த்துக் குரல் எழுப்பிய மக்களை அடக்குவதற்கு சிங்கள இராணுவத்தை ஏவி குண்டாந்தடியடி, கண்ணீர்ப்புகை பிரயோகித்துக் குழப்பினார்கள். இவ்வாறு எதிர்ப்புகளைக் குழப்பிய போதும் அவை ஜனநாயக வழியில் வன்செயல் இன்றியே தொடர்ந்தன. ஆனால் அரசோ தமிழர்களை நாட்டின் குடிமக்களாகக் கருதாது சிங்கள தேசியத்தின் எதிரிகளாகக் கருதி படையினரின் நடவடிக்கைகளுக்கு மேலும் உற்சாகம் கொடுத்தது. இந்நிலை தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு தீவிரமாகியது.

## 3. சிங்கள மக்களையும் அரசையும் மாத்திரம் பாதுகாக்கும் படை

சிங்கள இராணுவத்தின் பார்வையில் தமிழர்கள், இரண்டாம் தரக் குடிமக்களாகவும், சிங்கள இனத்தின் பொது எதிரிகளாகவும், சிக்கலைத் தோற்றும் இனக்குழுவாகவும் தெரிந்தனர். கடந்த 30 ஆண்டு காலமாக இந்நாட்டின் வடக்கு கிழக்கில் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் இராணுவத்தால் ஒரு முரண்பாடான சுதந்திரமே தமிழரினால் அனுபவிக்க முடிந்தது. வடக்கு கிழக்கு அரசியல்வாதிகளால் "இராணுவத்தின் வரம்புமீறிய செயல்கள் பற்றி" ஏதாவது கண்டனங்கள் முன்வைக்கப்படும் பொழுது அவையனைத்தும் "செவிடன் காதில் ஊதிய சங்காகவே" இருந்தது. இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடங்கிய வேளையில் அரசு "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை" அறிமுகப்படுத்தி அதன்மூலம் அரசபடைகளுக்கு வரம்புக்கு மீறிய அதிகாரங்களை வழங்கியதால் கைது, சித்திரவதை, கொலை மற்றும் விசாரணையின்றிப் புதைத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன.

அரசின் கொடூரங்களைக் கண்டும் தமிழர்களின் நிலையைப் புரிந்து கொள்ளத் தவறிய தெற்கின் அரசியல் கட்சிகளின் அசட்டையும், குறுகிய நோக்குடைய இராணுவத்தின் போக்கும் இணைந்து, "ஒரு சிங்கள நாடு" என்ற கோசமாகி, தமிழர்களின் தேவைகளை மேலும் மோசமாக்கியது. தமிழர்கள் நீண்ட காலமாக அரசின் கதவைத் தட்டி தமக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என வாதிட்டனர். நடுநிலையாகவும், நீதியாகவும் நடந்து கொள்ளுமாறு கேட்டனர். ஆனால் இனவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அரசு செவிசாய்க்க மறுத்தது. குற்றமற்ற பிச்சைக்காரனை விடுவிப்பதற்குப் பதிலாக அரண்மனை யிலிருந்து பயங்கர நாய்களை வெளியே விட்ட கதைபோன்று, சிறிலங்கா அரசு "ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள்" என்ற இராணுவத்தை தமிழர்கள் மீது பாயவிட்டது.

தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்வுரிமையோடு, தனியுரிமை பெற்று வாழவேண்டி, மக்கள் ஆணை பெற்றுச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளே செல்லாமல் தடுக்கும் பொருட்டு ஆறாவது திருத்தத்தை அரசியல் யாப்பிற்குக் கொண்டு வந்தார்கள்.

கடிவாளம் இல்லாத இராணுவம், வடக்கு கிழக்கில் நடாத்திய தன் கொடுமைகள் பற்றி, அரச பயங்கரவாதம் பல தசாப்தங்களாகச் செயற்பட்ட முறைபற்றி இப்பொழுதாவது தெற்கில் இருக்கும் கனவான்களுக்கு புரியாமலிருக்க முடியாது. இவற்றை மறைத்து, பொய்யாக இது தமிழ் பயங்கரவாதத்தின் எதிர்விளைவு என்பது ஏற்புடையதல்ல. தெற்கிலிருக்கும் புத்திமான்கள் ஆவது கடந்த 40 ஆண்டுகளாக இராணுவம் வடகிழக்கில் மக்களை நடத்தி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைபற்றிய உண்மைகளை நன்கு அறிந்திருப்பர். இங்கு அரசும், அரச படைகளும் இணைந்து புரிந்த நீண்ட கைங்காரியங்களால் ஈன்ற குழந்தைதான் தமிழ் தீவிரவாதம்.

சிங்கள அரச படைகள் வளர்ச்சி பெற்று முக்கியம் பெற்றுள்ளதென்றால், அவர்கள் வெளிநாட்டுப் படைகளுக்கு எதிராக போராடினார்கள் என்று அல்ல. மாறாக அவர்கள் அப்பாவி தமிழ் மக்களைப் பயமுறுத்தியும், குற்றமற்றவர்களுக்கு எதிராக வன்செயல் புரிந்தும், அரசின் அநீதிகளை எதிர்த்துக் குரல் எழுப்பியவர்களை நசுக்கியதாலும்தான். அரசு தனது படைகளுக்கு நன்றி கூறக் கடமைப்பாடு உடையது ஏனென்றால் சிறிலங்காவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி ஆகியவற்றுக்கு எதிரான சகலரையும் கொல்லுமாறு படைகளை வடகிழக்கிற்கு அனுப்பிவைத்தது. படையினரில் பெரும்பான்மையினர் ஒற்றுமை ஒற்றையாட்சி என்ற சொற்களின் அர்த்தத்தை தன்னும் படையினர் அறிந்திருக்கவில்லை, குருட்டுத்தனமாக அனைவரையும் அரச ஆணையின்படியே கொன்றொழித்தார்கள்.

## 4. ஆரம்பச் சூழலே படையினரை வன்செயலுக்கு தூண்டின

இலங்கையில் சிங்களம் மட்டுமே என்ற சட்டம் இராணுவத்தில் சேர்வதற்கும் பதவி உயர்விற்கும் நடைமுறையில் உதவியாக இருநத்து. தமிழர்களை அடக்கிடவும், மௌனமாக்கவும் தமிழ் ஆதரவாளர்களுக்கு எதிராக செயற்படவும் சிங்கள இராணுவம் அறுபதுகளில் யாழ்ப்பாணம், மன்னார், திருமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. இராணுவம் குண்டாந்தடியடி, கண்ணீர்ப்புகை பிரயோகம் என்பன, வன்செயலற்ற தமிழரின் எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது அரசின் இராணுவத் தீர்வு என்ற நோக்குடன் இடம்பெற்றன.

அறுபது எழுபதாம் ஆண்டுகளில் 100 வீதம் பணிவும், கீழ்படிவும் நிராயுதபாணிகளுமான தமிழ் மக்கள் மத்தியில் இப்பேர்ப்பட்ட படையினர் நிறுத்தப்பட்டனர். அப்படி வடகிழக்கில் நிலைகொண்டிருந்த இராணுவம், தான் அரசின் பிரதிநிதியாகவும், சிங்கள நாட்டைச் சேர்ந்தவராகவும், கையில் துப்பாக்கி கொண்ட பிசாசுகளைப் போலவும், சுயநினைவு கொண்டிருந்தது.. தம்மை கொழும்பு ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளாகவும் தமது நடத்தைகள் பற்றி யாழ்ப்பாணத்தில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகள் தம்மிடம் கேள்வி தொடுக்க முடியாதென்றும், குடிமக்கள் தமக்கு எதிராக எத்தகைய குரலும் எழுப்ப முடியாதென்றும் எண்ணிக் கொண்டார்கள். இவ்வாறான இராணுவத்தினர் தமது வண்டிகளில் செல்லும்போது இவர்களின் தீய தன்மைகள் தெரிந்த தமிழ் மக்கள் வீதியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள. கிடுகு வேலிகளுக்குப் பின்னால் ஒதுங்கி வாழும் நன் நெறி கொண்ட தமிழ் பெண்பிள்ளைகளுக்கு சிங்களக் காடையர் கொடுத்த தொந்தரவுகளுக்கு எல்லை இருக்கவில்லை.

இவ்வாறு விளங்கிய இராணுவத்தினர், போதிய கல்வியோ ஒழுக்கமோ கொண்டிருக்கவில்லை. அதனால், மனிதம், மனித மாண்பு குறித்த பெறுமானம் பற்றி அறிந்திருக்கவில்லை. இவர்கள் தமிழர்கள், இஸ்லாமியருடன் வாழ்ந்ததும் இல்லை. இவர்கள் சிங்களக் கிராமங்களிற்குள் அதாவது சிங்களம் மட்டும் அறிந்த சூழலிலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கட்டுப்பாடற்ற நெறிமுறை புரியாத, கடமையுணர்வு இல்லாது வாழ்ந்தவர்கள். ஆகையினால் அவர்கள் தமிழர்களைப்பற்றித் தெரிந்திருப்பதெல்லாம், கிராமத்து பௌத்த குருமார் தமிழர்களைப்பற்றிக் கூறியவை மட்டுமே. அந்த பௌத்த துறவிகள் தமிழர்கள் கள்ளமாக கள்ளத் தோணிகள் மூலம் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும், மகாவம்சம் குறிப்பிடுவது போல சிங்கள பௌத்த நாட்டிற்குள் கள்ளமாக புகுந்தவர்கள் என்பதையே போதித்தனர். இதனால் தமிழர்கள் ஏதாவது சிறிது எதிர்ப்புக் காட்டினாலும், சிங்களப் படைவீரனின் அரக்கத் தனத்துக்கு கோபம் ஏற்படச் செய்து அவனை வன்செயலுக்கு இலேசாகத் தூண்டுகிறது.

## 5. அரச பயங்கரவாதமும் காடைத்தனமும்

ஆரம்பகாலத்திலேயே, சிங்களவர்களின் களவான குடியேற்றங்களை அரசு கவனியாது, அங்கீகரித்து அவர்களுக்கு அநீதியாக உரிமை வழங்கியது. இதற்கு எதிராக, தமிழ் மக்கள் வன்செயலற்ற சாத்வீக எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தி எதிர்த்துக் குரல் எழுப்பினர். அப்பொழுதெல்லாம் சிங்களக் காடையர்களை தமிழருக்கெதிராக ஏவிவிட்டு, சிங்களவர்களுக்கு அரச படைகளின் பாதுகாப்பை வழங்கினர். அரசு, தனது பாராளுமன்ற பெரும்பான்மையை வைத்துக்கொண்டு தமிழருக்கு விரோதமான சட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது. அரச படைகளின் பாதுகாப்பு இன்றேல், தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களை சிங்களவர்கள் அபகரித்து சிங்களப் பிரதேசங்களாக மாற்றிய முயற்சிகள் வெற்றிபெறாது போயிருக்கும். அரச உதவிகளுடன் உருவாக்கிய தனிச்சிங்களக் குடியேற்றத் திட்டங்களினால் தமிழர்களின் தனிப்பட்ட சொத்துக்கள், காணிகள், பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டன. தமிழர்களை அரச படைகளின் உதவியோடு துரத்திவிட்டு பொருட்களைக் கொள்ளையடித்து, தமிழ் மண்ணை அபகரித்தனர். தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் முறையீடுகள் அனைத்தும் சிங்களவர்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்று இருந்தது. அரச படைகள் தமிழ் மக்கள் மீது நடாத்திய அடாவடித்தனங்களை வீரதீரச் செயல்களாக அரசு தட்டிக் கொடுத்து மகிழ்ந்தது. அரச படைகள் தமிழ் மக்களின் உடமைகள், அணிகலன்கள், தொலைக்காட்சி போன்ற விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் சூறையாடி தெற்கில் உள்ள தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர். கப்பலிலும்அனுப்பினர். இவ்வாறுதான் அரசுக்கும் அரச படைகளுக்கும் இடையில் உறவும் ஒத்துழைப்பும் இருந்தன. இதனால் படையினரை அரசாங்கம் குடிசார் வாழ்க்கை முறைக்குள் அடக்க முடியாதிருந்தது.

கைலஞ்சம், தமிழ் வியாபாரிகளிடம் கப்பம், பொருள் எடுத்துச் செல்லமுடியாதபடி தடைகள், பொய்க் குற்றச்சாட்டு எனப் பல்வேறு பயமுறுத்தல்கள் தமிழர் மேல் சுமத்தப்பட்டன. ஆகையினால் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படைகளுக்கும் இடையிலுள்ள தற்போதைய மோதல்கள், விரைவில் தீர்வு காணவேண்டுமென்று தமிழர் தாகித்தனர். ஆனால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம், பொருளாதாரத் தடை, அடிப்படைத் தேவைகள் மறுப்பு, போக்குவரத்துப் பாதைகள் மூடல் போன்றவைகள் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்று குறிப்பிடப்பட்டன.

நீண்ட அவசரகாலப் பிரகடனம், மின்சாரத் தடைமூலம் இருண்ட வாழ்க்கை என பலவருடங்களாக ஊரடங்கு விதித்து மக்களின் நாளாந்த வாழ்க்கை முடங்கிப்போனது. இதன்மூலம், அரசபடைகளுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டு மக்களின் மனைகளை உடைத்து உட்புகுந்து பொருட்களைக் கொள்ளையடிக்கவும், வீட்டில் இருந்த பெண்களை, குறிப்பாக இளவயதினரை தீவிரவாதத் தொடர்புடையவர் எனக்கூறி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி கொலை செய்யவும், பெரும் தொகையில் செம்மணியில் மண்ணுக்குள் புதைக்கவும் சுதந்திரம் கிடைத்தது. அறுநூறு பேர்கள் இவ்வாறு காணாமற் போனவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலில் அடங்குவர். இது பற்றி உலக மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் பல, நூற்றுக்கணக்கில் காணாமற்போன, இளைஞர்கள், யுவதிகள் பற்றி சிங்கள இராணுவத்தாலும் அதன் தளபதிகளாலும் நடாத்தப்பட்ட விபரங்களை அடுக்கிக் கொண்டே போகின்றன. இவ்வாறான செயல்கள் வெளிச்சத்திற்கு வரும்போது அமெரிக்க, பிரித்தானிய படைகள் தற்போது ஈராக்கில் புரிகின்ற துஸ்பிரயோகங்களை இவை மிகச் சிறிதாக ஒருபக்கம் ஒதுக்கிவிடும்.

இன்று, சிறிலங்கா காவல்துறை, சிறையதிகாரிகள் கூட இனவாதிகளாகவே மாறிவிட்டனர். காவல் துறையினர், 1961 டிசம்பரில் நிராயுதபாணிகளாக, அமைதிவழியில் சத்தியாக்கிரகம் புரிந்தவர்கள் மீது கண்ணீர்ப்புகை அடித்தும், குண்டாந்தடி பிரயோகித்தும் புரிந்த கொடிய செயல்களை தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். யாழ்பாண அரச அதிபரின் இல்லத்துக்கு முன்பாகவே அன்று அவை நடந்தேறியது. அதே போல் யாழ் நூல்நிலையத்திற்கு யார் தீ மூட்டியது என்பதை யாழ்ப்பாண மக்கள் நன்றாகப் புரிந்திருந்தனர். ஆனாலும் இதற்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பதை ஜனாதிபதி பிரேமதாச பகிரங்கமாக பின்னரே அறிவித்தார். 53 தமிழ் கைதிகள் அரசியல் கைதிகளாகச் சிறைவைக்கப்பட்டு, வெலிக்கடை சிறையிலும், 33 தமிழர்களை பிந்துனுவெவ முகாமிலும் தடுத்து வைத்திருந்த பொழுது கொடுமை புரிந்து கொலை செய்யப்பட்டார்கள். இதற்கும் சிறையதிகாரிகள், காவலர்கள் ஆகியோரின் இனவாத நடத்தையே முழுமையான காரணமாகும்.

## 6. சிங்கள அரசாங்க தீர்வு இராணுவத் தீர்வையே சார்ந்துள்ளது

சிறிலங்காப் படைகளை நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் காவலர்களெனக் காட்ட முயல்வது வேடிக்கையாகும். உண்மையில் தமிழர்கள் மீது இரத்த வெறி கொண்ட ஒரு ஆக்கிரமிப்பு படையே அது. இதன்மூலம், நாட்டின் இறுதித் தலைவிதி இராணுவத்தின் கையில் இருப்பதுபோலவே நிலைமை சென்று கொண்டிருக்கிறது. இதன்மூலம் யுத்தமா, அமைதியா என்று கூறுவது இராணுவத்திடம்தான் உண்டு. அத்துடன் யுத்தமற்ற தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்படுமா, ஜனநாயக வழி திறக்கப்படுமா, அடிப்படை வசதிகள் சென்றடையுமா என்பனவும் எப்போதும் கேள்விக்குறியாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசுக்கு மக்கள் வாக்களித்தது, யுத்தத்தின் மூலம் தீர்வு காணாது அரசியல் தீர்வு காணவேண்டுமென்பதற்காகவே. ஆனாலும் இன்றைய அரசும் இராணுவத் தீர்வையே நாடிச் செல்கின்றது போல் இருக்கிறது. இராணுவத்தின் பங்கு அரசியல்தீர்வு காண்பதில் முக்கிய இடம்பெறுமாயின் சந்திரிகாவிற்கு வாக்களித்த தமிழ் மக்களும் வெறுப்படைந்து குழப்பமடைவார்கள். சந்திரிகா முன்வைக்கும் அரசியல் தீர்விலும் இராணுவ உயர்பீடத்தின் கருத்துக்கள் முக்கிய இடம் பிடிக்கின்றன. இவ்வாறான புதிய சூழலில் தமிழருடைய நிலை முன்னை விடச் சிறந்ததா? தமிழர்கள் இறுதலைக் கொல்லி எறும்புகள் போல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றே தோன்றுகின்றது.

## 7. இதில் இருந்து தப்ப வழி ஏதும் உண்டா?

தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்குரிய முறையில் அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் வகையில் ஓர் வலிமைமிக்க சக்தியாகவும், தமிழர்களுக்கு சிறந்த பாதுகாப்புக் கவசமாக விளங்குகின்றனர். அவர்கள், தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவும், தமிழர்களின் உரிமைகளுக்குரிய பேச்சாளர்களாகவும் திகழ்கின்றார்கள். தமிழ் மக்கள் மீது விதித்த தடைகளை நீக்கி, முடக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வை சீர்படுத்தி, பொருளாதாரத் தடையை அகற்றி, தெற்கு–வடக்கு தொடர்புகளுக்கு பாதையைத் திறந்து அதன்மூலம் போர்நிறுத்தம் கண்டு, அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்பதே அவர்கள் கடந்த வருடங்களில் விடுத்த வேண்டுகோளாகும்.

இயல்புநிலை அடையவேண்டிய வசதிகளை வழங்குவதற்குப் பதிலாக, அரசு இராணுவ நெருக்குவாரத்தின் காரணமாக தாமதிக்கும் தந்திரத்தை மேற்கொண்டுள்ளது. அரசின் வலிமையற்ற தன்மையை முழு நாடுமே கண்டுகொண்டுள்ளது. முப்படைகளின் தளபதியாகிய சந்திரிகா, திடமான திட்டங்களை மேற்கொண்டு, திறமையாகவும் விவேகத்துடனும் இராணுவத்தை தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும். அது மட்டுமன்றி இதுவரையும் தப்பான வழிகாட்டலுடன் திசை திருப்பப்பட்ட ஊடகத்தை, பிரச்சினைகளின் நம்பகத் தன்மைகளையும் உண்மைகளையும், ஒளிவு மறைவின்றி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தி, தனக்கும் இராணுவத்துக்கும் இடையில் நிலவும் சிக்கல் யாதென விளக்கியும், மக்களை நன்றாக அறிவுறுத்தி, தென் இலங்கை அரசியல்வாதிகளை அமைதித் தீர்வு நோக்கி நகர்த்த முனைய வேண்டும். அது அவரால் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 சிங்கள பௌத்த தேசியமும் இனவாதமும்

## 1. சிங்கள பௌத்த தேசியத்தின் மீள் தோற்றம்

450 வருடகால காலனித்துவ ஆட்சிகளின் கீழ், விசேடமாக ஆங்கிலேய ஆட்சியின் கீழ், பௌத்த மதமும், சிங்கள இனமும் புத்துணர்ச்சியுடன் செழிப்பாக வளர்வதற்கு போதிய வாய்ப்புகளின்றி இருந்தன. மதவுரிமைகள், கல்விவசதிகள், சமூகநிலை இவைகளைப் பொறுத்த மட்டில், காலனித்துவ கிறிஸ்தவர்களின் மதங்களை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர்களின் நிலமையிலிருந்து, சிங்கள பௌத்தர்கள் அல்லது தமிழ் இந்துக்களினது நிலை திருப்தியாக இருக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கு கூடிய வசதிகள் இருந்தன. இதன் விளைவாக 1948ல் சுதந்திரம் அடைந்த பின்னர், பெரும்பான்மையான சிங்கள மக்களின் தேசிய உணர்வும், பௌத்தத்தின் புத்தெழுச்சியும் சுதந்திர இலங்கைத் தீவில். அவசியமென்பதை யாவரும் உணர்ந்தவராக, எத்தகைய எதிர்ப்புமின்றி அதன் வருகையை ஏற்றுக் கொண்டனர்.

2000 வருடங்களுக்கு மேலாக சிங்கள மக்களும் பௌத்த மதமும் பின்னிப் பிணைந்து ஏற்றுக் கொள்ளப்படுவதன் காரணமாக இன்றும் கூட ஒருவரும், இவ் இனத்தின் உரிமைகளையோ மதத்தின் உரிமைகளையோ கேள்விக்குட்படுத்த முயலுவதில்லை. பௌத்த மதத்தின் மூலமாகத்தான் தமது பண்பாடு, மொழி, வரலாறு ஆகியன வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்று சிங்கள இனம் ஆழமாக நம்புகிறது. அதே நேரத்தில் சிங்களவர்களின் வரலாறு மூலமே, பௌத்த மதமும் ஒரு தனிப்பட்ட உருவத்தையும் செழிப்பையும் பெற்றிருப்பதாகக் கருதி பெருமை அடைகின்றனர். சிங்கள பௌத்தம் ஏனைய ஆசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் காணப்படும் பௌத்த மத அமைப்புக்களைக் காட்டிலும் வேறுபட்டதாக, தனித்துவ அம்சங்களைப் பெற்றிருக்கின்றது. ஆகையினால் இத்தீவின் வருங்கால முன்னேற்றத்தையும் அதற்குரிய அரசியல் கொள்கைகளைத் தீர்மானிப்பதிலும் இச் சிங்கள–புத்த மதத்தின் உலகப்பார்வையும் உந்து சக்தியும் முக்கிய இடம் வகிக்கும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இவ்வுண்மையை இங்கு வாழும் பௌத்த சிங்களவர் அல்லாத இந்து இஸ்லாமிய, கிறிஸ்தவ, தமிழ் மக்கள் அனைவருமே புரிந்து கொண்டுள்ளார்கள்.

இந்த சிங்கள மக்களும் பௌத்த மதமும் இத்தீவின் பூர்வீகங்கள் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும், இவ் இன–மத எழுச்சியில் மற்ற இன–மத உரிமைகள் பறி போகுமோ என்ற பீதியும் சந்தேகமும் இருந்தன. இப்பயத்தையும் சந்தேகத்தையும் தீர்க்குமாறு ஆங்கிலேய காலனித்துவ அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தனர். ஆனால் அவர்கள் பாதுகாப்பான அரசு அமைக்காது வெளியேறிவிட்டனர்.

## 2. வரலாற்றுப் புனைவுகள் மூலம் மேற்கொள்ளப்படும் வாதம்.

துரதிஸ்டவசமாக, சிங்கள தேசிய வளர்ச்சியும், பௌத்தமத மீட்சியும் முன்னெடுக்கப்படும் விதம் பிழையானதாயிற்று. பெரும்பான்மை மக்களின் முயற்சியும் அவர்களின் அரசியல்வாதிகளின் முயற்சியும் இத்தீவில் நீண்ட காலமாக வாழும் ஏனைய மக்களின் சரித்திர வரலாற்றுக்கு முரணானதாகவும், மற்றவர்களின் அடிப்படை உரிமைகளை மறுதலிக்கும் விதமாகவும் முன்னெடுக்கப்பட்டன.

கி. பி. 6ம் நூற்றாண்டில் (கௌதம புத்தர் பிறந்து 1000 ஆண்டுகளின் பின்பு), ஒரு புத்த குருவினால் தொகுத்து எழுதப்பட்ட *மகாவம்சம்* எனும் **(Mahavamsa Chronicles)** ஏடு இன்றைய சிங்கள புத்த மதத்தினரின் எழுச்சிக்கும் நாட்டில் முன்னுரிமை கோருவதற்கும் ஓர் முக்கிய ஊற்றாகவும் சரித்திர ஆதாரமாகவும் திகழுகின்றது. இன, மத அடிப்படையில் இத்தீவில் உருவாகியுள்ள சிங்கள புத்தத்தின் பாதுகாவலர் சிங்கள மக்களே என்பதை இந்த மதவரலாற்று நூல் ஊக்குவிக்கின்றது. ஆனால் இந் நூலின் உண்மைத் தன்மையும் அதிகாரத் தன்மையும் கேள்விக்கும் சந்தேகத்திற்கும் உள்ளாயிருக்கின்றன. மிகவும் சிறந்த சிங்கள புத்த வரலாற்றாளர் எனக் கருதப்படும் கே. எம். டி. சில்வா தனது குறிப்பில் எதைக் கூறுகின்றார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு பௌத்த முனிவரினால் ஆக்கப்பட்டது. ஆகையினால் மதத்தின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் நோக்காகக் கொண்டது, கற்பனைகளுடன் பல்வேறு அதிசயங்களைப் புகுத்தி, பௌத்தத்தின் நாகரீக வளர்ச்சிக்கு நாட்டின் வரலாறு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக எழுதப்பட்டது. இந் நோக்கில் விஜயன் தனது தோழருடன் இலங்கை வருகை தந்ததையும் புத்தரின் பரிநிர்வாணத்தையும் (நிர்வாணம் அடைவதற்கு முந்திய மரணம்) இரு நிகழ்வுகளையும் இணைத்து கூறப்பட்ட வரலாறு.

## இது தொடர்பாக மகாவம்சத்தில் இருந்து அவரால் மொழிபெயர்க்கப்பட்ட பிரதான பகுதி:

"உலகின் வழி காட்டி, உலகின் முழுமையான விடுதலைக்கும் வழிவகுத்த பின், தமது இறுதி நிலையை நோக்கி கட்டிலில் இளைப்பாறிய பொழுது, சகல தெய்வங்களினாலும் சூழ்ந்திருந்த பொழுது, பேச்சு வன்மையுடையவர்களில் மிகப் பெரியவரான ஞானி, தன் அருகில் நின்ற சக்கா முனிவருக்கு கூறியதாவது: "சிங்கபாகு என்ற அரசனின் மகன் விஜயன், இலங்கைக்கு தனது 700 தோழர்களுடன் லாலா நாட்டிலிருந்து லங்கா வந்துள்ளான். லங்காவில் தேவாதி தேவனே எனது மதத்தை நிலைநிறுத்த அவனுக்கும் அவனது தோழர்களுக்கும் லங்காவிற்கும் பாதுகாப்பு வழங்குவாயாக".

இதுபற்றிய தனது குறிப்பில் கே.எம்.டி. சில்வா தொடர்ந்து கூறுகிறார்: "மகாவம்சவில் காணப்படும் இச் சரித்திர–புராண வசனங்கள் சிங்களவருடைய வரலாற்றில் மிக முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. இதன் அடிப்படையில் சிங்களவர்கள் தம்மையே பௌத்தத்தின் தெரிவுசெய்யப்பட்ட காவலர்களென்றும் இத்தீவை பௌத்தத்தின் உறைவிடமாகக் காப்பாற்றுவது தம் பொறுப்பென்றும் அத்தோடு இத்தீவு பௌத்த மதத்தின் ஒரு விசேட புனிதத் தலமென்றும் கருதுகின்றனர். இத்தீவுக்கும் சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் இடையில் கட்டப்பட்டிருக்கும் நெருக்கமான இணைப்பு சிங்கள மக்களுள் ஆழமான செல்வாக்குப் பெற்றிருக்கிறது" என்கிறார். (A History of Sri Lanka – K.M. de Silva, சிறிலங்காவின் வரலாறு பக். 4).

சுதந்திரத்தை அடுத்து எழுந்த சிங்கள–பௌத்த தேசியத்தில் இவ்வுணர்வு மிக ஆழமாகப் பதிந்ததுடன் மகாவம்சாவில் அடியிடப்பட்ட ஒரு புதிய சிங்களப் பௌத்த பார்வையையும் போக்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியது. இக் கண்ணோட்டத்தின் காரணமாக சிங்கள மக்கள் முழுத் தீவின் சரித்திர உண்மைகளை மதிக்காமலும், காலனித்துவத்தினால் ஏற்பட்ட மாற்றங்களைக் கணிக்காதும், மற்றவர்களை அவமதித்தும் நடந்து கொள்ள முயலுகின்றனர்.

மேலும் இத்தகைய மகாவம்ச சிந்தனையின் அரக்கத்தனமான உணர்வுடன் தீவு முழுவதும் தங்களுக்கே சொந்தமானது என்றும், அத் தீவில் பௌத்த மதம் மிக விசேட சலுகைகள் அதிகாரத்துடன் மதிக்கப்பட வேண்டுமென்றும், கங்கணக் கட்டி நிற்கின்றனர்.

## 3. மகாவம்ச சிந்தனை மூலம் வழிநடத்தப்படும் அரசியல் நோக்கு

ஏனைய மக்களையும் மதங்களையும் ஓரங்கட்டிவிட்டு, சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் தாம் அரசியல் செல்வாக்குபெற, இச் சிங்கள பௌத்த தேசிய உணர்வை பாவிக்க முனைகின்றனர். இத்தகைய உணர்வின் அடிப்படையிலே தமது நோக்கை அடைய, சிங்களவரை எப்போதும் பெரும்பான்மையாக கொண்ட பாராளுமன்றத்திலே இலகுவாக சட்டங்களைப் பிறப்பித்தும் அரசியல் யாப்பில் மாற்றங்களைச் செய்தும் அரசியல் நடாத்துகின்றனர். இதன்மூலம் சிங்களவர் அல்லது பௌத்தர் அல்லாத மக்களுக்கு எதிராக நடந்து கொள்ள சிங்களத் தீவிரவாதிகளின் ஆதரவை இலேசாகப் பெறமுடிகின்றது. மக்களை மலிவாக வாங்கும் அரசியல் அணுகுமுறையால், சிங்கள கட்சிகள் மாறிமாறி நாட்டை நீண்ட இனமோதல்களுக்கு இட்டுச் சென்றுள்ளார்கள். அத்துடன் பெரும்பான்மை, சிறுபான்மை என மக்களைப் பிரிய விட்டு, தேசிய சிக்கலைத் தீர்க்க நியாயமான தீர்வுகளைக் காண முடியாது தடை செய்து விட்டனர். பல்லின பல்மத மக்களிடையே வேற்றுமைகளில் ஒற்றுமை காண இருந்த சக்திகளை முற்றாக அழித்து விட்டனர்.

வேற்றுமைகளின் மத்தியில் ஒற்றுமைப்பாட்டை காணமுடியாது இன்று ஏற்பட்டுள்ள இனமோதல், யுத்தம் இவைகளின் அடிப்படைக் காரணங்களை யாதென ஆராய்ந்து பார்க்கையில், எவ்விதம் பெரும்பான்மை சிங்கள மக்கள் தேசியத்தின் எழுச்சியையும் பௌத்த மதத்தின் புதப்பித்தலையும், தீவிர சிங்கள பௌத்த அடிப்படைவாதிகள் தமது அரசியல் வெற்றிக்காக பிழையாகப் பாவித்துக்கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. மகாவம்சம் வெளிப்படுத்தும் அதாவது இலங்கையும் சிங்களமும் பௌத்தமும் ஒன்று என்ற ஒடுங்கிய கண்ணோட்டத்தில், தமது குறுகிய சுயலாபத்தின் பொருட்டு சிங்களவர் அல்லது பௌத்தர் அல்லாதவர் மேல் திணிக்கப்படும் அநீதியான ஒடுக்கு முறைகளை நியாயப் படுத்துகின்றனர்.

16ம் நூற்றாண்டில் தொடங்கிய காலனித்துவக் காலத்துக்கு முன்பு, சிங்களவர்கள் யாவரும் பௌத்தர்கள் ஆகவும், தமிழர்கள் யாவரும் இந்துக்களாகவும் இருந்தனர். அத்துடன் கோட்டையிலும் கண்டியிலும் இரு சிங்கள இராசதானிகளும் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் இராசதானியும் இருந்தன. இந்த வேற்றுமைகள் இராச்சியத்தினுள் பிரச்சினையை எழுப்பவில்லை. ஆனால் பின்பு போர்த்துக்கேயரின் காலத்தில் கிறிஸ்தவமும் அதன் பின் இஸ்லாமும் இத் தீவில் வந்துள்ளன. காலனித்துவ ஆட்சிகள் அடுத்தடுத்து மாறியபோது, இத் தீவின் இன, மத அடிப்படையிலான சனத்தொகையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாறு காலனித்துவ கால முடிவில், இன மத அடிப்படையில் குடிமக்கள் தொகை திருப்பிக்கொண்டுபோக முடியாதவாறு மாற்றம் அடைந்திருந்தது. இத் தீவு ஒரு பல இன, பல மத மக்களின் தீவாக மாறி விட்டது. இம் மாற்ற முடியாத உண்மையையும் யதார்த்த நிலையையும் பௌத்த சிங்கள மக்கள் கவனத்தில் எடுக்காது, தப்புக் கணக்கின் அடிப்படையிலும் மகாவம்ச மனப்பான்மையுடனும் சிங்கள பௌத்த தேசியம் மாத்திரமே இத்தீவில் இருக்க வேண்டுமென்று முயற்சி பண்ணத் தொடங்கினார்கள்.

நீண்ட காலனித்துவ முடிவில் தேசிய உணர்வுகளும் மத புதுப்பித்தல்களும் புதிய எழுச்சியுடன் முன்னிலைப்படுத்தப்படுவது எல்லா நாடுகளிலும் சர்வ சாதாரணம். அது நீதியுமானது. அதிகமாக ஓர் இன எழுச்சியில் மத சிந்தனைகள் உந்து சக்தியாகச் செயல் படுவதும் உண்டு. ஆனால் சிங்களவர்களைப் பொறுத்தவரையில், உந்து சக்தி கொடுத்தது பௌத்த மதத்தின் சாரம்ச படிப்பினை அல்ல. அவர்கள் மகாவம்சமென்ற ஓர் முனிவரின் ஏட்டையே ஊற்றாகப் பாவித்து அதையே தமது இன துவேசத்திற்கு உந்து சக்தி கொடுக்கும் இயந்திரத்தைப் போல் பாவித்து வருகின்றனர். இதன் விளைவாக இன்று இலங்கையில் இருப்பது ஒரு தனிப்பட்ட சிங்கள பௌத்த மதம் என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தமிழ் பிரதேசங்களில் அரச நிதி உதவியுடனான சிங்களக் குடியேற்றம்

உண்மையாக சிங்களவருக்கே இத்தீவு சொந்தம் என்றும் அவர்களே பூர்வீகக் குடிகள் என்றும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே தமிழ் மக்கள் பொரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பின்றி வாழமுடியும். ஆனால் தமிழ் மக்கள் எப்படி வரலாற்று உண்மைகளைக் கைவிட்டு, மற்றொரு இனத்தின் கீழ் அடிமைப்பட்டு வாழ முடியும்?

வடக்கிலும் கிழக்கிலும் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்து வந்த தமிழர்கள், காலனித்துவ காலந்தொட்டு தெற்கு நோக்கி நகர்ந்து குறிப்பாக கொழும்பில், வியாபாரம், மற்றும் அரச உத்தியோகங்கள் செய்து சொத்துக்கள் சேர்த்து நிரந்தரமாக வாழ்ந்தார்கள். அதே போன்று சிங்களவர்களும் வியாபாரம், அரச உத்தியோகம் நிமித்தம் தமிழ் பிரதேசங்களில் குடியேறி வாழ்ந்தார்கள். இவை அனைத்தும் காலனித்துவ எஜமானர்களின் கீழ் அமைதியாக நடைபெற்றது.

ஆனால் 1948ல் சுதந்திரம் பெற்ற பின்னர் இந்நிலை அரசாங்கத்தினால் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. சிங்கள அரசு முதலில் தமிழ் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையைப் பறித்தது. அதனைத் தொடர்ந்து அரசு திட்டமிட்டு அரச நிதி உதவியுடன் தெற்கிலிருந்த சிங்களவர்களை வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்றியது. இதனால் தமிழர்களுக்கு உரிமையான பாரம்பரிய நிலங்களை சிங்கள அரசு அபகரித்து சிங்களவர்களுக்கு இனாமாகக் கொடுத்தது. தமிழர் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதன் மூலம், தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குரிய மறைமுகத் திட்டமாக இதைச் செயற்படுத்தியது. இதன்மூலம் கடந்த ஐம்பது வருட காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் தொகையும் பிரதிநிதித்துவ எண்ணிக்கையும் வலுவாகக் குறைந்து போயின.

நெடுங்காலமாக மக்கள் வாழும் நிலம் அம்மக்களுக்கே உரிமையுடையதென்பதும், முதல் வந்தவருக்கே முதல் உரிமை உண்டு என்ற நூற்றாண்டுகால நடைமுறை மாற்றமடைந்து விட்டது. இது யுத்தங்களால் மாறியதுடன் பின்பு அரச ஆட்சிச் சட்டங்கள் மூலமும் மாற்றம் பெற்றது. இம் மாற்றங்களை மறந்து பிழையான காலக் கணிப்பில் செயற்படுவது மடமைத்தனம். சிறிலங்காவில் ஓர் இனம் மாத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு நாட்டின் உரிமையாளர் என்றும், ஏனையோர் உரிமையாளர் தயவில் குடியிருப்பவர்களாகவும் கருதுவது காலத்திற்கு முரணான செயலாகும்.(anachronism). முன்னாள் ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜயதுங்கா சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றியிருக்கும் மனநிலையைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தினார். தமிழர், இஸ்லாமியர், இந்தியர்கள், இத் தீவில் நிலவுரிமையற்றவர்கள் ஆகையினால் சிங்கள இனத்தில் தொங்கிப் படரும் கொடிகளாகக் கருதப்பட வேண்டுமென்று கூறினார். அதே விதமாக ஓர் நிலப் பகுதியில் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் மக்களுக்கே அந்நிலம் உரிமையுடையதென்பது தெளிவாயினும் வேறு மக்கள் அங்கு வந்து சுதந்திரமாக ஜனநாயக முறைப்படி குடியேறுவதற்கு கதவுகள் மூடப்படக்கூடாது.

## 5. பொய்யான தேசியம் பற்றி மக்களுக்கு மீள் கற்பித்தல்

காலனித்துவத்துக்குப் பின்பு தொடங்கப்பட்ட தெற்கின் பிரதான அரசியற் கட்சிகள் இரண்டும், பௌத்த–சிங்கள தேசிய தீவிரவாதத்தை தங்கள் அரசியல் அபிலாசைகளுக்கு திசைதிருப்பினார்கள். இதனால் பெரும்பான்மை மக்கள் மற்றவர்கள் வைக்கும் சமஸ்டி போன்ற தீர்வுகளை விளங்காது தடுத்தனர். அத்தீர்வுகள் பல இன மத யதார்த்தத்திலே ஒற்றுமையை நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால் இத் தீர்வுகள் வட கிழக்குத் தமிழர்களிடமிருந்து வந்ததெனவும் பெரும்பான்மை இனத்திற்கும் மதத்திற்கும் நாட்டிற்கும் நச்சுத்தன்மையுடையதென்றும், அபாயமானதென்றும் விளக்கினர்.

இதன்வழியே சிங்கள மக்களின் பொய்யான நம்பிக்கையினதும் அரசியலினதும் விளைவாக பல தசாப்த யுத்தமும் பெரும்தொகையான தமிழ் அழிவுகளும் ஏற்பட்டன. அதன் பின்புதான் ஒரு சர்வதேச உதவியுடன் தீர்வுக்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆயினும், பௌத்த சிங்களவாதம் பேசும் பிக்குகளின் நாளங்களில் ஓடும் பௌத்த தேசியவாதம் தீர்வுக்கு இடமளிக்குமா என்பதும், அமைதித் தீர்வு காண முட்டுக்கட்டை போடுமா என்பதும் பெரிய கேள்வியாகவே உள்ளது.

தென்னிலங்கை அரசியற் கட்சிகள் நிதானமாகவும் நேர்மையாகவும் தமது தவறுகளைத் திருத்திக்கொண்டு பொறுப்புடன் தமது மக்களை அறிவூட்டி, அமைதி வழித் தீர்வு நோக்கி வழிநடாத்த சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இன்றேல் எவருமே எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சிங்களத் தீவிரவாதமும், தேசியவாதமும் எதிர்காலத்தை அச்சுறுத்துகின்றன

இதுவரை பிரதான சிங்கள அரசியற் கட்சிகள் திடமாக நாடு எதிர்நோக்கும் தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்கு முகமாக பொறுப்புடன் மக்களை அறிவூட்டி வழிகாட்டும் அடையாளம் எதுவும் தென்படவில்லை. அதுவுமின்றி மக்களுக்கு உண்மைகளை எடுத்துக்கூறும் திடமும் ஏற்படவில்லை. சர்வதேசங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டும் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சிகள் இரண்டும் மாறி மாறி ஆட்சியில் இருக்கும் வேளைகளில் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்கவுள்ளதாகக் கூறினாலும், வெளிப்படையாக அதனைக் கூட்டாட்சி வழியாக வழங்குவதாகக் கூறவில்லை. தாம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக இப்பொழுதும் தமிழர்களின் கோரிக்கையை எதிர்ப்பதாகவே கூறுகின்றார்கள். தமிழர்களுக்கு எவ்வளவு சிறிதளவு தருவதாகக் கூறுவதன் மூலம், அது அரசியல் வெற்றியை தமக்கு வழங்கச் செய்யும் என்றே நம்புகின்றார்கள். அவர்கள் செய்யும் பரப்புரைகளில் எந்தவித சாதகமான தீர்வை வழங்கும் குறிக்கோள்களும் அடங்கியதில்லை. தெற்கில் வாழும் பெரும்பான்மையினர், எந்த அரசியல்வாதிகள் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்புவதுடன் "தமிழ் பயங்கரவாத்திலிருந்து" "நாட்டைக் காப்பாற்றுவதாக" உறுதியளிக் கின்றார்களோ, அவர்களையே ஆட்சியில் அமர்த்த முனைகிறார்கள் என்பதே உண்மை. இதனை மாற்றுவதாயின், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் இதற்கு பெருமளவில் எதிர்ப்புத் தோன்றினால் மட்டுமே தமிழர்களுக்கு எதிரான தீவிரப் போக்கை கட்டுப்படுத்த முடியும்.

போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னரே சிங்களவர் மத்தியில் இருக்கும் இருபெரும் அரசியல் கட்சிகளாகிய ஐ.தே.க, சு.க இரண்டும் அதிகாரப் பரவலாக்கல் பற்றி பேசத் தொடங்கினர். ஆனால் பழைய தீவிரவாதக் கட்சியான ஜனதா விமுக்திப் பெரமுன அத்தோடு புத்த பிக்குகளின் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தமிழருடன் எந்தவிதமான சமாதான தீர்வையும் எதிர்க்கின்றனர். 2004 பொதுத் தேர்தலில் ஜனதா விமுக்திப் பெரமுன மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் இரண்டும் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு சவாலாக வந்து சேர்ந்தன. வரலாற்றில் பௌத்த குருமார்கள் அரசியல் கட்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றுக்குள் நுழைந்த நோக்கம் சிங்கள பௌத்த தேசியவாதம் பற்றி முழக்கமிட்டு, தமிழர்களுக்கு எந்தவித நீதியான தீர்வும் வழங்காது தடுப்பதற்காகவே. இதன் காரணமாக தீர்வு காண்பதென்பது கடினமாகிக் கொண்டுள்ளது. தமிழ் விரோத ஜே.வி.பி யானது இரு பெரிய கட்சிகளுடன் மோதி, ஆட்சியைக் கைப்பற்ற முனைந்து வெற்றிபெறும் பட்சத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மேலும் கடினமாகிவிடும். சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இரு பெரும் கட்சிகளும் சிறிது சாதகமாக முனைந்தாலும், அதனை இடதுசாரி தீவிர சிங்கள ஜே.வி.பியும் பௌத்த தேசியவாத ஹெலஉறுமயவும் தடுத்து எதிர்க்கின்றன. புத்த பகவான்தான் சிறிலங்காவை தேசிய தற்கொலையிலிருந்து காப்பாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்பாதுகாப்புக்காக வளர்ந்த தமிழ்த் தேசியம் 6

## 1. தமிழர் தங்கள் அடையாளங்களைப் பேணுவதில் தளராதவர்கள்

எவ்வாறு சிங்களவர் இத்தீவின் மீது உரிமைகோரி, தாமே பூர்வீகக் குடிகள் எனக் கூறுகின்றார்களோ, அவ்வாறே தமிழர்களும் தம்மைக் கூறிவருகின்றார்கள். இத் தீவில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர், தமிழர் இருக்கவில்லையென்று கூறுவதற்கு எந்த ஒரு வரலாற்றாளரும் துணிந்ததில்லை. வரலாறு ரீதியாக தமிழர் தீவின் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துவருவதுடன் காலனித்துவ காலம்வரை அங்கு அரசமைத்து ஆண்டு வந்துள்ளனர்.

நீண்ட கரையோரங்களில் மக்கள் மீன்பிடித்து வாழ்க்கை நடாத்தி வந்துள்ளனர். உள்நாட்டில் வாழ்ந்தவர்கள் ஆறு, கடல் இல்லாமையாலும், மழை குறைவாக இருந்ததாலும் கடும் உழைப்பாளர்களாகவும் விவசாயிகளாகவும் வாழ்க்கை நடத்தி வந்தனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் தெற்கைவிட மழைவீழ்ச்சி குறைவாகவே இருந்தது. மக்கள் இந்துக்களாகவும் அவர்களின் சமூக பண்பாட்டு முறைப்படி வாழ்ந்து வந்தார்கள். சமூக நிலை வேறுபாடு கொண்ட சாதிப்பிரிவுகள் காணப்பட்டன. இதனை மத நம்பிக்கை மூலம் கர்மவினை என்று நம்பிக்கை கொண்டனர். இதற்கு பொருளாதார உயர்வு தாழ்வுகளும் ஓர் காரணமாகி உழைப்பவர்கள் கூலிபெறும் தாழ்ந்தவர்களாகவும், சொத்துக்கள் உடையவர்கள் நில பிரபுக்களாகிய உயர்ந்தவர்களாகவும் கருதப்பட்டதனால் சாதிப்பிரிவுகள் ஏற்பட்டன. சமூக நிலை வேறு கொண்டதன் விளைவாகவே உயர்வானவர்கள் இராஜபோகமும் செல்வமும் படைத்தவர்களாகவும் ஏனையோர் கீழ் மட்டத்திலும் வைத்து மதிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் வருகையின் பின்னர் சமூக, சமய வாழ்வு பல மாற்றங்களுக்கு உள்ளானது. போர்த்துக்கேயர் மக்களை கத்தோலிக்க மதத்துக்கும் பின் ஒல்லாந்தர் இந்துக்கள், கத்தோலிக்கர்களை டச்சு சீர்திருத்த மதத்திற்கும் மாற்றினார்கள். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அரச நிர்வாக அலகுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்தார்கள் என்று கூறமுடியாது. இருந்தபோதும் ஆங்கிலேயரும் கண்டி அரசைக் கைப்பற்றிக் கொண்ட பின்னரே (1815) முழுத் தீவின் நிர்வாகத்தை ஒன்றாக இணைத்து கொழும்பில் இருந்து வழிநடாத்தினர்.

ஆங்கிலேயரின் ஆட்சியில் வரண்ட பிரதேசங்களாகிய வடக்கு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் தெற்கே குடிபெயர்ந்து குறிப்பாக கொழும்பு நகரில் உத்தியோகம் நாடிச் சென்று வாழ்ந்தனர். ஒரு சில சிங்களவர்களும் வடகிழக்கே சென்று தொழில் முயற்சிகளில் ஈடுபட்டனர். சிங்களவர்கள், தமிழ் உயர்தர அந்தஸ்துடையவர்களும் வியாபாரிகளும் அருகருகே பண்பாடுடன் நட்புக்கொண்டு வாழ்ந்தனர். எல்லோரும் தத்தமது இன, மத அடையாளங்களை இழக்காமல் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தனர். சிங்களவர்களிலும் தமிழர்களிலும் கிறிஸ்தவர்களாகிய சிலரே சமூக, மத விடயங்களில் கலந்து கொண்டனர். இதனைக் கவனித்த ஆங்கில வரலாற்றறிஞர் ஒருவர் கூறுகையில் "ஆயிரமாயிரம் வருடங்கள் கழிந்தும் இவ்விரு இனத்தாரும் தங்கள் இன அடையாளங்கள் சிதைந்து போகாது காத்துக் கொள்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

## 2. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ் உணர்வின் தந்தை

ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பொழுது சிங்களவர்களின் மேலாதிக்கம் தமக்கு ஏற்படலாம் என்றதோர் பயம் தமிழ் தலைவர்களுக்கு ஏற்பட்டதுடன், சிறுபான்மையினர் மீது அதிகாரம் செலுத்தி அடையாளம் இழந்து ஓரினமாக்கும் எத்தனிப்பு ஏற்படலாம் என்றும் எண்ணினார்கள். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிறுவனரும், தலைவருமாகிய திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தன்னந்தனியாக ஆங்கிலேயருடன் சிங்களவர்களால் தமிழர்மீது ஆதிக்கம் ஏற்படலாம் என்பதை முன்வைத்து வாதிட்டார். ஆங்கிலேய அரசிடம் தமிழ் மக்களைக் காக்கும் பொருட்டு பல ஆலோசனைகளை முன்வைத்தார். தமிழர்களின் மனச்சாட்சியாக அவர் ஆற்றிய சேவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் என்றும் மறக்கமாட்டார்கள். பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் மருமகனாவார். அவர் கூறுகையில் "அவர் தமிழர்களின் மனச்சாட்சியாக உயர்ந்து, அவர்கள் தமது தேசிய உயிரை இழக்கப்போகும் வேளையில், அகில இலங்கையிலும் தமது அடையாளத்தை நிலைநிறுத்த வேண்டி தங்கள் தனித்துவ தேசிய அடையாளம் பற்றிச் சிந்திக்க வழிகாட்டியவர்" (பக். 80) என்று கூறியுள்ளார். சிங்களத் தலைவர்கள் அன்று சுதந்திரம் பெறவேண்டி நின்ற நேரத்தில் தமிழ்த் தலைவர்களிடம் இடையூறாக எதிலும் ஈடுபடவேண்டாமெனக் கேட்டுக்கொண்டனர். தமிழ்த் தலைவர்களுக்கு, தமிழரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் வாக்குறுதி கூறினர். இரு இனங்களுக்குமிடையில் நீண்டிருக்கும் வேற்றுமைகள் பற்றி அறிந்திருந்தும், ஆங்கிலேயர் தமது வரலாற்று குளறுபடியாக சிறுபான்மைத் தமிழர்களை பெரும்பான்மை சிங்களவரின் தயவில் விட்டுச் சென்றார்கள். சிங்களப் பெரும்பான்மை அரசு ஜனநாயகம், மனச்சாட்சி என்பவற்றிற்கு இடம்கொடாது 1972ல் அதுவரை தமிழருக்கு இருந்த சிறிய உத்தரவாதம் எனும் 29 வது சரத்தான சோல்பரி அரசியல் அமைப்பு தமிழரின் பாதுகாப்பிற்கென வழங்கிய புள்ளியையும் விட்டுவைக்காது அழித்தது.

### 3. சிறிது காலத்திற்குள் மறைந்துபோன பல்லின ஒற்றுமை

தொடக்க கால நம்பிக்கைகள் சிதறிப்போயினும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழவும், நாடு முன்னேற்றங் காணவும், வளர்ச்சியும் மகிழ்ச்சியும் ஒருமித்து அமைதி காணவும் சுயாட்சியே ஒரேவழியென தமிழர்கள் எண்ணத் தொடங்கியதுடன், சமமாகவும் சிறந்த குடி மக்களாகவும் வாழ்வதற்கு சிறந்த வழி சுயாட்சி முறையெனவும் தெளிவாக அறிந்து கொண்டனர். சுதந்திரத்தின் பின்னர், அமைந்த முதலாவது அரசுக்கு "தமிழர்களின் இணக்கம் இருந்தது" யாழ்ப்பாணக் கல்லூரிகளில் இரண்டாவது மொழியாக சிங்களத்தை கற்றுக் கொடுக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டதன் வழியாக, இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் விளக்கமும் ஏற்பட வழி பிறக்கும் எனக் கருதப்பட்டது. ஆயினும் ஓர் ஒற்றுமை வாய்ந்த சமுதாயத்தை காணும் நம்பிக்கை வெகு விரைவாக மறைந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சிங்கள தேசியவாதம் தமிழர்களை பிரிவினைக்குத் தள்ளியது

காலனித்துவ காலத்திற்குப் பின்பு பதவிக்கு வந்த கொழும்பில் நிலை கொண்டிருந்த அரசுகள் படிப்படியாக தமிழ் மக்களை தமது எதிர்கால வாழ்க்கை, உழைப்பு, வேலைவாய்ப்பு, உயிர்ப் பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள் கண்டு வாழ்வதற்கு ஏற்றவாறு வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வைத்தன. இலங்கையில் பல்லின, மத, பண்பாடுகள் கொண்ட வேறுபட்ட மக்கள் ஒற்றுமையாக வாழ்வது இயலாதெனக் காணப்படுவதால் காலனித்துவத்துக்கு முன்னர் இருந்த தாயகம், தேசியம், தன்னாட்சி என விளங்கிய ஆட்சியை அடைவதன் மூலமே பாதுகாப்பு, எதிர்கால சுபீட்சம் ஏற்படும் எனத் திரும்பிப் பார்க்கத் தூண்டியது.

சிங்களப் பௌத்த தேசியம் 1956ல் S.W.R.D. பண்டாரநாயக்காவினால் தொடக்கி வைக்கப்பட்டு மீள் தோற்றம் பெற்றது. பெரும்பான்மைப் பௌத்த தேசியவாதத்தின் மூலம் மகாவம்ச மனோபாவத்தால் வளர்க்கப்பட்டவாறு அடிமட்ட மக்களைக் கவர்ந்து அரசியல் இலாபம் பெறுவதற்காக இலங்கைத் தீவையும் பௌத்தத்தையும் சிங்கள தேசியவாதப் பௌத்தர்களால்தான் காப்பாற்ற முடியும் என எடுத்துக் கூறப்பட்டது. இந்த ஆபத்தான நடைமுறையால் ஏனைய இனத்தவர்கள் குடிமக்களாகக் கருதாது புறக்கணிக்கப் பட்டார்கள். நாமே இந்நாட்டவர் என்ற கோசத்தை முன்வைத்த பண்டாரநாயக்கா மொழியை முன்வைத்து, அதுவரை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை வெல்லத் தீர்மானித்தனர்.

1956 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் பெற்ற வெற்றி தமிழ் மக்களுக்கு எதிராக எழுந்த காடைத்தனங்களுக்கு வழி விட்டது. இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமைப் பறிப்பின் பின்னால் மறைந்திருந்த மற்றுமோர் திட்டமாக அரச உதவியுடன் தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் நோக்கில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத் திட்டம் இவ்வாறு தொடர்ந்த சிங்கள ஆதிக்கவாதம், செயற்பாடு என்பன தமிழ் மக்களை பிரிவினைக்குள் தள்ளின.

## 5. தமிழ்த் தேசியத்தின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

காலனித்துவத்திற்குப்பின், முதன்முதலாக ஆரம்ப நடவடிக்கையாக தமிழர்களுக்கு எதிராகவும் சிங்கள பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியத்துக்காகவும் 1949ல் கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதை அடுத்து, நவீன தமிழ்த் தேசியத்தின் தந்தையாக விளங்கிய தந்தை செல்வநாயகம் தமிழர்களை, எதிர்நோக்கும் ஆபத்துக்கள் பற்றி தீர்க்கதரிசனமாக மக்களின் மனதில் பதியச் செய்தார். இலட்சக்கணக்கான இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமை இழந்ததுபோல, இலங்கைத் தமிழர்களுக்கு நேராது, அடையாளம் அழியாது, பாதுகாப்புடன் வாழ, சுயநிர்ணயத்தை நிலைநாட்டி தன்மானத்துடனும், சகல அடிப்படை உரிமைகளுடனும் சுயாட்சி கொண்ட தன்னாட்சி காண வேண்டி வழிநடாத்தினார்.

1949ல் இந்திய மக்களின் குடியுரிமைப் பறிப்புக்குப்பின், தூரப்பார்வையுடன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியை நிறுவினார். அது ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சி (Federal Party) என அழைக்கப்பட்டது. எதற்காக? அவர் தனித் தமிழ் நாட்டைக் கோராது ஓர் தனி அரசாக, தமிழ் அரசை, தமிழர் தனித்து பரந்து பாரம்பரியாக வாழும் பகுதி கொண்ட ஆட்சியில் பாதுகாப்பாகவும் சுயமாகவும் தன்னாட்சி பெற்ற மக்களாக வாழமுடியும் என்றும் அதேவேளையில் இணைப்பாட்சியாக மத்தியில் கூட்டாட்சியை வேண்டியும் பிரசாரம் மேற்கொண்டார். இதுபற்றி 1951ல் திருகோணமலையில் நடைபெற்ற முதலாவது கட்சி மாநாட்டில் பிரகடனப்படுத்திய வேளை அவர் ஆற்றிய உரையில்:

"எந்த ஒரு தேசிய இனத்திற்குமுரிய மாற்றமுடியாத அரசியல் சுதந்திரம் இல்லாது மதநம்பிக்கை, பண்பாடு, ஒழுக்கம் என்பன நினைத்துப் பார்க்க முடியாததென்பது இலங்கைத் தீவில் சிங்களவரைப் போல இந்நாட்டின் நீண்ட வரலாற்றின் தேசியத்தில் தமிழ் மக்களுக்கும் சமபங்கு உண்டு என்பதும், அதற்கு வரலாற்றுப் பார்வையில் சிங்களவர்களைப் போல பெருமையும், புகழும் கொண்ட கடந்த காலமும் இரண்டாவதாக மொழி வழியாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட சிறந்த மொழியுடையவர்களும், பாரம்பரிய நீண்ட சிறந்த இலக்கிய வளமுடைய மொழியாகவும் இன்றும் உயிர்ப்புடன் விளங்கும் தமிழ் மொழியும் நீண்ட வரலாற்றுக் காலந்தொட்டு தீவின் மூன்றில் ஒரு பகுதி பிரதேசங்களை உள்ளடக்கிய நிலப்பகுதி தங்கள் தாயகமாகவும் கொண்ட தமிழ் மக்கள் சார்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது மாநாடு இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் மாற்றமுடியாத, அரசியல் சுயாட்சி காணும் பொருட்டு மக்களிடையே பொதுசன வாக்கெடுப்பு நடாத்துமாறும், திட்டமிட்ட எல்லைகளுடைய மொழிவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியை உறுதிப்படுத்தி அடிப்படையுரிமைகளுக்கு எத்தகைய எதிர்ப்பும் ஏற்படுத்த முடியாத தன்னாட்சியை காணவேண்டுமென்றும் கோருகிறது" என்று பிரகடனப்படுத்தினார்.

அவரின் தமிழருக்கான தன்னாட்சி, (Thamil Arasu) சிறிலங்கா ஆட்சியில் இணைப்பு பற்றிய கருத்து தவறாகவும், வேண்டுமென்றும், தெற்கின் தீவிர சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளால் அக்கோரிக்கைகள் நாட்டைப் பிரித்து தமிழ் அரசு காண்பதற்கான ஓர் முன்னோடித் திட்டம் எனப் பேசப்பட்டது. கூட்டாட்சி என்ற சொல்லுக்கு நாட்டை இரு கூறாகப் பிரிப்பதென்று விளக்கம் கூறினார்கள். ஒரு பிரதேசத்துக்குரிய சுயாட்சி கொண்ட அரசும், அதன் கூட்டாட்சியாக, மத்தியில் இணைந்து கொள்வதும், அதுபற்றிய தவறான விளக்கங்களும், திசைதிருப்பும் ஈற்றில் சிங்களவர்களை தமிழர்களுக்கு எதிராக மோதவிடுவதற்குப் பயன்படுத்தினார்கள்.

கூட்டாட்சியின் கீழ் இரு தேசியங்களாக வாழ்வதற்கு தமிழர்கள் எண்ணியது சிங்களவர்களை, குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாதிகளை, தமிழர்கள் மீது வெறுப்படையச் செய்து தமது பெரும்பான்மை மூலமாக தமிழ் விரோத, அநீதியான மொழி, கல்வி, பண்பாடு, தொழில், அபிவிருத்தி முதலியவற்றிற்குத் தடை போடும் சட்டங்களை ஊக்குவித்தார்கள். அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும், அவற்றை அமைதியாகவும், ஜனநாயக வழிகளிலும் எதிர்க்கும் தமிழர்கள் மீது, காடைத்தனங்கள் மேற்கொண்டார்கள். சிங்களக் காடையர்கள் அரச பயங்கரவாதிகளுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது வன்செயல்கள் புரிந்தார்கள். தமிழர்கள் சார்பில் நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தியவற்றைக் கேலிசெய்து நாடாளுமன்றத்திலும் நடந்து கொண்டார்கள். இவ்வாறு தமிழ்மக்கள் அமைதிவழி தானும் எதிர்ப்புக் காட்டமுடியாதவாறு நிலைமை உருவாக்கப்பட்டது. தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலும், தமிழர்களுக்கு இந்நிலை ஏற்பட்டது. 1961 டிசம்பரில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் யாழ்ப்பாணத்திலும் நடாத்த முடிந்ததாவெனில், இல்லையென்றே கூறவேண்டும். இதன் காரணமாக தமிழ் தேசியம் தனது அடுத்த கட்டச் செயலாக தற்பாதுகாப்பு, தன்னாட்சியுடைய தனிநாட்டைக் காணும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஊடகங்களுக்கு சமஷ்டி என்ற சொல் பிற்போக்கானதும், வெறுப்புடைய ஒன்றாகவுமே தெரிந்தது. ஆங்கில ஊடகமோ பிரிந்து நின்ற இருபகுதியினரையும் சென்று காண்பதாகக் காட்டிக்கொண்டது. ஆனாலும் அதன் பிடி, சிங்களவர்களிடம் இருந்ததால் யு.என்.பி. மற்றும் சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதிகளுக்கு ஏற்றவாறு நடந்து கொண்டன. ஆனாலும் தமிழ் அரசியல்வாதிகள் தமது கருத்துக்களை பெரும்பான்மை மக்களிடம் கொண்டு செல்வதற்கு எத்தகைய தீவிர முயற்சிகளும் எடுக்காது ஓர் ஆங்கில இதழைத்தானும் வெளிக்கொணர முடியாது போனது துரதிஸ்டவசமானது. சுதந்திரன் சமஷ்டிக் கட்சியின் அதிகார ஏடு, தமிழில் மட்டும் வெளியிடப்பட்டது. இதன்வழியாக தமிழ்–சிங்கள மக்களிடையே தொடர்பற்ற நிலை நிலவியது. இது இரு இனங்களையும் மோசமானதோர் சூழலுக்குள் இட்டுச் சென்றது.

## 6. தனிநாடு காண ஜனநாயக வழியில் பிரசாரம்

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தனது முதலாவது தேசிய மாநாட்டை 14.05.1976, வட்டுக்கோட்டையில் அதன் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் நடத்தியது. அப்பொழுது அவர் முடிந்த முடிவாக வெளியிட்ட பிரகடனம் பின்வருமாறு:

தமிழர் விடுதலை முன்னணி பண்ணாகம், (வட்டுக்கோட்டை) 14.05.1976 நடாத்திய தனது முதலாவது தேசிய மாநாட்டில் எடுத்த தீர்மானத்தன்படி, இதன்மூலம் பிரகடனப்படுத்துவதாவது, இலங்கைத் தமிழர்கள் (தமிழர்கள், 1972ல் கொண்டுவரப்பட்ட அரசியல் சட்ட மாற்றத்தை நிராகரித்தார்கள், அதில் அரசு இலங்கை என்பதை சிறிலங்கா என மாற்றியிருந்தது) தமது பாரம்பரியமிக்க தமிழ் மொழியை உடையவர்களாதலாலும், தங்கள் மதம், தனித்துவ பண்பாடு, பாரம்பரியமாகியவற்றாலும், வரலாற்று வாயிலாகவும் பல நூற்றாண்டுகளாக காலனித்துவ இராணுவபலமிக்க ஐரோப்பிய படையெடுப்பாளர்களால் கைப்பற்றும் வரை எல்லாவற்றிற்கும் மேலாக தங்களது மனத்திடத்தால், தாம் ஓர் தனித்துவம் பெற்று தனியாட்சியுடைய நிலப்பகுதியில், ஓர் தேசிய இனத்திற்குரிய அனைத்து தகமைகளோடும் சிங்களவர்களிடமிருந்தும், அவர்களின் அரசியல் சட்டங்களிலிருந்தும் வேறுபட்ட தேசிய இனம் என்பதையும், 1972 குடியரசு அரசியல் அமைப்பு தமிழர்களை அடிமைகளாக்கி புதிய காலனித்துவ எசமானர்களாகிய சிங்களவர்கள், ஆட்சி அதிகாரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பிழையாக தமிழ் தேசிய இனத்தின் பிரதேசம், மொழி, குடியுரிமை, பொருளாதார வாழ்க்கை, வேலைவாய்ப்பு, கல்வி முதலியவற்றை மறுத்து தமிழர்களின் தேசிய வாழ்வுரிமைக்கான அனைத்தையும் அழித்து ஒழிக்க முடிவு செய்துள்ளார்கள்.

அதனை மிகவும் கவனத்திற்கொண்டு, எமது மாற்ற முடியாததும், தீர்க்கமானதுமாகிய தனிநாட்டை நிலைநாட்ட வேண்டி சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் பொருட்டும், தமிழீழம் என்ற தனிநாட்டை அமைக்க முற்படும் ஏற்பாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர்கள் இணைந்த ஐக்கிய தொழிலாளர் சங்கம், அதன் பெரும்பான்மை அங்கத்தவர்கள், வடக்கு–கிழக்கிற்கு வெளியே வாழ்பவர்கள் எனக் கூறியிருப்பதைக் கவனத்திற்கொண்டு இம்மாநாடு மூலம், தீர்மானித்து சுதந்திர அங்கீகாரம் கொண்ட மதசார்பற்ற, சமதர்ம நாடாக தமிழீழம் அமையவும், சுய உரிமையுடையதும் சகல தேசியங்களுக்குமுரியதும், சகல தேசியங்களும் ஏற்கும் வகையில் உரிமைகள் உறுதிப்படுத்தியும் தமிழ் தேசியம் காலூன்றவும் இந்நாட்டில் தனியாட்சி நிறுவுவோம்.

1977ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வட்டுக்கோட்டைத் தீர்மானங்களை முன்வைத்து, தனித்தமிழ் நாடாகிய தமிழீழம் காண போட்டியிட்டு, தமிழ் மக்களின் 70 விழுக்காடு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றது.

இவ்வாறு வெற்றிபெற்றதைக் கண்டு சினங்கொண்ட ஜே.ஆர் தலைமையில் வெறும் 51 விழுக்காடு வாக்குகளைப் பெற்றிருந்த யு.என்.பி. அரசு அரசியல் யாப்பிற்கு 6வது திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் எடுக்குமாறும், பிரிவினை பற்றிப் பேசுவது அரசியலமைப்பிற்கு எதிரானதென்றும் சட்டம் இயற்றியது. இதன்மூலம் ஜனநாயகப் பாதையில் அவர்கள் குரலை அனுமதிக்காது ஜனநாயகத்தின் உயர் பீடத்திற்கு தெரிவாகிய தமிழ் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் நாடாளுமன்றக் கதவை அரசு மூடியது. இதன்மூலம் ஜனநாயகத்தின் நுழைவாயிலை சிங்களப் பெரும்பான்மை மூடியதன் விளைவு தமிழ் இளையோர்களுக்கான தீவிரவாதக் கதவுகளைத் திறந்து விட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. தனித் தமிழ் நாடு கோரிய தீவிரவாதிகள் பிரசாரம்

இத்தீவின் ஜனநாயக அமைப்புகள் மீது நம்பிக்கை இழக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்துடன் வாதாடி. இரந்து, பிச்சை கேட்காது போயினும், தமிழ் மக்களின் பாதுகாப்பு ,உயிர்வாழத் தேவையானவற்றை அன்றைய அரசிடம் பெறமுடியுமென்ற நப்பாசை கொண்டிருக்கையில் அரசு, தமிழ் மக்களின் அடிப்படையுரிமைகள், தேவைகளை மறுத்து, சிங்கள மேலாதிக்கம் செலுத்தும் பொருட்டு சிங்கள அடக்குமுறைப் பாதையில் பயணித்துக் கொண்டது.

சிங்கள இனத்திலிருந்து கிளம்பிய காடைத்தனங்கள், பயங்கரங்கள் பற்றி தமிழ் இளைஞர்கள் பலரும் நன்கு புரிந்து கொண்டார்கள். அரச பயங்கரவாதமும், சிங்களப் பிற்போக்குவாதமும் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட பல்வேறு கொடுமைகளுடன், அடிப்படை மனித உரிமைகள் அற்று கல்வி ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் பாதிப்புகளை அறிந்தும், அனுபவித்த தமிழ் இளைஞர்கள் இனிமேல் வருங்காலமென்பது சிங்கள அரசுகளிடமிருந்து கிடைக்கப் போவதில்லை எனவும் அவர்களுக்கு முன் ஓர் சுவர் எழுப்பப்பட்டுள்ளது எனவும் உணர்ந்தார்கள். 1977ல் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அங்கு சென்ற முதிய அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றத்தினூடாகவோ, ஜனநாயக வழிமுறையாகவோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அமைதி வழியில் பெற்றுத் தருவார்கள் என்பதில் நம்பிக்கை இழந்தனர். இந்த சந்தர்ப்பத்திலிருந்துதான் எதிரியை எப்படி எதிர் கொள்வதென்பதற்கு நியாயம் காணப்பட்டது. அதுதான் அரசும் அதன் படைகளும் தந்த பெயரான “தீவிரவாதம”.

ஆரம்பத்தில் சிங்களப் படைகளின் அடக்குமுறை, அச்சுறுத்தல் முதலிய அட்டூழியங்களுக்குப் பதிலடியாக பதில் தாக்குதல்களை பல தமிழ் குழுக்கள் மேற்கொண்டன. திம்புப் பேச்சுவார்த்தை வரையும் அனைத்துப் போராளிக் குழுக்களும் சுயஉரிமை, தேசியம், தாயகம் என்பவற்றில் ஒருமைப்பாட்டுடன் இருந்தாலும் பல குழுக்கள் பொருள், அதிகாரம், வசதிகள் என சிங்கள அரசின் வலைக்குள் வீழ்ந்தனர். இதன் மூலமாக தமிழ் மக்களுக்கு அவர்கள் துரோகம் இழைத்து காட்டிக் கொடுத்தார்கள். இவர்கள் அரசின் பொய்ப் பிரசாரங்களில் அரச படைகளுடன் துணைக் குழுக்களாக இணைந்து அரச பயங்கரவாதத்துக்குத் துணை நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. தேசிய விடுதலை பெறவென எழுந்த விடுதலைப் புலிகள்

1977ல் மக்கள் அளித்த தேர்தல் தீர்ப்புக்கமைய, தமிழீழம் காணவும், சிங்கள அரசின் அடக்குமுறைக் கட்டுக்களை உடைத்தெறியவும், தீரமுடன் எதிர்க்கவும் முன்னெழுந்து முழுமையாக பொறுப்புடன் விளங்கியது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே. 1983ல் இடம்பெற்ற இனப்படுகொலைகளை அடுத்து இருபதாண்டு கால யுத்தத்தில் தமிழ் போராளிகளாலும் தமிழ் மக்களாலும் மிகப் பெரிய தியாகங்கள் நிகழ்த்தப்பட்டன. இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் இணைந்து போராட்டத்துக்குள் இழுக்கப்பட்டனர். முன்பு ஆயுதம் தாங்கிய இளைஞர் குழுவெனக் கூறப்பட்டவர்கள், விரைந்து விடுதலைக்கான மக்கள் இயக்கமாக மாறினர். தமிழ் விரோத தெற்கின் ஆயுதப் படைகள் தங்களால் இயன்றவரை மக்களையும் சில நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் தீவிரவாதத் தலைமையிடம் இருந்து பிரித்துவிட பெருமுயற்சி எடுத்தனர். இதற்கு மறைமுகமாகவும், அறியாதவர்கள் மூலமாகவும் விடுதலைப் புலிகளின் தலைமைமீதும் காரிபூசவும் முயன்றனர். இந்தவகையில் சில நடுத்தர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கையூட்டு வழங்கியபோதும் அது கடைசியில் வெற்றிபெறாது சிக்கலில் முடிந்தது.

தந்தை செல்வா, 1951ல் திருமலையிலும் 1976ல் வட்டுக்கோட்டையிலும் குறிப்பிட்டிருந்தவாறு தமிழ்த் தேசிய மக்கள் ஒன்றுபட்டு நியாயத்திற்காக குரல்கொடுக்க வேண்டியது இன்று தொடரும் துயரங்கள், மரணங்கள், அழிவுகள் என்பன அரசபடைகளினால் ஏற்படுத்தப்பட்ட வேளையில் மிகவும் வலுவான ஒன்றாக மாறியது. இன்று யார் தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள், யார் தமக்காகப் போராடுகிறார்கள் என்பதும் யார் யுத்தத்தின் கொடுமைகளுக்கு மத்தியிலும் எத்தகைய இலாபத்தை எதிர்நோக்காமலும் சிங்களத்தின் நன்மைகளைப் பெற்று தமிழ்த் தேசியத்தை விற்காமலும் செயற்படுகின்றார்கள் என்பதை தமிழ்மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளார்கள். 1976–2004 காலப்பகுதியில் தமிழ் மக்களில் அநேகர் விடுதலைப்புலிகளின் அரசியல்–இராணுவத் தலைமைமீது ஒப்பற்ற நம்பிக்கை வைத்ததுடன் அவர்கள் மூலம் பேரம்பேசமுடியாத தீர்வொன்று, தமிழ் தேசியம் பெற்றுக்கொள்ளும் என உறுதியாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. பேரம்பேச முடியாத தமிழ்த் தேசியம்

தமிழ்த் தேசியத்தின் தந்தை திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டிருந்தவை அவரது கட்சியினரிடையே மட்டுமன்றி சிறிலங்காவிலும் அதற்கு வெளியேயும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிதர்சனமென அறியப்பட்டன. தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கு அடிப்படையாக மூன்று உண்மைகள் உறுதியானவை – யெனவும் அவை விடுதலைக்கு மூலைக் கற்களாகவும் அமைந்தன.

அ) சிறிலங்காவில் வாழும் தமிழ் மக்கள் தனித்துவமான மக்களாகவும் தமக்கென ஓர் வரலாறு, பண்பாடு, பாரம் பரியங்களுக்குடையவர்கள் என்றும், வெற்று மொழியை மட்டும் கொண்ட சிறுபான்மைத் தொகுதியெனத் தமிழர்களை அடக்கி ஆட்சி செய்ய முனையும் சிங்களவர் கூறுவதுபோல அல்லர் என்பதும் பெரும்பான்மை கொண்ட சிங்களவர்களைப் போலவே வரலாற்றில் நீண்ட காலமாக வாழும் தமிழர்களும் அரசு, இராச்சியம் நடாத்தி வாழ்ந்த பெருமையுடையவர்களை மொழிவழிச் சிறுபான்மையினத்தவர்களாக மட்டும் கருதமுடியாது.

ஆ) சுயாட்சி பற்றி ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் ஏற்றுக்கொண்டிருப்பதற்கேற்ப சுயாட்சி உரிமைக்கான மக்களின் உள்ளார்ந்த நிலைகள் கவனத்தில் கொள்ளப்படும். அவ்வாறான உள்ளார்ந்த நிலைமைகள் கவனத்திற்குரியனவாகக் காணப்படுகையில் அம்மக்கள் தனியாகப் பிரிந்து செல்லும் உரிமையுடையவர்களாவர்.

இ) தீவின் வடக்கு கிழக்குப் பிரதேசம் பல நூற்றாண்டுகளாக தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக இருந்து வருகின்றன. ஆகவே வடக்கு கிழக்கு தமிழர்களுடைய தாய் நாடாகும். இதன் காரணமாக பிறர் வாழமுடியாதென்பதல்ல. ஆனால் அப்பிரதேசத்தின் நலன்களிலும் வளர்ச்சியிலும் தமிழரின் சுயாதிக்கம் இருக்கும்.

மேற்கூறிய மூன்று விடயங்களும் திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அனைவராலும் ஏற்கப்பட்டதுடன் பின்பு ஒஸ்லோ பேச்சுவார்த்தை, விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் நடந்தவேளை மீண்டும் பேசப்பட்டது. தமிழ் மக்கள் கோரும் தனிநாட்டுக்குப் பதிலாக வேறு ஒரு பதில்தீர்வு காணுமுகமாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் வழியாக ஓர் ஒப்பந்தம் எட்டப்பட்டது. இது பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட சாதகமான திருப்பம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை சமஷ்டி முறையிலான தீர்வின் மூலம் வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசமாகவும் நாட்டைப் பிரிக்காது தமிழ்ப் பகுதியில் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழக்கூடியதாகவும் இதனை உள்ளார்ந்த தன்னாட்சியாகவும் ஏற்றுக்கொள்வதென்றும் கூறப்பட்டது. இவ்வாறு வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகமென ஏற்றுக்கொண்ட பின்னரும் சிங்களப் பெரும்பான்மையினரிடம் தவறான எண்ணங்களும் அவநம்பிக்கைகளும் காணப்படுவதுடன் அடிப்படை உண்மைகளை மறந்தும் விடுகின்றார்கள்.

தமிழர்கள் கோரும் தாயகம் என்பது வெறும் வரலாற்றுப் பெருமைகளையும் இனம், மொழி மதப் பற்றையும், உயர் தன்மைகளையும் கொண்ட செருக்கின் வெளிப்பாடு என சிங்கள பௌத்த தேசியம் கூறுவதுபோல அல்ல. அதற்குப் பதிலாக கடந்த 50 ஆண்டுகால ஒடுக்குமுறை, கொடுமைகளுக்கு முகம்கொடுத்து வந்து, தமிழர்கள்மீது பயங்கரவாதங்களைக் கட்டவிழ்த்துவிட்ட சிங்களப் பௌத்த பெரும்பான்மையினரிடம் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டியே, தமிழர்கள் தாயகம் கோரியுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றைச் சுருக்கி இங்கு மூன்று காரணங்களைத் தரவிரும்புகின்றேன்.

## அ) தமிழருக்கெதிரான தாக்குதல்களின்போது தமிழர்கள் பாதுகாப்புத் தேடி வடக்கு கிழக்கிற்கு ஓடினர்

தமிழர்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தலைநகர் கொழும்பில் சிறியளவில் எதிர்ப்புகள் கிளம்பும் போதும்கூட தொடர்ச்சியாக தெற்கில் வாழும் அனைத்துத் தமிழர்களுக்கு எதிராகவும் காடையர்களாலும் அரச பயங்கரத்தாலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட அல்லது சொத்துக்கள் சூறையாடப்பட்ட தமிழர்கள் அகதிகள் முகாமுக்கோ அல்லது தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வடக்கு கிழக்கிற்கோ அனுப்பப்பட்டனர். 1958ல் தமிழர்மீது நடாத்தப்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் கப்பல்களில் ஆயிரக்கணக்கில் அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு (யாழ்ப்பாணம்) அனுப்பப்பட்டார்கள். இதேபோன்று 1956, 1958, 1962, 1977, 1983 என தெற்கில் தமிழருக்கெதிரான பாரிய இனக்கலவரங்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டவர்கள் அகதிகளாக வடக்கு கிழக்கிற்கு வந்தனர். அதுமட்டுமில்லாது மலையகத்திலிருந்து வந்திருந்த தமிழர்கள்கூட வடக்கு கிழக்கிற்கு அகதிகளாக ஓடிவந்திருந்தனர்.

## ஆ) வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் அரசின் பாரபட்சம் அல்லது கவனக்குறைவு

சிங்கள அரசுகள் 1948ல் இருந்து தமது அபிவிருத்தித் திட்டத்தில் வழக்கு கிழக்கை பிரதானமாக அடக்கவில்லை. வெளிநாடுகளிலிருந்து பெற்ற நிதியுதவிகள் தெற்குப் பகுதிக்கே திருப்பிவிடப்பட்டதுடன் வடக்கிலும் கிழக்கிலும் பயங்கரவாதம் இடம்பெறுகிறது என்று கூறிவந்தார்கள். மகாவலித்திட்டம், மின்சார அபிவிருத்தி, வீதியமைப்பு, கிராமோதயம் (கமுதாவ) எனக்கூறி இலட்சக்கணக்கில் பணம் செலவிடப்பட்டது. நீண்ட காலமாக வடக்கு கிழக்கு பிரச்சினையுள்ள இடம் என்று கூறி எத்தகைய அபிவிருத்திகளும் மேற்கொள்ளப் படவில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மையில், மத்தியில் பதவியில் இருக்கும் அரசு நடந்துகொண்டு, தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்களை புறக்கணித்ததால் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களே தங்கள் சமூக நலன்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள்ளும் தமது நிலத்தை தாமே அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைக்கும் உள்ளானார்கள்.

## இ) 20 ஆண்டுகால மனதாபிமானமற்ற யுத்தமும் வடக்கு கிழக்கிற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும்

வடக்கு கிழக்கு மக்கள் மீது 20 ஆண்டுகாலமாக நடாத்தப்பட்ட யுத்தம் அவசரகாலம், பொருளாதாரத்தடை, பாலியல் வன்முறை, மக்கள் படுகொலை மட்டுமன்றி சிறைக்கூடங்கள் (களுத்துறை, வெலிக்கடை, பிந்துனுவேவா) தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களும் கொலை செய்யப்பட்டார்கள். வடக்கும் கிழக்கும் தீவின் ஒரு பகுதி எனக் கூறிக்கொண்ட அரசுகள் தமிழ் மக்களை அடிமைகள் போல முழந்தாளிடச் செய்து கொடுமையாக நடாத்தியது.

இம்மூன்று உண்மைகளும் உருண்டை வடிவாகி, தமிழ் மக்களை தமது தாயக மண்ணை மீட்டு, தெற்குச் சிங்களத்தில் தங்கியிராது, மாற்றானுக்கு மண்டியிடாது, உயிர்வாழ்வை உறுதிசெய்து, விடுதலைபெற்று மானத்துடனும் மரியாதையுடனும் நாட்டை விருத்தி செய்துகொள்ள நம்பிக்கையூட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. தமிழ்த் தேசியம் சிங்களத் தேசியத்திலிருந்து வேறுபட்டது

தமிழ்த் தேசியம் அடிப்படையில் சிங்களத் தேசியத்தில் இருந்து பெரிதும் வேறுபட்டது. சிங்களத் தேசியம் முழுத் தீவுக்கும் உரிமை கொண்டாடும்போது தமிழ்த்தேசியம் தமது பாரம்பரிய பிரதேசங்களையே தமது பாதுகாப்பிற்கான தாயகமாகக் கோரிநிற்கின்றது. இதனை தனது பாதுகாப்புப் பொருட்டே அது நாடியுள்ளது. சிங்களத் தேசியமானது சிங்கள மக்களை தாமே முழுத்தீவின் உரிமை கொண்டவர்களெனவும், பெரும்பான்மையுடன் கடந்த 50 ஆண்டுகளாக இடம்பெற்றதுபோல தமிழர்களை ஒதுக்கி, நீக்கி, நடாத்த முடியும் என நம்பவைத்துள்ளது. மேலும் தமிழர்கள், இஸ்லாமியர் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழலாம் ஆனால் குடியிருப்பாளர்களாகவும், கொடிகளாகவும் சிங்களப் பெரும்பான்மையினரின் (கீழ்) துணையுடன் என்பது அவர்கள் கோட்பாடாக உள்ளது. சுயமரியாதை, உரிமை என்பதெல்லாம் சிங்களவரல்லாதோர் இரண்டாம் தரத்தினரும் உரிமையற்றவரும் என்பதே. தமிழ்த்தேசியத்தின் கருத்தியல் இதற்கு எதிராக ஏனைய மக்கள் என்போர் இரண்டாம் தரத்தினர் அல்லர் என்பதே. முதன்மையென்றும் இரண்டாம் தரமென்றும் எதுவும் இல்லை. தமிழர் தாயகம், அபிவிருத்தி, வளர்ச்சி தமிழ் மக்களிடம் இருக்கும். தமிழர் தாயகம், தமிழ் மக்களுக்கும் தமிழரல்லாத வருக்கும் வாழ்வுரிமையுடையது. அதன் நன்மைகள் அனைவருக்கும் பொது என்பதாகும். இது 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது தமிழரின் உள்ளங்களிலிருந்து அகலாது. வடக்கு கிழக்கு நாளை கூட்டாட்சியாக கொழும்பு அரசின்கீழ் இருக்குமா இன்றேல் தனிநாடாகுமா என்பது எதிர்கால அரசியல் நகர்வுகளைப் பொறுத்தது. ஆனால் வடக்கு கிழக்கு பிரதேசம் என்றும் தமிழீழம் என்றே இருப்பதுடன், அதனை ஆளும் வல்லமையும் திடமும் தமிழரிடம் எப்பொழுதும் உண்டு.

## 11. இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகத்தின் மூலம் தமிழ்த் தேசியம் வழங்கும் அமைதித் திட்டம்

இடைக்காலத் தன்னாட்சி கொண்ட நிர்வாகத்தை கோருவதன்மூலம் தமிழர்கள் யுத்தத்தினால் பாதிப்படைந்த பகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைப்புச் செய்வதென்பது புலப்பட வேண்டிய ஒன்று. எவையெல்லாம் யுத்தத்தின் மூலம் சாம்பலாகியனவோ, அவையெல்லாம் நீண்ட போரினால் கவனிப்பாரற்று அழிந்துள்ளன. இனத் துவேசம், கொடுமைகள், குற்றச் செயல்கள் என நடந்தேறியவையெல்லாம் நினைவில் நிற்பவையாக மாற்றம் பெறவேண்டும். போர்நிறுத்தம் இடம்பெற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் இடம்பெற்ற பின்னர், நடந்தேறி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பேச்சுவார்த்தை மூலம் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் இருப்பதற்குக் காரணம் உயர் பாதுகாப்பு வலயங்கள் மூலம் அவர்கள் குடியிருப்புகளில் ஆக்கிரமிப்புப் படைகள் நிலைகொண்டுள்ளதால் இதனால் இதுவரை போர்நிறுத்தத்தின்பின் இடம்பெற்ற அமைதியின் பயன் எதுவுமே கிடைக்கவில்லை. ஒரு சில பன்னாட்டு அரசுசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் கட்டுப்பாடான உதவிகளைத் தவிர, புனர்வாழ்வுக்கான திட்டங்கள், புனரமைப்பு என எதுவுமே ஏற்படவில்லை. புனரமைப்புக்களை மேற்கொள்ளுமுகமாக தமிழ் மக்கள் தலைமையில் நடைபெறவென அமைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி நிர்வாகம், தமிழர் தலைமையால் அங்கீகரிக்கப்பட்டு, யு.என்.பி. அரசு மற்றும் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டிருந்தது. தமிழரின் கட்டுமானங்களைப் புனரமைப்பது தொடர்பான திட்டங்கள் ஆராயப்பட்டு பன்னாட்டு வழிகாட்டலுடன் சமர்ப்பிக்கப்பட்டன. இவை பற்றிய விளக்கம் ஒஸ்லோ ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டு நிரந்தர அமைதித் தீர்வுக்கான வழிகாட்டலாக சுட்டப்பட்டது. ஆனால் துரதிஸ்டவசமாக சிங்கள தீவிரவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புக்களால் தனிநாட்டுக்கான முதற்படி அமைந்துவிட்டது எனவும் கூட்டாட்சி பற்றி தமிழ் மக்கள் ஆராய முற்பம் பொழுது, அது தனிநாட்டுக்குப் பதிலாக கூட்டாட்சியுடனாகிய தன்னாட்சியாக விளங்குமென்பது பற்றி, சிங்களவரிடம் வழமைபோல தமிழர்கள் கோரும் தனிநாட்டுக்கு பின்னால் பயங்கரவாதிகள் உள்ளனர் என்றும், கூறிக்கொண்டு தமிழ் பிரச்சினையை இழுத்தடித்துக்கொண்டு வெளிநாட்டு நிதியுதவிபெற்று தமிழ் மக்களை தொடர்ந்தும் அடக்கி வைத்திருக்கவே விரும்புகிறார்கள். புத்தபகவான் தமிழர்களை சிங்களவரிடம் இருந்து காப்பாற்றுவாராக!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஈழப் போராட்டத்தின் ஒப்பற்ற தலைமைத்துவம்

## 1. மாற்றுத் தலைமையைத் தேடத் தள்ளப்பட்ட தமிழர்கள்

பல தசாப்தங்களாக சிங்களப் பெரும்பான்மையின் ஜனநாயக நடைமுறையின் கீழ் வெறுப்படைந்த தமிழ் மக்கள் அதன் தமிழ் விரோத நடத்தையால் தமிழருக்கு எதிரான பல அநீதியான சட்டங்களை எதிர்நோக்க வேண்டியவர்களானார்கள். அநீதியான சட்டங்களைக் கொண்டு, ஆயுதப்படைகளை ஏவிவிட்டு, தமிழர்களின் சகல ஜனநாயக எதிர்ப்புக்களையும் அடக்கியும் ஒடுக்கியும் பயமுறுத்தியும் நடந்ததன் விளைவாக புதிய தமிழ்த் தீவிரவாத தலைமை பிறப்பெடுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நீண்டதோர் ஆயுதப் போராட்டத்தின் ஊடாக இன்று தமிழரின் ஒப்பற்ற அரசியல்–இராணுவத் தலைமையாக அமைந்துள்ளது.

சிங்கள மக்களும் அதன் தலைமைத்துவமும் ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டு உதவியுடன் தம்மேல் ஆதிக்கம் செலுத்தலாம் என்ற தேவையில்லாத பயம் சிங்கள மக்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் இருந்ததை நாம் விளங்க முடியும். ஆனால் அதையிட்டு தமிழருடன் சம உரிமையுடன் வாழ்வது தமது தேசிய நலன்களுக்குப் பாதகமாகிவிடும் என்று வியாக்கியானம் செய்தனர். தமிழர்கள் பிறப்புரிமை, தமிழ் மக்களின் பிறப்புரிமைகளாகிய மத, மொழி, பண்பாடு, பிரதேசம் பற்றிய கோரிக்கைகள் எழும்போதெல்லாம் அவை பௌத்தத்திற்கும், சிங்களத்திற்கும் அதன் தேசியத்திற்கும் எதிரானவையென அர்த்தப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, சிங்களப் பெரும்பான்மை மக்களை பௌத்த சிங்கள தேசியத்தின் சார்பாக மாற்றி தமிழ் மக்களுக்கு விரோதமாக்கும் முயற்சியாகும். இதற்கு ஆதரவாக நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி, தமிழருக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களை நிறைவேற்றி சிங்களப் படைகளின் கொடுமைகள் மூலம் சகல ஜனநாயக வழிமுறை எதிர்ப்புகளும் ஒடுக்கப்பட்டன.

தமிழ் மக்களின் அறவழிப் போராட்டங்கள் இடம்பெற்ற பொழுதெல்லாம் அநீதியாகவும், கொடுமையாகவும் தடுக்கப்பட்டது. இச் செயல்கள் தமிழ் மக்களின் பொறுமையைச் சோதித்ததுடன், அவர்களை அவமானப்படுத்திய இச்சம்பவங்கள் தமிழ் இளைஞர்களை ஆத்திரமூட்டியதுடன் பதிலுக்கு தீவிரவாதத்திற்கும் இழுத்தது. இது அரச பயங்கரவாதம், தானே வருவித்துக் கொண்டதாகும். மேலும் வேலைவாய்ப்பு, கல்வி என்பனவற்றில் இடம்பெற்ற அரசின் நடத்தை தமிழ் இளைஞர்களை தமது மிதவாதத் தந்தையர்கள் ஆகிய தலைவர்களை விட்டு விலகுமாறு செய்து, அரசியல் – இராணுவ தீவிரவாதத் தலைமையை நோக்கிச் செல்ல வைத்தது, தமிழ் மக்களுக்கு ஓர் சுயாட்சி காணத் தூண்டியது.

## 2. புதிய தலைமை பற்றிய புரியாமை

சிங்கள மக்களும், அவர்களின் தலைமைகளும் தாமே உருவாக்கிவிட்ட புதிய தலைமை பற்றி சந்தேகங்களும் கேள்விகளும் எழுப்பினர். இந்த புதிய தமிழ்த் தலைமை பற்றிய அறியாமையா அல்லது வேடமா இத்தலைமை தோன்றுவதற்கான காரணிகளை புரிந்து கொள்ளாமை என பல கேள்விகளை எழுப்பி விட்டது. அது பெரும்பான்மைச் சிங்களவர்களையும் அவர்தம் தலைமைகளையும் புதிய தலைமையுடன் பேசவும் கையாளவும் முடியாது கடினமாக்கியுள்ளது.

சிங்களவரில் பலரும், சில தமிழர்கள் உட்பட இந்தத் தலைமையை இராணுவ வழியாக வெற்றி கொள்ளப்பட வேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் மக்கள் தீவிரவாதத் தலைமையிலிருந்து விடுதலை செய்யப்படல் வேண்டும் என நினைக்கிறார்கள். சிங்கள அரசு இரகசிய வழியிலும் இந்தத் தமிழ் தலைமைக்கு பதிலாக இன்னொன்றை உருவாக்க கடின முயற்சி செய்தது. இத் தலைமையை ஓரங்கட்டவும், வெகுமதி வழங்கி சில நாடாளுமன்ற உறுப்பினர்களை கைக்குள் இட்டு தமக்கு ஆதரவு தந்தவர்களுக்கு மிதவாத முத்திரை இட்டு வியாபாரம் செய்ய முடியும் என கடந்த காலங்கள் போல் எண்ணினார்கள். மேலும் அத்தகையவர்களுக்கு ஜனநாயகவாதிகள் அல்லது நடுநிலையாளர் முகவரி குத்தி அவர்களுக்கு வசதிகள், பெரும்தொகைப் பணம், மந்திரிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகள் என வழங்கி "இராணுவக் குண்டர்களின் காட்சி பீடங்கள்" ஆகப் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் தமிழ் மக்களில் மிதவாதிகள் என வருணிக்கப்பட்டனர். இவர்களில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உதாரணமாக தமிழ்ப் பெயரைத் தாங்கிய ஒருவர் ஆனால் தமிழ் பேசாதவர், நாடாளுமன்றுக்குத் தெரிவாகாதவர் ஆனால் வெளிநாட்டமைச்சராக வாடகைக்குப் பெறப்பட்டவர். பொய்ப் பிரசாரங்கள் மூலம் உலகெங்கும் தமிழ் மக்களுக்கும் தீவிரவாதத் தலைமைக்கும் அவப்பெயர் ஏற்படுத்தியவர். ஆனால் பெரும்பான்மை தமிழ் மக்கள் இவர்களைத் துரோகிகளாகவே கருதி நிராகரித்தனர். இத்தகைய வர்களுக்கு வரலாறு வருங்காலத்தில் தீர்ப்பு வழங்கும்.

எனவே பெரும்பான்மைச் சிங்களவர்களும் அவர்களின் அரசும் உண்மையாக பிச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காண விரும்பின் நிட்சயமாக தமிழ் மக்களிடமிருந்து வெளிக்கிளம்பிய புதிய தலைமையை நன்கு புரிந்து கொண்டு, அதனை தமிழ் மக்களின் மாற்றுத் தலைமையாக ஏற்றாக வேண்டும். அதனை ஒழிக்க எத்தனிப்பது, தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நீதியாகவும் ஜனநாயக வழியிலான தீர்வுகாண முயல்வது முடியாது போகும். ஜனநாயகமும் மனித உரிமையும் கொண்ட தீர்வு காண இப்புதிய தலைமைத்துவம் தயாராகவே உள்ளது. அதே நேரத்தில், அதே வழியில் சிங்களத் தலைமை நம்பிக்கையுடன் தனது இலஞ்ச வழி ஜனநாயக முறையிலிருந்தும் மக்களுக்கெதிராகப் புரியும் நீதிக்குப் புறம்பான காடைத்தனங்களிலிருந்தும் நாடாளுமன்றுக்குள்ளும் வெளியும் தன்னை விடுவிக்க வேண்டும்.

## 3. ஊழல் ஜனநாயகம் மாற்றுத் தலைமையைக் கோருகின்றது

ஜனநாயகவாதிகள் என அழைக்கப்படும் சிலர், புதிய தமிழ் தலைமைபற்றி புரிந்துகொள்ளாதுள்ளனர். அவர்களின் குறுகிய ஜனநாயகம் பற்றிய விளக்கம் உள்ளூர் தலைமைபற்றிய விளக்கமே ஆகும். கல்வி முறையாலும், வளர்ப்பாலும், மேற்புல நாடுகள் சார்ந்தும், காலனித்துவ வழி சிந்தனைகளுடன் தங்கள் நாடாளுமன்ற ஜனநாயகமே ஒரே ஒரு ஜனநாயக வழி என்று எண்ணுகின்றனர். ஜனநாயகத்தினுள் இடம்பெறும் ஊழல் பற்றி, அநீதி பற்றி நினைப்பதேயில்லை. இன்று இருப்பது சிறந்த ஜனநாயக நடைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை பலரும் ஏற்றுக்கொள்வர். ஆனாலும் இந்த ஜனநாயகம் வெவ்வேறு பாதைகளில் இட்டுச் செல்லப்படுகின்றது. அதில் ஜனநாயகப் பிரயோகம் சர்வாதிகாரத்துள் கொண்டு செல்லப்படுவதும் உண்டு. மேற்புல நாடுகளின் சிந்தனை கொண்டவர்கள் உலகில் காலனித்துவத்தின்பின் தோற்றம்பெற்ற வளர்ச்சி, புதிய பிரச்சினைகள் எனப் பார்க்காது விடுகின்றனர். அவர்கள் அனைத்தையும் தாம் அறிந்த பாரம்பரிய முறைகள் பற்றிய சிந்தனைகளைக் கொண்டே பெருமிதங்கொண்டு தீர்ப்புக் கூறுகின்றார்கள். இடைவெளிக்கப்பால் உள்ள உண்மைகளைக் காணாது தாம் அறிந்த வழியிலேயே செல்கின்றார்கள். எனவேதான் உண்மையான, நீதியான அணுகுமுறையுடன் விளக்கம் பெறவும், பிற்போக்கு, ஊழல், அநீதி என்பவற்றை எதிர்த்து கிளர்ந்த ஜனநாயக நாடுகளில் நடந்ததுபோன்று, தோன்றிய புதிய தலைமையை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் பேச்சை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

சிங்கள பெரும்பான்மை ஆளும் ஜனநாயகத்தில் பிரிட்டிஷ் விட்டுச் சென்ற ஜனநாயக அரசியல் அமைப்பை தமக்கு ஏற்றவாறு பெரும்பான்மை வாக்குகள் மூலம் மாற்றிக் கொண்டனர். இது சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதித்துள்ளன. இவ்வாறு மாற்றியதால் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் நாடாளுமன்றின் மூலமாக கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் தீர்க்கப்படவில்லை. அரச பயங்கரவாதத்தைத் தூண்டியும் போரை நடத்தியும் எதுவுமே தீரவில்லை. இந்தச் சூழலில் இதற்கு மூலகாரணம் ஜனநாயகம் உண்மையாகவும் தலைமைகள் விசுவாசமற்றதாகவும் இருந்தமையாகும். இதற்கு மாற்றாக தமிழ்த் தலைமை எழுந்துள்ளது.

## 4. இழிவுற்றும் நிராகரிக்கப்பட்டும் நின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

அரசு இயற்றும் கலை என்பது, உயர் மட்டத்தினரும் கல்லூரிப் படிப்புடையவருக்கும் மட்டும் உரியது அல்ல. உண்மையில் அவ்வாறானவர்களால்தான் மிகவும் மோசமான விடயங்கள் வரலாற்றில் நடந்தேறின. எமது வரலாற்றிலும், எங்கள் நீண்ட அரசியல் போராட்ட அனுபவத்திலும் எமது படித்த உயர்தரத்தினர் சிலர், தமிழ் மக்களுக்கு துரோகம் புரிந்து தனிப்பட்ட முறையில் சுயலாபம் அடைந்தார்கள் என்பதை வேதனையுடன் கற்றுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமன்றி நல்லவர்களாக இருந்த தமிழ்த் தலைவர்கள் சிலர் சிங்கள ஜனநாயகத்தால் இழிவுக்கும் எரிச்சலுக்கும் உட்படுத்தப் பட்டார்கள். காலனித்துவத்தின் பிற்பட்ட தமிழ்த் தலைமைகள் ஆங்கிலேயர் காலத்தில் கல்விகற்று உயர்பட்டம் பெற்று நாடாளுமன்ற அரசியலுக்குள் நுழைந்து உலகப் புகழ் அடைந்துள்ளார்கள். இப்படி இருந்தவர்கள் பலரும் கொழும்பில் வாழ்ந்து வந்த தமிழர்கள். வடக்கு கிழக்கு மக்கள் சார்பில் அரசியல் நடத்தினார்கள். ஆகக் குறைந்தது இவர்களின் பதவி, வழக்கறிஞர்களாகவாவது இருந்தது. அவ்வாறானவர்கள் தமிழரின் உரிமைகள் பற்றி உரையாடவும், பேச்சுவன்மையால் வாதிடவும், மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும் முடிந்தது. அவர்களும் நாடாளுமன்றில் சிங்கள தீவிரவாதிகளால் கேலிக்கும் வெறுப்புக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். இவ்வாறான நிலையில் பழைய முறையிலான படித்த தமிழ்ப் பிரதிநிதிகளை கொழும்பு நாடாளுமன்றுக்கு அனுப்புவதில் அர்த்தமில்லை. அத்துடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சிங்கள உறுப்பினர்கள் நாடாளுமன்றிற்குள் நடாத்தும் கெட்ட நடத்தைகள் யாவரும் அறிந்ததே.

இன்றைய தலைமுறை தமிழ் இளைஞர்கள் எடுத்துக்கொண்ட தலைமை நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது ஏனென்றால் அவர்கள் முன்னைய தலைமைகள் கண்டறிந்த கசப்பான அனுபவங்களுக்குச் சாட்சியாக உள்ளனர். அதனால் அவர்கள் மேற்கொள்ளும் வழிமுறைகள் பற்றி அவசரப்பட்டு நாம் எந்த முடிவுக்கும் வராது இருப்பது நன்று. தெற்கில் சார்மனைக் கதிரையில் அமர்ந்திருந்து பத்திரிகை படித்து விமர்சிக்கும், பிரசாரம் செய்யும் கல்விமான்களின் கருத்தை நாம் வரவேற்கும் அதேவேளை, அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்னியில் ஒரு நிழல் அரசை மிகத் திறமையான முறையில் நடத்தி வருவதைக் கண் திறந்து பார்க்க வேண்டும்.

## 5. அரச நிராகரிப்புகளுக்கு எதிராக தேவைக்கிணங்க வெளிக்கிளம்பிய தலைமைத்துவம்

தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவர்கள் வடக்கு கிழக்கில் தோன்றிய தீவிரவாதிகள் எனக்கூறிய தெற்கு வாசிகள் இப்படியான தலைமையைத் தோற்றுவிக்க தாமே ஆழ்ந்த பங்களிப்பு வழங்கியுள்ளனர் என்பதை மறந்துவிட்டனர். இவ்வாறானதோர் தலைமை தோன்றக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் யாது? தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி அல்லது ஒன்றிணைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய அரசியலிலும் பார்க்க இனப்பிரச்சினைக்கு வழிகாணாது தட்டிக் கழித்து துன்புறுத்திய சிங்கள அரசுகளின் பிடிவாதமான போக்கும், தமிழ் மக்கள் மீது கொடுமைகளையும் அவலங்களையும் ஆயுதப் படைகள் மூலம் கட்டவிழ்த்து விட்டதன் விளைவே தமிழ் மக்களிடம் வேகத்தையும் வேட்கைகளையும் ஏற்படுத்தி புதிய தலைமையின் தேவையை வலிமைப்படுத்தி சிங்கள இராணுவத்தை எதிர்கொண்டு அதன் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவர அடித்தளம் அமைத்தது.

தமிழ் மக்கள் கடின உழைப்பு, புத்திக் கூர்மை, கீழ்ப்படிவு, சாத்வீகம் ஆகியவற்றிற்கு நன்கு பெயர் பெற்றவர்கள். சிங்களக் காடையர்களாலும் படையினராலும் தொடர் தாக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்ட வேளையிலும் சாத்வீக வழியில் இருந்து தவறாது, காந்தி காட்டிய பாதையில் சத்தியாக்கிரகத்தை முன்னெடுத்தார்கள். அவ்வாறான அமைதிவழிப் போராட்டத்தையும், நாடாளுமன்றினூடாக நடாத்திய எதிர்ப்புக்களையும் சிங்களவர்கள் தமிழரின் பலவீனமாக தப்புக் கணக்குப் போட்டனர். இதன் விளைவாக தமிழ் மக்கள் மீது வன்முறைகள் பலமாக கட்டவிழ்த்து விடப்பட்டன. இதுவே நீண்ட காலமாக நடந்து வந்தது. சிங்களவர்களால் இனவிரோதச் செயல்கள் வன்செயலாகவும், கொலைகள் அழிவுகள் என வளர்ந்து தமிழ் இளையோரின் பல்கலைக்கழக அனுமதிக்கு தரப்படுத்தல் பின்பு யாழ்ப்பாண நூல் நிலைய எரிப்பு என்ற தொடராகிய சம்பவங்கள் மூலம் இளைஞர்கள் சினம் கொண்டு சீற்றமடைந்து சிங்களத்தை எதிர்க்கவெனத் திரண்டெழுந்தனர். எதிர்காலத்தில் சிறந்த கல்வி, வேலைவாய்ப்பு, பண்பாடு, இருப்பிடம் என யாவும் அரச பங்கரவாதத்தினால் அழிவுறாமல் பாதுகாப்பது தமது தலையாய கடமையும் உரிமையும் எனக் கண்டார்கள். அடிமைப்பட்ட மக்களாயினும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் சுய பாதுகாப்புக்கு உரிமையுடையவர்கள் என்பதால் அடக்குமுறைகளுக்கு எதிராக தமது வலிமைகளை ஒன்றாக்கி எதிரிக்கு பலத்த அடி கொடுப்பது என்று தீர்மானித்தார்கள். ஏறி மிதிக்கப்பட்டவனுக்கு, ஏறி மிதிக்கின்றவனோ அல்லது பார்வையாளனாக நிற்பவனோ எப்படி கீழே கிடப்பவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கூறும் உரிமை கிடையாது. அதாவது தமிழர்கள் தற்பாதுகாப்புக்காக என்னென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம், செய்ய முடியாதென்று இலங்கை அரசோ அல்லது சர்வதேசமோ போதிக்க உரிமையில்லை. வடக்கு கிழக்கு வாழ் மக்கள் குழப்பமடைந்து தூரநோக்கு இன்றி திடம், பயன் என்பன இல்லாது வாழ்ந்த மக்கள் அல்லர். செயல்திறன், இலட்சியம் மறந்து துன்பத்துள் மாள்பவர்களும் அல்லர். ஆனாலும் அவர்களின் நீண்டகால அநீதிகளுக்கு முகம் கொடுத்ததனால் அனைவரும் ஒன்றாக்கிப் பிணைத்துவிட்ட உறுதி கொண்டவர் களாகத் தலை நிமிர்ந்தார்கள். வரும் எத்தகைய அடக்குமுறைகளையும் எதிர் கொள்ளத் துணிந்தார்கள். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களின் இந்த தளராத உறுதியின் உருவகம், எதிரியின் நீண்டகாலக் கொடுமைகளை நீறாக்கவென எதிரொலித்துக் கிளம்பியது புதிய தமிழ்த் தலைமை.

## 6. தமது இலட்சியத்தில் தெளிவு கொண்ட தலைமைத்துவம்

எவர் ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மை யாதெனில், தமிழீழ விடுதலைப் புலிகள் "தலைமைத்துவம்" கொண்டதாக வெளிப்பட்டிருப்பினும், தெற்கைப் போன்று நாடாளுமன்றத் தேர்தலின் ஊடாக அல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கி தன்னினத் துரோகிகளுக்கும், கொடுமைகளும் அடக்குமுறைகளும் புரிந்த அரசபடைகளுக்கும் எதிராக போராடியே தம்மை நிலைநாட்டிக் கொண்டனர். அவர்கள் தம்மை இவ்வாறு நிலைநிறுத்தினர்:

1) ஒரேயொரு அமைப்பாக தொடர்ந்து இன்றுவரையும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் உண்மையான வேட்கைகளை முன்னெடுத்து வருவது.

2) ஒரேயொரு அமைப்பாக அரசின் செல்லடித் தாக்குதல்கள் மற்றும் குண்டுத்தாக்குதல்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து வருவது.

3) ஒரேயொரு அமைப்பாக தமிழர் விடுதலைக்காக பல்லாயிரக்கணக்கான போராளிகளை அர்ப்பணிப்புச் செய்தது

4) ஒரேயொரு அமைப்பாக ஆட்சிக்குரிய கட்டுமானங்களாக (காவல்துறை, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும், நீதிமன்றம், கல்வி, போக்குவரத்து போன்றவை) மக்கள் வாழ்வை நெறிப்படுத்தி எந்தச் சூழலிலும் பாதுகாத்துவருவது.

5) ஒரேயொரு அமைப்பாக நாடாளுமன்றுக்குத் தெரிவான தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என சுட்டிக்காட்டியது

தமிழ் மக்களின் நீண்ட துயர வரலாற்றில் அரசபடைகளாலம் சிங்களக் காடையர்களாலும் தொடர்ந்த மரணங்கள் அழிவுகள் ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்து பல்வேறு ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றும் கடைசியில் சிங்களம் அவற்றை நிறைவேற்ற மறுத்து தன்னிச்சையாக விலகிக்கொண்டதேயன்றி அளித்த வாக்கையும் கைவிட்டதாகும். இதன் விளைவாக தோன்றிய புதிய தலைமையுடன் பேரம் பேசவோ இணக்கத்தைக் காண்பதோ பெரும்பான்மையினரின் அரசுகளுக்கு சுலபமானதல்ல. அதுமட்டுமன்றி விலைபோன முன்னைய தமிழ் தலைமைகளுக்கு அமைச்சர் பதவிகள், மற்றும் வசதிகள் கொடுத்து ஏமாற்றியது போல, ஒப்பந்தங்களை ஏற்படுத்தி கையெழுத்திட்டு பின்னர் நிறைவேற்றாது வாயால் உறுதி வழங்கியபின் செயற்படாது இருந்து கொள்ள முனைதால், பாரதூர விளைவு களைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஏனெனில் இந்த புதிய தலைமையிடம் உறுதியான செயற்பாடும் தமிழ் மக்களின் வேட்கைகளை நிறைவேற்றக்கூடிய திடமும் இருப்பதேயாகும்.

மேற்கூறியவாறு கொள்கைப் பிடிப்பு, திடம், உறுதியான நிலை எனக் கொண்டிருப் பதால் பேச்சுவார்த்தை, நியாயமான தீர்வு என்பவற்றையடைய தயாராகவில்லை என்று கருத முடியாது. உண்மையில் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியவற்றை அக்கறையுடன் நடாத்த இப் புதிய தலைமை எப்பொழுதும் ஆயத்தமாக இருந்துள்ளது.

## 7. இலட்சியத்தில் ஆழமான உறுதியுடைய தலைமைத்துவம்

தமிழர்கள் நீண்ட காலமாகப் பெற்றுக்கொண்ட அனுபவம் யாதெனில், உறுதியளிக்கப்பட்டவை ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உரிமைகள் தானும், அரசபடைகளின் கொழும்புச் செயலகத் தலையீடுகளால் நிறைவேறாது போயின. சிங்கள அரசுக்கு எப்பொழுதெல்லாம் தீவிரவாதத் தன்மையுடைய சிங்களவரிடம் சிறிது எதிர்ப்பு தோன்றுகின்றதோ, அவ் வேளைகளில் ஒப்பந்தங்கள், உறுதிமொழிகள் என்பன காற்றில் பறந்து விடும். சிங்களத் தலைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு விடயத்தில் வாக்குறுதி அல்லது இணக்கம் கண்டாலும் அதற்கு எதிராகக் கொடிதூக்கி– ஊர்வலம், எதிர்ப்பு நடவடிக்கை என்பன சிறுதொகை தீவிரவாதிகளால் நடாத்தப்பட்டதும் சிங்களத் தலைமை அவ் ஒப்பந்தங்களை திடமாக செயற்படுத்தாது விடுவதுபோல முன்னைய தமிழ் தலைமைகளும் பேசாமடந்தைகளாக அடங்கிவிடுவார்கள். இதுவே கடந்த கால வரலாறு காட்டும் உண்மை. ஆனால் இன்றைய புதிய தலைமையானது, இலட்சியப் பாதையில் உறுதியாக செயலில் இறங்கி, சிங்கள அரசுடன் தமிழ் மக்களுக்காக மட்டுமன்றி முழுநாட்டின் நலன்களையும் கருதி, ஏற்றதொரு வழிகாண திடங்கொண்டுள்ளது.

## 8. நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பக்கூடிய அரசியல்– இராணுவத் தலைமைத்துவம்

கடந்த மூன்று தசாப்தங்களிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு இடம்பெற்ற வடக்கு கிழக்குத் தமிழர்களின் எதிர்ப்புகளின்போது சிங்கள அரசுகள் அரசபடைகளைக்கொண்டு அவற்றை அடக்கியிருந்தது. பின்பு அதே படைகளுக்கு பயங்கரவாத தடைச் சட்டங்களால் வழங்கப்பட்ட மேலதிக அதிகாரங்கள், தமிழ் தீவிரவாதத்தை நசுக்கப் பாவித்து, இதன்வழியாக பலம்பெற்று இனப்பிரச்சினையில் ஈடுபட்டு ஓர் அதிகாரம் படைத்தவர்களாகவும் அரசின் எத்தகைய திட்டத்தையும், வழிநடத்தலையும் தாமும் கொண்டு பாதைகாட்ட முடிந்தவர்களாக உள்ளனர். உண்மையில் இதைத்தான் இன்று அரச இராணுவமும் கொள்கை, வழிநடத்தல் என்பவற்றைக்கூறி அரசுக்குள் ஓர் அரசைப்போல நடந்துகொண்டிருக்கின்றது. அரச படைகள் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டிருக்காது ஓர் தீர்வை அரசினால் எட்டமுடியும். தமிழர்கள் மிகவும் நன்றாக அறிந்துள்ள விடயம் யாதெனில், இராணுவ அதிகாரிகள் தங்கள் தங்கள் வேலைத்திட்டத்தின்படி நடந்துகொண்டு தங்கள் அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பதாகும். அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்து சட்டமாக வெளியிட்டவற்றையும் உதாரணமாக: பொருளாதாரத் தடை நீக்கத்தை 1995ல் அறிவித்தபோது அதற்கு எதிராகவே இராணுவம் செயற்பட்டிருந்தது. தமிழர் விடயங்களில் தீர்வு காண்பதில் அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்குமிடையில் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார இழுபறி தொடர்வதென்பது தீர்வுகாண்பதில் ஓர் மறைமுகத் தடையாக இருக்கும்.

மறுபக்கத்தில் அரசியல் இராணுவ சக்தியாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களின் உறுதிகொண்ட இணைந்த சக்தியாகவும் நாடாளுமன்ற அங்கமாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 23 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 22 ஐக் கொண்டிப்பதும், நாடாளுமன்றுக்குத் தெரிவாகிய இவர்கள் விடுதலைப் புலிகளின் முழு ஆதரவுடனேயே தெரிவானார்கள். எம் விடுதலை வரலாற்றில் மக்கள் மயப்படுத்தியும், அரசியல் மயப்படுத்தியும் ஒரு தலைமையின்கீழ் நாம் கண்ட உச்சமாகும்.

## 9. அரசின் பொய்ப் பிரசாரங்களுக்கு அசையாத தலைமைத்துவம்

சந்திரிகா அரசு பின்புறமாக வளைந்து அமைதிக்கான போரை தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தி நியாயப்படுத்தியது. பன்னாட்டு பிரசார நடவடிக்கைகளை தீவிரப் படுத்தி, தனது வெளிநாட்டமைச்சர் மூலமாக புகலிடத் தமிழ் அமைப்புகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளைத் தடை செய்யவும், அமைதிக்கு வழிகாட்ட யுத்தம் ஒன்றை நடத்துவோம், எமக்கு வேண்டியது அமைதி ஆனால் புலிகள் கேட்பது யுத்தம், எங்கள் போர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்ற பொய்யான அறிக்கைகள், சிங்களவர்களை மட்டுமன்றி பன்னாட்டுச் சமூகத்தையும் ஏமாற்றும் நோக்கம் கொண்டது. இவ்வாறு பிரசாரங்கள் வெளிநாடுகளில் உள்ள சிறிலங்கா தூதுவராலயங்கள் மூலம் தமிழர்களை அவமதிக்கும் வகையிலும் தமிழர்களின் நற்பெயருக்கு கரிபூசியும் விடுதலைப் போராட்டத்தின் மீது பொய்ப்பிரசாரங்கள் நடந்தேறின. ஆயினும், இத்தகைய பொய்ப்பிரசாரங்களால் தடுமாறாது தமிழர் தலைமை தலைநிமிர்த்தி மக்களின் அனுதாபத்தையும் ஒருமைப்பாட்டையும், மக்களின் தெரிவான பிரதிநிதிகள் உட்பட அனைவரையும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளென ஏற்று ஆதரவு தர வைத்தனர். இதனால் அரசும் அதை ஏற்றுக்கொண்டதுடன் புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வழிகாட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. இராணுவ வெற்றியில் பெருமிதம் கொள்ளா தலைமைத்துவம்

நீண்ட காலமாக சிங்களப் பெரும்பான்மை மக்களும் அரசும், வடகிழக்கில் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உண்மை நிலையை ஏற்க விடாப்பிடியாக மறுத்து வந்துள்ளனர். அத்துடன் விடுதலைப் புலிகள் தலைமை மீது அவதூறுகள் கூறி அவர்கள் கருத்துக்கு மதிப்பளிக்காது வந்தது, யுத்தம் விரிவடைய வழிவகுத்தது. ஜனாதிபதி பிரேமதாச போன்ற தலைவர்கள் சிங்கள மக்களிடம் நடைபெறும் யுத்தத்தில் யாருமே வெற்றியடைய முடியாது என்று கூறியிருந்தும் மக்கள் போரினால் அழியும் உயிர்கள் சொத்து சேதங்களைக் கணிக்காது போர் வெற்றியும் அதிகாரத் தாகமுமமே தங்களுடைய இனத்துவேசத்தின் தாகத்தைத் தீர்க்குமென்று நினைத்தனர். பெரும்பான்மையினர் யுத்தத்திலே நடந்த பின்னடைவுகளைப்பற்றி கோபத்துடனும் அதிர்ச்சியுடனும் இருந்து தங்களுடைய ஆங்காரத்திற்கு ஏற்ற வெற்றியை புலிகளை அழிப்பதன் ஊடாகவே அடைய முடியுமென்று நம்பினர்.

உண்மையில் புலிப்பாச்சல் நடவடிக்கையில் அரச படைகளின் தோல்வி வெட்கித் தலைகுனிய வைத்தது. இதனால் தற்காலிகமாகவேனும் நிலைமைபற்றித் தெளிவு பெறுமாறு பலரும் வற்புறுத்தினர். சிங்கள இராணுவத்தினரின் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் உடலங்கள் பிளாஸ்டிக் உறைகளில் கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும் கொழும்பில் இருந்த அதிகார வெறிகொண்டதலைவர்கள் பாதிக்கப்பட்டதாக வெளிக்காட்டவில்லை. மிகப்பெரிய வெற்றியை பெற்றும் விடுதலைப் புலிகள் தாமாகவே போர்நிறுத்தம் செய்வதாக அறிவித்தும் அதனை ஏற்க சிறிலங்கா அரசு மறுத்தது. சிங்கள இராணுவத்தினரின் உடலங்களை அரசு பொய்யான காரணங்களைக்கூறி ஏற்றுக்கொள்ளாது தட்டிக்கழித்ததால் அவர்கள் உடல்களை இராணுவ மரியாதையுடன் விடுதலைப் புலிகள் எரித்தனர். இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் நிலைப்பாடை விளங்கிக்கொள்ளலாம். சிங்கள இராணுவத்தினரின் உடல்கள் புலிகளால் மதிக்கப்பட்டிருந்த வேளையில் கோப்பாயில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்த நினைவுச்சின்னங்களை சிங்களப்படை புல்டோசர்களால் இடித்துத் தள்ளியது. இறந்தவர்களைக் கூட அவமானப்படுத்தினார்கள். இது எத்துணை வெட்கம் நிறைந்தது.

## 11. தமிழர்களின் இறுதி நோக்கம் தூய்மையான நாடாளுமன்ற ஜனநாயகமே

அண்மைக்காலமாக ஓர் புதிய முறை ஜனநாயகம் மற்றும் ஜனநாயகத் தேர்தல்கள் ஜனநாயகத் தெற்குப் பகுதியிலும், இராணுவக் கட்டுப்பாட்டு வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் இடம்பெறுகின்றன. சிங்கள அரசியல் கட்சிகள் அண்மைக் காலத்தில் வையம்பா றயலயஅடிய வில் நடந்தது போன்று தேர்தல்களை கேலிக்கூத் தாக்குகின்றனர். இம்முறையை ஒழிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் ஜனநாயகத்தை மதித்தும் அதன்மேல் நம்பிக்கை கொண்டும் சில மேற்குலக நாடுகளில் உள்ள வழமைபோல் செயற்படுகின்றார்கள். ஆயினும் சிறிலங்காவில் நடைமுறையில் உள்ள ஜனநாயகத்தால் பெற்ற அனுபவங்கள் அவர்களை இதுபற்றிக் கருத்துக்கூற அனுமதிக்கவில்லை. இன்றைய தமிழ் தலைமைத்துவம் ஒரு போராட்டத்துக்கான ஒரு தலைமைத்துவம். அது பொய்யான ஜனநாயகத்தை அதாவது தென் சிங்களத்தினால் கடைப்பிடிக்கப்படும் பொய்யான ஜனநாயகத்தை அரவணைக்கத் தயாரில்லை. தென் ஜனநாயகம் தென் பகுதியில் தேர்தல்களை நடத்தினால் மாத்திரம் ஜனநாயகம் முடிந்துவிடும் என்றும் மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கும் ஜனநாயகம் அல்ல வென்றும் நம்புகின்றது. தென்பகுதியில் நடாத்தப்படும் பெரும்பான்மை ஜனநாயகத்தில் அதன் நடைமுறையில் இருக்கும் ஊழல்கள் ஆயுதப் படைகள், காவல்துறை, நீதிமன்றங்களில் கூட தமிழ் பல தசாப்தங்களாக அனுபவித்து வந்தனர். ஆகையினால் திரும்பவும் இவைகளை அரவணைக்க தமிழர் அவசரப்படுவதில்லை. சிறிலங்கா அரசாங்கமும் இதுவே சிறந்ததென்று தமிழ் மக்கள் மேல் திணிக்கக்கூடாது. தென் இலங்கை தாம் வீழ்ந்து கிடக்கும் அந்த பலவீனத்திலிருந்து தம்மை மீட்க வேண்டும். அத்தோடு தமிழர்களாகிய நாங்கள் தற்காலிகமாக எங்கள் விடுதலைக்காகத் தேர்ந்தெடுத்தி ருக்கும் தலைமைத்துவத்தின் ஊடாக ஒரு தூய சிறந்த மக்களுக்குப் பணிபுரியும் ஜனநாயக அரசாங்கத்தைக் கண்டடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. ஜனநாயகம்—மனித உரிமைக்கான சரியான சூழலை உருவாக்கல்

தமிழர்கள் தமது சொந்த மண்ணில் தன்மானம், பாதுகாப்பு, பெறுமானம் கொண்ட ஜனநாயகத்தின் கீழ் வாழமுடியும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. அடிப்படை மனிதவுரிமைகளை மறுக்கும் அத்துமீறல்களைத் திருத்தாது, மக்களின் வாழ்வுக்குரிய பாதுகாப்பு, உணவு, உடை, குடியிருப்பு என்பவற்றை மறுத்து அரசு கவனத்தை வேறுபக்கம் திருப்பி நிரந்தரத் தீர்விற்கான பேச்சுவார்த்தை என்று கூறுவது வெறும் பகல் கனவாகவே முடியும். முடிவில்லாத அரசியல் பேச்சுக்குள் முடக்கப்பட்டு, யுத்த அச்சுறுத்தல்களுக்குள் அகப்படத் தமிழர்கள் தயாராக இல்லை. எனவே, மக்கள் வாழ்வு சாதாரண வழமை நிலைக்குத் திரும்புதலே முதலாவது தேவையாகும்.

அதுவரை தமிழரின் உண்மைத் தலைமைத்துவம் உண்மையான நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் மனித உரிமை, நீதி, சுதந்திரம் ஆகியவற்றை ஏற்று, அதனை விலியுறுத்தி இணைத்து படிப்படியாக உள்ளடக்கம் பெறச் செய்தல் வேண்டும். மக்கள் வாழ்வு வழமைக்குத் திரும்பும் வரை, அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொய்யான மன்னிப்புக்கள் பின்னால் நிற்காது, விடயங்களைக் கையாள வேண்டும். தான் மேலாண்மை கொண்டதாக எண்ணி புலிகளைக் குறைத்துப் பேசுவதோ, ஜனநாயகம், மனிதவுரிமைகள் பற்றிப் போதிப்பதோ அல்ல, அதற்குமுன்னர் அரசு அவற்றைச் செயற்படுத்த வேண்டும்.

## 13. தமிழர்கள் போலித் தலைமைத்துவத்துவங்களை நிராகரிப்பர்

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் தலைமையோடு செயற்பட முடியாத பல சிங்களவர்கள் இப்பொழுதும் போலித் தலைமைகளுடன் பேசி முடிவு காணலாம் என்றும், அதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விடலாம் என்று எண்ணுகின்றார்கள். தேடிப்பொறுக்கிய சிலரின் போலித்தனத்தின் மூலம் அவர்களுடன் வழக்கம்போல தொழில் செய்யலாம் என்றும் நினைக்கிறார்கள். சில சிங்களவர்கள் தங்களுடைய இயலாத்தன்மையில் விடுதலைப் புலிகளை முழுக்க அழிக்க முடியாவிட்டாலும், சில பொய் தமிழ் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் செயற்பட்டு விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தலாம் என்று எண்ணினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான போலிகள் ஆரம்பகால தீவிரவாதிகளாக இருந்து அண்மைக் காலங்களில் ஆயுதம் தாித்த தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்கள். அரசியல்வாதிகளாகி அரசின் ஆதரவாளர்களாகச் செயற்படும் இவர்கள் விடுதலைக்குத் துரோகம் இழைப்பவர்களாவர். இவர்கள் நாடாளுமன்றம் சென்று அதுவும் பின்கதவால் அரச படைகளின் உதவியால் வெற்றி பெற்று சென்றாலும் தமிழ் மக்கள் சார்பில் பேச முடியாதவர்கள். ஆனால் அரச எஜமானர்கள் அவர்களை தமிழ் ஜனநாயகவாதிகள் என கூற முந்திக்கொள்வர்.

சிங்கள பெரும்பான்மையினரும் அவர்களின் அரசியல் கட்சிகளும் தமிழர் விடுதலைப் போராட்டத்தை வெறும் பயங்கரவாதம் என்று குறைத்து மதிப்பிடுவதும், தீவிரவாத எதிர்ப்பினை வெளிநாட்டு உதவிபெற்று தோற்கடிக்கவுமே முயன்று வந்தனர். புதிய தமிழ் தலைமையின் இராணுவ பெறுமானத்தையும் அவர்களின் அரசியல் தீர்வுக்கான வேட்கையையும் வெளிக்காட்டுவதற்கான நேரம் வந்துவிட்டது. இதன்மூலம் பிரபுத்துவத்தையும் இனவாதங்களையும் தத்தெடுத்துக்கொண்ட சிங்கள கட்சித் தலைமைகள் உலகின் முன்பாக பாிசீலனைக்கு வைக்கப்படும். நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக வழியில் இவர்களால் தீர்வு காணமுடியுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## 14. மக்கள் நம்பிக்கையின் மீது எழுப்பப்பட்ட தமிழ்த் தலைமை

அரச பயங்கரவாதத்துக்கு எதிராக துப்பாக்கி தூக்கி போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பலப்படுத்தும் முறையில் மக்களிடம் விடுதலைவேட்கை ஏற்படச் செய்தனர். புலிகள் இராணுவ வெற்றிகளைப் பெற்று உச்சத்தில் இருந்தபோதும் ஊதியத்தை குறியாக வைத்து இயங்கும் அரச படைகளுக்கும், இலட்சியத்திற்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளவாறு, ஆயுதங்களில் மட்டும் பலம் தங்கியிருக்கவில்லையென்றும் அது இலட்சியத்தின் மீது கொண்ட பிடிப்பில் மட்டுமே தங்கியுள்ளதென்பதும், நீதியும், நியாயமும் கொண்ட தமது இலட்சியங்கள் மூலம் தமிழ் மக்களின் நீண்ட கால துயரங்கள் தீரும் என்றும் முழுமையாக நம்பினார்கள்.

நீண்ட காலத்திற்குப் பின்னரே சிறிலங்கா வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையாலோ, பெரும்பான்மையாலோ, இராணுவ பலத்தாலோ தமிழ் மக்களை அடக்கியாள முடியாதென்பதைப் புரிந்து கொண்டது. இவ்வாறு புரிந்து கொண்ட பின்னரும் பெரும்பான்மைச் சிங்களவர்கள் இன்றும் நாசகாரத்தனமான அழிவு யுத்தத்தை ஏற்பட வைக்கும் தீயவழியில் செல்ல எண்ணுகிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளைவிட்டு பிரிந்து சென்ற கருணாவை பயன்படுத்த அல்லது வெளிநாடுகளாகிய இந்தியா அல்லது அமெரிக்காவைக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள்மீது தாக்குதல் நடாத்த வேண்டி ஆர்வங்கொண்டு அழிவைப் புரிய முனைகிறார்கள். பலவான் சரியானவன் என்ற நடைமுறை என்றுமே வெற்றி பெறுமென்றோ, அன்றில் இலட்சியத்தின் பிடிப்புக் கொண்ட மக்களையோ அதன் தலைமையையோ கொடுமைகளில் இருந்து விடுதலை பெறும்வரை இலட்சியத்திலிருந்து எந்த இனவாதக் கொடுமையாளர்களாலும் மாற்றவோ தடுக்கவோ முடியாது.

## 15. நாடாளுமன்றக் குரல் கொண்ட அரசியல் – இராணுவத் தலைமைத்துவம்

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு மீது நம்பிக்கையற்றவர்கள். ஏனெனில் பெரும்பான்மை கொண்ட இனத்தின் ஆட்சி கொண்ட அமைப்பு முறையால் இரவோடிரவாக சிங்களவரல்லாதவர்கள் உரிமைகளை உடைத்துத் தள்ளிவிட முடியும். அதுமட்டுமன்றி சிங்களப் பெரும்பான்மை அரசியலமைப்பு மீதும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அது தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக மட்டுமன்றி சிறிலங்கா அரசுக்கும் அதன் ஜனநாயக நடத்தைகளை தெரிந்து கொண்டிருக்கும் உலக ஜனநாயகத்தைக் கொண்டவர்களுக்கும் அதனை எவ்வாறு விளங்கிக் கொண்டார்களென்று கேட்டு செய்தியொன்றை விளக்கமாக அனுப்பிவைக்க விரும்புகிறார்கள். இதற்காகவே தங்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத் தேர்தல் 2004ல் வேட்பாளர்களை நியமித்து கொள்கைத் திட்டம் வகுத்து, தேர்தலில் ஆதரவு தந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர்கள் பெரும்பான்மை இடங்களை வென்றெடுத்தார்கள். இந்த வெற்றி மூலம் மற்றவர்களைத் தோற்கடித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் பலத்தையும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக தமது வாக்குகளை இட்டு தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கூட்டணிக்கு வழங்கி பெருவெற்றி அளித்ததுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதனை தமிழ் தேசியக் கூட்டணியும் உலகிற்கு அறிவித்தது. இதற்கு தமிழ் மக்களின் ஒரே அமைப்பாக நின்று மக்களிடமிருந்து பிரிக்க முடியாத வகையில் இணைந்து தமிழ் மக்களின் சுயநிர்ணயங்கொண்ட சுயாட்சி காணவும், பாரம்பரியங்களைக் காக்கவும் போராடி வருகிறார்கள்.

இதன் மூலம் 1976ல் எடுத்துக் கொண்ட முடிவுக்கேற்ப நாடாளுமன்றத்தின் ஊடாகவும் அரசியல்–இராணுவ வழியூடாகவும், ஒரே இலட்சியத்தோடும், ஒரே தலைமையின் கீழும் இயங்க முடிந்தது. அத்துடன் இத்தலைமையின் குரல் சிறிலங்கா நாடாளுமன்றத்திலும் கேட்க வசதி கிடைத்துள்ளது. நாடாளுமன்றில் குரல் எழுப்புவதால் இழைக்கப்படும் அநீதிகள் அகில உலகிற்கும் எட்டும். இதன்மூலம் சிறுபான்மையினருக்கு இழைக்கும் அநீதிகள் மற்றும் சிங்கள வடிவு ஜனநாயக நடைமுறையின் கீழ் மக்கள் அவதிப்படும் நிலைமை வெளியே பன்னாட்டு அவதானிப்பைப் பெறும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தியாகம் பற்றிய ஒரு மீளாய்வு

# 8

*(மனித வாழ்விற்காகவும் மாண்பிற்காகவும் ஆசியாவில் நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களில் தன் உயிரை ஈகம் செய்தல் ஒரு போராட்ட ஆயுதமாக நடை முறையில் வளர்ந்து வருகின்றது.. இதுபற்றிய எனது கிறிஸ்தவ இறையியல் கண்ணோட்டம் அனைத்துலக இறையியல் காலாண்டு இதழான (Concilium 3-2003) கொன்சிலியம் எனும் இறையியல் சஞ்சிகையில் எட்டு மொழிகளில் வெளிவந்தது)*

## 1. உயிர்த்தியாகம் பற்றிய வழமையான கருத்தை மீள்பார்வை செய்தல்

இந்நூற்றாண்டின் மிகப் பெரிய கிறிஸ்தவ இறையியலாளரான (Karl Rahner) கார்ள் ராக்னெர், தான் மரணமாவதற்கு முன்னர் இவ்வுலகில் உண்மை, நீதி, அமைதி என்பவற்றை உலகில் நிலைநாட்ட வேண்டி முன்னெடுககப்படும் உயிர்த்தியாகங்கள் பற்றி ஒரு விரிவான ஆய்வு வேண்டுமென்று வற்புறுத்தினார். அவரின் அன்றைய வேண்டுகோள் உலக மட்டத்தில் நியாயமாகக் கணிக்கப்படுகின்றது. மனித வாழ்வு, மனித மாண்புக்காக ஆசிய நாடுகளில் நடைபெறும் போராட்டங்களில் இத்தகைய உயிர்த்தியாகம் மேலும் வளர்ந்து வருவதனால் உயிர்த்தியாகம் பற்றிய மீளாய்வு முக்கியமானது. ஆசிய நாட்டு மக்கள் உலகின் உயர் மறைகளையும் பண்பாடு, பாரம்பரியங்களையும் கொண்டிருந்த பொழுதிலும் மனிதவாழ்வு, மனிதனால் உருவாக்கப்படும் சமூக அநீதிகள், அடக்குமுறைகள், பாகுபாடுகள் போன்ற அவலங்களால் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டு ஆபத்துக்குள்ளாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவத்தின் பின் பிறந்த அரசுகளின் அமைப்புகளும் அந்த சமூகத்தின் மேல்மட்டத்தினரும் தமது முன்னாள் காலனித்துவ எஜமானர்களிடமிருந்து தோழமையும் அங்கீகாரமும் பெற்றனர். இவ்வரசுகள் பதிய ஊழலற்ற ஜனநாயகங்களாக கணிக்கப்பட்டன. அவைகளின் முதல் தலைமுறை தலைவர்கள் முதலாம் உலகிலுள்ள தலைவர்களுடன் உறவுகொண்டவர்களாக பல நன்மைகளைப் பெற்றனர். அதேவேளையில் இந்நாடுகளில் வாழும் பெரும்பான்மை மக்கள் இதே ஜனநாயக அரசுகளிடமிருந்து பல்வேறு வழிகளாலும் மனித வாழ்வையும் மனித மாண்பையும் அச்சுறுத்தும் பல்வேறு சக்திகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இவ்வாறு காணப்படும் நாடுகள் பலவும் ஜனநாயக அரசுகள் எனக் தம்மை காட்டிக் கொள்கின்றனர். இதன் காரணமாக மக்கள் தம் விடுதலை மனித மாண்பு உயிர் பிழைப்புக்காக தமத சொந்த அரசுகளை எதிர்த்து பன்முகங் கொண்ட போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இதன் விளைவாக பல இலட்சக்கணக்கான மக்கள் கொடுமையான அடிமைத்தனங்களுக்கு பலியாகின்றனர். தமது முந்திய தலைமுறையினரும் மூதாதையரும் மறைகளும் தமக்கு விட்டுச் சென்ற பெறுமானங்களை பாது காக்கப் போராடவும் உயிர்துறக்கவும் திடங்கொண்டுள்ளனர். ஏனெனில் தமது கடவுளிடமிருந்து ஒரு மக்களாக பெற்றுக்கொண்ட மண்ணையும், அதன் வளங்களையும் இழந்துவிடாது போராடுகின்றனர். இறையியல்பு கொண்ட மனிதர்கள் என்ற காரணத்தினால் இறைவனால் அருளப்பட்ட மாண்பையும் உரிமைகளையும். இவ்வாறான மாண்புமிக்க விழுமியங்களைப் பாதுகாக்க தம் உயிரை அர்ப்பணிப்பு செய்கிறவர்களாக இருந்தும் அவர்கள் தீவிரவாதிகளென்றும் பயங்கரவாதிகளென்றும் பழி சுமத்தப்பட்டு வரலாற்றின் குப்பைகளாக வீசப்படுகின்றனர்.

ஆசியாவில் இடம்பெறும் போராட்டங்களில் வாழ்வையும் மனித மாண்பையும் மறுக்கும் சக்திகளை எதிர்க்கும் வகையில் அனைத்து மறைகளும் ஒன்றிணைந்து போராட முதலில் உயிர்த்தியாகம் உயிர்ப்பலி தற்கொலை தற்கொடை இவைகளைப் பற்றி தற்போதைய கத்தோலிக்க கருத்தியலுக்கு அப்பால் செல்ல வேண்டும். தற் கொலையைப் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய வரையறை கொண்ட வரவிலக்கணத்திற்கு அப்பால் செல்ல துணிய வேண்டும். அப்படி செய்வதில்தான் மத எல்லைகளைத் தாண்டி அனைத்து போராட்ட சூழலிலும் ஏற்கனவே உள்ள உயிர் தியாகங்களின் பல்வேறு வடிவங்களையும் இனங் கண்டு கொள்ள முடியும்.

இந்த நோக்குடனேயே தற்போது இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்கள் தம் வாழ்விற்காகவும் மனித விடுதலைக்காகவும் நடாத்திக் கொண்டிருக்கும் போராட்டதில் மடிந்து கொண்டிருக்கும் உயிர்த் தியாகங்களை நமது ஆய்விற்கு உட்படுத்துகின்றோம். இலங்கையில் பெரும்பான்மை சிங்களவர்களுக்கும் சிறுபான்மை தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக சிங்கள பயங்கர அடக்கு முறைகளுக்கும் அதை எதிர்க்கும் தமிழ் போராளிகளுக்குமிடையிலான ஒரு கொடூரயுத்தமாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பற்றிய ஆய்வு ஒரு புறத்தில் போரின் மத்தியில் பிறந்து கொண்டிருக்கும் உயிர் தியாகங்களினதும் இலட்சியத்திற்கான தற்கொடை களினதும் புதிய வடிவங்களையும் மறுபுறத்தில் ஜனநாயகத்தின் போர்வையில் இயங்கி வரும் ஆக்கிரமிப்பு தீயசக்திகளை இனங்கண்டு கொள்ளும் அரிய சந்தர்ப்பங்களாகவும் அமையும்.

## 2. ஈழத் தமிழர் போராட்டம்

ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பல குடியேற்றங்கள் மூலம் இத்தீவின் தெற்கிலும் மேற்கிலும் சிங்கள பௌத்தர்களும், வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் இந்துக்களும் வாழ்ந்தார்கள்.. பின்னர் இஸ்லாம் மறையைச் சேர்ந்தவர்கள் வியாபார நோக்கில் இந்தியாவிலிருந்து வந்து குடியேறினர். அதற்குப் பின்னர் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும் பிற காலனித்துவ ஆட்சியாளர்களது வருகையோடு கிறிஸ்தவமும் தீவின் மறைகளில் ஒன்றாக இணைந்து கொண்டது. இவைகளனைத்தும் மறுக்க முடியாத வரலாற்றுண்மைகளாகும்.

தென்இந்தியாவிலிருந்து இலங்கைமீது பல்வேறு படையெடுப்புகள் பல்வேறு காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு தமிழ் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்கள் சிற்றரசர்களிடையே அவ்வப்போது மோதலகள் இடம்பெற்றன. இதன் இறுதி விளைவாக இரு சிங்கள இராச்சியங்கள் ஒன்று கண்டியை தலைநகராகவும் மற்றொன்று கோட்டையைத் தலைநகராகவும், ஒரு தமிழ் இராச்சியம் யாழ்ப்பாணத்தை தலைநகராகவும் கொண்டிருந்தன.

16ம் நூற்றாண்டின் ஆரம்பந்தொட்டு அடுத்தடுத்து மூன்று காலனித்துவ ஆட்சியாளர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஒவ்வொரு ஆட்சியாளரும் ஏறத்தாழ 150 வருடங்கள் இத்தீவில் ஆட்சி நடாத்தினர். போர்த்துக்கேயர் ஆட்சியில் கிறிஸ்தவ மறை கொண்டுவரப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்கர் துன்புறுத்தப்பட்டார்கள். ஒல்லாந்தர் தம் நாட்டுக் கிறிஸ்தவத்தையும் ஆங்கிலேயர் தம் நாட்டுக் கிறிஸ்தவ சபைகளையும் அறிமுகப்படுத்தினர்.

ஆங்கிலேயர் தமது ஆட்சிக் காலத்தில் கண்டி அரசையும் தமது ஆளுகைக்குள் கொண்டு வந்த பின்பு தீவின் எல்லா பிரதேசங்களையும் இணைத்து 1833ல் ஒரே மத்திய ஆட்சியை ஏற்படுத்தி கொழும்பு நகரை தலைநகராக்க கொண்டு தீவை ஆட்சி செய்தார்கள். அவர்கள் தமது தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் பொருட்டு தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களைத் தவிர ஏனையோர் அதாவது சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் இனமத ரீதியாக வேறுபட்டவர்களாயிருந்தும் எல்லோரும் சமஉரிமை, சமவாய்ப்புகள் கொண்டவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

இத்தீவின் மக்கள் மனித வளங்களையும், இயற்கை வளங்களையும் பயன்படுத்தி பல்லின பலமதங்களின் வேற்றுமையில் ஒற்றுமை உருவாக்கக் கூடிய சக்தியைக் கொண்டிருந்தார்கள். ஆனால் பேரினவாதிகளினது அரசியலினால் அவ் ஒற்றுமைக்கான வாய்ப்பை சீர்குலைத்து விட்டனர். ஐரோப்பிய மூன்று காலனித்துவங்களின் ஆட்சிக்காலம் 450 வருடங்கள் கழிந்து முடிவுற்றதும் ஆட்சிப் பொறுப்பு பெரும்பான்மைச் சிங்களவர் கைக்குள் சென்றது. அவர்கள் தமிழரின் உரிமைகளை புறக்கணித்து விட்டு அவர்களை அத் தீவின் உண்மையான குடிமக்களாகவும் சம உரிமையாளராகவும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள மறுத்து விட்டார்கள். ஆங்கிலேயர் தமது வசதிக்கு ஏற்ப வகுத்த மையப்படுத்தப்பட்ட ஒற்றை ஆட்சியை சிங்களவர்கள் சிங்களத்தையும் பௌத்தத்தையும் மையப்படுத்தும் ஒற்றை ஆட்சியாக மாற்றிக் கொண்டனர். இம் மாற்றத்தின் விளைவாக ஆங்கிலேயருக்குப் பதிலாக சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் கைக்கு ஆட்சி மாறியது மட்டுமன்றி, அவர்கள் தமிழரின் புதிய சர்வதிகாரமுடைய எஜமானகளாகவும் மாறினர். கடந்த ஐம்பது ஆண்டுகளிலும் சிங்கள ஆட்சியாளர்கள் தமது சிங்களப் பெரும்பான்மை மூலம் தமிழரின் அடிப்படை உரிமைகளை மறுத்தனர். தமது பெரும்பான்மை ஜனநாயகத்தை பாவித்து நாடாளுமன்றத்தில் தமிழரின் அடிப்படை உரிமைகளுக் கெதிரான சட்டங்களை நிறைவேற்றி தமிழரின் தனித்துவமான தேசிய அடையாளங்களை நிராகரித்து அவர்களின் பாரம்பரிய தாயகத்தையும் சீர் குலைத்து விட்டனர்.

### 3. இனஒதுக்கல்கள், காடையர் வன்முறை மற்றும் அரசு வன்முறை என்பன தமிழ் எதிர் வன்முறைகைகளுக்கும் யுத்தத்திற்கும் வழிவகுத்தன.

மூன்று தசாப்தங்களாக தமிழர் முன்னெடுத்த வன்முறையற்ற அறவழிப் போராட்டங்கள் மூலம், தங்கள் அடிப்படை உரிமைகளை பெறலாம் என முயற்சித் தார்கள். ஆயினும் அவர்கள் சந்தித்தது இனப்படுகொலைகளும், கொடுமைகளுமே. இதனால் நீண்ட அரச பயங்கரவாதத்திற்கு பதிலடியாக தமிழ் இளைஞர் ஆயதப் போராட்ட நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தினர். நீண்ட காலமாக இயங்கிய அரச பயங்கரவாதமும் அதன் விளைவாகப் பின் தோன்றிய தமிழரின் எதிர்ப் பயங்கர வாதமும் சிக்குண்டு நாளடைவில் அரசுக்கும் தமிழ்ஈழ இயக்கங்களுக்குமிடையிலான ஒரு போராக மாறியது. தமிழீழ விடுதலைப் புலிகள் பாதிப்பற்றவர்களுக்கு பாதுகாப்பாகவே அரசுக்கு எதிரான யுத்தத்தை நடத்தினர். அரசு யுத்த ஆயுதங்கள், விமானக் குண்டு வீச்சுகள் எறிகணை வீச்சுக்கள் மட்டுமன்றி பொருளாதாரத் தடை, ஊடகத்தடை, தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வல்லுறவு, இளைஞர்கள் காணாமற்போதல், உடமைகள் அழிப்பு, தமிழர்களின் சுற்றாடலை மாசுபடுத்தல் என பல்வேறு முனைகளிலும் தமிழ் மக்களைத் தாக்கினர். இக் கொடுமைகளினால் பாதிப்புற்று விரக்தியடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு கொரில்லா யுத்தம், தற்கொலைத் தாக்குதல் போன்பனவற்றைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஒரு பக்கம் வறிய சிங்களக் குடும்பங்களிலிருந்து வயிற்றுணவுக்கு வழிதேடி இராணுவத்தில் வேலை தேடிச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்படும் வேளையில் அவர்களை நம்பியிருக்கும் மனைவி, மக்கள் ஆதரவற்ற விதவைகளாகவும் அனாதைகளாகவும் ஆக்கப்பட்டனர். மறுபக்கத்தில் பாடசாலைகள் தேவாலயங்கள் வைத்தியசாலைகள் மீது எறிகணைத் தாக்குதல்கள் விமானக் குண்டுவீச்சுக்கள் நடத்தியதால் ஆயிரக்கணக்கில் அப்பாவிகளான தமிழர்கள் தாக்கப்பட்டனர். இத் தாக்குதல்களில் பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்கள் உயிர் நீர்த்தது மன்றி இன்னும் அதிகமானோர் காயப்பட்டும் அங்கவீனர்களாகியும் குடும்பத்தவர்கள், உடன்பிறப்புக்கள், தாய் தந்தையரை இழந்தும், 800.000 தமிழர்கள் தம் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டும் அதே தொகையினர் நாட்டை விட்டு வெளியேறி அந்நிய நாடுகளிலும் தஞ்சம் கோரினார்கள்.

20 ஆண்டுகள் கொடூர போரின் விளைவாக பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உயிர் உடமைகளை இழந்த அதே நேரத்தில் அரசின் பொருளாதார நிதி நிலைமை மோசமடைந்து ஒட்டாண்டி நிலைக்கு தள்ளப்பட்டது. இச் சூழலில் தமிழ்த் தலைமைத்துவம் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்த அதையேற்று அரசாங்கம் போர் நிறுத்தத்திற்கு சம்மதித்து நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியது. இவ்வாறு அரசியல் தீர்வைக் காணவும் சிக்கல்களை முடிவுக்குக்கொண்டுவரவும் இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்தனர்.

## 4. புகழாரம் சூட்டுவதும் பிசாசுப் பட்டம் கொடுப்பதும் உதவ மாட்டாது

தியாகிகள், ஞானிகள் என ஒரு பக்கத்தில் இனங்காணப்படுவோரை எதிர்ப்பக்கத்திலுள்ளவர்கள் பிசாசுப் பேர்வழிகள் என்று கூறுவது வழக்கமாயிற்று. அரச படைகளையும் அவர்கள் புரியும் செயல்களையும் சிங்களத் தீவிரவாதிகள் நியாயப்படுத்தியும், அரசாங்கத்தையும் அதன் படைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயத்தின் காவலர்களாகவும், நாட்டை பிரிவினவாதிகள், பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றுகிறார்களென்றும் புகழாரம் சூட்டுகின்றனர். 30 ஆண்டுகால ஜனநாயக வழியில், வன்செயலற்ற அறவழியிலும் தமது குறைகளைக் கூறிப் போராடிய தமிழ் தலைவர்களை சிங்கள மக்களும் அதன் தலைவர்களும் ஊடககங்களும் மறந்தவர்களாக கேலி புரிந்து கூப்பாடு போடுகிறார்கள். வினை எப்பொழுதும் எதிர் வினையைத் தோற்றுவிக்கும். அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் எதிர்விளைவுதான் தமிழ்த் தீவிர தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்காப்பு நடவடிக்கைகள். இதனை ஒரு தலைப்பட்சமான வெறும் தீவிர பயங்கரவாதம் எனக்கூறி தள்ளிவிட முடியாது. மேலும் கண்மூடித்தனமாக தமிழ் மக்கள் மீது கொலைகள், கொடுமைகள், அட்டூழியங்கள் புரிந்துவிட்டு அரசு அவற்றை தமிழ்ப் பயங்கரவாதத்திற்கான பதில் என நியாயப்படுத்துதை ஏற்கமுடியாது. இங்கு பாதிக்கப்படும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் அடிப்படை மனித உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது.

எனவே போராட்டத்தையும் போராடிக்கொண்டிருக்கும் மக்களையும் அவர்களின் வேட்கைகளையும் நம்பிக்கைகள், இலட்சியங்கள், பாதிப்புற்று வேதனைகளுக்குட்பட்டு தவிக்கும் மக்களின் சிந்தனை பற்றியும் ஒரு பாரபட்சமற்ற பக்க சார்பற்ற பார்வையும் கணிப்பும் தேவைப்படுகின்றன. அவ்வாறுதான் தற்கொடை என்று கூறி தம் உயிரை ஈகை செய்யும் நடை முறையை கணிப்பீடு செய்தல் வேண்டும்.

வான்வெளிக் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடைகள், பாலியல் வல்லுறவுகள், குற்றமற்ற படுகொலைகளுக்கு மத்தியிலே பல கிறிஸ்தவர்களும் வாழுகின்றனர். அவர்கள் தமது வாழ்விற்கு பொருள் வழங்கும் ஊற்றாகிய விவிலியத்தை படிக்கும் பொழுது ஒடுக்கப்பட்ட ஒருவரின் நிலையிலிருந்தே அதை விளங்கிக்கொள்வர். இது அவர்களுக்கு துன்பங்களைத் தாங்குவதற்குப் பலத்தையும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர நம்பிக்கையும் ஊட்டுகின்றது. அவர்கள் தம் துன்புறுத்தப்படுவதின் மத்தியில் நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் அபயக் குரல் எழுப்பி கதறி அழும்போது அவர்கள் தீவிரவாதிகள் அல்லது பயங்கரவாதிகளின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தி பழிசுமத்தப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பாதிப்புற்றவர்கள், தியாகிகள் பற்றிய தமிழர்களின் மறையியல் நோக்கு

இவ்வுலகைப் பற்றியும் மனித வாழ்வு பற்றியும் யதார்த்தமாக தமிழர் ஒரு பொதுவான சிந்தனை முறையை கொண்டிருப்பதன் காரணமாக தமிழர்கள் கிறிஸ்தவர்களாகவோ அல்லது இந்துக்களாகவோ இருப்பினும் தாங்கள் படும் துயரங்களை ஒரே விதத்தில் பார்க்க நேரிடுகின்றது. இந்தப் பார்வை இந்து–சைவ மறையின் நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த நம்பிக்கையால் நிர்ணயிக்கப் படுகின்றது. மனித வாழ்வில் நிகழும் சம்பவங்கள் யாவும் கடவுளால் நிர்ணயிக்கப்பட்டவை. இதைத் தலைவிதி (தலையெழுத்து) என்பார்கள். கடந்த கால வாழ்வின் தீய செயல்களே நிகழ்கால வாழ்வின் துன்பங்களாகத் (கர்மம்) தோன்றுகின்றன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் எத்தகைய துயரங்களையும், அவலங்களையும், இழப்புக்களையும் பொறுமையாகவும், அமைதியாகவும் தாங்கிக் கொள்கின்றனர். அவர்கள் இத் துயரங்ககளைத் தொடர்ந்தும் தாங்கியவாறு இழப்பு, பழிப்பு, எண்ணற்ற அழிவுகளையும், ஈடுசெய்ய முடியாத பேரிழப்புகளையும், தேடற்கரிய தேட்டங்களையும் இழந்த பின்னரும் அமைதியாகவும் மௌனமாகவும், கோபப்படாது, அரச பயங்கரவாதங்களைத் ஆன்மீக பலத்துடன் தாங்கிக் கொள்கிறார்கள். இந்துக்கள் கடவுள் உயர் மனிதனாக உருவமெடுத்து அல்லது அவதாரமெடுத்து தீமைகளை ஒழிப்பார் என நம்பிக்கை கொண்டவர்கள். இந் நம்பிக்கையிலும் கண்ணோட்டத் திலும்தான் காலத்துக்கும் இடத்துக்கும் பொருத்தமாக தமது அரசியல் தலைவர்கள் தங்களின் எதிரியிடமிருந்தும் தீய சக்திகளிடமிருந்தும் தம்மை விடுவிப்பார் என நம்புகிறார்கள். அவ்வாறு வெற்றியீட்டும் தலைவர்களுக்கு தெய்வப் பெயர்கள் சூட்டுவது இந்துக்களின் வழக்கமாயிற்று.

ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பத்திலிருந்து மீள்வதற்கு பாவ வாழ்விலிருந்து எம்மை விடுவித்துக்கொள்வதே ஒரேவழி என நம்புகிறோம். கிறிஸ்தவ தலைவர்கள் மக்கள் சார்பாக நின்று உண்மை நீதிக்கெதிரான தீய சக்திகளை போக்குவதற்கு போதுமான அளவு செயலாற்றவில்லை என்றே கூறவேண்டும். மறுபிறப்பில் நம்பிக்கை கொள்ளும் சைவர்கள் கடவுள் மனிதவடிவில் பிறந்து தீமைகளை அழிப்பார் என நம்புகின்றனர். இக் கருத்துக்கமையவே தமிழீழ விடுதலைப் புலிகள் சகல தமிழர்களையும் இரண்டு விதமான நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலிகளுக்கு அழைக்கின்றனர். ஒன்று பாதிப்படைந்தவர்களை நினைவுகூரும் நாட்கள். மற்றையது தியாகிகளை நினைவு கூரும் நாட்கள். இந்த இரண்டு வகை நினைவுகளுக்கும் இங்கே இரு உதாரணங்களை கூறுவோம்.

## 6. பாதிப்புற்றவர்கள்–தியாகிகளின் நினைவு தினங்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் சக்தி ஊட்டும் மையங்களாகும்.

1983 யூலை 23ஐ தொடர்ந்த நாட்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தீவின் அனைத்துப் பகுதிகளிலும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த இனப் படுகொலை வருடந்தோறும் கறுப்பு யூலை என தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் எல்லாத் தமிழர்களாலும் நினைவுகூரப்படுகின்றது. அத்துடன் தம் இன்னுயிர் நல்கி விடுதலைப் போரில் மடிந்த போராளிகள் நினைவாக நவம்பர் 26–27 மாவீரர் தினமாக நினைவுகூரப்படுகின்றது. இவ்வாறு நினைவுகூரப்படுகின்ற இரு நிகழ்வுகளான துயருற்றவர் தினமும் மாவீரர் தினமும் தமிழ் தேசியத்தை எழுச்சி கொள்ளச் செய்ததுடன் தமிழர் விடுதலையின் தாகத்தை மேலும் அதிகமாக்கியது.

இவற்றோடு இந்திய அமைதிப்படையின் கொடூரங்களை எதிர்த்து உண்ணா நோன்பிருந்து தம் உயிரைத் தியாகம் செய்த இருவர் நினைவுகூரப்படுகிறார்கள். மிகவும் அறியப்பட்ட இவர்கள் இருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த அன்னை பூபதியும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திலீபனும் ஆவர். இவர்களின் நினைவுநாள் தமிழர்களை எழுச்சி கொள்ள வைக்கும் நாட்கள் ஆகும். இந்து–கிறிஸ்தவர்கள் அனைவரும் இவ் இரு நினைவுதின நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்கேற்பர். அத்தினங்களில் தற்கொடையாக இனிய உயிர்கள் தந்து தமிழீழ விடுதலைக்கு உரம் ஊட்டியவர்களை நினைவு கொண்டு, மனதில் இருத்தி வணங்குவர். அவர்களின் உறவினர்கள் சமாதிகளைச் சுற்றிவந்து கண்ணீர் சிந்தி ஒளியேற்றி மலர்தூவி வணங்குவர். மரணித்த உடல்களை தீயிட்டு எரிப்பது இந்துக்களின் வழக்கமாகும். ஆயினும் போரில் மடிந்தவர்கள் இராணுவ மரியாதையுடன் மண்ணில் புதைக்கப்பட்டு அந்த இடங்கள் மாவீரர் துயிலும் இல்லங்கள் என அழைக்கப்படும். இவை யுத்த நினைவுச் சின்னங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவர்கள் தமிழ் மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளாக நினைவுகூரப்படுகிறார்கள்.

எத்தகைய உருவிலும் வன்செயலை ஆதரிக்கவோ, விளக்கவோ, நியாயப்படுத்தவோ, ஊக்கமளிக்கவோ முடியாது. தற்பாதுகாப்புக்காகவும் அரச பயங்கரவாதத்தை எதிர்க்கும் நோக்கோடும் அநீதிகளை முடிவுக்குக் கொண்டு வரவும், பதில் நடவடிக்கைகள் மேற்கொள்வதைப் புரிந்து கொள்ள வேண்டும். அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் மக்களும் அவர்களின் தலைவர்களும் எடுக்கும் பதில் நடவடிக்கைகளின் உருவம் அடக்குபவர்களின் அணுகு முறையாலே நிர்ணயிக்கப் படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தில் தான் நேரிடக் கூடிய அழிவின் ஆழத்தை போதியளவு கணிபபீட்டின் பின் தற்கொலைக் குண்டுதாரித்து இடம்பெறும் தாக்குதல்களாகப் புரிந்து கொள்ளலாம்.

இத்தாக்குதல்களில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதையும் அவர்களின் அவலங்களையும் கூடிய அளவிற்கு தவிர்க்கவும் தமிழ் தலைமைத்துவம் முயற்சிக்குமென்பதில் எவ்வித சந்தேகமில்லை. மக்கள் குடியிருப்புக்கள், அப்பாவிகள் மீது குண்டுகள் வீசிக் கொல்வதை நிறுத்துமாறு மீணடும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தும், அரசு பயங்கரவாதிகளைக் குறிவைப்பதாக கூறிக்கொண்டு அப்பாவி மக்களையே குறிவைத்து அகதிகள் குடியிருப்பு, தேவாலயங்கள், கோவில்கள், வைத்திய நிலையங்கள் மீது கொடூரமாக தாக்குதல்கள் செய்கின்றது. இப்படிப் பாதிப்படைந்த மக்கள் சார்பாக எவ்வித நடவடிக்கைகளைத் தான் எடுக்க முடியும்?

பதில் தாக்குதலுக்கு பாதிப்படைந்த மக்களிடம் அரசைப் போன்று விமானங்களோ குண்டுகளோ இல்லை. அவைகளை வெளிநாடுகள் கொடுக்கப் போவதுமில்லை. இவ்வாறான தாக்குதல்கள் இரு நாடுகளுக்கிடையில் நடந்தால் அத்தகைய உதவிகளை எதிர்பார்க்க முடியும். இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த தற்கொலையாளிகள் தம்மைத்தாமே மனித குண்டுகளாக்கிக் தம்மை பல ஆண்டுகளாக இரவு பகலாகத் தாக்கிய கிபீர் விமானங்களைத் தாக்கினர். உதாரணமாக கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையிலிருக்கும் இராணுவத் தளங்களுக்குள் நுழைந்து அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபீர் விமானங்களை தாக்கி அழித்தனர். இதில் ஒரு குடிமகன் தானும் உயிர் இழப்பதையோ காயப் படுவதையோ மிக நுட்பத்துடன் தவிர்த்துக் கொண்டனர்.

## 7. ஒரு மீளாய்வு

மனிதத்தின் திறமைகள் போராட்டங்களின் ஊடாக உச்ச நிலையை அடைகின்றன. தமிழர் போராட்டத்தைப் பொறுத்தவரை தமிழ் கிறிஸ்தவ இந்து மதங்களுக்கிடையே இணக்கப்பாடும் புரிந்துணர்வும் ஏற்பட்டிருக்ககின்றது. இத் தோழமை ஒருவர் ஒருவரின் துன்பங்களை அறிந்து கொள்ளவும் அதில் பங்கெடுத்துக் கொள்ளவும் வழி சமைத்துக் கொடுத்தது. தமிழர் மீது சுமத்தப்பட்ட அநீதிகளை உணர்ந்து கொள்ளுதலில், மக்கள் தங்கள் தேவாலயங்கள் கோவில்களின் எல்லைகளைத் தாண்டி, சுய அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்று, வீரம் போன்ற விழுமியங் களைக் கண்டு கொண்டார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலிருந்து தோன்றிய பலியாகுதல், தற்கொடை செய்தல் போன்றவை இரு முக்கிய வடிவங்களாகும். ஆனால் இதனை எதிரிகள் கண்டித்தனர். இதை ஊடகங்கள் பழித்து எள்ளிநகையாடின. நவீன சமூகம் இவற்றை வெறுத்து உதறி பயங்கரவாதம் என்று முத்திரை குத்தின. ஆயினும் அவ் வடிவங்கள் மேலோட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவனவாக அமைந்தாலும், ஆழத்தில் அவை இன்றைய ஜனநாயக அரசுகளுக்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கும் சமயங்களுக்கும் நியாயமான கேள்விகளை, சவால்களை எழுப்புகின்றன.

உண்மை, நீதி, விடுதலை ஆகியவற்றுக்கான மக்களின் விடுதலைப் போராட்டங்கள், மேலும் மேலும் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் உதிக்கும் அடக்குமுறைகளுக்கு காரணமானவர்களையும் அவர்களின் நடவடிக்கைகளையும் சர்வ தேசத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றன. ஆனாலும் துரதிஷ்டவசமாக, உலகின் வல்லரசுகள், அடக்குமுறையாளர்களையும் அவர்களைச் சேர்ந்தவர்களை யுமே பலப்படுத்தும் நகர்வை மேற்கொள்கிறார்கள். இராணுவ பொருளாதார பலத்தை பாவித்து தங்களுக்கு சார்பான சுய பாதுகாப்பு ஒழுங்கு, நீதி என்பனவற்றில் ஒரேவித நடைமுறையை ஆயுத பலத்தால் திணிக்கிறார்கள். அமெரிக்காவின் தலைமையில் மேற்குலகு அறிவித்துள்ள புதிய உலக நடைமுறை (world order) என்பது தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நிதிப்பலத்தை முற்றாக தமது கைக்குள் வைத்திருப்பதாகும். அத்துடன் இதன் பொருட்டு தங்களுக்கேற்ற முறையிலேயே ஜனநாயகம், மனித உரிமைகள், பன்னாட்டுச் சட்டங்கள் என்பதை விளக்கிக் கொள்கின்றார்கள். விடுதலைப் போராட்டங்களின் நடவடிக்கைகளை கணிப்பதில் ஒரு தலைப்பட்சமாக வரை விலக்கணம் வகுத்து, போராடும் மக்களையும் போராளிகளையும் வெறும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துகின்றனர். தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் மட்டுமே நிலைநாட்டிக்கொள்வதற்காக, தமது நடவடிக்கைகளை பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தம் (Global war on Terror) எனக் கூறிக் கொள்ளுகின்றனர். இந் நடவடிக்கைகளினால் தமது அதிகாரத்தை பலப்படுத்தும் அந்தரங்க நோக்கங்களை மறைத்து நியாயம் தேடும் மக்களின் உண்மையான புனிதமான வேட்கைகளை உடைப்பதிலும் இலட்சியங்களுக்காக உயிரைக் கொடுப்பவர்களையும் அழித்து ஓரங்கட்டுகின்றனர்.

போராடும் மக்கள், உள்நாட்டு அதிகாரிகளில் நம்பிக்கை இழந்தவர்களாக, அனைத்துலக சமூகத்தின் அமைப்புகளில் நம்பிக்கை வைத்து, உயர் அதிகார பீடங்களுக்கு (உ–ம். ஐ.நா அமைப்புக்கும் அதன் துணை அமைப்புக்களுக்கும்) தமது நியாயபூர்வ உரிமைகள் வழங்கப்பட நடவடிக்கை எடுப்பார்கள் என்று வேண்டுதல்கள் செய்கின்றனர். ஆயினும் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, இவ்வமைப்புகளும் கூட மேலாதிக்கம் கொண்ட சர்வதேச வல்லுனர்களின் தலையீட்டால் அவர்கள் பொம்மைகளாக்கப்பட்டு, போராடும் மக்களை மேலும் விரக்திக்கு மேல் விரக்திக்குத் தள்ளுகின்றன.

தனிப்பெரும் இறைவாக்கினரான இயேசுக்கிறிஸ்துவால் நிறுவப்பட்ட திருச்சபையின் அமைப்புகள் கூட துரதிஷ்டவசமாக அவருக்கும் அவரின் போதனைகளுக்கும் பிரமாணிக்கமாக பணம் படைத்தவர்களின் அநீதியைக் கண்டிப்பதை விட்டு விட்டு வல்லரசுகளின் கொள்கை வழியில் செல்லுகின்றனர். இவர்கள் சில வல்லரசுகளின் நோக்கிற்கு இரையாகி அவர்களுக்குத் தம்மை இசைவு படுத்துவது மிக வேதனைக்குரியது. அடக்குபவர்களின் சிந்தனைகளையும் சொற்களையும் எவ்வித விமர்சனமுமின்றி உள்வாங்கிப் படிப்படியயாகப் பலமிழந்து மௌனிகளாகி அவ் அமைப்புகளின் பங்காளிகளாகத் துணை போகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் துன்பத்திலும் துயரத்திலும் போராடிக்கொண்டிருக்கும் பெரும் தொகையான மனித சமுதாயமோ, அப்பாவிகளாகப் பலியானவர்களின் அழுகைக் குரலிலும், போராட்டத்தில் மாவீரர்கள் செய்யும் உயிர் நீர்த்தலிலும், போராட்டத்தில் துவளும் மக்களின் நம்பிக்கையிலும் உரமாகின்றனர். பிறருக்காக தம்முயிர்களைக் கொடுத்து மக்கள் நீதியான ஒரு சுதந்திர வாழ்வை பெறவேண்டி அரவணைத்துக் கொள்ளும் சாவும் தியாகமும் தெய்வீகமானது.

இப்பொழுதாவது திருச்சபை போன்ற மறை அமைப்புக்கள் யாவும் முன் வந்து இறைவன் பெயரால் அடக்கு முறைகளையும் அநீதிகளையும் உடனடியாக நிறுத்த உரக்கக் குரல் கொடுக்க வேண்டும். அரச பயங்கரவாதத்தை வெளிப்படையாகக் கண்டிக்காவிடில், போராட்டத்தில் பாதிக்கப்பட்டோர் அரச பயங்கரவாதத்திற்கெதிராக மேற்கொள்ளும் தற்கொடைத் தற்காப்பு நடவடிக்கைகளைக் கண்டிக்க அம் மத அமைப்புகளும் உரிமையற்றவராகின்றனர். எனவே வல்லரசுகளும் மறை அமைப்புகளும் பயங்கரவாதம் பற்றிய கருத்தினையும் அதற்கெதிரான தமது நடவடிக்கைகளையும் தொடர் மீளாய்வு செய்தல் இன்றியமையாத தேவையாகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஈழத் தமிழர் விடுதலையும் அனைத்துலக சமூகமும்

(கனடா–ஒட்டாவா பல்கலைக்கழகத்தில் "சிறிலங்காவில் அமைதி" எனும் தலைப்பில் இடம்பெற்ற அனைத்துலக மாநாட்டில் ஆற்றிய (Keynote) ஆரம்பக் கருத்துரை)

## 1. இறுதியில் உண்மையே வெல்லும் என்ற நம்பிக்கை

சிறிலங்கா இனமுரண்பாடு தொடர்பாக அனைத்துலக சமூகத்தின் ஈடுபாடு நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருந்து வருகிறது. முரண்பாட்டை விளங்கிக் கொண்ட முறையிலும், தத்தமது நலன்களைப் பொறுத்தும் இந் நிலைப்பாடு அமைந்துள்ளது. இவற்றில் சில நாடுகள் நீண்டு செல்லும் யுத்தத்தில் பாதிப்புற்றவர்களுக்கு தமது மனிதாபிமான சேவைகள் மூலம் தொடர்ந்தும் உதவிபுரிந்து வருகின்றன. அவை இந்த யுத்தம் விரைவில் ஒரு அமைதியான முடிவுக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தன. மிகவும் சிரமமான சூழலில் தமது பணிகளை வழங்கிவரும் அவர்களுக்கு எமது மதிப்பும், நன்றியும் உரித்தாகுக. இன்னும் சிலர் இனப்பிரச்சினை முரண்பாடுகளில் உள்ள சிக்கல்கள் பற்றியும் அதன் போக்குப்பற்றியும் ஓரளவு அறிந்திருந்தனர். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் எப்போதாவது பதில் நடவடிக்கையாக தாக்குதல்களை நடத்தும்போது, அதை வல்லரசுகளின் போக்குக்கு இணங்க அவசரத்துடன் பயங்கரவாதச் செயல் என கண்டிப்பதுடன், பாதிப்புற்றவர்களுக்கு மனித உரிமைகள் பற்றிப் போதிப்பார்களேயன்றி, அரசு புரியும் வன்செயல்களைக் கண்டிப்பதில்லை. அரச படைகளின் செயல்கள், கொடுமைகள், வன்செயல்கள், ஓர் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட நாட்டின் அரசு, பயங்கரவாதத்துக்கு எதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்று சுட்டிக்காட்டி நியாயப்படுத்துகிறார்கள். இன்னும் மூன்றாவது வகையினரான வேறு சிலர், சிறிலங்காவுடன் அவர்கள் கொண்டுள்ள தகுதியற்ற கொள்கைகளாலும், இரட்டை வேடங்களாலும் தொடர்ந்தும் எம்மை அதிருப்திக்கும் அவமானத்துக்கும் உள்ளாக்குவதும் உண்டு. இவர்கள் அமைதியை விரும்பினாலும் துரதிஸ்டவசமாக போருக்கே பெரும்தொகை நிதி, போர்த் தளபாடங்களை வழங்கி அதேவேளை அமைதித் தீர்வுகாண மிகச் சிறிய அளவில் தன்னும் உதவுவதில்லை. இவர்களின் இவ்வாறான ஈடுபாடுகளுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தகைய வேறுபட்ட நிலைப்பாடுகள், இரட்டை வேடம், வேற்றுமைகள் கொண்டிருக்கும் நேரத்திலும், ஈழத் தமிழர்கள், பன்னாட்டு சமூகம் ஒரு குழுவாக தமது கூட்டு நெறியுடைய பொறுப்பையும் கடமையையும் ஆற்றும் என்றும், ஈற்றில் நீதிக்கும் உண்மைக்கும் இறுதி வெற்றி கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையில் தான் நாம் மனிதாபிமான பரிவுடன் பன்னாட்டு சமூகத்திற்கு எமது வேண்டுகோளை விடுக்கின்றோம். இந்த உதவிமூலம், அத் தீவில் ஓர் நீதியான அமைதித் தீர்வு கண்டு, இனமுரண்பாடுகள் தீர்ந்து, முழு நாட்டு மக்களுக்கும் சமாதானம் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

முதலில் இன முரண்பாட்டை தீர்வு மூலம் முடிவு காண்பதற்கு பன்னாட்டு சமூகம் உதவி செய்வதற்கு தடையாக உள்ள சில துரதிஸ்டமான, உண்மைகளை நாம் இங்கே கூறவேண்டும். முரண்பாட்டையும் பிரச்சினைகளையும் ஓர் நீதியான, நியாயமான, தகுந்த வழிகளில் காண்பதற்கும் அவதானிப்பதற்கும் சில தடைகள் உள்ளன. இரண்டாவது, ஈழத் தமிழர் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எடுத்த தீர்க்கமான தெளிவான முக்கிய மாற்று நடவடிக்கைகளையும் விடுதலை காண மேற்கொண்ட முக்கிய முயற்சிகளையும் சுருக்கமாகக் கூறுவோம். மூன்றாவது உண்மை, நீதி அடிப்படையில் நாம் தேடும் விடுதலையையும் சமாதானத்தையும் பன்னாட்டுச் சமூகத்தின் மனச்சாட்சிக்கு முன் வைக்க விரும்புகின்றோம். எங்களின் கடந்தகால ஏமாற்றமான அனுபவங்களின் அடிப்படையிலும், இன்றைய திடமான நம்பிக்கையிலும் நின்று இன்று இறுதியாக நாம் பன்னாட்டுச் சமூகத்திடம் எமது வேண்டுகோளை விடுக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பன்னாட்டுச் சமூகம் உரிய விளக்கத்துடன், முரண்பாட்டைத் தீர்க்க உதவுவதற்கு தடையாக உள்ளவைகள்.

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினையை நேரகாலத்துடன் விளங்கிக்கொள்வதற்குப் பல காரணங்கள் தடையாக இருந்திருக் – கின்றன. அதில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

### 2.1 தூரத்தில் இருக்கும் ஒரு தீவிற்குள் நடக்கும் கொடூரங்கள்

இன முரண்பாடுகளும் அதன் விளைவாகிய துயரங்களும் மேற்புல நாடுகளிற்கு நெருங்கிய பால்க்கன், துருக்கி போன்ற நாடுகளில் நடைபெறுவது போல அன்றி, வெகுதொலைவில் இருக்கும் ஒரு சிறிய தீவில் நடக்கின்றன. கொடூரங்கள் இடம்பெறும் தீவு உலகின் அதிகார மையங்களுக்கு அப்பால் வெகுதொலைவில் உள்ளது. இதனால் அங்கு இடம்பெறும் நீண்டகால மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் குறித்து வெளியார் அறிந்து கொள்ளவோ அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்கவோ முடியவில்லை. எமது நெருங்கிய அயல் நாடான இந்தியா ஊடாகவே நாம் உலகத்தின் கவனத்தைப் பெற முடியும். ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு சிக்கலாகவும் சிரமமாகவும் இருக்கின்றது.

இதை தூரமான ஒரு வெளியிடத்தில் அயலவர்கள் குறைவாக இருக்கும் ஒரு தனிமையான குடிலுக்குள் நடத்தப்படும் கொலைகள் கொடுமைகளோடு ஒப்பிடலாம். வெளி உலகம் அவைகளைத் தெரிவதற்கு ஆகக் குறைந்தது ஒரு நல்ல அயலவர் தேவை, அவருடன் உறவு சரியில்லாவிட்டால் அழிவுகளையும், மரணங்களையும் எதிர்நோக்கியபோதும் அவை வெளியாருக்கு தெரியாது மறைக்கப்பட்டுள்ளதுடன் எவரும் தலையிட்டு உதவ முடியாத நிலையும் உள்ளது.

### 2.2 வெளிநாட்டவரின் கவனத்தையும் அக்கறையையும் ஈர்க்கும் ஒரு நாடல்ல

வெளிநாட்டுச் சக்திகளைக் கவர்ந்திழுக்கும் எரிபொருள் போன்ற பெறுமதி மிக்க இயற்கைவளங்கள் சிறிலங்காவில் இல்லை. உல்லாசப் பயணிகளின் விடுமுறைக் கொட்டகைகளும், குறைந்த ஊதியத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களை அமர்த்தும் முறையும் சில முதலீட்டாளர்களையும் மேற்புல மக்களையும் கவர்ந்துள் ளது. ஆனால் இவைகள் தீவின் தென்பகுதிக்கு மட்டும் தான் பொருத்தமானவை. வடக்கு கிழக்கு முற்றாக முழுத்தீவிலிருந்தும் வேறாகி, பயணத் தடைகளாலும் செய்தியாளர் நுழைவதற்குத் தடையாலும் துண்டிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் யுத்தப்பிரதேசங்களின் நிலைபற்றி சிறிது அறிய விரும்பினாலும் கூட அவர்கள் யுத்தப்பிரதேசத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுவதுமில்லை, அவர்களை வழி நடத்துகின்றவர்களும் வடகிழக்கிற்கு செல்வது பயங்கரவாத ஆபத்தென்று கூறித் தடுக்கின்றனர். யாராவது வெளிநாட்டவர் யுத்தப் பிரதேசங்களுக்குள் மனிதாபிமான சேவைகளைப் புரிவதற்காக அனுமதிக்கப்பட்டால். அவர்கள் எந்த செய்திகளையும் வெளியுலகிற்கு தெரிவிக்காதிருக்க அரசால் சோதனையிடப்பட்டு எச்சரிக்கப்படுகின்றனர். 1994ல் நவாலித் தேவாலயத்தில் 6 குண்டுகளைப் பொழிந்து 160 அப்பாவிகளைக் கொன்றதை செஞ்சிலுவைச் சங்கம் சுவிற்சலாந்துக்கு தலைமயகத்திற்கு அறிவித்ததை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் வன்மையாகக் கண்டித்தார்.

## 2.3 இந்திய வல்லரசின் உள்ளார்ந்த சந்தேகங்களும் பயமும் எமக்கெதிரானவை

சிறிலங்காவிற்கு அண்மையிலுள்ள ஒரேயொரு அயல்நாடு இந்தியாவாகும். பிராந்திய வல்லரசும், சிறிய சிறிலங்காவைவிட 40 மடங்கு பெரியதுமான அந்த நாடு, அனைத்துலக அரசியலில் வீணாக சிறிலங்காவைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும் இந்திய பார்வைகளும், ஈடுபாடும் சிறிலங்கா தமிழர் விடயத்தில் பல்வேறு காரணங்களால் வரம்புக்குட்பட்டதாக அமைந்துள்ளது. குறிப்பாக ஆரம்பத்தில் இந்தியா தமிழ் போராளிகளிற்கு உதவியதென்பதும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையைப் பற்றிய குற்றச்சாட்டும், விளங்கிக்கொள்ள முடியாத தமிழ்நாட்டின் அரசியல் குளறுபடிகளும், மற்றும் வெற்றியளிக்காத இந்திய அமைதிப்படையின் இராணுவத் தலையீடும், இந்தியாவிலும் பிரிவினை தலைதூக்கலாம் என்ற அச்சமும் இந்தியாவின் உள்ளார்ந்த பயமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 சிறிலங்காவின் பிரச்சாரம் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மிகக் கொடூரமானவை.

உள்நாட்டில் ஏற்கனவே ஊடகச் சுதந்திரம் மறுக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் அரச பயங்கரவாதத்திற்கு உள்ளாயிருக்கின்றனர். ஊடகத் தடைகளுடன் போர் பல ஆண்டுகளாக நீடிக்கின்றது. போரைப் பற்றிய சில செய்திகள் வெறுமனே அரசு தயாரித்து அளிக்கும் இராணுவ அறிக்கைகளில் இருந்து மட்டுமே மக்கள் அறியக் கூடியதாக உள்ளது. இப்படியான ஒரு அரசு தனது வெளிநாட்டு தூதரகங்களை தனது போர் பிரச்சார நிலையங்களாகப் பாவித்து, போருக்கான நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

யுத்தப் பிரதேசங்களுக்கு பன்னாட்டு ஊடக நிறுவனங்கள் நுழைவதற்குத் தடைவிதித்தபின், கொழும்பு வழங்கும் மட்டுப் படுத்தப்பட்ட தகவல்களை வைத்துக்கொண்டு அங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் தமது நாடுகளுக்கு பொய்யான செய்திகளை வழங்கின. அவற்றை வைத்துக்கொண்டு, பன்னாட்டு ஊடகங்களில் "தமிழ் தீவிரவாதிகள் அல்லது தனிநாட்டுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளால் 55000 பொதுமக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்" எனக் குறிப்பிடுகின்றனர். இதைப் படிக்கும் வெளிநாட்டு அப்பாவி வாசகர்கள், தமிழ் மக்கள் அனைவரையும் போராளிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் கணிக்கின்றனர். அத்துடன் தமிழ் போராளிகள்தான் இந்த 55000 உயிர்களைக் கொன்றவர்கள் என எண்ணுகின்றனர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றியோ அவர்களின் உரிமைகளைப் பற்றியோ அல்லது அரச பயங்கரவாதத்தால் இறந்த 55000 பேர்களில் அநேகமானவர்கள் அப்பாவித் தமிழர்கள் என்பதை வெளிநாட்டவர் அறிவதில்லை.

## 3.0 நாங்கள் மரணம், அழிவு என்ற நீண்ட பாதையின் ஊடாகப் பயணம் செய்து வரலாற்றில் ஒரு திருப்பு முனைக்கு வந்துள்ளோம்

கடந்த பல தசாப்தங்களாக நாம் பிறந்த மண்ணில் நாம் உரிமையுடனும் மதிப்புடனும் வாழ அனைத்து விதத்திலும் முயற்சித்தோம். தமிழர்களாகிய நாம், பிற இனமக்களுடன் அவர்களின் மத, இன அடையாளங்களை மதித்து, ஒற்றுமையாக வாழ விரும்பினோம். இறைவன் எமக்குக் கொடையாக அளித்த எங்கள் மண்ணில், 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளாக நாம் வாழ்ந்து வந்துள்ளோம். இருந்தும் ஆங்கிலேயரின் காலனித்துவத்தின் கீழ் செய்யப்பட்ட மாற்றங்களின் காரணமாக, தமிழர்களுக்கு எதிரான ஒரு நிரந்தர சிங்களப் பெரும்பான்மை அரசியலுக்கு உட்படுத்தப்பட்டோம். இதன்காரணமாக, அந்த அரசு எம்மை அவலத்துக்குள் இட்டுச் சென்று அடக்கியாள முற்பட்டது. எனவே தமிழராகிய நாம் எம்முடைய மனித மாண்பையும், உரிமைகளையும் காப்பாற்றும் வேறுவித அரசியல் முறையைத் தேடத் தள்ளப்பட்டோம்.

துரதிஷ்டமாக சிங்களப் பெரும்பான்மையின் அரசியல், பௌத்த சிங்கள இனவாதத்தால் உந்தப்பட்டு, தனது ஆட்சி முறைகளையே மாற்றி ஏனைய இன, மறைகளைச் சார்ந்த மக்களை மதிக்காது உதைத்துத் தள்ளிவிட்டது. ஜனநாயக, வன்செயல் அற்ற தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் மீது அரச படைகளையும் காடையர்களையும் ஏவிவிட்டு தாக்கியும், தமிழ் மக்களையும் அவர்களது சொத்துக்களையும் அறிவுக் களஞ்சியமான தமிழ் மொழியின் அரிய பழைய ஆக்கங்கள் அடங்கிய நூல்நிலையத்தை அரச படைகளும் சிங்களக் காடையர்களும் எரியூட்டி முற்றாக அழித்தார்கள். அரச அதிபரின் யாழ்ப்பாண இல்லத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் புரிந்த அப்பாவி மக்கள் மீது குண்டாம் தடியால் தாக்கினர். தமிழ் இளைஞர்கள் போராளிகளாக மாறுவதற்கு பல தசாப்தங்களுக்கு முன்னராகவே அரசு தமிழர்களின் ஜனநாயக, வன்முறையற்ற அறவழிப் போராட்டங்களை தனது வன்முறையால் அடக்கியது.

1949ம் ஆண்டு பல இலட்சம் இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் குடியுரிமையை, இலகுவாக ஒரு கையெழுத்து மூலம் அரசு பறித்துக் கொண்டது. 1956ல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்தனர். 1949 முதல் அரச உதவியுடன் தமிழ் மக்களின் நிலங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி ஆக்கிரமித்தனர். தமிழ் மாணவர்கள், வேலை வாய்ப்புப் பெற பல்கலைக்கழகம் செல்வதைத் தடுக்க இனப்பாகுபாடு காட்டி, தரப்படுத்தல் சட்டம் கொண்டு வந்தனர். புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை 1972லும் 1978லும் கொண்டு வந்தனர். இவைகளினால் தமிழர்களை மேலும் மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளினர். அவர்களின் தலைவர்களை மறியலில் இட்டும், சித்திரவதை செய்தும் பாராளுமன்றத்துக்குள் ஏளனப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களுக்கு எதிரான புறக்கணிப்புகளை சரிப்படுத்தவும், தமிழை ஆகக் குறைந்த விதத்தில் பாவிக்கவும் செய்த உடன்படிக்கைகள், ஒரு பட்சமாக இரு சிங்கள பிரமர்களால் கிழித்தெறியப்பட்டன. 1972லும் 1978லும் கொண்டு வந்த புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில், பிரித்தானியர்கள் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக தரப்பட்ட 29 வது சரத்தை நீக்கினர். சிலோன் என அழைக்கப்பட்ட நாட்டை, சிங்கள பௌத்த சிறிலங்காவாக மாற்றினர்.

பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க ஜனநாயக வழியில் ஒற்றையாட்சியின் கீழ் முன்னெடுத்த சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை அரச பயங்கரவாதத்தினால் அடக்கினர். அத்தோடு தமிழ் மக்களை மரணங்கள், அழிவுகள், இடப்பெயர்வுகளுக்கு உட்படுத்தினர். இதன் விளைவாக தமிழ் மக்கள் தம்மையும் தமது நாட்டையும் சிங்கள பயங்கரவாதத்திடமிருந்து தாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழ் மக்களையும் அவர்கள் மண்ணையும் அரச பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்க, சமஷ்டி அரசு கேட்டு இரந்து நின்ற நிலை முடிவுற்று, தனிநாடு ஒன்றே தமிழ் மக்களின் உயிர் வாழ்வுக்கு உள்ள ஒரே பாதை என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டனர். இந்த முடிவு, 25 வருட கால சமஷ்டி கோரிக்கையின் பின்னரே எடுக்கப்பட்டது. இந்த தற்பாதுகாப்புக்கான தனிநாட்டுக் கோரிக்கையை 70 விழுக்காடுக்கு மேலான தமிழ் மக்கள் 1977ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் தீர்மானித்தனர். இதனையே தமிழ் மக்கள் இன்றும் முன்னெடுக்கின்றனர். (04.07.1776 ல் சுதந்திரப் பிரகடனம் செய்த அமெரிக்க மக்கள்–பிரித்தானியருக்கு விடுவித்ததுபோல, தமிழர்களாகிய நாமும் 25 வருடகாலம் கழித்தும் செய்ய முடியவில்லை. நாம் அனுபவித்த பெரும் துன்ப உணர்வுகளாலேயே, சமஷ்டிக் (கூட்டாட்சி) கோரிக்கையை தனிநாட்டுக் கோரிக்கையாக மாற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்).

1983ல் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைகள், எங்கள் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்ப்பாதுகாப்புத் தேடி நாட்டை விட்டு வெளியேறினார்கள். தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பிரமாணிக்கமாகவும், அதற்காகப் பல உயிர்த் தியாகங்களைச் செய்கின்ற விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் தங்கள் தலைவர்க ளாக ஏற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உண்மையாக தெரிவது யாதெனில், தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்று நடாத்திய சிங்களப் பெரும்பான்மை அரசுகளும் அவற்றின் அரசியல் தலைவர்களும், தீர்வு ஒன்றைக் காணத் தவறிவிட்டார்கள். அதன் மூலம் நாட்டைத் தற்போதைய தற்கொலைக்கொப்பாகிய, படுமோசமான நிலைக்குத் தள்ளிவிட்டதுடன், எல்லா மக்களும் துயரங்களில் மூழ்கியுள்ளனர்.

## புதிய திருப்புமுனையப் பற்றிய தெளிந்த முடிவுகள்:

அ) பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் ஓர் பொதுவான ஒற்றுமைக்கு வந்து தீர்வு காண முடியாதுள்ளார்கள். அவர்கள் ஒற்றுமைப்பட்டிருப்பதெல்லாம், தமிழ் மக்களை தொடர்ந்து அடிமைகளாக்குவதற்கும், அதற்கு தமிழரில் சில துரோகிகளுடன் சேர்ந்து, தமிழ் மக்களை ஒற்றை ஆட்சியின் கீழ் அடக்குமுறை செய்யவே விரும்புகிறார்கள். தமிழ் மக்களின் நான்கு வேட்கைகளாகிய, தமிழ்க் கட்சிகள் அனைவராலும் முன்னெடுத்த கோரிக்கைகள் திம்பு மாநாட்டில் சமர்ப்பித்தவாறு, ஒன்றைத்தானும் வழங்குவதற்கும், அவர்கள் தயாராக இல்லை. அதனால் தீர்வுக்கேற்ற ஆகக்குறைந்த உடன்பாடுதன்னும் அவர்கள் மத்தியில் இல்லை.

ஆ) தற்போதைய ஜனாதிபதியால் அதிகாரப் பரவலாக்கல் பொதி பற்றி அதிகமாகப் பேசப்பட்டு, அதுபற்றி உலகிற்கு பிரச்சாரம் செய்துவிட்டு, மூன்று முறை மாற்றங் களைக் கொண்டு வந்தார். அதில் தாம் ஜனநாயக நல்லெண்ணம் கொண்டிருப்பதாக கூறினார். ஆனால் இதற்கு சிங்கள மக்களின் எதிர்க்கட்சிகளோ அல்லது அரசை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளோ எவரும் ஆதரவு வழங்கவில்லை.

இ) உண்மை, நீதி, சமாதானத்துக்காக சிங்களப் பெரும்பான்மை மக்களின் மத்தியில் குரல் கொடுக்கும் சில துணிந்தவர்களின் வேண்டுகோள்கள் சிங்களப் பேரினவாதக் குரல்களினால் மூழ்கியடிக்கப்பட்டன. இப்படி அமைதித் தீர்வு காண வேண்டும் என்ற நம்பிக்கை வலுவாகக் குறைந்து போகவே, நாம் பன்னாட்டு சமூகத்திடம் உதவியை நாடுகின்றோம்.

## 4.0 உண்மை, நீதி, சுதந்திரத்தின் தாகமே தமிழர்களின் நம்பிக்கை நங்கூரம்

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கான காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? தமிழர்களின் இனப்பிரச்சினை ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. அந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலேயே பிரச்சினை பிறந்ததும், அரச பயங்கரவாதம் தமிழரை அடக்கியதும், அழித்ததும். ஆகையினால் தமிழருடைய போராட்டத்தின் இலட்சியம் ஒரு அரசியல் வாதத்திலிருந்தோ அல்லது ஆளுமை ஆசையிலிருந்தோ பிறக்கவில்லை ஆனால் நடந்தவைகளை அடித்தளமாக வைத்து, அவைகளுக்கு நீதி தேடுவதே போராட்டத்தின் இலட்சியமாக இருக்கின்றது. தமிழரை அடக்கி ஆளுவோர்கள் பல உண்மைகளை திரித்து மகாவம்சம் போன்ற புராணக் கதைகளை வரலாறாகக் கூறுகின்றனர். ஆகையினால் வரலாற்று உண்மைகளே எமது போராட்டத்தின் அடித்தளம்.

## 4.1 உண்மை: அமைதிக்கான அத்திவாரம்

சுயநலத்திற்காக கற்பனை, அல்லது திரிக்கப்பட்ட அரைவாசி உண்மைகளின் அடிப்படையில் ஒரு உண்மையான நிரந்தரமான சமாதானத்தை அடைந்துவிட முடியாது என்பதிலே தமிழர்கள் திடம் கொண்டுள்ளார்கள். திருப்பத் திருப்ப பொய்களைக் கூறி புதிய உண்மைகளை உருவாக்குவது ஆபத்தானது. வரலாற்றைத் திரித்து பாடப் புத்தகங்களில் வரலாற்றைப் புதுப்பித்து, அரச பயங்கரவாதத்தையும் இனவாதத்தையும் எதிர்ப்பவர்களுக்கு பயங்கரவாதிகள் முத்திரை பதித்து, பயங்கரவாதிகளைத் தேடிக்கொள்வதாக அப்பாவிகள் மீது பழிசுமத்தி, பயங்கரவாதிகள் எனக் கூறி வருவதன் மூலம் உண்மையான சமாதானத்தை அடைய முடியாது.

உண்மை எப்படியான சவால்களையும் அர்ப்பணிப்புகளையும் கோரினாலும், அதற்கு முகம்கொடுப்பதே சமாதானத்திற்கான ஒரே வழி. முரண்பாட்டிற்குரிய இரண்டு பகுதிகளும் அந்த நாட்டைப்பற்றிய, மக்களைப்பற்றிய சரித்திர உண்மைகளுக்கு முகம் கொடுத்து, நடந்தேறிய அரசியல் நிகழ்வுகளுக்கும், அதைத் தொடர்ந்த அழிவுகளுக்கும் முகம் கொடுத்தாலே சமாதானத்தை அடையமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தொடர்பில் நாம் பின்வருவனவற்றைக் கேட்கின்றோம்:

### 4.1.1 ஏன் சிறிலங்கா அரசு உண்மைக்காக போராட வெட்கப்படுகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் ஏன் உண்மைக்குப் பயந்து ஒழிக்கின்றது? நாம் உண்மையிலேயே வேரூன்றி நிற்கின்றோம். அதனால்தான் நாம் சர்வதேசத்தை எங்கள் நீதிபதிகளாகவும், நடுவர்களாகவும் அழைக்கின்றோம். நாம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தை வேண்டுவது எங்களது வெற்றிக்காக அல்லாது உண்மையின் வெற்றிக்காகவே. நாம் ஊடகத் தடைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கவுமில்லை சர்வதேச அமைப்புக்கள் எங்களது பிரதேசத்துக்குள் நுழைவதையும் தடுக்கவுமில்லை.

சிறிலங்கா அரசு ஏன் உண்மைக்கு வெட்கப்படுகின்றது? ஏன் மூன்றாம் தரப்பு நடுவர்களை வெறுக்கின்றது, சர்வதேசத்தின் ஈடுபாட்டை வெறுக்கின்றது? உண்மையை மறுக்கவும் வெறுக்கவும் ஏன் பெருந்தொகைப் பணத்தை ஊடக முகவர்களுக்குக் கொடுக்கின்றனர்? ஏன் தங்கள் துாதுவராலயங்களை தமிழர்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் நிலையங்களாக மாற்ற வேண்டும்? இவையெல்லாம் சிறிலங்கா அரசாங்கமும் அதனது ஆதரவாளர்களும் தங்கள் சொந்த கொலைக் குற்றங்களை அல்லது திரளான மனிதப் புதைகுழிகளை மறைப்பதற் காகவே என்ற நிறைவான உண்மையை வெளிப்படுத்துகின்றது.

### 4.1.2 ஏன் வீட்டினுள் உண்மையை மறைத்து வெளிநாடுகளில் பொய்களைப் பரப்புகிறீர்கள்

பன்னாட்டு சமூகத்தின் அவதானிப்பு, நடவடிக்கை, உதவி இவைகள், இரண்டு காரணங்களால் ஒடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று வடகிழக்கிற்கு பிரயாணம் செய்ய விரும்பும் ஊடகவியலாளர்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தடை செய்யப்படுகின்றனர். மற்றது வெளிநாட்டுத் தூதரகங்களின் பொய்ப் பிரச்சாரம் அதிகரிக்கப் படுதலாகும். இவைகளின் ஒட்டுமொத்தமான விளைவுகள் போருக்கான நிதியையும் ஆயுதங்களையும் சேர்த்து போரை வெல்லவும் முழு நாட்டை தற்கொலைக்கு தள்ளவுமே உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1.3. சிறிலங்காவின் இரட்டைச் சிறகுகள் கொண்ட தமிழ் விரோதப் பிரச்சாரம்

**அவையாவன:**

அ) தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெறுமனே பயங்கரவாத மென்று கூறி, அதற்குத் தேவை இராணுவ நடவடிக்கை யென்றும் அதனை அரசு முன்னெடுப்பதாகவும் கூறுவது

ஆ) புலம்பெயர் தமிழ் மக்களின் அனைத்து அமைப்புக்களும் பயங்கரவாதத்திற்கு பணம் சேர்க்கும் அமைப்புகள் என்று கூறுவது

எவ்வாறு சிங்கள மக்களினால் போரைப்பற்றி முழுமையான உண்மைகளைக் கூறவில்லையென குற்றம்சாட்டப்படும் சிறிலங்கா அரசு, எப்படி உலகிற்கு தமிழர் பிரச்சினை பற்றிய முழு உண்மையை கூறுவார்கள் என எப்படிக் கூறமுடியும்?

ஆகவே இந்தச் சூழ்நிலையில் "உண்மையே" இலங்கை அரசாங்கத்தின் சித்திரவதைக்கும் தாக்குதல்களும் உள்ளாகின்றது. இந்த சோகமான சூழலிலே புலம்பெயர்ந்த தமிழர்கள் சமாதானத்திற்காக முழு உண்மையையும் உலகிற்கு வெளிப்படுத்தும் பிரச்சாரத்தை அதிகரிக்கத் தள்ளப்படுகின்றனர். இதை புலம் பெயர்ந்த தமிழர்கள் போதியளவும் கூர்மையான முறையிலும் செய்கிறார்கள் இல்லையே என்பது எமது தற்போதைய மனவருத்தம். தங்கள் தங்கள் நாடுகளில் உண்மையை அரசாங்கங்களுக்கு உணர்த்த புலம்பெயர்ந்த தமிழர்கள், படித்தவர்கள், தகுதியுள்ளவர்கள் மேலும் ஒருங்கிணைந்த விதமாக செயற்பட வேண்டும் என்று விரும்புகின்றோம். எப்பொழுதும் எம் பக்கம் உண்மை இருக்கும் பொழுது தமிழர் நாம் கூலிக்கு அமர்த்தப்பட்ட அமைச்சர்கள் அல்லது தூதரகங்களில் பணியாற்றும் அரச சேவகர்களுக்கு அச்சமுறவேண்டியதில்லை.

இனப் பிரச்சினையில் ஊடகங்களின் பங்கு மிகவும் மும்முரமானதும் தீர்மானம் செய்வதுமாக அமைந்துள்ளது. முரண்பாட்டை அதிகரிப்பதில் ஊடகங்கள் முக்கிய பங்கை வகித்திருக்கின்றன. உண்மைக்காக சேவை செய்யாது சொந்த நலனுக்காக அரசியல் அல்லது பொருளாதார நலனுக்காக சேவை செய்கின்றன. இருந்தும் இன்று ஒரு சமாதானத் தீர்வைக் காண்பதற்கும் அவை சேவை செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டில் ஊடகங்கள் மும் மொழிகளாகிய சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் இருந்ததன் காரணமாக நாட்டின் ஒற்றுமைக்கும் புரிந்துணர்விற்கும் பணியாற்றவில்லை. மேலும் அவைகளின் மொழியாலும், வடகிழக்குக்கு பிரயாணம் செய்ய முடியாத காரணத்தினாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு ஊடகங்கள் கொழும்பிலே கிடைக்கப்பெறும் தகவல்களிலேயே தங்கியிருக்கின்றன.

வெளிநாட்டு ஊடகங்கள் கொழும்பில் அனுபவிக்கும் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விளங்கிக் கொள்ளும் தமிழர்கள், ஏன் அவர்கள் அரை உண்மைகளையும் பொய்களையும் உருவாக்குகின்றார்கள் எனக் கேட்கின்றனர். தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற அரசாங்க பிரச்சாரத்திற்கு உட்பட்டு தமிழர்கள் சொல்லும் உண்மைகளை புலிகளின் தகவல்கள் எனத் தட்டிக் கழிக்கின்றனர். ஆகையினால் சர்வதேச ஊடகங்களை நாங்கள் வேண்டுவது சுயநலத்திற்காகவோ, பொய்ப் பிரச்சாரத்திற்காகவோ பணிபுரியாது உண்மைக்கும் நீதிக்கும் பணிபுரியுங்கள் என்பதே.

## 4.2 நீதி: அமைதியின் தூண்கள்

நாங்கள் பன்னாட்டு சமூகத்தின் முன்பும் அவர்களின் நீதிமன்று முன்பாகவும் நிற்பதற்கு துணிகின்றோம். நாங்கள் மனமுவந்து எமது வாதங்களை பன்னாட்டு சமூகத்தின் மனச்சாட்சியின் முன் கொண்டுவந்து சமர்ப்பிக்க விரும்புகின்றோம். ஏனெனில் எம்மிடம் எந்த ஒரு மறைக்கப்பட்ட திட்டமோ, மேலாதிக்கமோ, ஆக்கிர மிப்போ, அடக்கி ஆளும் மறைவான செயல் திட்டங்களோ, எந்த மக்கள் மீதோ, நாட்டின் மீதோ ஏற்படுத்தும் நோக்கம் இல்லை.

தமிழ் மக்களின் கோரிக்கைகள், வெளிப்படையானவை. அவற்றை பன்னாட்டு சமூகம் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவை எந்த கற்பனைகளிலோ, தத்துவங்களிலோ அல்லது நாங்கள் உயர்ந்தவர்கள் என்ற பொய்யான வாதங்களிலோ அடியிடப்படவில்லை. மற்ற மனிதர்களுக்கு மேலாக நாம் முன்னுரிமை கோரவில்லை. நாங்கள் எங்கள் பிறந்த நாட்டில் மனித பிராணிகளாகவே வாழ விரும்புகின்றோம். 2000 ஆண்டுகளுக்கு மேல் நாம் அங்கு வாழ்ந்தும் அந்த நாட்டை ஆண்டும் வந்திருக்கின்றோம். பல நூற்றாண்டுகளாக காலனித்துவத்தையும் அனுபவித்திருக்கின்றோம். விசேடமாக ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவத்திற்குப் பின்வந்த கடந்த 6 தசாப்தங்களாக சிங்கள பெரும்பான்மை அரசாங்கத்தின் கொடுமைகளை அனுபவித்து உண்மையை உணர்ந்திருக்கின்றோம். அதாவது எங்களை சிங்களவர்கள் சமத்துவ உரிமையும் மகிமையும் கொண்ட மக்களாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் எம்மையும் எம் பொருட்களையும் அழித்தது மாத்திரமல்ல, எமது கல்லறைகளையும் கோவில்களையும் ஒருவித மரியாதையுமின்றி அழித்து, மக்களை உலகம் பூராகவும் சிதறடித்திருக்கின்றனர். நாட்டில் எஞ்சியிருக்கும் தமிழர்கள் குண்டுகள், பொருளாதாரத் தடைகள், ஊடகத் தடைகள், பாலியல் வன்முறைகள் இவைகளின் மத்தியில் உயிர் தப்பப் போராடுகின்றனர்.

## 4.3 சுதந்திரம்: மனித பிராணிகளாக சொந்த நாட்டில் தன்மானத்துடனும் அந்தஸ்துடனும் வாழும் உரிமை (சுயநிர்ணய உரிமை)

எங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டதால் எங்கள் அந்தஸ்து மிதிக்கப்பட்டதால் எங்கள் நாடு ஆக்கிரமிப்புள்ளாக்கி எம்மை அடிமைத்தனத்துக்குள் முடக்கி இருப்பதால்தான் நாம் சுதந்திரத்தை வேண்டுகின்றோம். இந்த நியாயமான தாகம் கொண்டிருக்கும் எம்மீது எமது அயலவர்கள் எவரும் கோபமும் எதிர்ப்பும் கொள்ள வேண்டியதில்லை. காடைத்தனம், அரச பயங்கரவாதம் என எம்மீது திணிக்க வேண்டியதில்லை. உரிமைகள் எங்களுடையது. எங்களுடைய உரிமைகளை மற்றவர்களும் ஏற்றுக்கொண்டு மதிக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. தமிழர்களுக்கென்று நாம் எதையும் முன்னுரிமையாக வேண்டுவதில்லை. எமது சிங்கள சகோதரர்கள் விரும்புவதையே நாமும் விரும்புகின்றோம். ஒரே நாட்டின் எல்லைக்குள் வெவ்வேறான இனங்கள் நண்பர்களாக, அயலவர்களாக ஒருவரை ஒருவர் அடிமைகளாக்காது இருக்க முடியாதா?

உலக நாடுகள் ஐ.நா.வின் வருடாந்த நிறைவு விழாவில், உரத்து விழாக்கீதம் இசைத்துக்கொண்டிருக்கையில் அந்நாடுகளின் எல்லைகளுக்குள் வாழ்கின்ற சில ஒடுக்கப்பட்ட இனங்கள் மேலாண்மைக்குள்ளாக்கப்பட்டு வேதனைகளாலும் வருத்தங்களாலும் ஓலமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வேதனை ஓலங்கள் புதிய நாடுகள் பிறப்பிற்கு முந்திய ஓலங்கலாக நாங்கள் கணிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பன்னாட்டு சமூகத்திடமிருந்து நாம் எதனை எதிர்பார்க்கிறோம்

பன்னாட்டு சமூகத்திடமிருந்து நாம் நிச்சயமாக எதிர்பார்ப்பது, வல்லரசுகள் தங்கள் ஆயுத பலத்தைப் பாவித்து தங்களின் ஆதிக்கத்தையும் அடக்குமுறையையும் திணிக்காதிருப்பதும் ஒரு மக்களுக்கு எதிராகவோ அரசாங்கத்துக்கு எதிராகவோ பழிவாங்காதிருப்பதுமாகும். நாம் எதிர்பார்ப்பது, அரசாங்கத் தலைவர்கள், சர்வதேச அமைப்புக்கள், மறை அமைப்புக்கள், மனிதாபிமான அமைப்புக்கள் போன்றவைகள் பலம் குறைந்த இனங்கள்மீது தங்களுடைய பொறுப்பை மனச்சாட்சிக்குரிய விதமாக நிறைவேற்றுவதேயாகும்.

## 5.1 இராணுவத் தலையீடு புரியுமாறு, நாங்கள் எமக்குச் சார்பாகத்தானும் கேட்கவில்லை!

நாம் ஏற்கனவே இரு இராணுவத் தலையீடுகளினால் பாதிப்புள்ளாகியுள்ளோம். ஒன்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வல்லரசுகள் கொடுத்த உதவியினாலும் மற்றது இந்திய அமைதி காக்கும் படையின் இராணுவத் தலையீட்டினாலும் ஆகும். எனவே இனி மூன்றாவது ஒரு இராணுவத் தலையீட்டை நாம் விரும்பவில்லை. இந்திய அமைதி காக்கும் படை, எம்மைக் குண்டுகளிலிருந்தும் பொருளாதாரத் தடைகளில் இருந்தும் பாதுகாக்கவென்று கூறிக்கொண்டு வந்தது. ஆனால் மிக விரைவில் அந் நோக்கத்தைக் கைவிட்டு எங்களுக்கெதிரான போரில் ஈடுபட்டதால் அப்பாவித் தமிழர்களும் இந்தியப் படையினரும் மடிந்தனர். எனவே இந்திய இராணுவத் தலையீடு மனிதாபிமானத்தினால் தூண்டப்பட்டதோ அல்லது எமது உரிமைக்காக தன்னலமற்ற கரிசனையானதோ அல்லாது அவர்களுடைய சுயநல அரசியல் இலாபத்திற்காகவே நடாத்தப்பட்டது.

அண்மையில் பால்கன் குடாவில் இடம்பெற்ற இராணுவத் தலையீடுகள், பன்னாடுகளின் மறைக்கப்பட்ட நோக்கங்கள் என வெளிச்சத்திற்கு வந்தன. ஒரு பக்கத்தில் சேர்பியன் படைகள் கொசவோ மக்களுக்கு எதிராக நடத்திய கொடுமைகளையும் அதேபோல் இலங்கை இராணுவம் வடகிழக்குத் தமிழர்களுக்கு எதிராக பல தசாப்தங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த கொடுமைகளையும், மறுபக்கத்தில் சர்வதேச கரிசனை, தலையீடு வெவ்வேறு விதமாக இருப்பதையும் காண்கின்றோம். இதிலிருந்து வெளிநாட்டு சக்திகளின் அணுகுமுறையில் முன்னுக்குப்பின் முரணான இரட்டைவேடம் தெளிவாகின்றது.

கோசவோ மீது யூகோசிலேவியா உரிமை பாராட்டுவது ஒருபக்கமிருக்க கோசவாவில் இனப் படுகொலைகளைத் தடுக்கும் பொருட்டு நாட்டோ இராணுவத் தலையீடு செய்து இதன்மூலம் அங்கு நிலைமை மேலும் மோசமடைந்து மிகப்பெரிய பேரழிவு கண்டது. இதனைப் பார்க்கும் பொழுது "சத்திர சிகிச்சை வெற்றி, நோயாளி பிழைக்க மாட்டான்" என்ற கதையாகவே முடிந்தது. மிகப் பெரிய ஆயுத தளபாடங்களைக் கொண்ட வல்லரசுகளுக்கும், "நுளம்பைக் கொல்வதற்கு சுத்தியலையும் தூக்குவார்கள் அத்துடன் கையில் சுத்தியலை வைத்திருப்பவனுக்கு எல்லா இடங்களிலும் அடிக்க வேண்டிய ஆணிகள் இருப்பதாகத் தோன்றும்".

வெளிநாட்டு இராணுவத் தலையீடுகள் என்பது எமக்கு ஏற்பட்ட நேரடி அனுபவங்கள் மூலம் பெற்ற உண்மை. அவர்கள் இராணுவத் தலையீடுகளை மேற்கொள்வதெல்லாம், தங்களின் சொந்தத் திட்டங்களை நிறைவேற்றவே. அத்துடன் தமக்கு ஏற்ற சில நியாயங்களை வைத்து, அவ்வாறான இராணுவ நடவடிக்கைகளுக்குக் காரணம் கூறுவார்கள். எனவேதான் வெளிநாட்டு இராணுவத் தலையீடுகளை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. அதுமட்டுமன்றி "அமைதிக்கான யுத்தம்" என்று சிறிலங்கா அரசு கூறுவதோ, அல்லது வல்லரசுகளின் இராணுவ தலையீடு மூலம் தீர்வு காணமுடியும் என்றோ நாம் நம்பவில்லை. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கியதற்குக் காரணம், அரசின் தொடர் நடவடிக்கையான அரச பயங்கரவாதமேயாகும். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர, வன்செயலை ஆரம்பித்த அரசாங்கமே முயற்சிகளைத் தொடங்க வேண்டும்.

வெளிநாடுகளின் தலையீடு வேண்டாமென்பதால் யுத்தம் தொடர வேண்டுமென்றோ, பன்னாட்டுச் சமூகம் இனப்பிரச்சினைக்கு எவ்வித பங்களிப்பும் செய்யாது சிறிலங்காவில் நிலைமை இப்படியே தொடர வேண்டும் என்பதோ அல்ல. சிறிலங்காவுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்ட சர்வதேச சமூகம், குறிப்பாக வெளிநாட்டு வல்லரசுகள் பல்வேறு நியாயபூர்வமான–நீதியான, பாராட்டுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, சிறிலங்கா அரசையும் தமிழீழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளையும் இராஜதந்திரத்தின் ஊடாக முரண்பாடுகளைக் களைந்து சமரச முடிவைக் காணவைக்கவேண்டும். இதனை, எத்தகைய சுயநலப் பின்னணியுமின்றி திடமாக முன்னெடுக்க வேண்டும். நாம் அரசியல் நம்பிக்கையை இழந்து விடவில்லை. அத்துடன் உண்மையாகவும் நீதியாகவும் அறிவார்ந்த முறைகளிலும் முடிவு காணவே விரும்புகின்றோம்.

## 5.2 இராணுவ முறையற்ற அரசியல் வழியில் அமைதித் தீர்வு காண்பதற்கு அழுத்தம் கொடுக்குமாறு பன்னாட்டு சமூகத்திடம் வேண்டுகின்றோம்.

ஒரு தேசத்தின் ஒருமைப்பாடு, தனித்துவம், தன்னாட்சி என்பன சேர்பியரினால் சேர்பியாக்குள்ளேயே வைத்திருக்க முடியாதென்பதை நேட்டோ அமைப்பு நாடுகளின் தலையீடு எமக்கு காண்பித்தது. சேர்பியா தனது தேசியத்தை கோசவா வாழ் அல்பேனிய மக்கள் மீது திணிக்க முடியாதிருந்தது. மேலும் பிரதான வல்லரசுகள் முடுயு எனும் கோசவா விடுதலை முன்னணியை நேட்டோ நாடுகள் பயன்படுத்தி சேர்பியாக்கு எதிரான யுத்தத்தை நடத்தியது. இதன் மூலம் சர்வதேசத்தினதும் வல்லரசுகளினதும் மனச்சாட்சிகளுக்கு விடுக்கும் கேள்வி, நீண்ட காலமாக தமிழர்கள் ஒடுக்கப்பட்டு மரணங்கள், அவலங்கள் எல்லாவற்றையும் சிங்கள தேசியத்தின் சார்பாக சிறிலங்கா அரசிடம் அனுபவித்த தமிழ் மக்களிடம் எதை சர்வதேசம் எதிர்பார்க்கின்றது?

தமிழர்களாகிய நாம் அரசுக்கு எதிராக புரட்சி–வன்செயல்களில் ஈடுபட வேண்டும் என்று கருதவில்லை. அரசு நீண்ட பயங்கர வன்செயல்களில் ஈடுபட்டு வருதால் பதில் வன்செயல்களை ஊக்குவித்தது. இதற்கு அரசினால் பாதிக்கப்பட்ட வன்செயல்களுக்கு ஆளாக்கியவர்கள் தள்ளப்பட்டனர். தனது சுய பாதுகாப்பின் பொருட்டு, மேற்கொள்ளும் ஒருவரின் நடவடிக்கையை யாராலும் தடுத்துவிட முடியாது. எனவேதான் வன்செயல்களால்–வன்செயல்களைத்தான் வளர்க்க முடியும். வன்செயல்கள் மூலம் எந்தத் தீர்வையும் நெருங்க முடியாது. நாங்கள் கூறுவது போர் மற்றும் வன்செயல்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். ஏனெனில் இதனைத் தொடரும் பொருட்டு ஊக்குவிப்பவர்கள் நெருப்பினுள் நெய்யூற்றி விளையாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாம் பன்னாட்டு சமூகத்திற்கு விடுக்கும் செய்தி, எங்கள் நாட்டில் வன்செயல்கள், போர்கள் நடைபெற உதவாதீர்கள் என்பதாகும். பயங்கரவாதத்தை எதிர்ப்பதெனக் கூறிக்கொண்டு நடைபெறுவது எவை எனக் கண்டறியுங்கள். கையில் சுத்தியல் வைத்திருப்பவனுக்கு எல்லாமே ஆணியாகத் தெரிவது போல சுத்தியல் கொண்டு நுளம்பைக் கொல்ல முடியுமா? சிறிலங்கா அரசுக்கும் இந்திய இராணுவத்துக்கும் தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள். எனவே எந்த ஒரு இராணுவ நடவடிக்கையும் நாட்டின் தற்கொலைக்கு ஒப்பாகும்.

## 5.3 முரண்பாட்டைத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்த அனைத்துலகத்திடம் இருந்து மேலும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை நாம் வேண்டுகின்றோம்.

அமைதி காணும் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சிகள்பற்றி கவனிக்கும் பொழுது தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக காடைத்தனங்கள், குண்டுவீச்சுக்கள் ஆகியவற்றுக்கு முகம்கொடுத்து வந்ததன் விளைவாக தனிநாட்டுக் கோரிக்கைக்கு தள்ளப்பட்டதுடன், ஆயுதங்கள் தாங்கவேண்டிய தேவை ஏற்பட்டதென்பதையும் காணலாம். ஒரு வருடத்திற்கு முன்னர் தமிழர் மீண்டும் அமைதிப் பேச்சுக்கு தமது நிலைப்பாட்டை வெளியிட்டார்கள். ஆனால் அதற்கு பன்னாட்டு மத்தியஸ்தம் ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்கள். இன்று இந்தப் போரை முன்னெடுக்கும் அரசு பொருளாதார உதவிக்கு கையேந்திக் கொண்டு, முற்றாக பேச்சுவார்த்தை நடாத்த மறுத்ததுடன் மூன்றாவது முறையாகவும் மத்தியஸ்தத்தை நிராகரித்தது. சில நாடுகள் அமைதிப் பேச்சு நடைபெற உதவிடத் தாமே முன்வந்தனர். இதையும் அரசு எதேச்சதிகாரமாக நிராகரித்தது. அரசு கூறுவது, "ஆயுதங்களும் ஆளணிகளும் வழங்கி நிதிஉதவியளியுங்கள் ஆனால் போர்ப்பிரதேசங்களுக்குள் நுழையாதீர்கள். உங்கள் அமைதி ஆலோசனைகளையும், மத்தியஸ்தத்தையும் உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியது. அரசின் செயல்கள் போருக்கு உதவி செய்பவர்களின் கண்களைத் திறக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு கூடுதலாக உதவி வழங்கும் நாடுகள் சமாதானத்திற்கு உரிய பங்கை அளிக்க முடியாதென்பது நம்பத்தகாது. சமாதானத்திற்கான அரசியலை மும்முரமாக நடத்த உரிய நல்லெண்ணமும் வளங்களும் எவ்வளவு இருக்கின்றன? பெரும் தொகையான பணம் அழிவு ஆயுதங்களை வாங்குவதில் பாவிக்கப்பட்டது. இப்பணம் சமாதானத்திற்கும் நல்லெண்ணம் இனஉறவுகளை வளர்ப்பதற்குப் பாவிக்கப்பட்டால் சமாதானம் ஏற்படுவதற்கு கூடிய வசதிகள் தோன்றும்.

## 5.4 சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதை பன்னாட்டு சமூகம் கேள்விக்குறிக்கு உட்படுத்தி மீளாய்வு செய்து உரிய மாற்றங்களை செய்ய வேண்டுமென்று கேட்கின்றோம்.

இறைமை நாடுகளின் வெளிவிவகார அரசியல், அவர்களுக்கு இடையிலே ஏற்படும் நட்புறவு, ஒத்துழைப்பு, உதவி இவைகள் போன்ற சமூக-பண்பாட்டு பொருளாதார நலன்களைப் பேணுவதினால் நிர்ணயிக்கப்படுகின்றதென்பது நீதியும் விளங்கக் கூடியதுமாக இருக்கின்றது. பல்வேறு மேற்கு நாடுகள் சிறிலங்கா அரசின் சமூக-பொருளாதார வளர்ச்சிகளுக்கு உதவிகள் வழங்கியும், நல்லெண்ணம் காட்டியும் வருவதை நாமும் புரிந்து கொள்கிறோம். ஆனால் ஒரு நாடு தன்னகத்தே உள்ள ஒரு இனத்தை தனது இரட்டை வேடத்துடன் ஒழுக்கமற்ற முறையில் ஒரு நீண்ட அடக்குமுறைக்குள் வைத்திருப்பது எம்மை துக்கத்திற்கும் வெட்கத்திற்கும் உள்ளாக்குகின்றது.

ஒரு நாட்டின் ஒரு பகுதியில் இருக்கும் மக்களை பாதுகாக்க முடியாத அரச படைகள், மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு எதிராக வன்முறைகளையும் பாலியல் பலாத்காரங்களையும் கொலைகளைச் செய்கின்றது. பல தசாப்தங்களாக ஜனநாயக வன்முறையற்ற போராட்டங்களை அடக்கியதனால் மக்கள் ஆயுதத்தைக் கையில் ஏந்தி அரச படைகளை எதிர்க்கும் பொழுது, அப்படைகளுக்கு உதவி செய்துகொண்டு, அப்படைகளினால் தாக்கப்பட்டவர்களுக்கு மனித உரிமைகளைப் பற்றியும் வன்முறைகளைப் பற்றியும் போதிப்பது சரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்கா அரசின் இராணுவ உதவிகேட்டு விடுத்த கோரிக்கை என்பதன் உண்மைத் தன்மையும் அதன் பெறுமானமும் என்ன? அதனைத் தீர்மானிப்பது அரசின் பிரசாரத்தின் மூலம் மட்டுமா? வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் இராஜதந்திரிகளையும் யுத்தப் பாதிப்புப் பிரதேசங்களுக்குள் செல்ல முடியாது தடைவிதித்து, கதவுகளை மூடிக்கொண்டு நடத்துகின்ற போர் பற்றிய தனது பிரச்சாரங்களைச் செய்து, போர் உதவிகள், ஆயுதங்கள் வழங்குமாறு வல்லரசுகளை ஓர் அநியாய யுத்தம் நடாத்த அதன் செலவுகளுக்கு உதவுமாறு கேட்கின்றது. இந்த வெளிநாட்டு வல்லரசுகளால் உண்மைகளை தங்கள் இராஜதந்திரிகள் மூலம் அறியமுடியாது தடுக்கப்படுவதும் அல்லது அதில் ஈடுபடுபவர்களுடன் சந்திப்பை ஏற்படுத்த முடியாதும் உள்ளது. இந்நிலையில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடப்பனவற்றை எப்படி இவர்கள் கணிப்பார்கள். உண்மையற்ற செய்திகளை கேட்பதும் தங்களுடைய நாடுகளில் நடக்கும் வன்முறை அல்லது தேசியப் பாதுகாப்பிற்கு எதிரான செயல்கள் போன்று இலங்கையில் நடப்பவற்றையும் கணித்துக் கொள்கின்றனர். இந்த அடிப்படையில் நிதியையும் ஆயுதத்தையும் ஆட்களையும் கொடுத்து இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் மக்கள் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சொல்லி நசுக்குவது சரியா?

நாங்கள் பன்னாட்டு சமூகத்தைக் கேட்பதெல்லாம், முழுமையாக உண்மைகளைப் புரிந்து முரண்பாடுகளைத் தெரிந்து, நீதி நியாயத்துடன் ஒழுக்கத்துடன் முடிவுசெய்து அமைதிகாண உதவிபுரிவதா அல்லது போருக்கு உதவுவதா? இந்நிலையில் வெளிநாடுகள் எதிர்கொள்ளும் கேள்வி என்னவென்றால் சிறிலங்கா அரசாங்கம் ஏன் ஊடகத் தடையை நீடித்துத் தொடர்கின்றது, ஏன் வெளிநாட்டவரை போர்க்களத்தைத் தரிசிக்காது அல்லது புலிகளுடன் பேசாது தடுக்கின்றனர், ஏன் பெருந்தொகையாக காணமற்போனவர்கள் அல்லது பாரிய புதைகுழிகள் பற்றி விளக்கம் கொடுக்காதுள்ளனர், ஏன் வெளிநாட்டு நிதியும் ஆயுத உதவியும் வேண்டும் ஆனால் சமாதானத்திற்கான உதவியை வெளிநாடுகளிலிருந்து பெற மறுக்கின்றனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.5 சிறிலங்காவில் நிலவும் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கேள்விக்குள்ளாக்க வேண்டுமென்று சர்வதேசத்தை வேண்டுகின்றோம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம் தனது சொந்த மக்களையே குண்டுகளினாலும் செல்வீச்சுக்களினாலும் அழித்து, அவர்களைப் பட்டினிக்குள் தள்ளி, அவர்களுடைய அரசியல் விருப்புக்களை நிராகரித்து அவர்களைப் பணிய வைத்து தாங்கள் சொல்லுவதையே ஏற்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் பொழுது உலக ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் எங்கே?

ஒரு அரசாங்கம் நேர்மையும், சுதந்திரமுமான தேர்தலுக்கு உரிய விழுமியங்களை உசாதீனப்படுத்தி உடகத் தடையினால் மறைத்துவிட்டு மக்களின் இறைமையைப் பற்றிப் பேசும்பொழுது உலக ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் எங்கே?

இலங்கை அரசாங்கத்திற்கு நிதியாலும் ஆயுதத்தாலும் உதவிசெய்யும் நாடுகள், போலித்தனமாக சில மனித உரிமைகளை கண்டிக்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் உதவியில்லாது எதிர் நடவடிக்கை எடுக்கும் பொழுது அவற்றை மனித உரிமை மீறல்களாக கண்டிக்கின்ற நாடுகள் ஏன் சிறிலங்கா அரசாங்கத்தின் நீண்ட அடக்குமுறையைப் பாராது இருக்கின்றனர்?

பன்னாட்டுச் சமூகம் தனித்து சில நாடுகள் தங்கள் அமைதியான போக்கினாலும் செயலற்ற தன்மைகளாலும் நடு நிலைமை என்றுகூறி சிறிலங்கா அரசுக்கு உதவிசெய்து சிறிலங்கா ஒரு சுதந்திர ஜனநாயக நாடு என்றும் அங்கு சுதந்திரம், அரசு, நீதி நிலவுவதாகவும் எண்ணுகின்றார்கள். ஆனால் யதார்த்தம் என்பது, அங்கு வேறு.

சிறிலங்கா அரசு, தாக்குதலே சிறந்த பாதுகாப்பு எனக்கருதி, ஜனநாயகம், மனிதஉரிமை என்ற எலும்புக்கூட்டை அலுமாரிக்குள் மறைத்துக் கொண்டு, மிகப்பெரிய வார்த்தை ஜாலங்களை பன்னாட்டு அரங்குகளில் பசப்பிக் கொண்டு, ஜனநாயகம் உலகப் பயங்கரவாதம் பற்றி கதையளக்கின்றது. கோசோவோவில் நேட்டோ தலையிட்டபோது சிறிலிங்கா அரசாங்கம் தாமதித்தே கருத்து வெளியிட்டது ஒரு உண்மையைத் தெளிவாக்குகின்றது. அதாவது சிறிலங்கா ஜனாதிபதி, தலைவர் மிசோலோவிச்சுக்கு மிக நெருங்கியவர். வெளிவிவகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கொசோவோவில் நடக்கும் போராட்டத்தை மிசோலோவிச் பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்தும் போராட்டமாக உலகம் நம்ப வேண்டும் என்று கூறியது. பன்னாட்டு சமூகம், அதன் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் என்பன மீண்டும் மீண்டும் பொய்களைக் கூறிவரும் சிறலங்காவை, தனது நாட்டிற்குள் வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ளுமாறு கூறவேண்டும். ஒவ்வொரு நாடும் தன்னகத்தே ஒழிப்பு மறைப்பின்றி கூடிய ஒழுங்கை ஏற்படுத்தி பொய்களை கூறுவதை பன்னாட்டு சமூகமும் அதன் அமைப்புகளும் தடுக்க வேண்டும். வறிய மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், பலவீனமான மக்கள் இன்னும் அங்கீகரிக்கப்படாத இனங்கள் போன்றோர் சர்வதேசத்தில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு துரோகம் செய்யாதிருக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தைக் கேட்கின்றோம்.

## 5.6 அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கான அனைத்து உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும் என நாம் கேட்கிறோம்

16 வருடங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தம். உலகில் இன்று நடைபெறும் மிக நீண்ட போர் என்பதும், இதில் 60000 மேற்பட்ட உயிர்கள் அழிக்கப்பட்டன என்பதும் வடக்கு, கிழக்கில் மிகப் பெரிய அளவில் பொருட் சேதங்கள் அழிவுகள் ஏற்பட்டும், இன்னும் முற்றுப்பெறவில்லை. அழிவுக்கான அடையாளம் மீண்டும் காணப்படுகின்றது. இராணுவத்தின் எண்ணிக்கை பத்து மடங்காகப் பெருகியுள்ளது. இராணுவச் செலவு பல்லாயிரம் கோடியாய் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு உதவிகளில் தங்கியுள்ள சிறிலங்கா இவ்வருட உதவியாக 850 மில்லியன் டொலர் கடனாகப் பெற்று அதில் 30 விழுக்காடு பொருளாதாரத்தை போருக்குச் செலவிட்டது. இப்பாரிய தொகையை பெறமுடிந்திருப்பது அரசின் பிரச்சாரத்தை நம்பிய உதவி வழங்கும் நாடுகள் "பயங்கரவாதத்தை எதிர்த்து நடாத்தப்படும் போர்" என்றும் அரசின் "அரசியல் தீர்வுக்கு உட்பட்டதென்றும்" அதனை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரித்தால் மட்டுமே அமைதித் தீர்வை இனப்பிரச்சினைக்கு காணமுடியும் என்றும் கூறி, போர் அவசியமாகும் என உதவி அளித்தார்கள். எனவே இதன்மூலம் வல்லரசுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசுக்கு ஊக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து அமைதிக்கான போரை மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடாத்த யுத்தப் பெட்டியை பணத்தால் நிரப்பியுள்ளனர். ஆயுதங்கள், பயிற்சிகள் என வழங்கியுள்ளனர். இந்நிலையில் பன்னாட்டுச் சமூகத்தை நாம் போருக்கான ஊக்கங்கள், உதவிகள் என அனைத்தையும் நிறுத்துங்கள் என வேண்டுகிறோம்.

இன்று கேட்கப்படும் மிகப்பெரிய கேள்வி, தெரிவு செய்யப்பட்ட இராணுவத் தலையீடுகள் மூலம் முரண்பாடுகளுக்கு தீர்வு காணமுடியுமா என்பதே. ஐரோப்பாவில் இடம்பெற்றவை அமைதித் தீர்வுக்கு வழிவகுத்துள்ளதா என்பதுதான். அடக்குமுறையுள்ள அரசுக்கு ஆயுத உதவிகள் வழங்குவது அமைதி காண வழிகாட்டுமா? பிரதான வல்லரசுகள் அமைதிக்கு எதனையும் செய்வது முடியாதெனின் நாம் கூறவிரும்புவது, நிலைமையை மோசமாக்கும் எதனையும் செய்யாதீர்கள் என்பதுதான்!!

## 5.7 நாம் விடுக்கும் வேண்டுகோள்கள் சர்வதேசத் தலைவர்களின் நேர்மையான மனச்சாட்சியை நோக்கியே!

மனிதர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களுக்கே பணிபுரிவோம் என்கின்ற தலைவர்களான உங்களுக்கு இறைவனின் நாமத்திலே நாம் விடுக்கும் வேண்டுகோள், மக்களின் துயரம் நிறைந்த கண்ணீர்க் குரல்களே. உங்களுடைய மனச்சாட்சிக்கு செவிமடுத்து உண்மையையும் நீதியையும் தீர்மானிக்கும் விழுமியங்களாக உங்கள் கணிப்பில் வைத்திருங்கள். நீங்கள் செய்யும் தீர்மானங்களும், நீங்கள் தேர்ந்தெடுக்கும் நண்பர்களும் போரை வளர்க்காது, சமாதானத்தை ஏற்படுத்தவும், இழிவான அரசியலை நடத்தாது உண்மை, சுதந்திரத்தை ஊக்குவிக்கவும் செய்வனவாக.

## 5.8 தமிழ் அகதிகளை உங்கள் நாடுகளில் மனிதாபிமானத்துடன் நடத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்

இராணுவ அட்டூழியங்களின் விளைவாக, சிறிலங்காவிலிருந்து 1983 இனப்படுகொலைகளுக்குப் பின்னர், ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேறினார்கள். தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டும், விற்பனை செய்தும் எவ்வித விலை கொடுத்தும் வெளியேறினார்கள். இராணுவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளிலிருந்து தம்மைக் காக்கும் பொருட்டு, எல்லா வழிகளையும் பயன்படுத்தி வெளியே சென்றார்கள். சிறிலங்கா கடற்படைகளால் கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் எத்தனை ஆயிரம் மக்கள்? எத்தனை ஆயிரம் பேர்கள் வழக்கு மன்றங்கள் முன் கொண்டுவரப்பட்டு சிறைப்படுத்தப்பட்டனர். எத்தனை நபர்கள் வள்ளங்கள், தோணிகளில் அதிகமாக ஏற்றப்பட்டு நீரில் மூழ்கி இறந்து, மறைந்தனர்? இவ்வாறு ஓலமிட்டு மறைந்த மக்களின் குரல்கள் சிறிலங்காவை விட்டு வெளியேறும் முயற்சிகளினால் எழுந்தவை, அவை உரக்க ஒலித்துக் கேட்பதெல்லாம் சிறிலங்காவில் நீதி வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

உங்கள் நாடுகளுக்குள் தப்பி வந்துசேர்ந்த மக்களுக்கு நீங்கள் தயவு காட்டினீர்கள். தொடர்ந்து அதிகரிப்பு கண்டு வெளிநாட்டவர்கள் உங்கள் நாட்டில் அதிகமாகக் கண்டீர்கள். அதன் மூலம் முரண்பாடுகள் பலவும் எழுந்தன. அவை உங்களுக்கு சுமைகளாக மாறின. நீங்கள் முடிந்த சகல வழிகளிலும் சிறிலங்கா அரசின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்களைத் திருப்பி அனுப்ப, உங்கள் நாட்டில் உள்ள சிறிலங்கா தூதரகத்தின் ஆதரவையும் பயன்படுத்தினீர்கள்.

அவர்கள் தங்கள் வாழ்வைப் பற்றியோ, அல்லது தமது எதிர்காலத்தைப் பற்றியோ அறிய முடியாது, வாழ்வதற்கு மிக அவதியும் அவலங்களும் உடையவர்களாக காணப்படுகின்றார்கள். இவை அனுதாபங்களைப் பெறுவதற்காக, உங்கள் இதயங்களைத் தொடும் பொருட்டுக் கூறவில்லை. ஆனால் அவை உங்கள் மனச்சாட்சியில் உண்மை, நீதி, மனித கௌரவம் பற்றி உணர்த்த வேண்டும் என்பதன் பொருட்டாகும்.

உங்கள் கதவுகளைத் திறந்து தற்காலிக உதவிகளை வழங்கியதற்காக நாம் அனைவரும் நன்றியுடையவர்களாக உள்ளோம். நாங்கள் உங்கள் கவலைகள் பிரச்சினைகள் பற்றியும், அவற்றை நீங்கள் நிரந்தரமாக அனுபவிப்பது பற்றியும் அறிந்துள்ளோம். சிறிலங்காவிற்கு திருப்பி அனுப்பும் வேளைகளிலும் தமிழர்களை மனிதாபிமானத்துடன் நடாத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அண்மைக் காலங்களில் வலிந்து திருப்பியனுப்பியவர்கள் சிறைவைக்கப்பட்டு தற்கொலை புரிந்து கொண்ட செய்திகள் சிறைகளில் இருந்து வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை, புலம்பெயர் தமிழர்கள் தங்கள் இனப்படுகொலைகளுக்கு அச்சுறுத்தலானவர்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதிகளை வழங்குகிறார்கள் என்றும், இது தமக்கு ஆபத்தானதென்றும் கருதுகிறது. ஆனால் இவை தனது தமிழ் விரோதக் கொள்கைகளினாலும், செயல்களினாலும் என்று காண்பதில்லை. அவர்கள் நாட்டில் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் நாடு திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்தத் தயாராக இல்லை. அவர்களை இங்கு வரவழைத்து அடிமைப்படுத்தி அடக்கியாளவே விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்களை நீங்கள் அங்குள்ள அடக்குமுறை கொடுமையாளர்க ளிடம் கையளிப்பதற்காக திருப்பி அனுப்பி தண்டனை கொடுக்க வேண்டுமா? அவர்களைத் திருப்பி அனுப்புவதில் சிறிலங்கா தூதரகங்களின் உதவியைப் பெறுவது உங்கள் மனச்சாட்சிக்கு ஏற்றதா?

## 6. மனித உரிமை அமைப்புக்களின் மனச்சாட்சிக்கு ஒரு வேண்டுகோள்

பன்னாட்டு அரசுசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய மனிதாபிமான உதவிகளுக்கும் சேவைகளுக்கும் நன்றிகூறுகின்றோம். இந் நிறுவனங்கள் மனிதாபிமான சேவைகளை ஒருமுகப்படுத்தி, போர்மூலம் பாதிப்படைந்த மக்களுக்கும் வன்செயல்களால் பாதிப்புற்றவர்களுக்கும் அரசின் தடைகளினால் அவதியுறும் மக்களுக்கும் உதவினர். இந்த அமைப்புகள் இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகித் தவிக்கின்றனர். தமது பணியைச் செய்வதில் சிரமப்படுகின்றனர். அவர்கள் பயங்கரவாதிகளுக்கு உதவிசெய்வதாகவும் சந்தேகிக்கப்படுகின்றனர். அவர்கள் எங்கள் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்யவேண்டும் என விரும்புகின்றோம்.

அரசு மக்களின் உரிமைகளை வழங்க மறுத்து நீண்ட போரையும் வன்செயல்களையும் தொடர்கிறது. அதன் சட்டத்தின் காவலர்களாகிய ஆயுதப்படைகள் செய்யும் வன்செயல்களும், அதற்கு பதில் வன்செயல்களும் இடம் பெறுவது அரசின் தொடர் வன்செயல்களால் என்பது, நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்ளப்பட வேண்டியது. அதனைக் கண்டறிந்து பன்னாட்டுச் சமூகம் கண்டனம் தெரிவிக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான போர்களில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு சென்றடையும் மனிதாபிமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளன. இப்போரில் ஏன் மக்கள் பாதிப்புற்றார்கள் என்று அறியாது தங்களின் சேவையை அநீதிகளின் காரணங்களை அறிவதைத் தவிர்த்து இரக்கத்தின் எல்லைகளுக்குள்ளேயே செய்கின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான உதவிகள் முரண்பாடுகளால் ஏற்பட்ட விளைவுகளில் இருந்தே தொடங்குகின்றன. ஆனால் குணப்படுத்துவதையும் சமாதானம் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட பன்னாட்டு அமைப்புகள், அப்படி தொடங்குவது சரியல்ல. அவ் அமைப்புகள் அந்த முரண்பாடுகளைப் பற்றிய முழு உண்மைகளையும் அறிந்து தங்களுடைய உதவியை அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மனிதாபிமான விளைவுகளுக்கு மாத்திரம் வழங்கினால் போதாது. அவர்களுடைய உதவி போருக்கு உதவி செய்வதிலும் பார்க்க சமாதானத்தைக் கட்டுவதற்கு செலுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களுடைய நியாயமான கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி இவைகளுக்காக நடக்கும் போராட்டத்தை தமிழ் பயங்கரவாதம் என அவசரமாகவும் பொறுப்பற்ற முறையிலும் முத்திரை குத்திவிட்டு அரசாங்கத்திற்கு நிதி, ஆயுதம் போன்றவற்றை வழங்குகின்றார்கள்.

## 7. மதங்களின் மனச்சாட்சிக்கு ஒரு விண்ணப்பம்

மதங்கள் உன்னதமான விழுமியங்களை மனித மனச்சாட்சியில் விதைத்து, வளர்த்து நல்வழிக்கு மனிதரை நடத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால் அவை தமது அமைப்பு தன்மைக்கும் அதிகாரத்திற்கும் தீவிரத் தன்மைக்கும் சிலவேளைகளில் அடிமையாகி விடுகின்றன. சிறிலங்காவின் இன முரண்பாட்டுச் சூழலிலே ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான மக்கள் புரிந்துணர்வை எப்படி மதங்கள் வளர்க்கின்றன என்பதைப் பற்றி ஒரு முக்கிய ஆய்வு செய்யப்பட வேண்டும். இன உணர்வுகளும் பொய்யான தேசியமும் எவ்விதமாக மனித மத விழுமியங்களை புறக்கணித்திருக்கின்றன என்பதைப் பார்த்திருக்கின்றோம். இப்போக்கு மதங்களுக்கு சாவு மணியடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மறைகளின் நாடாளுமன்ற மாநாடு 28.08 தொடக்கம் 04.09.1993 வரை சிக்காக்கோ நகரில் நடைபெற்றது. அம்மாநாட்டில் ஏகமனதாக கூறப்பட்டதென்பது, ஓர் சிறந்த உலகு ஏற்பட தகுந்த நடைமுறையாக மறைகளின் அடிப்படை ஒற்றுமையாக நீதி, நியாய ஒழுக்க பெறுமதி கொண்டதாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். மறைகள் உண்மை, நீதி, அமைதி ஆகியவற்றின் மதிப்பை மக்களிடையே நிலைநாட்டும் பொருட்டு பணிபுரிய வேண்டும். இவற்றை நாடுகள், இனங்கள் மத்தியில் இவை மறைகளாக உருவாக்கப்பட்டன–வளர்க்கப்பட்டன–காக்கப்பட்டன. எனவே அடிப்படையாக மறைகளிடையே உள்ளது. மக்களிடையே அமைதி காண்பதற்கு ஓர் முன்னோடித் தேவையாகும். இவற்றை மறைகள் முன்னெடுப்பதற்கு, உண்மை, நீதி என்பன உடையதாக முதலில் பலவீனங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

இந் நூற்றாண்டின் நிகழ்வுகளில் கூடிய விதமாக நாடுகளிலும் மதங்களிலும் எப்படி இரட்டைவேட ஒழுக்கமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவதானிக்கின்றோம். மறை சார்பற்ற நாடுகளும் அதன் அரசியல் தலைவர்களும் தங்களுடைய சொந்த சுய நலத்தையே நோக்கமாகக் கொண்டு, முடிவுகளை எடுக்கின்றனர். இந்நிலையில் மனித வர்க்கம் ஒரு வன்முறையைத் தடுக்கவும் அதற்கெதிராகக் குரல் கொடுக்கவும் உண்மைக்கும் நீதிக்கும் துணிவாக சாட்சியம் அளிக்கவும் உலக மதங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

இக்கண்ணோட்டத்தில்தான் இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதில் மதங்களின் பங்கை நாங்கள் கணிக்கின்றோம். உலகத்தின் நான்கு பெரிய மதங்களும் இத்தீவில் உள்ளன. ஆனால் அரசியல் இலாபத்தைத் தேடுபவர்களாலும் மத அடிப்படைவாதிகளினாலும் மதங்களின் புனித விழுமியங்கள் சிதைக்கப்படுகின்றன. மனிதர்குரிய மாண்பும் உரிமையும் மறுக்கப்படுகின்றன. அரச சக்திகள் மனித உயிர்களை பாதுகாக்கத் தவறும் சூழலில், மதங்களும் மதங்களைச் சார்ந்த அமைப்புகளும் கூடியளவு உண்மை, நீதி, புரிந்துணர்வு இவைகளைப் பாதுகாக்க அழைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்காவில் பெரும்பான்மை பௌத்தர்கள் உலகின் தலைசிறந்த மறையைப் பின்பற்றுபவர்கள் போர் மற்றும் உயிர்க் கொலை தேவை என ஆர்ப்பாட்டம் புரிவதை விட்டுவிட வேண்டும். அமைதிப் பேச்சுக்கு எதிர்ப்பை விட்டுவிட வேண்டும். அமைதிப் பேச்சுக்கு மத்தியஸ்த்தம் செய்யவும், நடுநிலைமையாக பணிபுரியவும் வருபவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைக் கைவிட வேண்டும். புத்தியடைந்தவரின் பெயரால் என பௌத்த சகோதரர்களுக்கு நான் விடுக்கும் செய்தி, மகாவம்ச மாயையில் இருந்தும் கற்பனையிலிருந்தும் அதன் பாரம்பரிய அவாவாகிய முழுத் தீவும் உங்கள் என்று கருதுவதிலிருந்தும் உங்களை நீங்கள் விடுதலை பெற வையுங்கள். பின்னர் அமைதியாக ஒன்றுபட்ட நாட்டில் இரு இனங்களாக வாழ ஆதரவு தாருங்கள்.

ஒரு மதகுரு என்ற வகையில் இது எனது கடமையும் உரிமையும் என நான் உலக தேவாலயங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இலங்கையிலுள்ள எந்தவித கிறிஸ்தவ சபைகளையோ திருச்சபைகளையோ சார்ந்திருந்தாலும் நான் ஒரு கத்தோலிக்க குரு என்ற மட்டில் எனது கடமையாகக் கருதி ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சபைகளின் வழியாக வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்றோம். ஆனால் நாங்கள் காயப்பட்டவர்களுக்கு மருந்து கொடுப்பதிலும் இறந்தவர்களைப் புதைப்பதிலும் நின்றுவிட்டால் வன்முறையும் போரும் முடிவடையாது. கிறிஸ்தவர்களாக நாம் இரக்கத்தின் செயல்களுக்கு அப்பால் சென்று உண்மைக்கும் நீதிக்குமாக குரல் கொடுப்பதே எமது கிறிஸ்தவ கடன்.

இலங்கைத் தீவில் எல்லாப் பௌத்தர்களும் சிங்களவர்கள். எல்லா இந்துக்களும் தமிழர்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் மட்டுமே சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் இருக்கின்றனர். ஆகையினால் இந்த இன முரண்பாட்டை தீர்ப்பதில் தமிழ் சிங்கள கிறிஸ்தவர்களுக்கு ஒரு தனித்துவ விசேட பொறுப்புண்டு. இரு பகுதியிலுமுள்ள சில கிறிஸ்த தலைவர்கள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சில முயற்சிகள் எடுக்கின்றனர். ஆனால் சிறுபான்மை என்ற பயத்தினாலும் பெரும்பான்மை பௌத்தருக்குப் பயந்தும் அதிகமாக மௌனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கின்றனர். அவர்களுக்கு உண்மைக்கும் நீதிக்கும் உரிய முறையில் சாட்சியமளிக்கத் துணிவில்லை. ஆகையினால் உலகத்தின் திருச்சபைகள் இத் தீவிற்குள் நடக்கும் சம்பவங்களை உன்னிப்பாகப் பார்த்து அதற்குரிய சாட்சியத்தை சர்வதேசத்தின் முன்பாக கொடுத்து துன்பப்படும் மக்களுக்கு நீதி கேட்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இரண்டு பெரிய உலகப் போர்கள் மத்தியில் சில கிறிஸ்தவர்கள் உன்னத அர்ப்பணிப்பையும் தியாகச் செயல்களையும் செய்துள்ளனர். ஆனால் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும் அதன் தலைவர்களும் கூடுதலாக பார்வையாளர்களாகவும் மௌனமாக செயலற்றவர்களாகவும் இருந்த தன் காரணமாக பல கோடி மக்கள் அழிந்துள்ளனர். போர்கள் முடிந்து கடந்த ஆறு தசாப்தங்களாக போரில் தங்கள் பங்கை மீளாய்வு செய்வதற்கு வசதிகள் இருந்திருக்கின்றன. ஆகையினால் இனியும் மௌனமாக தந்திரமாக நடுநிலைமை வகிப்பதென்பது இலங்கை இனப்படுகொலை விடயத்தில் தவிர்க்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் தற்போதைய இன ஒழிப்பை கிறிஸ்தவர்கள் மௌனமாக தந்திரமாக நடுநிலையாக அணுகுவதென்பது கிறிஸ்துவை காட்டிக்கொடுப்பதாகும்.

## 8. சர்வதேச அமைப்புகளே! வல்லரசுகளே! எமக்கு உதவிட வாருங்கள்!

நம்பிக்கை இழந்து நிற்கும் நாங்கள் தென் இலங்கையில் உள்ள நல்லெண்ணம் கொண்டவர்களுக்கு கூறுவது, இனியும் தாமதம் செய்யாதீர்கள், இன்றைய முரண்பாடுகளை நீதியாகவும் உண்மையாகவும் பன்னாட்டுச் சமூகம் கூறும் சாட்சியத்தை மதித்து அவர்களின் உத்தரவாதத்தோடு நாட்டையும் மக்களையும் தேசிய தற்கொலையிலிருந்து காப்பாற்ற வாருங்கள்!

பேரினவாதிகள் தங்களுடைய ஆயுத நடவடிக்கைகளினால் ஒரு இனத்தையும் அதன் தாயகத்தையும் அழிப்பதற்கு சம்மதித்து பெரும்பான்மையின் மேலாதிக்கத்தில் ஒற்றுமையைத் திணிப்பதை விட்டு, நன்மைக்காகவும் நலமுள்ள ஒற்றுமைக்காகவும் செயற்படுங்கள். இனங்களின் ஒற்றுமையைப் பேணாது அதற்கிடையிலே மோதல்கள் பிரச்சினைகளை அதிகரிக்கும் ஒரு அரசாங்க ஒற்றுமைத் திட்டத்தை வரவேற்காதீர். பல்வேறு மக்களின் அபிலாசைகள் ஏற்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்பட்டு அவைகளுக்கு இடம்கொடுக்கும் ஒரு உண்மையிலும் நீதியிலும் கட்டப்பட்ட ஒற்றுமையை வென்றெடுக்க வேண்டும்.

வரலாற்றின் உண்மைகளைக் கண்டு இன்றைய நிகழ்வுகள் மூலம் திடமுடன், நீதியாகவும், ஒருவருக்கொருவர் அமைதியுடையவர் –களாகவும், கூட்டுறவும் சகவாழ்வும் பெற்று நல்ல அயலவர்களாக, இந்நாட்டில் ஒருவர்மீது ஒருவர் மேலாதிக்கம் செலுத்தாது, ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்ளாது ஒருவர் மீது ஒருவர் பயம் காணாது வாழ்வோமாக. நாம் நமக்கு விரும்புவதையே மற்றவர்களுக்கும் விரும்பிக் கொடுக்கக் கற்றுக் கொள்வோமாக. தமிழர்களாகிய நாங்கள் இந்தத் தீவில் பல நூற்றாண்டுகளாக தனித்துவ மொழி, கலை, மத அடையாளங்களுடன் வாழ்ந்துவரும் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இறுதியாக சர்வதேச சமூகத்திற்கு சில சவால் விடுக்கும் கேள்விகளை வைக்கின் றோம். நீங்கள் எமது நாட்டில் கடந்த சில தசாப்தங்களாக நடந்துவரும் சம்பவங்க ளைக் கண்டிருக்கின்றீர்கள். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்திருக் கின்றீர்கள். ஆனால் ஆக்கிரமிப்பாளர்களுக்கே அதிக உதவிகள் வழங்கியுள்ளீர்கள். அடக்கப்பட்ட அழிக்கப்பட்டவர்களின் குரலைக் கேட்கத் தவறினீர்கள், அல்லது கேட்டும் நம்பாதிருந்தீர்கள். நீங்கள் அதிகார வர்க்கத்துடனேயே சார்ந்து நின்றீர்கள். அவர்களுக்கு நிதி மற்றும் ஆயுத உதவிகள் வழங்கி போரை விஸ்தரிக்கச் செய்து, உண்மை வேண்டுகோள்களை இனம்காணவும் அநீதிகளை சரிப்படுத்தவும் தவறிவிட்டீர்கள். இன்னும் நேரம் தாமதியாது விரைந்து எம்மைக் காப்பாற்ற வாருங்கள்!!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்

முள்ளிவாய்க்காலை மையமாகக் கொண்டு எமெக்கெதிராக நடந்தேறிய கொடூரக் கொலைகளை எமது ஆயதப் போராட்டம் நசுக்கப்பட்ட இறுதி நாளாக கருதுகின்றோம். 2009 வருட முற்பகுதியில் இலங்கை அரச படைகள் இன்னும் 20 நாடுகளின் நிதி, ஆயுத உதவியுடன் தங்கள் கொடுமை நிறைந்த கொலைகளை நடாத்தி மே 18 வரை அப்பாவி மக்களையும் அவர்களின் தலைவர்களையும் துடியாய்த் துடிக்க கொன்று குவித்தனர். ஆகையினால் எம்மைப் பொறுத்த மட்டில் மே 18 ஐ போராட்டத்தின் ஆயுதங்கள் மௌனிக்கப் பட்ட நாளாகவும், நாம் தொடரும் போராட்ட புதிய கட்டத்தின் ஆரம்பமாகவும் கணிக்கின்றோம். உலகம் பரந்து வாழும் தமிழர்கள் இத் தினத்தை உணர்வுடன் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் தினமாக அனுசரிக்கின்றர். என்ன விதமாக கார்த்திகை 27, மண்ணையும் மக்களையும் காக்க உயிர் நீர்த்த மாவீரர்களை நன்றியுடன் நினைவுகூரும் நாளாக அனுட்டிக்கிறோமோ, அதேபோல் மே 18 ஐயும் இலங்கைக்கு எதிராக சர்வதேசத்திடம் நீதி கோரும் நாளாக அனுட்டிப்போம்.

## 1. முள்ளிவாய்க்காலைத் தொடர்ந்து மகிந்தரின் கொடூரம் அதிகரிப்பு.

முள்ளிவாய்க்காலின் பின் தொடர்ந்த இரண்டு ஆண்டுகளிலும் மகிந்தரின் கொடூர அடக்குமுறை ஆட்சியும், உலகத்தை ஏமாற்றும் நரித்தனமான சூழ்ச்சியும் பல் முறை அதிகரித்து விட்டது. அரசனின் உண்மையான நிர்வாணத்தை உரைத்து ஒலிக்க அத் தீவின் மக்களுக்கு இன்னும் பலமும் துணிவும் போதாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக சுதந்திரத்தை நசுக்கி, எதிரிகளை வெருட்டி, பொய்களை அதிகரித்து, உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் நாகரீகமற்ற சண்டித்தன அரசியலை நடாத்த முயற்சிக்கின்றார் மகிந்தா. ஒரு புறத்தில் தனது கொடூரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சரணடைந்த போராளிகளுக்கும், ஒரு நீதியோ நிவாரணமோ வழங்காது, அதற்குரிய வெளிநாட்டு வளத்தை பாவித்து, எமது தாயகத்திலிருக்கும் மாவீரர் துயிலுமில்லங்களையும் சரித்திர அடையாளங்களையும் நாகரீகமற்ற விதத்தில் அழித்து, அதன்மேல் சிங்களப் படையினருக்கும் குடும்பத்தினருக்கும் தளங்களையும் ஆயிரக்கணக்கான சொகுசான வீடுகளையும் கட்டுகின்றார். வட-கிழக்கை நிரந்தரமாக சிங்கள இராணுவத்தின் ஆட்சிக்குள் கொணரவும், வட-கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கி பாரம்பரிய தமிழரின் இருப்பையே அழித்து அதை சிங்கள-பௌத்த பூமி ஆக்குகின்றார்.

## 2. தமிழர் தாயக வளங்களைக் களவாடி சிங்கள பொருளாதாரத்தை வளர்க்கிறார்

கிழக்கில் உதயம், வடக்கில் வசந்தம் என்ற கவர்ச்சியான தலைப்பில் போலி அபிவிருத்தித் திட்டங்கள் சர்வதேச உதவியுடன் செய்யப்படுகின்றன. இவை யாரின் நலனுக்காக? என்ற கேள்வியே இங்கு முக்கியமானது.

போரினால் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் மக்களுக்கோ, 11 ஆயிரம் சரணடைந்த வர்களுக்கோ புனர்வாழ்வு செய்து கொடுக்காது, அவர்களை அனாதைகளாகவும் மறியல்களிலும் தவிக்க விட்டு விட்டு, அவர்களுக்குரிய பணத்தைப் பாவித்து சுய நலத் திட்டங்களை நிறைவேற்றுகின்றார். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் இன்னோர் சதித்திட்டம் முன் னெடுக்கப்படுகின்றது. வடகிழக்கின் வளங்களும் காணிகளும் வெளிநாடுகளுக்கு விற்பனையாகின்றன. அரசாங்க அல்லது சிங்கள முதலீடுகளையும் முதலாளிகளை யும் வட கிழக்கில் நிறுத்தி ஆதாயம் தம்பக்கம் சேரவும், கூலியாட்களை மலிவாகத் தமிழரிடமிருந்து பெறவும் முயற்சிக்கின்றனர். காலனித்துவ காலத்தில் என்ன விதமாக ஆங்கிலேயர் தமது தேயிலை றப்பர் தோட்டங்களுக்கு தமிழ் நாட்டிலிருந்து மலிவான கூலி ஆட்களைப் பாவித்தார்களோ, அதே விதமாக இன்று மகிந்தா ஈழத் தமிழரை அபிவிருத்தியென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில் தமது நயத்திற்காக குடிமக்களை கூலி மக்களாக்குகின்றார்.

## 3. அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளென்ற போர்வையில் ஏமாற்றமும் இழுத்தடிப்பும்

தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேடுவதென்பது கடந்த ஆறு தசாப்தங்களாக ஒரு நீண்ட ஏமாற்று நாடகமாக அமைந்திருக்கிறது. இன்றும் அதே நாடகம் தொடருகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை மேசைக்கு அழைத்து பொறுப்பில் குறைந்த சில மந்திரிகளை சந்திக்க வைத்து, சில விடயங்களை மேலோட்டமாக பேசி விட்டு ஓர் முடிவோ தீர்மானமோ இல்லாது கலைந்து செல்வதே இடம்பெறுகின்றது. அடுத்த சந்திப்பைப் பற்றி பேச்சே இல்லை. ஆனால் வெளிநாடுகள் அரசியல் தீர்விற்கான முயற்சிகளைப் பற்றி விசாரிக்கும் பொழுதெல்லாம, ஆமாம் நாம் தமிழ் கட்சிகளுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்று நா கூசாது பொய் சொல்லி வருகிறார்கள் அரசாங்கத்தினர். ஆகையினால் கடந்த 60 ஆண்டுகளும் இப்படி ஒருவித நல் நோக்கமுமின்றி ஏமாற்றி இழுத்தடிக்கும் சிங்கள அரசுகள் மாறவே இல்லை. மாறாக இழுத்தடிக்கும் ஏமாற்று வித்தையில் மிகத் தேர்ச்சி பெற்று தமிழரை மாத்திரமல்ல சர்வ தேசத்தையே ஏமாற்றும் பாண்டித்தியம் பெற்று விட்டனர்.

## 4. போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்கிறது ஐ.நா. நிபுணர் அறிக்கை

இவைகளின் மத்தியில் ஐ.நா. செயலர் பான் கீ மூன் சிறீலங்கா விடயத்தில் நியமித்த குழுவினர் தமது அறிக்கையை பகிரங்கப்படுத்தியதை அடுத்து நிலைமைகள் சூடுபிடித்திருக்கின்றன. உண்மை, நீதி அடிப்படையில் போர்க் குற்றங்களை நேர்மையாக விசாரிக்கப்பட வேண்டுமென்ற ஐநா வேண்டுகோளை எதிர்த்து மகிந்தர் தப்பு வழிகளைத் தேடுகிறார். அறிக்கை இரு பகுதியினரையும் குற்றஞ்சாட்டி அவைகளை விசாரிக்க வேண்டுமென்று கூறியிருப்பினும், மகிந்தர் இவ் விசாரணையை எதிர்க்கின்றார். ஏனெனில் மகிந்தருக்கு நன்கு தெரிந்த விடயம் தமிழர் தரப்பில் புலிகளின் தலைமைத்துவம் அழிக்கப்பட்டு தற்போது அரசாங்க பாதுகாப்பிலிருக்கும் கருணா, கேபி போன்றவர்களே மாட்டுப்படுவார்கள் என்பதாலாகும். ஆகையால் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுடன் மக்களையும் அரசாங்கத்தையும் அறிக்கையை எதிர்க்க ஏவி விட்டிருக்கிறார். சர்வதேச கருத்தோ அறிக்கையோ ஈடுபாடோ நாட்டின் இறமைக்கும் சுதந்திரத்திற்கும் முரணானதெனக் கூறி சிங்கள இனவாதிகளும் அரசாங்கமும் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசாரம் செய்கின்றனர். சீனா ரஷ்யா போன்ற நாடுகளின் வீட்டோ பாதுகாப்பில் பதுங்குகின்றார் மகிந்தர்.

மேற்கத்திய நாடுகள் அறிக்கைக்கு சற்று ஆதரவாகச் சாய்ந்து, போர்க் குற்றங்களை சர்வதேச குழுவொன்று விசாரணை செய்வதை விரும்பினாலும் அதற்கெதிராகவும் சீறுகிறார். தமிழரின அழிவிற்கும் கொடூர கொலைகளுக்கும் நிதியாலும் ஆயுதத்தாலும் உதவிய இந்த நாடுகள் நிறுவனங்களுக்கு எதிராகவும், தமது சுயநல திட்டத்திற்காக ஏமாற்று, பொய், புரளி, வித்தைகளையும் சண்டித்தனப் போக்கையும் கையாள முயலுகிறார்.

முள்ளிவாய்க்கால் வரை அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகப்போர் என்ற போர்வையில் இலங்கைக்கு ஏராளமான பணத்தையும் ஆயுதங்களையும் வழங்கி தமிழ் மக்களை அழித்தனர். முள்ளிவாய்க்கால் முடிந்ததும் தனது இரகசிய இன ஒழிப்புத் திட்டத்திற்கு மேற்கத்திய நாடுகளைப் புறக்கணித்து சீனா பக்கம் கூடுதலாகத் திரும்பியது மேற்கத்திய நாடுகளை வெட்கத்திற்கும் அவமரியாதைக்கும் தள்ளின. இதற்கிடையில் இந்தியாவின் நிலைப்பாடு ஓர் தனித்துவ மர்மமாக உள்ளது! இவற்றின் விளைவாக மேற்கத்திய நாடுகள் பல ஐநா அறிக்கையை, நாம் விரும்பியது போல் ஆதரித்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

## 5. ஐநா வின் போர் குற்றச் சாட்டுகளின் முக்கியத்துவம்

எமது விடுதலைப் போராட்டம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேல் நீடித்திருந்தும் எவ்வளவோ உயிர் சேதங்களுக்கும் பொருட்சேதங்களுக்கும் உள்ளாகி இருந்தும் அவைகளைப் பற்றி சர்வதேச அமைப்புகள் எதுவும் உத்தியோகபூர்வமாக அறிக்கை வெளியிடவில்லை. சர்வதேச நாடுகள் விடுதலைப் போராளிகளைப் பயங்கரவாதிகளென்று தடை செய்வதிலும், இலங்கை அரசாங்கம் எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது சுத்த பயங்கர வாதமே என்று அவர்களுக்கு பணத்தையும் ஆயதங்களையும் அள்ளி அள்ளி பகிரங்க மாகக் கொடுத்தார்களே தவிர, எமது அழிவுகளைப் பற்றி பேசியதில்லை. இதுவே முதற் தடவையாக ஓரளவிற்கு சர்வதேச மதிப்புடைய அறிக்கையொன்று இத் தீவிற்குள்ளே நடந்து முடிந்த அழிவுகளைப் பற்றி பகிரங்கமாக்கியுள்ளது. ஆகையி னால் இவ் அறிக்கையை நாம் ஓர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கணிக்க வேண்டும்.

ஐநா அறிக்கையின்படி இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நம்பகத்திற்குரிய போர்க் குற்றங்களை புரிந்திருக்கின்றனர். இவைகள் ஆராயப்பட வேண்டுமாம். போர்க் குற்றங்களை விசாரிப்பதும் அவற்றை நிரூபிப்பதும் உண்மைகளை வெளிக் கொணரும். குற்றவாளிகளை கூட்டில் அடைக்கும் தண்டனை வழங்கும். ஆனால் ஈழத் தமிழருக்கு அது ஓர் நிரந்தர தீர்வையோ, பாதுகாப்பையோ கொடுக்காது.

## 6. போர்க் குற்றங்களை உறுதிப் படுத்தும் காட்சிகள்

முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளின் போது சிங்களப் படையினர் உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் தமது எதிரிகளான விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பரிகாசம் செய்து அவமானப்படுத்தி, விசேடமாக பெண்களைக் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி அவர்களின் அவயவங்களை துண்டித்து கொன்று குவித்தனர். தங்களிடமிருந்த மோபைல் போன் கருவிகளினூடாக தமது வெற்றியை நினைவு கூரும் பொருட்டு பல படங்களை எடுத்தனர்.

படையினரிடமிருந்து பெற்ற சாட்சியகங்ளையும் படங்களையும் ஆதாரமாகக் கொண்டு, போரின் கடைசிக் கட்டத்தில் வன்னியில் பணியாற்றிய சர்வதேச அரசுசார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளின் சாட்சியத்துடனும், பிரித்தானிய பி.பி.சி. சனல் 4, ஒரு மிக முக்கிய உண்மை விளக்கப் படத்தை (documentary film) – சிறீ லங்காவின் கொலைக் களங்கள் – (Sri Lanka's Killing Fields) – என்ற தலைப்பில் இப்போ வெளிக்கொணர்ந்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர்களின் அறிக்கையையும் இந்த உண்மை விளக்கப் படத்தையும் சரியாகப் பாவித்து போர்க் குற்றவாளிகளை சர்வதேச நீதி மன்றத்திற்கு கொண்டு வர புலம் பெயர் தமிழர் வீரத்துடன் முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. யார் இந்த போர் குற்றவாளிகள்?

ஈழத் தமிழர் இன அழிப்பில் குற்றவாளிகளாக கூட்டில் ஏற்றப்பட வேண்டியவர்கள் இன்னும் பலர்! சிங்கள பேரினவாதமும் அதன் அரசியல் தலைவர்களுமே எமது இன அழிப்பிற்கு பொறுப்பான முதற் குற்றவாளிகள். சிங்கள பேரினவாதத்தை எண்ணை ஊற்றி வளர்த்த புத்த மதத்தினர், அவர்களின் மகாவம்ச பார்வை, போக்கு, அத்துடன் சிங்கள படையினரின் பயங்கரவாதம், பெரும்பான்மையினருக்கு சாதகமான போலி ஜனநாயகம், இவைகளை நாம் போதிய அளவு எமது உரைகளிலும் புத்தகங்களிலும் விளக்கி இருக்கிறோம். ஆனால் இங்கு இலங்கையின் இனவாதத்திற்கும் பயங்கர வாதத்திற்கும் போலி ஜனநாயகத்திற்கும் துணை போனவர்களும், போராட்டம் போராக மாறிய பொழுது தமிழ் போராளிகளை பயங்கரவாதிகளென மாத்திரம் கணித்து அவர்களை அளிக்க சகல உதவிகளையும் வழங்கியவர்கள் பலர். முதல் 30 வருடங்களில் ஈழத் தமிழர்கள் அரச பயங்கரவாதத்தினால் ஆயிரமாயிரமாக அழித்தொழித்த போது எந்த ஒரு நாடாவது சர்வதேச ரீதியில் கேள்வியும் எழுப்பவில்லை, மனிதபிமான உதவியும் செய்யவில்லை. ஆனால் அமெரிக்கா அல்கெயிடாவினால் தாக்கப்பட்ட பின்பு, அதன் கணிப்பில் அரசுகளை எதிர்த்த அனைவரையும் மேற்கத்திய நாடுகள் பயங்கரவாதிகளாகக் கணித்து, இலங்கை அரசுக்கு பேருதவியையும் தமிழராகிய எமெக்கெதிராய் பல தடைகளை விதித்து முள்ளி வாய்க்காலில் இரசாயன ஆயதங்களைத் தன்னும் பாவித்து தமிழ் மக்களையும் தலைவர்களையும் கொடூரமாக நசுக்கினர்.

சுருங்கக்கூறின் இந்தியா உட்பட பல நாடுகளும் முள்ளிவாய்க்கால் கொலைகளுக்கு பொறுப்பாயிருந்தனர். ஐநா நிபுணர் குழுவின் அறிக்கையின் முன்மொழிதலில் விசாரணை நடத்தப்பட்டால் ஏதோ ஒரு விதத்தில: இந்நாடுகள் பல குற்றவாளியாகலாம்.

## 8. போர்க் குற்றச் சாட்டுகள் ஒரு முதற்படியே தவிர ஓர் நிரந்தர முடிவு அல்ல.

தற்பொழுது நாங்கள் செய்துகொண்டிருக்கும் முயற்சிகளின் நோக்கம் நிபுணர் குழு அறிக்கையையும் அதற்கான காட்சிகளையும் அடித்தளமாக வைத்து, அறிக்கையில் முன்மொழிந்தது போல, அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் பான் கீ மூன் இந்த அறிக்கையின் ஆலோசனைக்கு இசைந்து ஐநா சபைக்கு இதை எடுத்துச் செல்வது அல்லது ஐநா சபையின் மனித உரிமை கூட்டத்தில் விவாதித்து தீர்ப்பை நிறைவேற்றுவது அல்லது சர்வதேச நீதிமன்றம் ஒன்றுக்கு இதை விசாரணை செய்யுமாறு சிபாரிசு செய்வது. ஆனால் பான் கி மூன் இலங்கை அரசங்கத்தின் பதிலையும் சம்மதத்தையும் வைத்துத்தான் தான் அடுத்த நடவடிக்கை எடுப்பேன் என்கின்றார். நாம் அறிந்த நரி சூழ்ச்சியுடைய மகிந்தரின் இலங்கை அரசாங்கம் இதை இழுத்தடிப்பதிலும் ஏமாற்று வித்தைகளிலும் பெயர் போனது..

ஆகையினால் மகிந்தரை நீதிமன்றத்தில் ஏற்றி அவருக்கும் அவரது சகாக்களுக்கும் தண்டனை விதிக்க வேண்டும் என்ற நோக்கு எங்களுடைய இலட்சியத்தை நிறைவுசெய்யாது. பழிவாங்கும் நோக்கோ அல்லது மற்றவர் தண்டனை பெறுவதில் சந்தோசமடையும் நோக்கோ எமக்கு இல்லை. எம்முடைய போராட்டம் மண்ணையும் மக்களையும் காப்பாற்றும் உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டது. இதற்கு ஆதாரமாக முழு உண்மைகளும் வெளிவரவேண்டும் என்பதே எமது தற்போதைய நோக்கு. ஆகையினால் தற்போதைய முயற்சிகள் எமது நீண்ட போராட்டத்தில் இன்றியமையாத படிகளாகவே கணிக்கப்பட வேண்டும்.

## 9. போர்க் குற்றங்களுக்கப்பால் போராடுவோம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் உண்மை, நீதி, மனித உரிமை இவைகளை அத்திவாரமாகக் கொண்ட ஒரு போராட்டம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு கீழ் மட்டத்தில் இருந்து உயர் மட்டம் வரையும் உள்ள தலைவர்கள் அரசியல்வாதிகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் கூட தடையாக இருக்கலாம். ஏனெனில் அவைகளில் தீய சக்திகள் அதாவது பொருளாசை, பதவியாசை, அதிகார ஆசை பரவியிருக்கின்றன. இது எமது நீண்டகால அனுபவம். ஆகையினால் இவைகளை தாண்டி நாங்கள் எங்களுடைய இலட்சியத்தை அதாவது தமிழர் தாயகத்தில் தன்மானத்துடன் தமிழர் வாழும் இலட்சியத்தை அடைய வேண்டுமாயின் இரண்டு நிபந்தனைகள் எங்களிடமிருந்து முக்கிய கவனத்தைப் பெறவேண்டும். ஒன்று தமிழ் மக்களாகிய நாங்கள் எங்களுக்குள்ளே இருக்கும் தீய சக்திகளை அதாவது காட்டிக்கொடுத்தல், பொறாமைப்படுதல், சாதி, மத பிரிவினைகள் போன்றவைகளை அகற்றும் போராட்டத்தை நடாத்திக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 முள்ளிவாய்க்கால் அழிவுகளின் பின் - தமிழர் உள்நாட்டிலும் புலத்திலும் எமது போராட்டத்தை தொடர்ந்து புதிய உருவத்தில் - சர்வதேச மயமாக்கப்பட்ட போராட்டமாக - ஜனநாயக முறையிலும் வன்முறையற்ற வழியிலும் நடதத்த வேண்டுமென் பதற்காக 2011 ஆண்டில் „முடிந்த முள்ளி வாய்க்காலும் தொடரும் போராட்டமும்" - என்ற தலைப்பிலே புத்தகத்தின் முதற் பதிப்பை கனடாவில் திரு. அன்ரன் சின்னராசாவின் தலைமையில் இயங்கும் - போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைக்குமான நடுவம் வெளியிட்டது.

முள்ளி வாய்க்காலை தொடர்ந்து பல உருவத்தில் தமிழர் உள் நாட்டிலும் புலத்திலும் பல முயற்சிகள் எடுத்தனர். அவைகளின் பின்னணியில் சில முன்னேற்றங்களும் பல பின் அடைவுகளும் இடம் பெற்றிருக்கின்றன. எமது கணிப்பில் போராட்டம் முன்னேறு வதற்கு 10.9 நான் கூறியது போல் -

1. நாம் தமிழர்கள் எமக்குள் இன்னும் நிலவும் தீய சக்திகளான – காட்டிக்கொடுத்தல் பொறாமைப்படுதல் சாதி மத ஒடுக்கு முறைகளை முடிவுகட்ட வேண்டும். உள் வீட்டில் அநீதிகள் கடைப்பிடித்துக் கொண்டு வெளியிலிருந்து வரும் அடக்கு முறைகளுக்கெதிராக நாம் போராடவோ வெளிநாட்டு உதவிகளை நாடுவதோ முடியாது.
2. இரண்டாவது எமது புனித ஒரே இலட்சியத்தை அடைய கட்சி அமைப்புகள் தங்களுக்கிடையிலே வீண் சண்டைகள் போடாது உதைப்பந்தாட்டத்தில் பலர் ஒரே நோக்கில் செயல் படுவது போல் தமது சூழலுக்கேற்ப செயற்பட வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் கடந்த 9 வருடங்களிலும் நடந்தேறிய நிகழ்வுகளின் பின்னணியில் மேலும் தெளிவு படுத்தி போராட் டத்தை இன்னும் தெளிவு படுத்தவும் மும்முரப் படுத்தவும் விரும்பு கிறேன். இதற்காக எமது வழி காட்டலில் உலகத் தமிழர் பேரவை எப்படி தன் பங்கை நடைமுறைப்படுத்தியதென்றும் கூற விரும்புகிறேன்.

இந்நோக்கில் இரு புதிய அத்தியாயங்களையும் சேர்த்து இப் புத்தகத்தின் 2ம் பதிப்பொன்றை முள்ளிவாய்க்கால் 10வது நிறைவு ஆண்டில் வெளியிடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# முள்ளி வாய்க்காலின் பின் இலங்கையிலும் சர்வ தேசத்திலும் நடந்தேறிய மாற்றங்கள்

## 1.மகிந்தவின் அரசு தமிழ் இன அழிப்பை மும்முரப் படுத்தியது

முள்ளி வாய்க்கால் முடிந்துதும் மகிந்தவின் கொடூர ஆட்சி வெற்றி வெறியுடன் இலங்கைளில் தமிழரின் இருப்பையும் மக்களையும் வேரோடு அழிக்க விரைந்து செயற்பட்டது. தப்பின தமிழர் மூச்சு விடக் கூட இடவெளியின்றி மகிந்த அரசாங்கம் வெற்றியின் உச்சியில் சர்வ தேசத்திற்கும் ஐநா அதிகாரி பான் கீ மூனுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்க விட்டுப் .போருக்கு உதவிய நாடுகளின் ஆலோசனைக்கமையாது தனது இனவாத நடவடிக்கைகளை வடகிழக்கில் மும்முரப்படுத்தியது.

வடகிழக்கில் சிங்கள குடியேற்றங்கள், புத்த மத ஸ்தலங்கள் அதிகரித்தன சிங்கள படை முகாம்கள் தமிழரின் காணிகளை எடுத்து பலப்படுத்தி தமது தேவைக்காக விஸ்தரிக்கப்பட்டன. தமிழரின் வாழ்வூதியங்களான மீன் பிடித்தல் வேளாண்மை செய்தல் சிங்களப் படையினரால் பறிக்கப்பட்டன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக எமது இனமும் இன வேர்களும் அளிக்கப் பட்டு எமது இருப்பையே அளிக்கும் திட்டம் நடமுறைப்படுத்தப்பட்டது. இதை நிறுத்தும் படி உள் நாட்டு தமிழ் தலைவர்கள் கெஞ்சினார்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எதிர் கட்சிகளோ பெரும்பான்மை சிங்களவரோ வெற்றி உணர்வுடன் மகிந்தாவின் தமிழ் இன அழிப்பு திட்டங்களுக்கு பாராட்டே தெரிவித்தனர்.

## 2. உள்நாட்டில் தமிழர் துடித்தனர் புலம் பெயர்ந்தோர் புது வழி தேடினர்

1983-2009 ஆண்டுகளினூடாக நடந்த உள் நாட்டுப் போரின் போது புலம் பெயர்ந்த தமிழர் தம்மை பல குழுமங்களாக அமைத்து விடுதலைப் புலி பொறுப்பாளர்கள் வழிகாட்டலில் பல உதவிகளை வடகிழக்கு மக்களுக்கும் போராளிகடுகும் வளங்கினார்கள். முள்ளி வாய்க்காலின் அகோர நிகழ்வுகள் எல்லோரையும் அதிர்ச்சி நிறைந்த ஆள்ந்த துயரிற்கு தள்ளியது. விரக்தியின் விளும்பில் நின்று செய்வதென்ன என்று தெரியாது தமிழரும் புலம் பெயர்ந்த நாமும் துடித்தோம்.

போராட்டத்தின் புதிய கட்டத்தை ஜனநாயக முறையில் சர்வதேசத் துடன் எப்படி ஒத்துழைத்து செய்ய வேண்டிய போராட்டமாக மாறியதை எல்லாத் தமிழர்களும் புரிந்து கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளவுமில்லை.

இந் நிலையில் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு பிரதிநிதிகளாகச் செயற் பட்டோர் சிலர் சர்வதேச மயமாக்கப்பட்ட தமிழ் விடுதலைப் போராட்டத்தை நாடு கடந்த தமிழ் அரசு உருவத்தில் முன்னெடுக்க முடியும் என்பதை தீர்மானித்தனர். இதைத் தோடர்ந்து திரு. ருத்திரகுமாரின் தலைமையில் நா.க.த.அ.ன் நடவடிக்கைகள் முன்னேற்றமாக நடைபெற்று கொண்டு இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. உலகத் தமிழர் பேரவையின் தோற்றம்

புலம் பெயர்ந்த மக்களின் அமைப்புகளின் பல் நாட்டு பிரதிநிதிகள் பலர் 2009 ஆவணியில் பாரிஸ் மாநகரத்தில் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தோம். போராட்டத்தின் புதிய உருவம் சர்வதேச மயமாக்கப் பட்டதின் காரணத்தால்

1. புலம் பெயர் தமிழர்களின் அமைப்புகள் அந்தந்த நாட்டு அரசாங்கங்களுடன் எமது போராட்டத்தின் உண்மையான தன்மையையும் நிலைமையும் தெரியப் படுத்துவதில் மும்முரமாக செயற்படுவதென்றும்
2. இவ்வமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றாக இணைத்து சர்வதேச ஐநா விற்கும் மற்றும் அமைப்புகள் முன்னும் குரல் கொடுக்க உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தினோம்.

இவ் அமைப்பிற்கு ஒரு யாப்பையும் அமைப்பின் தலைவராக கலாநிதி எதிர்வீரசிங்கத்தையும் தெரிவு செய்தோம். சில மாதங்களின் பின் தலைவர் வீரசிங்கம் தமது பதவியை தாமாக துறந்த நிலையில் அடியேன் தலைவராக தெரிவு செய்யப் பட்டேன். இந்த அமைப்பு உத்தியோகபூர்வமாக 2010 பெப். 24 ல் பிரித்தானிய பாராளுமன்றக் கட்டடத்தில் பிரித்தானிய மற்றும் சர்வதேச பிரமுகர்களையும் த.தே. கூ. தலைவர் சம்பந்தனையும் உள்ளடக்கி அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது. இலங்கையிலி ருந்து புத்த இஸ்லாமிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எமது வன்முறையற்ற ஜனநாயக போராட்டத்தை மேற்கத்திய நாடுகளும் அமைப்புகளும் வரவேற்றனர் ஒத்துழைக்க விருப்பம் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. போருக்குதவிய நாடுகளும் வியப்படைந்த நிலையில் தமது முயற்சியை தொடர்ந்தனர்.

போருக்கு பணமும் ஆயுதமும் வழங்கிய 20 நாடுகளும் வியப்படைந்தனர். மேலாக மேற்கத்திய வல்லரசுகள் மகிந்தா தங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை கைவிட்டு தங்கள் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றாது சீனாவின் உதவியை நாடியது மேற்கத்திய நாடுகளை இழிவு படுத்தியது.

இக் காரணத்தால் அமெரிக்க அரசாங்கமும் மேற்கத்திய நாடுகளும் இணைந்து மகிந்தவின் இலங்கை அரசிற்கு எதிராக ஜெனிவாவில் இயங்கும் மனித உரிமைகளுக்கான ஐநா வில் போர் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் கடமையையும் நல்லிணக்கத்தை நடை முறைப் படுத்துவதற்குமான ஒரு தீர்மானத்தை இரு முறை முன் மொழிந்துது. ஆனால் இலங்கையின் பிரதிநிதி டயன் ஜெயதிலகா போர் முடிவுக்கு முன் இலங்கை சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை நன்கறிந்திருந்தும் அமெரிக்காவின் முயற்சியை இலங்கை விவகாரத்தில் வல்லரசு முறையின்றி தலையிடுகிறது என்று சிறிய நாடுகளுக்கு கூறி அத்தீர்மானத்தை இரு முறை தோர்க்கடிக்க செய்தார். இது மேற்கத்திய நாடுகளுக்கு மீண்டும் தோல்வியும் ஏமாற்றமும் ஆயிற்று.

இருந்தும் அமெரிக்காவின் தொடர் முயற்சியினால் 2015ல் இலங்கை அரசாங்கம் நடந்து முடிந்த போரில் இடம் பெற்ற போர் குற்றங்களுக்கும் அளிவுகளுக்கும் இன நல்லிணக்க முயற்சிகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டுமென்ற தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்றப் பண்ணியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 2015 இலங்கை அரசு புரட்சியான விசேட மாற்றம் கண்டது

போருக்குப் பின் மகிந்த அரசாங்கம் தமக்குதவிய மேற்கத்திய நாடுகளையும் போரினால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களையும் ஏமாற்றி வெற்றி வீரத்துடன் தமது இன அழிப்பையே முன்னெடுத்தார். இதனால் தமிழ் முஸ்லீம் மக்களும் முற்போக்கான சிங்கள மக்களும் வெறுப்பும் விரக்தியும் அடைந்தார்கள். ஓர் ஆட்சி மாற்றத்தை ஓர் புரட்சியான முறையில் முயற்சித்தனர்.

வண. சோபித தேரோ சந்திரிக்க பண்டாரநாயக்க றனில் விக்கிரமசிங்க போன்றவர்களின் அழைப்பில் அன்று மகிந்தாவின் அரசில் பாதுகாப்பு மந்திரியாக இருந்த மைத்ரி சிறிசேனாவை சுதந்திர கட்சியினதும் ஐக்கியதேச கட்சியினதும் பொது வேட்பாளராக மகிந்தாவிற்கு போட்டியாக நிறுத்தப்பட்டார். இப் புதிய தலைவரினூடாக மகிந்தவின் கொடூர ஆட்சியை ஒழிக்க வெளிநாடுகளும் இலங்கை யிலுள்ள தமிழர் முஸ்லீம்களும் பெரும் ஆதரவு காட்டினர். 2015 ஆண்டு ஜெனவரி 08 ல் புதிய தலைவர் வெற்றி பெற்று பதவி ஏற்றார். 2015 ஆகஸ்டில் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேச கட்சி வெற்றி பெற்று ரணில் பிரதமராகினார். இலங்கை சரித்திரத்தில் முதல் முறையாக இரு பெரும் சிங்கள கட்சிகள் சேர்ந்து கூட்டரசாங்கத்தை அமைத்தனர்.

2015 ஜனவரி தலைவர் சிறீசேனா தேர்தலிலும், ஆகஸ்ட் மாத பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இரா. சம்பந்தன் தலைமையில் இயங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் எமது ஆதரவை கொடுத்து ஜநநாயக வழியில் புது எதிர்பார்ப்புகளுடன் எமது போராட்டத்தை தொடர்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. போரில் சிறீ லங்காவிற்கு உதவிய நாடுகளை எமக்கு சார்பாக திருப்புவதே சவாலாக இருந்தது

போர் நடந்து கொண்டிருந்த பொழுது அமெரிக்க அரசாங்கம் அல்கெயிடாவின் பயங்கரவாதத்திற்கு பதிலடியாகத் உலக ரீதியில் பயங்கரவாதங்கட்கு எதிரான போர் தொடங்கிற்று. அப்போரை இலங்கை அரசாங்கம் தனது விடுதலைப் புலிகளுக்கெதிரான உள்நாட்டுப் போரும் ஓர் பயங்கரவாத்திற்கு எதிரான போர் என்ற பிரசாரத்தினால் விடுதலைப் புலிகளையும் வெளி நாடுகளில் தமிழ் போராட்டத்திற்கு சார்பாக நடந்து கொண்ட சகல அமைப்புகளையும் 27 நாடுகளில் தடை செய்தன. அதற்கும் மேலாக 20 நாடுகள் இலங்கைக்கு ஏராளமான நிதியும் போருக்கான கருவிகளும் கொடுத்துதவின. இதை மகிந்தாவே போர் முடிவில் வெளியிட்டார்.

தமிழருடைய போராட்டத்தை வெறும் பயங்கரவாதமாகக் கணித்து சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் ஒரு தலைப் பட்சமாக இலங்கை அரசாங்கத்திற்கே சார்பாக நடந்து கொண்டனர். இது எமக்கொரு பெரும் சவாலாக இருந்தது. இந் நிலையை சரியாகப் புரிந்து எப்படி மாற்றுவது?

ஆகவே எமது தலைமையில் இயங்கும் உலகத் தமிழர் பேரவை தமது அங்கத்துவ அமைப்புகளுடன் இணைந்து உண்மைக்கான உலகளாவிய ஊடக பரப்புரைகளும் செய்து அந்நாட்டு அரசாங்கங்களையும் சந்தித்து ஆதரவு தேடும் பணியில் இறங்கினோம்.

என்னைப் பொறுத்த மட்டில் இறையருளால் ஜேர்மன் நாட்டு குடியுரிமையும் முன்ஸ்ரர் மறைமாவட்டத்தில் பணி செய்து வருமானமும் கிடைத்தது. இதன் காரணமாக தடை எதுவுமின்றி அமெரிக்கா கனடா இங்கிலாந்து அவுஸ்ரேலியா ஐரோப்பிய நாடுகள் தென் அபிரிக்பா இந்தியா மலேசியா இவை போன்ற பல நாடுகளுக்கு நான் கடந்த 10 வருடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவைகள் பயணம் செய்தேன். அத்துடன் ஐநா தலைமைப் பீடத்திற்கு பல தடவைகளும் ஜெனிவாவில் வருடாந்தம் நடைபெறும் மனித உரிமை சபையின் கூட்டங்க ளுக்கு 25 க்கு மேற்பட்ட தடவைகளும் சென்றிருந்தேன்.

2015ம் ஆண்டில் இல. அரசாங்க ஆட்சி மாற்றத்திற்கும் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தை போர்க் குற்றங்களுக்கு பொறுப்பு கூற பணிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நடாத்திய எமது பரப்புரையும் ஆதரவு தேடும் பின்னணி வேலைகளும் முக்கியமாயிருந்தன.

## 7. புலம்பெயர் தமிழர் சார்பாக, எமது 4 தூண் திட்டம் **(4 pillars programme)**

7.1 இலங்கை அரசாங்கததின் மனித உரிமைகள் மீறுதல்கள் போர் குற்ற பொறுப்பு விடயங்களில் ஐ.நா வின் கட்டுப்பாடுகளுக்கு உட் படுத்துவதும் அரசாங்கத்தை ஊக்குவிப்பதும்

7.2 தமிழ் கட்சிகளையும் அமைப்புகளையும் எமது இலட்சிய ஒற்றுமைக்கு ஊக்குவிப்பதும் தமிழ் கட்சிகளையும் அமைப்புகளையும் ஒரே இலட்சிய திசையில் பயணம் செய்ய உதவுவதற்காகவும் பேர்லினில் இயங்கும் போர்க் கோவ் அமைப்பின் ( Berghof Foundation) உதவியுடன் பேர்லினில் மூன்று முறை கூட்டங்கள் நடாத்தி 95% வெற்றியை கண்டோம்.

7.3 போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மனிதபிமான உதவிகளை ஊக்குவிப்பதும் செய்வதும் இவைகளுக்கிணங்க உள் நாட்டில் போரினால் தாக்கப் பட்ட கிராமங்கட்கு எமது பேரின்றி மறை முகமாக பல கிராமங்களுக்கு உதவினோம

7.4 தென்னிலங்கையிலுள்ள முற் போக்குவாதிகளுடனும் இணைந்து செயற்படுவது இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற் போக்குவாதிகளின் ஒத்துழைப்பை சேர்ப்பதிலும் கவனம் செலுத்தி பல கூட்டங்களில் பங்குபற்றினோம்.

## 8. இலங்கை தமிழரின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து செயற்படல்

எமது போராட்டம் முதலிடத்தில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காகவே. ஆகையினால் இலங்கையில் தமிழர்களால் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப் பட்ட த.தே.கூ உடன் நாம் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி பல முயற்சிகளை கூட்டாகவும் செய்து வருகிறோம். கொழும்பில் தலைவர் சம்பந்தன் வெளிநாட்டு முக்கியஸ்தர்களை சந்தித்து விளக்கம் அளிப்பது போல நாமும் வெளி நாடுகளுக்கு சென்று ஆங்காங்கே சந்திப்புகளை செய்கின்றோம். இச் சந்திப்புகளினூடாக எமது இலட்சியத்திற்கு இன்றியமையாத சர்வ தேச ஒத்துழைப்பை திரட்டியுள்ளோம்.

## 9. தற்போதைய அரசுடன் எமது தொடர்பும் விமர்சித்த ஒத்துழைப்பும்.

தலைவர் சிறீசேனா 2015 ஜனவரி வெற்றியின் பின் இலண்டனுக்கான தமது முதல் உத்தியோக தரிசனையின் போது தமது வெற்றிக்கு உதவிய உலகத் தமிழர் பேரவையை காலை விருந்திற்கு அழைத்தார். 2015 மார்ச் 11ல் கில்ரன் கொட்டேலில் நடைபெற்ற இவ் விருந்தில் ஜநாதிபதியின் 3 அமைச்சர்கள் சமரவீர சாமிநாதன் அயித்தும் எமது அமைப்பு சார்பில் நானும் எம் அமைப்பை சேர்ந்த சுரேன் ராம் குகன் ஆகிய மூவரும் பங்கெடுத்தோம். ஒருவித வாக்குறுதியும் பெறாது, மகிந்தவின் இன அழிப்பு ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும், எமது உரிமைப் போராட்டத்தை ஜனநாயக முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பதற்காகவுமே எமது ஒத்துழைப்பை விமர்சித்த ஒத்துழைப்பாக தெரிவித்தோம்.

சில மாதங்களின் பின் இரண்டாம் தடவையாக தலைவர் சிறீசேனாவையும் மந்திரி சமரவீராவையும் நானும் சுரேந்திரனும் போலினில் சந்தித்து பேசினோம். போரினால் பாதிக்கப் பட்ட மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் சிங்கள மக்கள் மத்தியில் அவருடைய அரசாங்கம் எடுக்க வேண்டிய மன மாற்ற முயற்சிகளைப் பற்றியும் விமர்சிக்கும் பாணியிலே எடுத்துக் கூறினோம்.

அப்பொழுது, காணாமற்போனோர், மறியலில் வாடுவோர், காணிகளை இழந்தோர், விதவைகள் அநாதைக் குழைந்தகள் - இவர்கள் நாளுக்கு நாள் எழுப்பும் அழுகைக் குரலுக்கு நீதியான தீர்வு வேண்டும் என்பதை வற்புறுத்தினோம். நடைபெற்று வரும் சில முன்னேற்ற முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், நல்லாட்சியின் இலட்சியத்தில் சரியானதென்பதை நோக்கி எடுக்கும் அரசின் முயற்சிகள், எதிரிகளின் குழப்ப முயற்சிகளுக்கு எதிர் நடவடிக்கைகள் எடுக்கும் முயற்சியினால் தடைபடக்கூடாது என்பதை தெளிவாக விளக்கினோம். உயர்ந்த இலட்சியத்தை நோக்கி நடக்கும் பொழுது, நாய்கள் குலைப்பதை பெரிது படுத்தக் கூடாதென அறிவுரை கூறி, நாட்டிற்காகவும் அனைத்து மக்களுக்காகவும் செபித்து ஆசீர் வழங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# எமது பணியை இப்போது தாயகத்திலிருந்து கொண்டு தொடர்கின்றோம்

## 1. நாம் தாயகம் திரும்பிய காரணமும் நோக்கமும்

தலைவர் சிறிசேனாவுடனான எமது சந்திப்புகளின் போது நான் கண்டி தேசிய குருமடத்தில் 10 ஆண்டுகள் (1976-86) பல நூற்றுக் கணக்கான சிங்கள குருக்களை உருவாக்குவதிலும் யாழ்ப்பாணத்தில் நற் சமூக நடு நிலையம் என்ற சர்வமத நிறுவனத்தையும் நடாத்திய அனுபவத்தை பற்றி தெரிவித்த பொழுது நான் நாடு திரும்பி இன மத ஒற்றுமைக்கான பணிகளுக்கு உதவி செய்யலாம் என தலைவரும் மந்திரியும் தெரிவித்தனர்.

மேலும் 2016 டிசெ. 16ல் எனது குருதுத்துவ பொன் விழாவை வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிசுடன் சேர்ந்து கூட்டுபபலி செலுத்தி கொண்டாடியபின் அவரை தனிமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்த பொழுது நான் இலங்கை திரும்பி நல்லிணர்க்க பணியை முன்னெடுகலாமென்று ஊக்குவித்தார்.

இவைகளின் காரணமாகவே நான் 1996ல் சுயமாக தேர்ந்து கொண்ட புலம் பெயர் வாழ்க்கையை முடிவு செய்து கொண்டு 2017 டிசெ. 18 பிறந்து வளர்ந்த யாழ் நகரிற்கே திரும்பியுள்ளேன். 1992-96 வரை யாழ் மறைமாவட்டத்தின் குரு முதல்வராகப் பணியாற்றிய போதே நாட்டை விட்டு வெளியேறினேன். பணியாற்றிய ஆயர் இல்லத்திற்கே வாழ்வின் இறுதிக் காலத்தை இறைவனுக்கும் மக்களுக்கும் சேவை புரியும் தலமாக ஆக்கிக் கொண்டேன்.

எனது குருத்துவ பணிகளுக்கப்பால் நாட்டிலும் நகரத்திலும் நாளாந்தம் நடந்தேறும் நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்து சிந்தித்து தனியாகவும் உலகத் தமிழர் பேரவை சார்பாகவும் எமது பணியைத் தொடருகின்றேன்.

சிங்கள அரசியல் வாதிகள் நான் வெளி நாட்டிலிருந்து தற்போது யாழ்ப்பாணத்தில் வசிப்பதாக அறிந்து சில கேள்விகள் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். ஆனால் எமது தமிழ் சகோதரர் துரதிஸ்ட வசமாக சிலர் நாம் அரசாங்கத்திற்கு விலைபோகியுள்ளதாயும் துரோகியென்றும் எமக்கு தலைவர் பிரபாகரன் பெயரால் சாவுத்தண்டனையும் விதித்துள்ளனர்!

ஆனால் நானோ இறைவன் பாதுகாப்பிலும் வழி நடத்தலிலும் மனிதனாகவும் தமிழனாகவும் கிறீஸ்துவின் சீடனாகம் சொந்த மண்ணிலிருந்து சகலத்தையும் உன்னிப்பாக அவதானித்த எனது பணிகளை தொடர்ந்து செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சிறீசேனா அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? செய்கின்றது?

தமிழருடைய முக்கிய பங்களிப்புடன் நல்லாட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு என்ன செய் திருக்கின்றது என்ன செய்கின்றது? ஏமாற்றம் எதிர்பார்ப்புகளுடன் தொடர்ந்து தவிக்கும் எமது நியாயமான கேள்விகள்!

புதிய அரசாங்கம் ஆரம்பத்தில் ஜநநாயகத்தை நாட்டில் நிலைநாட்டி சர்வதேசத்துடன் தமக்கிருந்த நல் உறவுகளை உதவிகளையும் மீளவும் பெறத் தொடங்கினர்.

தமிழர்களையும் அவர்களது வடகிழக்கையும் பொறுத்த மட்டில் ஆயுதப் படைகளின் துன்புறுத்தலின்றி பயம் தணிர்ந்தவர்களாக ஓரளவு சாதாரண வாழ்க்கைக்கு திரும்பினர்.

450 க்கு மேற்பட்ட புலம் பெயர்ந்த தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதத்திற்கு உதவுவோர் என்ற சந்தேகத்தில் இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாதோரின் பட்டியல் ஒன்றை மகிந்தவின் அரசாங்கம் வெளியிட்டிருந்தது. அப் பட்டியலை மீளாய்வு செய்து அரைவாசிக்கு மேற்பட்ட பெயர்களை அகற்றினர்.

உடனடியாக தீர்வு காண வேண்டிய காணக் கூடிய அநேக உள் நாட்டு பிரச்சினைகள் உள்ளன. போரினால் நேரடியாகப் பாதிக்கப் பட்டோரின் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. போரில் அங்கமிளந்தவர்கள், அன்பு கணவன் பிள்ளைகளை ஒன்றில் குண்டுகளுக்கு இளந்தோர் அல்லது காணாமல் ஆக்கப் பட்டு இளந்தோர் வீடு காணிகளை இளந்தோர், சரியான குற்றச்சாட்டின்றி நீண்ட வருடங்கள் மறியலில் வாடுவோர் - இவை அனைத்தும் கண்ணீர் நிறைந்த எதிர்ப்பு போராட்டங்களில் மாத்திரம் முடிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப் பட்ட தமிழர்களுடைய பிரச்சினைகள் குவிர்ந்திருந்த போதும் அவைகளை தீர்ப்பதாக வாக்குறுதிகளே அளித்தனர். ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க சிங்கள பெரும் பான்மை மக்களின் ஆதரவை திரட்ட உருப்படியான செயல் முறைகள் ஏதும் ஆரம்பிக்கவில்லை. போதிய ஆர்வமும் காட்டவில்லை. த.தே.கூ தலைவர்கள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் எமது பிரச்சினைகளை இடித்துக் கூறினாலும் மக்கள் சார்பாக பல கவனயீர்ப்பு எதிர்ப்பு கூட்டஙக்கள் நடபெற்று வந்தாலும் தமது நல்லெண்ணத்தையும் நோக்கத்தையும் அடையாளப்படுத்த சில மாற்றங்களையே செய்திருக்கின்றனர். இன்னும் ஏராளமானவை அவசியம் செய்யப்பட வேண்டும்.

சர்வதேச முக்கியஸ்தர்கள் அரசுடனான தங்கள் சந்திப்புகளில் எமது பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டுமென்று ஊக்கப் படுத்தினாலும் ஐநா மனித உரிமை தீர்மானங்கள் உள் நாட்டில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை மீளவும் மீளவும் வற்புறுத்தினாலும் அனைத்திற்கும் வெளி நாட்டில் ஆமா போட்டுவிட்டு கையொப்பம் கூட கொடுத்து விட்டு உள் நாட்டில் செயலில் நடமுறைப் படுத்த மனவுறுதியோ வல்லமையோ இன்றி சாட்டுப் போக்கு சொல்லி இழுத்தடிப்பதே நடக்கின்றன.

## 3. கூட்டரசின் கவனம் தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதை விட்டு பரஸ்பர குற்றச்சாட்டுகளும் போட்டிகளுமே.

முன்னைய மகிந்த அரசாங்கத்தினரை இலஞ்ச குற்றச் சாட்டுகளுக்கு உட்படுத்தினர். மக்களுக்கு பயந்து தண்டிக்கவில்லை. பின்பு ஆளுங் கட்சியும் அரச தலைவர்களும் இலஞ்ச குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகினர். ஆனால் ஒருவரையும் தண்டிக்க துணிவில்லை.

ஒற்றுமையான அரசாங்கம் என்று இரண்டு அரசியல் கட்சிகள் ஆரம்பத்தில் கூட்டிணைந்த போதும் தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதிலேயும் தங்களையும் தங்கள் கட்சிகளை பாதுகாத்து பெலப்படுத்துவதிலேயுமே கவனம் செலுத்தினர். யாருடைய ஒத்துழைப்புடன் ஆட்சிக்கு வந்தார்களோ அவர்களின் போரினால் பாதிக்கப் படடோரின் பிரச்சினைகளோ அல்லது இனரீதயான தேசிய பிரச்சனையோ தீர்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாயில்லை!

## 4.அரசாங்கத்தின் திடீர் பிளவும் அதனால் அரசு செயலிளந்த 51 நாட்களும்

2018 ஒக்ரோபாஇ 26ல் தலைவர் சிறீசேனாவினால் நாட்டின் யாப்பிற்கு முரணாக நடாத்தப் பட்ட திடீர் வன்முறை செயல் கூட்டரசாங்கத்தில் பாரிய பின்னடைவையும் நாடடில் அதிர்ச்சியையும் தோற்றிற்று. ராஜபக்சவுடன் முதல் நாள் அப்பம் பகிர்ந்துவிட்டு அவரையே அடுத்த நாள் எதிர்த்து போட்டியிட்டு வென்றவர் தலைவர் சிறீசேனா! ஓர் கொரூர ராஜபக்ச குடும்ப ஆட்சியை முடிப்பதற்கு வழி வகுத்தவரும் அவரே.

ஆனால் சடுதியாக யாப்பிற்கு விரோதமாக தனது பிரதம மந்திரி ரணிலை விலக்கி விட்டு தான் போட்டியிட்டு தோற்கடித்த ராஜபக்சாவை பிரதம மந்திரியாக நியமித்து நாட்டையும் மக்களையும் அதிர வைத்தார். நல்லாட்சி தலைவர் சிறீசேனாவும் கொரூர குடும்ப ஆட்சியை முன்பு நடதத்திய ருாஜபக்சாவும் ஓர் புதிய ஆட்சியை நடத்த 51 நாட்கள் முயற்சித்தனர்.

இச் செயலகள் சிறீ சேனாவும் றனிலும் இரு திசையில் செயல்பட்டு வந்தனர் என்ற உண்மையை நாட்டிற்கு உணர்த்தியது. இந்த குழப்பம் ஜனநாயக ரீதியாக யாப்பு சட்டம் அடிப்படையில் தீர்க்கப்பட்டு பிரிந்தவர்கள் மீளவும் ஒன்று சேர்க்கப் பட்டாலும் இன்றைக்கு நடக்கும் அரசாங்கத்தின் ஒற்றுமை பெலம் குறைந்து விட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த குளம்பிய அரசாங்கத்தை மீளவும் சரிப்படுத்தி நாடு ஜனநாயக முறைக்கு திரும்ப தமிழ் முஸ்லீம் கட்சிகள் பலமான ஒத்துழைப்பு கொடுத்தார்கள். இதை பெரும்பான்மை மக்களும் கட்சிகளும் சொல்லளவில் ஒத்துக் கொண்டனர். சொல்லளவில் மாத்திரமே!

## 5. 2019 ஏப்ரல் 21 குண்டு வெடிப்புக்கள் அரசினதும் பாதுகாப்பு கட்டமைப்பினதும் இயலாத்தன்மைகளை அம்பலப் படுத்ததியிருக்கின்றன

தமிழ் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு 20 நாடுகளின் ஆயுதங்களைப் பெற்று, இன அழிப்பையே நடாத்தி விட்டோம் என்ற உண்மையை மறைத்து, உலகத்தின் மிகப் பெரிய பயங்கரவாதத்தையே அளித்த வீரர்கள் தாங்களென்று, சர்வதேசத்திற்கு கொழும்பில் கூட்டங்களை நடாத்தியும், தங்கட்கு எதிராக சர்வதேச போர் குற்றவாழிகளென்று ஐநா குற்றம் சாட்டுவதும் புலம்பெயர் தமிழரின் சதியென்றும் ஒன்றுக்கும் பொறுப்பு கூற விருப்பமில்லாது தங்களையே போற்றி ஆளத் துயிலிலிருந்த அரசாங்கத்தையும் பாதுகாப்பு படைகளையும் ஆபத்து எச்சரிக்கைகள் கூட தூக்கத்திலிருந்து எழுப்பவில்லை. குண்டு வெடிப்புகளே பல மட்டத்திலும் தரப்பிலும் இருந்த குற்றம் குறைகளை அம்பலப் படுத்தி விட்டன!

நாட்டிற்குள்ளே போரினால் பாதிக்கப் பட்டாலும் தமிழர் முஸ்லீம்கள் சமாதானமாக வாழத் துடிப்பவர்கள். இவர்கள் பயங்கரவாதிகளாக மாறி விடுவரோ என்ற சாட்டில் படைகளையும் படைத் தளங்களையும் தமிழ் பிரதேசங்களில் அதிகரித்து தூக்கம் காணுபவர்க்கு இக் குண்டுகளாவது யதார்த்தத்தை விளக்கி நடை முறைகளில் மாற்றத்தை கொண்டு வருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிகழ்வுகளை கடந்த கால வருங் கால தூரப் பார்வையுடன் ஆய்வு செய்து மனம் திரும்பும் பண்பும் பக்குவமும் பெரும் பான்மை சிங்கள புத்தருக்கு உண்டா என்பது எமது கேள்வியாகும்.

## 6. எமது பேரவையின் வருங்கால நிலைப்பாடும் முயற்சிகளும் எப்படி தொடரும்

உலகத் தமிழர் பேரவை தொடர்ந்து தனது இலட்சிய தெளிவுடனும் ஜனநாயக வழியிலும் பின் வரும் விடயங்களில் கவனம் செலுத்தவுள்ளது.

6.1 யதார்த்தத்தை கணித்து புலம் பெயர்ந்த மக்கள் சார்பாக, இப் புதிய அரசாங்கத்திற்கு கண்டனத்துடன் கலந்த ஒத்துழைப்பை (critical collaboration) தொடர்ந்து வழங்கி வரும். இனியும் எம்மவருடைய எதிர்புப் போராட்டங்களையும் அரசாங்கத்தின் பேச்சையும் செயல்களையும் உன்னிப்பாக அவதானித்து எமது கருத்துக்களை அவ்வப்போது அரசாங்கத்திற்கு கொடுப்பது மாத்திரமல்ல எமது விமர்சனத்தை பகிரங்கமாக ஊடகங்களில் வெளியிட்டு சர்வ தேசத்தையும் விழிப்பாக வைத்திருக்க முயற்சிப்போம்.

## 6.2 உண்மை, நீதி நிலைநாட்டி, பொறுப்புக் கூறுதல் நடை பெற உழைப்போம்.

எம் இனத்தைச் சேர்ந்த மக்கள் முழுமையாகவும் பகுதி பகுதியாகவும் படிப்படியாகவும் இன்னோர் இனத்தை சேர்ந்தவர்களினாலும், அவர்களுடைய அரசாங்கங்களினாலும் நீண்ட காலமாக கொல்லப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றனர். இதைத்தான் ஈழத் தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் நம்புகின்றனர். இதற்கு சாட்சியமாக சர்வதேச சாட்சியங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இவைகள் சரியான முறையில் பாரபட்சமற்ற நம்பத்தகுந்த முறையில் விசாரித்து நீதி வழங்க வேண்டுமென்று சர்வதேசமும் ஐ.நா. சபையின் மனித உரிமை சங்கமும் ஏகமனதாகக் கேட்டுக் கொண்டனர். ஜெனீவாவில் இயங்கும் ஐ.நா. மனித உரிமை சங்கத்தின் பணிப்பில் செயற்பட்ட அதன் உயர் ஸ்தானிகர் குசெயின், இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் நம்பத் தகமையுடைய, இலங்கையரும் சர்வதேச சட்ட வல்லுனரும் கலந்த நீதி மன்றத்தினால் (Hybrid court) விசாரிக்கப்பட வேண்டுமென்று கூறியிருந்தார்கள். இரு கூட்டங்களில் ஐநா தீர்மானத்தை இலங்கை அரசாங்கமும் கூட்டு கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டனர்.

இவைகளுக்கு இணங்கி இன்றைய இலங்கை அரசாங்கம் ஐநா பிரேரணையை சிபார்சு செய்தவாறு, பொது நலவாய நாடுகளிலிருந்த சட்ட வல்லுனர்களையும் கொண்ட ஒரு விசாரணைப் பொறிமுறையை ஆக்கப் போவதாக கூறியிருந்தது. ஆனால் எவ்வளவிற்கு தமது வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறி. அண்மை கால நடைமுறைகள் ஐநா பிடியிலிருந்து நழுவும் முயற்சிகளையே காட்டுகின்றன. ஆகையினால் ஐநா வின் வருங்கால முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது பணியை மும்முரப்படுத்துவோம்.

## 6.3 தமிழர் தேடும் நீதி பளிவாங்கலுக்காகவல்ல வருங்காலத்தில் இனங்களுக்கிடையில் நல்லிணக்க நிலைமாற்றும் நீதி (Transitional justice) தேடுவதி லேயே அரசாங்கத்துடன் செயற்படுவோம்.

இதிலே பாதிக்கப்பட்ட தமிழர் எவ் வித நீதியை விரும்புகிறார்கள் என்பது தெளிவு படுத்தப் பட வேண்டிய தேவையுண்டு. குற்றச் செயலுக்காக நீதி தேடல் சர்வ சாதாரணம். சட்ட விதிகளின் அடிப்படையில் உண்மையை அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடுவார்கள். அனைத்தையும் அவதானித்த நீதியரசர் இறுதியில் தீர்ப்பு வழங்குவார். ஆயுள் சிறைத்தண்டனை அல்லது தூக்குத் தண்டனை வழங்குவர். இதுவே சாதாரண நீதிமுறைமை.

ஆனால் பெரும் தொகையான மக்களுக்கெதிராக மனித உரிமை மீறல்களையும் கொலைகளையும் செய்தோ, செய்வதற்கு காரணமாகவோ இருந்தார் என சர்வதேச நீதி மன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டு தூக்குத் தண்டனைகளும் நடபெறுகின்றன.

இச் சூழலில் ஈழத் தமிழர் தேடும் நீதீ எப்படியானது? இக் கேள்விக்கு இன அழிப்பில் தப்பி இலங்கையில் வாழத்துடிக்கும் தமிழர்களும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களும், உணர்ச்சி வசப் படாது, பழிவாங்கும் வழியை விட்டு, பொறுப்புணர்வுடனும் பகுத்தறிவுடனும் சிந்தித்து பதில் தேட வேண்டும்.

ஆகவேதான் இந்த இனங்களுக்கிடையில் நிலமை மாற்று நிலைக்கான நீதி (Transitional Justice) என்று அழைக்கப்படுவதின் பொருளையும் நோக்கத்தையும் நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஐ.நா. வின் விளக்கத்தின் படி மாற்றத்திற்கான நீதி தேடுவதென்பது - ஒரு சமூகம், தான் அனுபவித்த கொடுமைகளி லிருந்து விடுபட்டு, மீளவும் அவைகள் நடைபெறாதிருக்கவும், குற்றம் செய்தவர்கள் உண்மை, நீதி அடிப்படையில் அவற்றை இனங்கண்டு பொறுப்பேற்கவும், உண்மையான ஒப்புரவைக் கொண்டுவரக் கூடியவைகளை செய்யவும் ஏதுவாக, பொருத்தமான நம்பத்தகமையுடையவற்றை செய்யும் உரிய அமைப்புகளை செயல்படுத்துவதாகும்.

ஆகவே நிலை மாற்றத்திற்கான நீதீ தண்டனைவிதித்து பழி வாங்கவல்ல,
சமாதானமாக தொடர்ந்து வாழ வழி சமைக்கும் நீதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நீதி தேடும் பயணம் புதிய அரசாங்கத்துடன் சிறிதாக ஆரம்பித்துவிட்டது. முள்ளிவாய்க்காலில் நடந்த முடிவு ஓர் கொடூர போரின் முடிவு என்றும்,அதன் பின் போரினால் பாதிக்கப்கட்ட மக்களுக்கு ஈடு செய்ய அரசாங்கத்திற்கு பல கடமைகள் உண்டு என்பதையும் ஏற்றுக் கொண்டு, சில ஈடு செய்யும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அவைகள் ஆமை வேகத்திலும் அணுவணுவாகவும் நடக்கின்றன. அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும் செயலுக்குமிடையில் பெரும் இடைவெளிகள்!

பொதுவாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை நன்றியுடன் ஏற்று, இன்னும் கெதியாக நடக்க வேண்டியவைகளை வற்புறுத்தி ஊக்குவிப்பதுமே எமது ஒத்துழைப்பின் நோக்கமாகும்.

## 7. புலம் பெயர்ந்த மக்களின் தொடர் கடமைகளை ஊக்குவிப்போம்

1983 தமிழருக்கெதிராக நடந்த வன்முறைகளின் பின் உலகத்தின் பல திசைகளுக்கும் தப்பி ஓடிய புலம் பெயர் தமிழ் சமூகங்கள் வெளியிலிருந்து கொண்டே இலங்கைத் தீவில் தமிழர் தற் பாதுகாப்புக்காக நடந்த போருக்கும் அதன் பின் பாதிக்கப் பட்ட மக்களுக்கும் உதவி கரம் நீட்டுவதுடன் தமழர் தொடர்ந்து இத் தீவில் உரிமையுடன் வாழ வேண்டுமென்று போராடுகின்றனர். ஆனல் இவர்களின் 2ம் 3ம் தலைமுறைகள் அந்நிய நாடுகளில் கரைந்து போக வேண்டியிருக்கின்றது. ஆகையினால்-

- புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கைக்கு செல்பவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலமையையும் தேவைகளையும் கவனத்தில் எடுத்து தமக்குரிய முறையில் முதலில் உதவிக் கரங்களை நீட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதில் எமது உறவுகளின் பிளையான செயல்களை நான் தெளிவாக கண்டு மனம் வருந்துகின்றேன். புலம் பெயர்ந்தவர்களின் மூன்றாம் தலைமுறையினர் இந் நாட்டிற்கு திரும்பும் சாத்தியம் இல்லை. ஆகையினால் வயதான உங்கள் பெற்றோர் தமது வயோதிபத்தை நன்றாக வாழ்வதற்கு சிந்தித்து உரிய முறையில் உதவுங்கள். பத்து இருபது வருடங்கள் வாழப்போகும் பெற்றோருக்கு இரு மாடி மூன்று மாடி வீடுகளைக் கட்டாதீர்கள். வருங்காலத்தில் மனவருத்தப்படுவீர்கள்.

- இன்னும் உங்கள் பணத்தை மிக உயர்ந்த கோவில் கொட்டேல் கல்யாணமண்டபம் கட்டி உங்கள் புகழையோ பண இலாபத்தையோ தேடாதீர்கள்.

- மாறாக வருங்கால மனிதரைக் கட்டி எழுப்புங்கள்! மனிதபிமான பணிகள் அல்லது முதியோர் பராமரிப்பு இல்லங்கள் அனாதை அல்லது வலது குறைந்த பிள்ளைகள் இல்லங்கள் உங்கள் உதவியை தேடுகின்றனர். ஒரே ஊரை அல்லது கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் கூடி ஆலோசித்து திட்டமிட்டு செயல் படுங்கள்.

- நீக்கள் உங்கள் நாடுகளில் உங்கள் பேரப்பிள்ளைகளின் திறமைகளைப் பாவித்து அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு எமது மக்களுக்கு நடந்து கொண்டிருக்கும் அநீதிகளை வெளியிடுவதுடன், அரசின் செயற்பாட்டுக் குறைவுகளை சுட்டிக் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிங்கள புத்த மக்கள் மத்தியிலும் அரசாங்கத்திலும் தொடரும் அடிப்படை அறியாமையும் பெலவீனங்களும்.

இலங்கை அரசாங்கம் எப்பொழுதும் சிங்கள பெரும்பான்மை ஐநநாயகமே. இவ்வரசாங்கங்கள் எப்பொழுதும் பெரும் பான்மை சிங்கள புத்த மக்கள் மத்தியில் தமிழரைப் பற்றி பொய்களைக் கூறியே பதவிக்கு வந்தனர். இன்று போர் முடிந்த பின்பும் தமிழர்களுக்கும் விசேடமாக போரினால் பாதிக்கப் பட்டவர்களுக்கும் உண்மை நீதி மனித உரிமைகளின் அடிப்படையில் உரியன செய்ய வேண்டுமென்றதை பெரும் பான்மை சிங்கள புத்த மத மக்களுக்கு எடுத்துரைக்க சிங்கள அரசியல்வாதிகளும் தலைவர்களும் தயாரில்லை! அரச தலைவர்கள் சில வேளைகளில் ஆரம்பிக்கும் நற் செயல் முறைகளுக்கும் சிங்கள தலைமை உத்தியோகஸ்தரும் அரச அமைப்புகளும் ஒத்துழைப்பு வளங்குவதில்லை. உ-ம் தலைவர் சிறிசேனா காணாமல் போனோர் பட்டியலை படை அதிகாரிகளிடம் கேட்பார் அல்லது மறியலில் அநீதியாக பல வருடங்கள் துடிக்கும் தமிழருக்கு கெதியில் நீதி வளங்க வேண்டுமென்று கேட்டாலும் அரச சிங்கள அதிகாரிகள் செயல்படுவதில்லை. இதன் பின் செயற்படுவது உண்மை அறியாமை தமிர்-வெறுப்பு சமாதான வேட்கையின்மை.

இத்தோடு வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்புடன் வாழும் இலங்கை தன் சர்வதேச கடமைகளையும் சரியாகப் புரிந்ததில்லை. உ-ம் போர் நடந்த வேளையில் தமிழரைம் போராளிகளையும் பயங்கரவாதிகளென்று சொல்லி சர்வ தேசத்திடம் ஏராளமான பணம் ஆயுதம் பெற்ற இலங்கை இன்று தமிழருடனான பிரச்சினைகளை தீர்க்க சர்வதேசம் உதவ வரும் பொழுது அதை வேண்டாம் அது தேவையற்ற வெளி நாட்டு தலையீடு எங்கள் இறமைக்கு முரணானது என்கிறது! இந்த வேடிக்கையான நிலைமையை எப்படி தீர்ப்பது. பெரும் பான்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள புத்த மக்களை வழி நடத்த வேண்டிய புத்த தலைவா்களும் சிங்கள அரசியல்வாதிகளும் அறியாமையிலும் அரக்க அகங்காரத்திலும் ஊறியிருக்கின்றனா்!

ஆனால் இலங்கை அரசாங்கம், எப்படித்தான் நல்லாட்சி என்ற போர்வையிலும் சில முற்போக்கான சைகைகளை தமிழ் மக்களுக்கு காட்டினாலும், சா்வதேச மனித உரிமைச் சங்கத்தின் வலைக்குள் பொறுப்புக் கூற வேண்டிய கடமை படிப்படியாக அதிகரிக்க, சா்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை நோ்மையாகவும் முழுமையாகவும் கடைபபிடிப்பதில் தள்ளாடு அல்லது தப்பி நழுவும் சூட்சிகளை அதிகரித்து முயற்சிக்கின்றது. இது நாம் எதிா்பாா்க்காததொன்றல்ல. இருந்தும் நாங்கள் சா்வதேச ஒத்துழைப்பை தவற விடாது உண்மை நோ்மை நீதி வழிகளில் முயற்சிப்போம்.

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களும் அரசாங்கங்களும் தமது நீண்ட கால பெலவீனங்கள் தப்பபிப்பிராயங்களிலிருந்து விடுபடுவதாக இல்லை. மகாவம்ச கதையின் அடிப்படையில் இலங்கை தீவை தமக்கு மாத்திரமே சொந்தமான தீவென்ற பிளையான சரித்திரத்திலிருந்தோ, தமிழரைப்பற்றிய பிழையான பயங்களிலிருந்தோ, தமது பேரினவாத அடக்கியாளும் ஆசையிலிருந்தோ, தாம் உயா்ந்த வெற்றி வீரரென்ற அரக்கத் தனத்திலிருந்தோ இலேசாகவோ விரைவாகவோ மாறமாட்டாா்கள். அந்த மாற்றம் ஏற்பட பல விதமான நீண்ட முயற்சிகளும் காலமும் தேவைப் படும். அது வரை தமிழா் போராட்டம் தொடருமா?

இன்றைய அரசாங்கம் கூட்டு அரசாங்கமாக இருப்பதன் காரணமாக அதனுள் இருப்பவா்களுக்கே முதலில் உண்மையான மன மாற்றம் தேவை. மேல்மட்டத்தில் இருக்கும் தலைவா்கள் வெளி நாடுகளிலும் தமிழா் மத்தியிலும் சொல்லுபவற்றை தன்னும் சிங்கள பௌத்தமத மக்கள் மத்தியில் சொல்லத் தயங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் சிங்கள புத்த மக்கள் மத்தியிலே கடந்த 70 ஆண்டுகளாக தமிழரைப் பற்றி பரப்பப்பட்ட பொய்களை திருத்திக் கூற துணிவுடன் முன் வர வேண்டுமென்று நானே நேரடியாக தலைவர் சிறிசேனாவிற்கும் வெளிவிவகார அமைச்சர் சமரவீராவிற்கும் இன்னும் பல சிங்களத் தலைவர்களுக்கும் இலண்டன் பேர்லின் ஜெனீவா போன்ற இடங்களில் கூறியிருக்கிறேன்.

தலைமைத்துவம் நல்லெண்ணத்துடன் பலவற்றை வார்த்தையிலும் சிலவற்றை செயலிலும் செய்தாலும், சரியான திசையிலே செய்யப்பட வேண்டியவற்றை தாமதமின்றி முன்வந்து செய்ய ஏற்ற துணிவும் அமைப்புகளும் ஆட்களும் அரசாங்கத்திடம் இல்லவே இல்லை! மகிந்தவின் மன நிலையிலுள்ள பலர் இன்னும் இன்றைய அதிகாரத்திலும் இருக்கின்றனர்.

ஆகவே பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள் மனம் மாறுவதற்கும் தமிழருடன் ஒப்புரவு செய்ய முன் வருவதற்கும் இன்னும் பல தசாப்தங்கள் வேண்டும்!

## 10. தமிழருடைய தரப்பிலும் நாம் ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மைகளை ஏற்க செயற் பட நாம் தயாரா?

இத் தீவில் நாம் தொகையில் சிறு பான்மையாக இருந்தாலும் இறைவன் எமக்கு பல நன் கொடைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கியிருக்கிறார். மொழி கலை கலாச்சார செல்வங்கள் அறிவுத்திறன் கடும் உழைப்பு போன்றவை. இவைகளையிட்டு நாம் பெருமை அடையலாம். ஆனால் இவைகளை பாவித்து எமது சிறு பான்மையின் இருப்பையும் எமது விருப்பம் அபிலாசைகளை சிங்கள புத்த பெரும் பான்மையினருக்கு விளக்கியது கிடையாது. பாராளுமன்றத்தில் வாதாடுவதும் வடகிழக்கில் எதிர்ப்பு போராட்டங்களும் நடாத்தினால் போதாது. இந் நோக்கத்திற்காக ஆங்கிலத்தில் தன்னும் இற்ற வரை தமிழரினால் ஏற்படுத்தப் பட்ட ஊடகம் கிடையாது.

எமக்குள் ஊறியிருக்கும் பிரிவினை வாதங்களையும் பெலவீனங்களையும் களையத் துணிவோமா? தமழிர் நாம் மற்ற மனிதர்களைப் போல சகல மனித உரிமைகளுடனும் மதிக்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக உயிர் பலிகள் உடமை இழப்புகள் இடம்பெயர்வுகள் இனனும் எத்தனை பலிகள் கொடுத்து உள் நாட்டு அரச படைகளுக் கெதிராகவும் போராடுகின்றோம். வெளி நாட்டு உதவிகளை நாடுகின்றோம். ஆனால் நம் உள்ளத்திலும் உள்வீட்டிலும் ஆளவேருடன் செயல்படும் மனித அவமதிப்புகளை ஒடுக்கு முறைகளைப் பற்றி சிந்தியாது பேசாது அல்லது பேசத் துணியாதது ஏன்???

பாரிசில் வசிக்கும திக் நதான் என்ற புத்த ஞானி கூறுகிறார். **அமைதி வேணடுமாயின் முதலில் உன்னில் அமைதியை தேடு விடுதலை வேண்டுமாயின் முதலில் உன்னில் விடுதலையை தேடு!**

இன்னும் எமக்குள் மனிதர்களை ஊர் பணம் பதவி படிப்பு பட்டம் வருமானம் சொந்த வீடு போன்றவற்றைக் கேட்டு கணிப்பதும் மதிப்பு கொடுப்பது தவறானது. மொட்டை கடிதங்கள் எழுதுவதும் முன்னேறுபவரை இழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுத்துவதும் போட்டி பிரிவனைகளை அதிகரிப்பதிலும் விண்ணர்களாகிறோம்.

## 11. ஆகையால் விரக்தியில் வீழ்ந்து விடாது வீரத்துடன் நம்பிக்கையுடன் போராடுவோம்.

கடந்த காலத்தில் எவ்வளவோ ஏமாற்றங்களை அனுபவித்திருக்கிறோம். அதற்காக நம்பிக்கையை முற்றாக இழந்துவிடக் கூடாது. விரக்தியின் எல்லையில் நின்றாலும், எமது புனித இலட்சியத்திற்காக உண்மையும் நீதியும் இறுதி வெற்றியடையும் என்ற திடனான நம்பிக்கையில் தொடர்ந்து போராடுவோம்.

தொகையில் குறைந்து கொண்டு போகும் இலங்கை தமிழரில் அதிகமானோர் ஏதோ ஒரு விதத்தில் நீண்ட போரினால் பாதிக்கப் பட்டவர்கள். இருந்தும் விரக்தியில் வீழந்து விடாது நம்பிக்கையுடன் தொடர்ந்து போராடுகின்றனர். நாம் நம்பிக்கையுடன் ஏற் படுத்திய தற் போதைய அரசாங்கமும் எம் இருப்பிற்காக வாழ்வுரிமைகளுக்காக மன சுத்தியுடன் செயற் படுவதாக இல்லை. இளுத்தடிப்புகளும் சாட்டு போக்குகளுமே அதிகம்

## 12. எமது வரும் காலம் பற்றி பல கேள்விகள் தோன்றலாம

இலங்கை சுதந்திரமடைந்து இலங்கையர் நாட்டை ஆளும் பொறுப்பேற்ற பின் பல உள் நாட்டு இடம் பெயர்வுகளும் பாரிய வெளி நாட்டு இடம் பெயர்வுகளும் நடந்தேறியிருக்கின்றன.

### 12.1 பறங்கியர்

1956 சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தினூடாக ஆங்கிலம் கா்ம மொழியாக பின் தள்ளப் பட்டதை அடுத்து பல் ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் பேசும் பறங்கியரும் வெளி நாட்டவரும் இலங்கையை விட்டு வெளி நாட்டிற்கு சென்றனர். அனேகமான பறங்கியர் அவுஸ்ரேலிய சென்றனர். இன்று அவர்கள் அந்நாட்டு மக்களுடன் கரைந்து விட்டனர்.

## 12.2 இந்திய வம்சாவழி தமிழர்- மலையகத் தமிழர்

தேயிலை தோட்டங்களில் பணி புரிய ஆங்கிலேயரினால் அழைத்து வரப்பட்ட இந்திய தமிழர்கள் குடியுரிமை மறுக்கப் பட்டு பல்லாயிரம் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். புல வித பொருளாதார வாழ்வு பிரச்சினைளுக்கு முகங் கொடுத்து வாழ கற்றுக் கொண்டார்கள்.

## 12.3 இஸ்லாமிய சகோதரர்

இஸ்லாமிய சகோதரர் பிறப்புக் கட்டுப்பாடின்றி உலகம் முழுவதும் பெருகுவது போல் தமிழ் மொழியை பேசும எமது இஸ்லாமிய சகோதரர் இங்கும் பெருகுவார்கள். பல் வேறு சக்திகள் அவர்களை துன்புறுத்தினாலும் மற்ற இனத்தவருடன் கூடி வாழும் பக்குவம் படைத்தவர்களென்பதை கடந்த 70 ஆண்டுகளில் காட்டியிருக்கின்றனர்.

## 12.4 இலங்கை தமிழர்

தாங்களும் இத் தீவின் பூர்வீக குடிமக்களென்று பெருமையுடன் பல நூற்றாணடுகளாக வாழ்ந்த இலங்கைத் தமிழரின் வருங்காலம் பெரும் சந்தேகங்களை கொண்டுள்ளது. பௌத்த சிங்கள பெரும் பான்மை இனமும் இந்து தமிழ் இனமும் இரு தலை மன்னர்களின் போட்டிகள் போர்களைக் கடந்து காலனித்துவ நூற்றாண்டுகளிலாவது போரின்றி வாழ்ந்தும் அவர்களுக்கிடையில் போட்டி பொறாமை குறையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948 ல் பெற்றுக் கொண்ட நாட்டின் சுதந்திரத்தை பெரும்பான்மை சிங்கள புத்தர் தம்முடைய இன-மத சுதந்திரமாகக் கருதி அவற்றை பாதுகாப்பதும் வளர்பதுமே தமது தலையான பொறுப்பாக்கிக் கொண்டனர். இவைகளுக்கு மற்றவர்களை எதிரிகள்- போட்டியாளராகக் கணித்து தொகையில் சிறிய இனத்தவராகிய தமிழரை அடக்கி ஆளவேண்டுமென்ற சிந்னையும் ஆர்வமும் அவர்களின் இனவெறியாயிற்று.

1948 ன் பின் தமிழர்களுக்கெதிராக அடிக்கடி கட்டவிழ்த்து விடப் பட்ட சிங்கள வன்முறை காரணமாக உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் பாரிய இடம் பெயர்வுகள் 1958 1961 1977 1983 ல் நடந்தேறின.

இதில் ஏராளமான தமிழர்கள் 1983க்கு பின் வெளி நாடுகளில் குடியேறி 2ம் 3ம் சந்ததியினர் அந் நாட்டு குடி மக்களுடன் இணைந்து விடுகின்றனர். இலங்கையில் எமது தொகையும் குறைகின்றது இல்லங்களும் வெற்றிடமாகின்றன விரக்தியில் வாழ்வது கடினமாகிறது!


**இறை நம்பிக்கையில் வாழ்வதே ஒரே வழி!**

நான் ஒரு மனிதனாக இறைவனால் ஆக்கப் பட்டேன்
அவரே என்னை தமிழனாக தோற்றுவித்து வளர்த்தார்.
அவரே எனக்கு இயேசு கிறீஸ்துவை வெளிப் படுத்தி
அவரின் சீடனாக பணி செய்ய அழைத்தார்.
சகல மனிதர்க்கும் எனது மக்களுக்கும்
இயேசுவின் சீடனாகப் பணியாற்றும்
எஸ். ஜே. இம்மானுவேல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வத்திக்கான்
16.12.2016



லண்டன்
11.03.2015



லண்டன்
25.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்பணியாளர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகள் யாழ்ப்பாணத்தில் பிறந்து, தனது தொடக்கக்கல்வியை தூய பத்திரிசியார் கல்லூரியில் பயின்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் அறிவியல் பட்டம் பெற்று, யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகளில் ஆசிரியராக பணிபுரிந்தார். இறைவனின் அழைப்பை உணர்ந்த வராக, யாழ் மறைமாவட்டத்தில் இணைந்து உரோமைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல், இறையியல் துறையில் முதுமானி மற்றும் முனைவர் பட்டத்தையும் பெற்றவர். கத்தோலிக்க அருட் பணியாளராக யாழ் மறைமாவட்டத்திலும் இறையியல் பேராசிரியராக கண்டி தேசிய குருமடத்திலும், யாழ் தூய பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமடத்தின் அதிபராக வும், யாழ் கத்தோலிக்க் மறைமாவட்டத்தின் குரு முதல்வராகவும் பணிகள் புரிந்தார். இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவத்துக்கும், நீதிக்குமான போராட்டத் தில் 1956 ஆம் ஆண்டுகளிலிருந்து தன்னை இணைத்துக்கொண்டவர். 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வில் ஒருவராகவும் அதற்கு முன்னரும் பின்னரும் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலங்களில் நேரடியாக பட்டறிவு பெற்றவர்.

தனது இறையியல் பின்னணியிலும் சிந்தனைத் திறனாலும் உலக அரங்கில் தமிழ் மக்களின் அவலங்களையும், இன்னல்களையும் எதிர்பார்ப்பு களையும் தெளிவாக எடுத்துரைத்து வருபவர். இப்பொழுது உலகத் தமிழ் பேரவையின் தலைவராக அருட்பணியாற்றி வருகின்றார். அருட்பணியாளர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரின் சிந்தனையில் உருவான "ஈழத்தமிழரின் முடிந்த முள்ளிவாய்க்காலும் தொடரும் போராட்டமும்" எனும் நூலை மகிழ்ச்சியோடு போரால் பாதிக்கப்பட்டோருக்கும், மனித உரிமைக் குமான நடுவம், ரோரன்ரோ, கனடாவில் **(Centre for War Victims & Human Rights (CWVHR) Toronto, Canada)** வெளியிட்டது.

2019இல் இந்நூலில் முக்கியத்துவத்தையும், தேவை யை உணர்ந்து ஆசிரியர், இரண்டு அத்தியாயங்களை புதிதாக சேர்த்து 2ஆம் பதிப்பாக வெளியிடுகின்றார். அனைவரும் பயன் அடைவீர்கள் என எதிர்பார்க்கின் றோம்.

ISBN 978-0-98795
9780987959706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org